வரு.75 இல. 37 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
2023 செப்டெம்பர் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 17 Sunday, 2023

கருணை இல்லம் கோகுலம்

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.
நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:
Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shitf Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்
Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891
ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax 2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk

/ Thinakaran.lk / ThinakaranLK


21வது இலவச கண் சிகிச்சை முகாம் 02


05 இலங்கையை இராணுவத்தளமாக பயன்படுத்த அனுமதி கிடையாது!


12 புவிசார் அரசியல் போட்டிக்குள் வியட்நாம்–வடகொரிய நகர்வுகள்


24 பிரத்தியேக சாதனைகளுடன் இன்று களமிறங்கும் இலங்கை

## விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கத்துறைகள்;

# உலகளாவிய அபிவிருத்திக்கான சவால்களை எதிர்கொள்ளும் துறைகள்



'G 77 + சீனா' அரச தலைவர் உச்சிமாநாட்டில் ஜனாதிபதி விபரிப்பு



உலகெங்கிலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்கொள்ளும் தற்போதைய அபிவிருத்தி சவால்களை எதிர்கொள்வதில் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களினால் கூடுதல் பங்களிப்பு வழங்க முடியுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். கியூபாவின் ஹவானா நகரில் நேற்று முன்தினம் (15) ஆரம்பமான 'G 77 + சீனா' அரச தலைவர்களின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். கியூபா ஜனாதிபதி மிகெல் டியெஸ் கெனெல் 06

# ஊழியர் சேமலாப நிதிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது

## உறுதியளிக்கப்பட்ட 09% நலன்கள் தொடர்ந்து வழங்கப்படும்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார உறுதியளிப்பு



ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக தற்போது கிடைக்கும் 9% நலன், அதன் உறுப்பினர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படுமென, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களுக்கு சொந்தமான பணத்துக்கு வரி விதிக்கப்படுவதில்லையென்பதுடன், நிதியத்துக்கு சொந்தமான பணத்தை முதலீடு செய்த பின்னர் கிடைக்கும் இலாபத்துக்கு நூற்றுக்கு 14 சதவீதம் மாத்திரமே வரி விதிக்கப்படுவதாகவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட போதே, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் மனுஷ நாணயக்கார, "சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் மற்றும் கடன் வழங்குநர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்போது வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புப் பணிகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புடன், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்த வேண்டும். 06

## வாரமஞ்சரி இணையத்தளம் மீண்டும் புதுப்பொலிவுடன்...



தினகரன் வாரமஞ்சரி, சண்டே ஒப்சவர், சிலுமின வார இறுதி பத்திரிகைகளின் இணையத்தளம் புதுப்பொலிவுடன் வடிவமைக்கப்பட்டு மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது. இந்த இணையத்தளங்களை ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன, லேக் ஹவுஸ் நிறுவனத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தபோது பிடிக்கப்பட்ட படம். அமைச்சருடன் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பிரதம ஆசிரியர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: ருக்மல் கமகே)


06
ரூபா 80 கோடி செலவில் 1,591 குடியிருப்புகள்;
## தமிழகத்தில் இலங்கை தமிழருக்கான வீடுகள் இன்று திறந்துவைப்பு

## ஈஸ்டர் தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழப்பு


சர்வதேச விசாரணை குறித்து USA ஆராய்வு

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதல்களில் அமெரிக்கர்களும் உயிரிழந்திருப்பதினால் இந்த 06

ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக
## ரயில்வே தொழிற்சங்க முக்கியஸ்தர் இந்திகவினால் நற்பெயருக்கு களங்கம்

ஒரு பில்லியன் ரூபா நட்டஈடு கோரி அமைச்சர் பந்துல கடிதம்



லோரன்ஸ் செல்வநாயகம்

ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களினூடாக தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் கூற்றுக்களை வெளியிட்டுள்ளமைக்காக ரயில்வே தொழிற்சங்க முக்கியஸ்தர் இந்திக தொடங்கொடவிடம் நட்டஈடாக ஒரு பில்லியன் ரூபா கோரி தனது சட்டத்தரணியினூடாக ஊடகத்துறை 06

2022 G.C.E (A/L) பரீட்சை பெறுபேறுகளின் படி
## 45,000 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு

1,66,936 பேர் பல்கலை அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய இந்த வருடம் 45,000 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு உள்ளீர்க்கப்படுவதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்தது. 06

University Grants Commission

06
## பொலிஸார் வேடத்தில் கொள்ளையர்கள் நடமாட்டம்
பொதுமக்களை அவதானமாக இருக்க வேண்டுகோள்


06
## கிழக்கு தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகளுடன் ஆளுநர் சந்திப்பு

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி
## எங்கள் கருத்து

# தாயகப்பற்றுடன் வாழும் புலம்பெயர் தமிழர்கள்!

மேற்குநாடுகளில் வசிக்கின்ற புலம்பெயர் இலங்கைத் தமிழர்கள் அனைவருமே எமது நாட்டின் பிரிவினைக்கு ஆதரவானவர்களென்ற எண்ணம் எமது நாட்டின் பெரும்பான்மையின மக்கள் பலரிடம் ஆழமாக வேரூன்றிப் போயுள்ளது. மேற்குநாடுகளில் வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் அனைவரும் இலங்கைக்கு விரோதமான எண்ணம் கொண்டவர்களென்று பெரும்பான்மைச் சமூகத்தில் பலர் கருதுகின்றனர்.

இந்தச் சிந்தனையானது 83 ஆம் ஆண்டு இனவன்செயலுக்குப் பின்னர் தோற்றம் பெற்றதெனக் கூறுவதே பொருத்தம். 83 வன்செயலிலும், அதற்குப் பின்னர் ஆரம்பமான உள்நாட்டுப் போரிலும் உடலளவிலும் உள்ளத்தாலும் நொந்து போன தமிழர்களில் பலர், இனிமேல் உயிர்ப்பாதுகாப்புடன் இங்கு வாழ முடியாதென்ற அச்சத்திலேயே தமிழகத்துக்கும் மேற்குநாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றிருந்தனர்.

அவர்கள் இலங்கையை விட்டுச் செல்கையில், இனவாதத்தையே வெறுத்தனர்; தாயகத்தை ஒருபோதும் வெறுக்கவில்லை. பிறந்து வளர்ந்து சொந்தநாட்டை விட்டு வெளியேறிச் செல்கின்றோமென்ற ஏக்கத்துடனேயே அவர்கள் தாயகத்தை விட்டு நீங்கிச் சென்றனர். அந்த ஏக்கம் புலம்பெயர் தமிழர்களின் உள்ளத்தில் 06

## அமெரிக்க தூதுவருடன் ஜம்இய்யத்துல் உலமா சந்திப்பு

தேசிய, சர்வதேச நல்லுறவுகள் குறித்து பேச்சு



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் பிரதிநிதிகளுக்குமிடையில் சிநேகபூர்வ சந்திப்பொன்று ஜம்இய்யத்துல் உலமாவின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் 06

## எழுத்தாளர் சட்டநாதனுக்கு 'சாகித்திய ரத்னா' உயர் விருது

அரச சாகித்திய விழாவில் வழங்கி கௌரவம்



அரச இலக்கிய சாகித்திய விருது வழங்கும் விழா கடந்த வியாழக்கிழமை மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றதுடன், இந்த வருடத்துக்கான அரசு உயர் சாகித்திய ரத்னா விருது நாடறிந்த எழுத்தாளர் சட்டநாதனுக்கு வழங்கி வைக்கப்பட்டது. 06

## ஐ.நா. மனிதவுரிமை அறிக்கையில் இனி மலையகமும் இடம்பெறும்

மனோ MPயிடம் ஐ.நா. பிரதிநிதி உறுதியளிப்பு



ஐ.நா. மனித உரிமை பேரவையின் இந்த வருட அறிக்கையில் மலையகம் தொடர்பாக குறிப்பிடாமை ஒரு குறைபாடென்பதை ஐ.நா.வின் 06





# சவுதி அரேபியாவினால் வெற்றிகரமாக நடத்தப்பட்ட
# 21வது இலவச கண் சிகிச்சை முகாம்

**இன, மத பேதமின்றி சகலருக்கும் மனித நேய உதவி**

இரண்டு புனித ஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மற்றும் இள வரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோரின் பணிப்பின் பேரில் பல்வேறு நாடுகளிலும் இலவச கண்சிகிச்சை முகாம்கள் நடை பெற்று வருகின்றன. சவுதி அரசின் இந்த இலவச சேவையி னால் இருட்டில் இருந்து வெளிச் சத்தை காணும் பாக்கியத்தை பலரும் பெற்றார்கள். இந்த நிலையில் 21ஆவது தடவை யாக இலங்கையில் கடந்த 11ம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இலவச கண் சிகிச்சை முகாம் நாட்டின் பல்வேறு பகுதிகளை யும் உள்ளடக்கும் வகையில் நடைபெற்றது.

பார்வை குறைபாடுள்ள மற்றும் வசதி குறைந்த மக்க ளுக்கு உதவும் வகையில் மனி தநேய உதவிகளுக்கும் நிவார ணத்துக்குமான மன்னர் சல்மான் நிலையம் இத்திட்டத்தை சுமார் 60 நாடுகளில் நடைமுறைப்ப டுத்தி வருகிறது. இலங்கையில் பல வருடங்களாக இம்மருத்துவ சேவையை சவுதி அரேபியா இன, மத, மொழி, பேதமின்றி அனைவரும் நன்மையடையக் கூடிய விதத்தில் பல மாவட்டங்க ளிலும் நடைமுறைப்படுத்தியது. இம்முறை இவ் இலவச மருத் துவ முகாம் இலங்கையில் உள்ள சவுதி அரேபிய தூதரகத்தின் கண் காணிப்பில் தென் மற்றும் கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றது. இதுவரை இலங்கையில் மாத்தி ரம் சுமார் 26 ஆயிரம் பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் இம்ம ருத்துவ முகாமின் ஊடாக பயன டைந்திருக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை மருத் துவ முகாமின் உத்தியோகபூர்வ ஆரம்ப நிகழ்வொன்று காத்தான் குடி தள வைத்திய சாலையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் மருத்துவர்கள், சவுதி அரேபியா அன்னூர் தொண்டு நிறுவனத்தின் பிரதிநிதிகள், பிரதேச அரசியல் வாதிகள் மற்றும் ஊர்ப் பிரமுகர் கள் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பலரும் சவுதி அர சாங்கத்தின் இந்த மனித நேய உதவிகளை வெகுவாகப் பாராட் டியிருந்தனர். பொருளாதார நெருக்கடி நிலையில் இப்படி யான மருத்துவ சேவைகளை இலவசமாக வழங்கிய சவுதி அரேபிய மன்னர் சல்மான் பின் அப்துல் அசிஸுக்கும் இளவரசர் முஹம்மத் பின் சல்மானுக்கும் தமது நன்றிகளை தெரிவித்தனர்.

இம்முறை நடைபெற்ற மருத் துவ முகாமில் சுமார் 2000க்கும் மேற்பட்டோருக்கு கண் பரிசோ தனைகள் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 165 சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட் டதோடு சுமார் 500 மூக்கு கண் ணாடிகள் வழங்கப்பட்டன.

அரசாங்கத்தின் அங்கீகாரத்து டன் நடைபெற்ற இம்மருத்துவ முகாமில் கண் பரிசோதனை விழித்திரை சம்பந்தப்பட்ட நோய்கள், லேசர் சிகிச்சை, கண்ணில் படரும் வெள்ளை நீர் அகற்றுதல், குளுக்கோமா



அறுவை சிகிச்சை போன்ற சேவைகள் உள்ளடங்கும். சத்திர சிகிச்சைகள் மேற்கொள் ளப்பட்டதன் பின் அவர்களது சிகிச்சைக்கான அட்டைகள் வழங்கப்பட்டன. அவ்வட்டை கள் மூலம் மீண்டும் அவர்களை பரிசோதிப்பதற்கான திகதிகள் வழங்கப்படும். இந்த மருத்துவ முகாம்களின் போது கண் நோய் சம்பந்தமான விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

சவுதி அரேபிய மனிதபிமான உதவிகளில், இத்திட்டம் பெரும் வரவேற்பை பெற்றிருக்கும் அதேவேளை சவுதி அரேபியா அல்நூர் தொண்டு நிறுவனத்தின் பிரமுகர்கள் மற்றும் மருத்து வர்கள் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல்கஹ்தானியைச் சந் தித்து உரையாடினார்.

இது குறித்து சவுதி தூதரகத்தின் உத்தியோகபூர்வ டுவிட்டரில் பதி விடப்பட்டிருந்தது.

சவுதி நிவாரண உதவிகள் மற்றும் இயற்கை அனர்த்தங் களால் பாதிக்கப்பட்ட நாடுக ளுக்கு தேவையான உதவிகள் அனைத்தும், நிவாரணத்துக்கும் மனித நேய உதவிகளுக்குமான மன்னர் ஸல்மான் நிலையத்தி னூடாகவே மேற்கொள்ளப்படு கின்றன.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதமின்றி வறிய மக்கள் பலரும் சவுதி அரேபியாவின் இந்த மனிதநேய உதவியால் பய னடைந்து வருகின்றனர். எதிர்கா லத்திலும் இவ்வாறான நிவாரண சேவைகளை வழங்க சவுதி அரேபியா எதிர்பார்த் துள்ளது.







**அஷ்–ஷைக் பௌஸுல் அலவி (மதனி)**
செயலாளர், தாருல் ஈமான் நிறுவனம்

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் அஸ்வர் நினைவுகள்

எம்.ஏ. முஹம்மத் மாஸ்டர் தயாரித்து நடாத்திய, "உஃவத்துல் இஸ்லாம்" சிங்கள மொழியிலான முஸ்லிம் நிகழ்ச்சியில் காலஞ் சென்ற முன்னாள் அமைச்சரும், எழுத்தாளரும், கலைஞருமான, ஏ.எச்.எம். அஸ்வர், தனது மாணவ பருவத்தில் குரல் கொடுத்ததன் மூலம் இலங்கை வானொலியில் கால்பதித்தார்.

இந்நிகழ்ச்சி 01.01.1957 அன்று 9.45க்கு நேர டியாக ஒலிபரப்பாகி இருக்கிறது. இந்நிகழ்ச் சியை தொடர்ந்து, எம். ஏ.முஹம்மத் மாஸ்டரால் இலங்கை வானொலிக்கு அறிமுகம் செய்யப்பட்ட இவர் அந்நாட்களில் இலங்கை வானொ லியில் ஒலிபரப்பான சிங்கள மொழியிலான முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு, தொடராக பங்களிப்பு வழங்கி வந்தார். முஸ்லிம் நிகழ்ச்சிகள், "முஸ்லிம் சேவையாக" தனது பயணத்தை இலங்கை வானொலியோடிணைந்து







பயணிக்க தொடங்கிய காலக்கட்டத்தில் முஸ்லிம் சேவையுடனான, இவரது தொடர்புகள் அதிகரித்தன.

முன்னாள் சபாநாயகர் பாக்கிர் மாக்காரின் பிரத் தியேக செயலாளராக இருந்த காலத்தில் முஸ்லிம் சேவையில் வாராந்தம் "முஸ்லிம் உலக செய்திகள்" வாசித்தார்.

பின்னாட்களில் அஸ்வர் முஸ்லிம் சேவையின் கலை ஞராக தெரிவாகி, நாடகங் கள் பல எழுதியதோடு, பல நாடகங்களில் நடித்து தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார். கலைஞர்கள் மீது பேரன்பு கொண்ட இவர், முஸ்லிம் சமய விவகார இராஜாங்க அமைச்சராக இருந்த போது "வாழ்வோரை வாழ்த்துவோம்" எனும் திட்டத்தின் மூலம் கலை ஞர்களுக்கு, அரசு சார்ந்த.

பட்டங்கள் வழங்கியதோடு பொற்கிழியும் வழங்கி எல்லோர் மனதிலும் இடம் பிடித்துக் கொண்டார்.

இச்செயல், கலைஞர்களால் மட்டுமல்ல அனைவராலும் இன்றும் நினைவுகூரப்படுகின் றமை இவருக்கு கிடைத்த பாக் கியமே. அரசு மட்டத்தில் இவர் அறிமுகப்படுத்திய இத்திட்டம் இவரோடு நின்று போனமை வேதனைக்குரியது.

இவரது நினைவுகளை எதிர் வரும் செவ்வாய் (19.09.2023) இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சி தொடர் சுமந்து வரு



கிறது. இவரது நினைவுகளை சிரேஷ்ட ஒலிபரப்பாளர் புர்கான் பீ.இப்திகார், முஸ்லிம் சமய பண் பாட்டு அலுவல்கள் திணைக்கள முன்னாள் பிரதிப் பணிப்பாளர், மௌலவி ஜே.மீராமொஹிதீன் (கபூரி), ஏ. எச். எம். அஸ்வரின் புதல்வர் அமீன் ஆகியோர் அதிதி களாக கலந்து பரிமாறிக் கொள்கி றார்கள்.

நிகழ்ச்சியினை எம்.எஸ்.எம். ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம். ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித் தளிக்கிறார்.




பாகிஸ்தானின் 58 வது பாதுகாப்பு மற்றும் தியாகிகள் தினம் கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு வருகை தந்த இலங் கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியை பாகிஸ்தானின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) உமர் பாரூக் புர்கி வரவேற்ற போது பிடிக்கப்பட்ட படம்.









சுவிஸ் அக்கடமி ஒவ் ஆர்ட் நடன ஆசிரியர் நாட்டிய மணி திருமதி வாணி சர்மாவின் மாணவி கேதாரணி இரத்தினகுமாரின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பிஷப் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் உடுவை எஸ். நில்லைநடராஜா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக திருமதி ஷாமினி இராஜதுரை, ம பத்மநாதன், சிற்பக்கலைச் சுடர் சே.கீர்த்திவர்மன் கலாநிதி ராஜ்குமார் பாரதி, திவ்யா சுஜேன் ஆகியோர் கலந்து கொண்டதோடு படத்தில் மாணவியின் நடனத்தோற்றத்தையும் கலந்து கொண்ட விருந்தினர்கள் கௌரவிக்கப்படுவதையும் அணி சேர் கலைஞர்களையும் காணலாம்.

# லேக் ஹவுஸில் நீண்டகாலம் பணியாற்றியோரை கௌரவிக்கும் விழா





அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் (லேக் ஹவுஸ்) நிறுவனத்தின் நீண்ட கால சேவை விருது வழங்கும் விழா நிறுவனத்தில் செப்டெம்பர் 14ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மிகவும் சிறப்பான முறையில் இடம்பெற்றது. இந்நிகழ்வு நான்கு வருடங்களின் பின்னர் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நெடுஞ்சாலைகள், போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கலந்து கொண்டிருந்ததோடு, லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன் போது லேக்ஹவுஸ் நிறுவனத்தின் எதிர்காலம் மற்றும் வளர்ச்சிக்காக சிறப்பு பணியாற்றிய ஐந்து ஊழியர்களுக்கு நீண்ட சேவைக்கான விருதுகள் வழங்கப்பட்டன. இவ்வாறு நீண்ட சேவை விருதுகள் பெற்றுக் கொண்டவர்களுள் 29 வருடகால சேவையினைப் பூர்த்தி செய்த ஆசிரியர்பீட நிர்வாகப் பிரிவின் டப்ளிவ். ஏ. ஆர். பீ. விஜயலத், பராமரிப்பு பிரிவில் 28 வருடகால சேவையினை நிறைவு செய்துள்ள எச். ஏ. நந்தசேன, கண்டிக் கிளை அலுவலகத்தின் கே. எஸ். குமார, அச்சுப் பிரிவின் எம். வீ. பி. விஜேவீர மற்றும் என். பீ. ஏ. எல். ஐ. நாமரத்ன ஆகியோர் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

அதேபோன்று 51 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள சண்டே ஒப்சர்வர் பத்திரிகையின் பென் ரோச்சும் இதன்போது கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வுடன் இணைந்ததாக, இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் 2021ம் ஆண்டுக்கான சிறந்த ஊடகவியலாளர்களாக சிறப்பு விருது பெற்ற லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளர்களுக்கும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். இவ்வாறு விருது பெற்றுக் கொண்டவர்கள், ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் மற்றும் சிலுமின பத்திரிகையின் ஆசிரியர் தர்மன் விக்கிரமரத்ன ஆகியோருடன் இணைந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தையும் காணலாம்.

மேலுள்ள வலது பக்கப் புகைப்படத்தில் காணப்படுவது சிறப்பு ஊடகவியலாளர் விருதினைப் பெற்றுக் கொண்ட சிலுமின ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த சுரேகா நில்மினி இளங்கோன் சமீபத்தில் எழுதிய 'திய சித்தம்' என்ற நூலின் முதல் பிரதியை நெடுஞ்சாலைகள், போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவுக்கு வழங்கிய சந்தர்ப்பமாகும். 'திய சித்தம்' என்ற நூல் அதன் ஆசிரியர் சுரேகா நில்மினி காரியவசத்தினால் எழுதப்பட்ட 17வது நாவலாகும்.

இந்நிகழ்வில் லேக்ஹவுஸ் ஆசிரியர் பீடப் பணிப்பாளர் மூத்த ஊடகவியலாளர் சிசிர பரணதந்திரி, சட்டம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ஜனக ரணதுங்க, செயற்பாட்டுப் பணிப்பாளர் சட்டத்தரணி மஞ்சுள மாக்கும்புர, நிதிப் பணிப்பாளர் கலாநிதி சுனில் நவரத்ன, பொது முகாமையாளர் சுமித் கொத்தலாவல, தினமின பத்திரிகையின் ஆசிரியர் மனோஜ் அபயதீர, டெய்லி நியூஸ் பத்திரிகையின் ஆசிரியர் ஜயந்த ஸ்ரீ நிஸ்ஸங்க, தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் தேவதாசன் செந்தில்வேலவர், சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையின் ஆசிரியர் பிரமோத் டி சில்வா உள்ளிட்ட லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

**எம். எஸ். முஸப்பிர்**



# இலங்கையின் ஆழ்கடலில் ஏற்படும் பூகம்பங்கள் சுனாமியை ஏற்படுத்துமா?

இந்து சமுத்திரத்தில் நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள இலங்கையில் கடந்த சில வருடங்களாக அடிக்கடி நில அதிர்வுகள் பதிவாகின்றன. அவை நிலத்திலும் நாட்டை சூழவுள்ள கடலிலும் இடம்பெறுகின்றன. அந்த வகையில் கடந்த 11ஆம் திகதி இரவு (2023 செப்டம்பர் 11ஆம் திகதி) மட்டக்களப்பு கடற்கரையில் இருந்து 310 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் 24 கிலோ மீற்றர்கள் ஆழத்தில் 4.65 ரிச்டர் அளவில் நில அதிர்வொன்று பதிவானது. அதுபோன்று கடந்த ஜுலை 2ஆம் திகதி தென் கிழக்கு ஹம்பாந்தோட்டையில் இருந்து 1200 கிலோ மீற்றர்கள் தூரத்தில் கடலில் 10 கிலோ மீற்றர்கள் ஆழத்தில் 5.8 ரிச்டர் அளவிலும் கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி தென் கிழக்கு ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் இருந்து 25.8 கிலோ மீற்றர்கள் தூரத்தில் 3 கிலோ மீற்றர்கள் ஆழத்தில் 4.4 ரிச்டர் அளவிலும் மார்ச் 10ஆம் திகதி அதிகாலை 3.30 மணியளவில் 3.00, 3.5 மற்றும் 2.3 ரிச்டர் அளவுகளில் புத்தள, பெல்வத்த, வெல்லவாய பிரதேசங்களிலும் நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன.

இவ்வாறு நில அதிர்வுகள் பதிவானதும், அவை சுனாமி அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடியவை அல்ல என்று இலங்கை புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகம், இலங்கை வளி மண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பன உடனடியாக அறிவித்து மக்களுக்கு அறிவூட்டி விடுகின்றன.

ஆனாலும் 2022இல், 07 நில அதிர்வுகளும் 2023இல் முதல் சில மாதங்களுக்குள், புத்தல, பேருவளை, கிரிந்த, கோமரன்கடவல மற்றும் அம்பாந்தோட்டை பகுதிகளில் 09 நிலஅதிர்வுகளும் பதிவாகியுள்ளன. அந்த வகையில் கடந்த 11ஆம் திகதி மட்டக்களப்பு கடற்கரைக்கு அப்பால் கடலில் ஏற்பட்ட 4.65 ரிச்டர் அளவிலான நில நடுக்கத்துக்கு முன்னரான 08ஆம் திகதி வட ஆபிரிக்க நாடான மொரோக்கோவில் 6.8 ரிச்டர் அளவில் பூகம்பம் ஏற்பட்டு 2900க்கும் மேற்பட்டோர் உயிரிந்ததோடு 5530பேர் காயமடைந்து கோடிக்கணக்கான சொத்துக்களும் அழிவுற்றுள்ளன.




அதனால் இந்நாட்டில் அவ்வப்போது பதிவாகும் நில அதிர்வுகள் குறித்து மக்கள் மத்தியில் அச்ச நிலையும் காணப்படவே செய்கின்றது.

ஏனெனில் புவி நடுக்கம் என்பது சில வினாடிகளே நீடிக்கக்கூடியவை. ஆனால் பாரிய அழிவுகளையும் இழப்புக்களையும் ஏற்படுத்தக்கூடியவை. அதனால் நில நடுக்கத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையும் அழிவுகளையும் குறைத்து, தவிர்த்துக் கொள்வது இன்றியமையாததாகும். அதற்கு விழிப்புணர்வு மிகவும் அவசியமானது.

அந்த வகையில் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்தின் நில அதிர்வுகள் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் அதிகாரியொருவரின் கருத்துப்படி, நாட்டில் நில அதிர்வுகளைக் கண்காணிக்கும் தொழில்நுட்ப வசதிகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதோடு நிலநடுக்கங்கள் குறித்த அறிவும் மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளன. அதனால் சிறிய நில அதிர்வு குறித்தும் கவனம் செலுத்தப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதே கருத்தைத் தான் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான பூகற்பவியல் ஓய்வுநிலை பேராசிரியர் அத்துல சேனாரத்ன இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

'தற்போது நாட்டில் நில அதிர்வு குறித்த அறிவும் தொழில்நுட்ப கண்காணிப்பு வசதிகளும் முன்னேற்றமடைந்துள்ளதால் அதனை உணர்வது அதிகரித்துள்ளதே அன்றி நில அதிர்வு ஏற்படுவது அதிகரிப்பதாக நான் கருதவில்லை'.

நில அதிர்வுகளைக் கண்காணிக்கும் தொழில்நுட்பக் கருவிகள் இந்நாட்டின் பல்லேகல, மகாகனரதாவ, ஹக்மன, புத்தங்கல உட்பட 10க்கும் மேற்பட்ட இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன. அவை 24 மணிநேரம் தொழிற்படுவதோடு, நிலத்திலோ கடலிலோ ஏற்படும் நில அதிர்வுகளை உடனுக்குடன் பதிவு செய்யக்கூடியனவாகவும் உள்ளன. அவை குறித்து உடனுக்குடன் ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு அறிவூட்டப்படுகின்றன.

இதன் மூலம் நில நடுக்கங்கள் குறித்த போதிய அறிவை மக்கள் பெற்றுக்கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது. அத்தோடு அவை குறித்து அதிகம் கவனம் செலுத்தக்கூடிய நிலைமையும் உருவாகியுள்ளது. இற்றைக்கு 10 முதல் 15 வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறு நில அதிர்வுகள் ஏற்பட்டிருக்க முடியும். அது தொடர்பிலான விழிப்புணர்வு இன்மையால் அது பெரிதாக உணரப்படவுமில்லை. அப்போது அவற்றைப் பதிவு செய்வதற்கான போதிய தொழில்நுட்ப வசதிகளும் நாட்டில் காணப்படவுமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

நில நடுக்கமானது எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம். அவற்றை முன்கூட்டியே கூற முடியாது. ஆனால் நிலநடுக்கம் ஏற்பட்டதும் இரண்டு முறைகளில் அறிந்து கொள்ளலாம். அவற்றில் ஒன்று பூகம்பத்தை அளவீடு செய்யும் கருவிகள் மூலம் அறிந்து கொள்ளலாம். மற்றையது மனிதர்களால் உணர முடியும். நில அதிர்வை உணர்வதற்கு பதற்றமவர்களாகவும் உள அமைதி கொண்டவர்களாகவும் இருப்பது அவசியம். ஆனால் நில அதிர்வு குறித்த அறிவைப் பெற்றிராதவர்கள் சில நில அதிர்வுகளைப் பொருட்படுத்துவதில்லை. குறிப்பாக வாகனத்தில் பயணிக்கும் போது உள்ளிட்ட பல சந்தர்ப்பங்களில் அதனை உணர முடியாது. ஆனால் நவீன தொழில்நுட்பக் கருவிகளைக் கொண்டு எல்லா நில அதிர்வுகளையும் அளவிட முடியும்.



அதனால் நில நடுக்கத்தின் தாக்கங்கள், பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பு பெற்றுக்கொள்வதற்காகவும் அதன் பாதிப்புக்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் விரைந்து செயற்பட வேண்டும். குறிப்பாக பூகம்பமொன்றை உணரும் சந்தர்ப்பத்தில் உயரமான கட்டடங்களில் இருப்பவர்கள் மின்னுயர்த்திகளை பயன்படுத்தி கீழே இறங்க முற்படலாகாது. கட்டடத்தின் படிகளைப் பயன்படுத்தி கீழே இறங்க வேண்டும். ஆனால் உயரமான கட்டங்களில் இருப்பவர்கள் உடனடியாக வலுவான மேசைக்கு கீழோ அல்லது கட்டிலுக்கு கீழோ இருந்து தலையையும் கழுத்தையும் பாதுகாத்துக் கொள்வது அவசியம். அதன் மூலம் கூரை ஓடுகள் தலைகளில் விழுந்து பாதிப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அதேநேரம் வீதியிலும் பாலங்களிலும் பயணிப்பவர்கள் விரைந்து திறந்த வெளிகளுக்கு செல்வது நல்லது. இந்தோனோசியா, சுமத்ரா போன்ற பிராந்தியங்களில் பூகம்பம் ஏற்பட்டால் சுனாமி அனர்த்தம் குறித்து கூடுதல் கவனம் செலுத்தவும் தவறலாகாது. குறிப்பாக கரையோரங்களை விட்டு உயரமான நிலப்பகுதிக்கு செல்வது முக்கியமானது. அத்தோடு இப்பிராந்தியங்களில் 6.5 ரிச்டர் அளவுக்கு மேல் பூகம்பம் ஏற்பட்டால் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவம், வளிமண்டலவியல் திணைக்களம் என்பவற்றின் அறிவித்தல்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தவும் வேண்டும் எனவும் வலியுறுத்துகிறார் பூகம்ப கண்காணிப்பு மத்திய நிலையத்தின் அதிகாரி.

இலங்கையானது இந்தோ – அவுஸ்திரேலிய புவித்தட்டில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்றாகும். இந்தியாவின் இமயமலைப் பகுதியில் இருந்து அவுஸ்திரேலியாவின் கிழக்கு மூலை வரையும் பரந்து காணப்படும் இப்புவித்தட்டின் எல்லைகளில் நில நடுக்கங்கள் ஏற்படுகின்றன. அவை சில சந்தர்ப்பங்களில் எம்மால் உணரக்கூடியனவாக அமைகின்றன.

இப்புவித்தட்டின் மத்தியில் உடைவு ஏற்பட்டுள்ளதோடு ஏனைய இடங்களிலும் 20க்கும் மேற்பட்ட பிளவுகள் உருவாகி வருகின்றன. இதன் விளைவாக புவித்தட்டின் உட்பகுதியில் நகர்வுகள் நிகழ்வதோடு உராய்வு மற்றும் மோதும் நிலை ஏற்படும் போது சிறிய, பெரிய பூகம்பங்கள் அவ்விடங்களில் ஏற்படுகின்றன. இது ஆழ்கடலில் இடம்பெறுவதால் அதன் தாக்கங்கள் குறைவான போதிலும் அவற்றை எம்மால் உணரக்கூடியதாக இருக்கும். ஆனால் சுனாமி அனர்த்தம் ஏற்படாது.

இவ்வாறான நிலநடுக்கங்கள் இந்தோனேசியா, சுமத்ரா தீவின் பண்டா அசே பிரதேசங்களில் ஏற்படுமாயின் சுனாமி அனர்த்தம் ஏற்படலாம். அப்பிராந்தியம் ஆழமற்ற கடற்பரப்பைக் கொண்டுள்ளது. அப்பகுதியில் பூகம்பம் ஏற்பட்டால் 2004 போன்று சுனாமி அனர்த்த அச்சுறுத்தல் ஏற்படலாம்.

அதன் தாக்கத்தை எம்மாலும் உணரக்கூடியதாக இருக்கும். மற்றப்படி எமது கடற்பிராந்தியத்தில் ஏற்படும் பூகம்பங்களினால் சுனாமி அனர்த்தங்கள் ஏற்படாது எனவும் ஒய்வு நிலைப் பேராசிரியர் சேனாரட்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இலங்கையின் தென் பகுதிக்கு அப்பால் பூகம்ப வலயமொன்று உருவாகியுள்ளது. அங்கும் நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. அதனால் தெற்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் அவ்வப்போது நிலஅதிர்வுகள் உணரப்படுகின்றன.

நிலஅதிர்வு குறித்த அறிவைக் கொண்டுள்ளவர்களால் இது பெரிதும் உணரப்படுகிறது. ஆனாலும் இந்நிலஅதிர்வுகள் குறித்து அச்சம் கொள்ளத் தேவை இல்லை என்பதையும் குறிப்பிடத்தவறவில்லை பேராசிரியர் சேனாரட்ன.



**மர்லின் மரிக்கார்**

● மட்டக்களப்பு கரையிலிருந்து 310 கிலோ மீற்றர் தூரத்தில் 4.65 ரிச்டர் அளவில் நிலஅதிர்வு

● நில அதிர்வுகள் அதிகரித்திருப்பதாக நான் கருதவில்லை

– ஓய்வுநிலை பேராசிரியர் அத்துல சேனாரட்ன



● இந்தோனேசியா, சுமத்ராவில் நிலநடுக்கம் ஏற்படின் விழிப்புடன் இருப்பது அவசியம்

– புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகம்

● நிலநடுக்கம் குறித்த அறிவு, தொழில்நுட்ப வசதிகளில் முன்னேற்றம்




லோரன்ஸ் செல்வநாயகம்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களும் உயிர்த்தெழும் புது முரண்பாடுகளும்

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் கருத்துக்களும் விமர்சனங்களும் முரண்பட்ட கூற்றுக்களும் மீண்டும் புதிய வடிவில் வெளிப்பட்டு வருவதை இக்காலங்களில் காணமுடிகிறது.

அது தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு அது தொடர்பான சில விசாரணை அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ள நிலையிலும், நீதிமன்றத்திலும் அது தொடர்பான வழக்குகள் இடம்பெற்று வருகின்ற நிலையிலும் அண்மையில் செனல் 4 தொலைக்காட்சி அலைவரிசை ஒளிபரப்பியுள்ள அது தொடர்பான காணொளியினால் இந்த விவகாரம் வேறு கோணத்தில் பார்க்கப்படுவதுடன் அந்த காணொளியின் உண்மைத் தன்மை தொடர்பில் உறுதிப்படுத்தும் வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் பல தரப்புகளிலிருந்தும் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

அந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என இதுவரை காலமும் கூறப்பட்டு வந்தவர்கள் மற்றும் அவ்வாறு சம்பந்தப்பட்டவர்கள் என தெரிவித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மற்றும் வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் தற்போது சற்று தலைநிமிர்ந்து நாங்கள் அதனுடன் தொடர்புடையவர்கள் அல்ல. அதற்கு செனல் 4 அலைவரிசையில் காணொளி சான்றாக உள்ளது என்பதை தெரிவித்து வருகின்ற காலம் இது.

அந்த வகையில் சாதாரணமாக சென்று கொண்டிருந்த இந்த விவகாரம் செனல் 4 காணொளி வெளியீடு மூலம் குழப்பங்கள், முரண்பாடுகள் மற்றும் திருப்பங்களுக்கு வழி வகுத்துள்ளன. பாராளுமன்றத்தில் அது தொடர்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சியினால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறெனினும் இரு தரப்பில் இருந்தும் சர்வதேச விசாரணையொன்று நடத்தப்படுவது சிறந்தது என்ற கூற்று வெளிப்பட்டு வருவதையும் காணமுடியும். செனல்4 அலைவரிசை கடந்த காலங்களிலும் இவ்வாறான காணொளிகளை வெளியிட்டு வந்துள்ளது என்பதால் அந்த வகையில் இது ஒன்றும் புதிதல்ல என்றும், நாட்டில் குழப்ப நிலை ஒன்றை தோற்றுவிப்பதற்காக தொடர்ச்சியாக அந்த அலைவரிசை இத்தகைய காணொளிகளை ஒளி பரப்பி வருவதாகவும், இது இந்த நாட்டின் அரசியலில் ஒரு தரப்பினரை குறி வைத்து வீசப்படும் சேறு என்றும் சிலரால் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.



என்றாலும் சர்வதேச ரீதியில் இந்த விவகாரம் தற்போது சூடு பிடித்துள்ள நிலையில், தாக்குதல் சம்பவம் நடைபெற்ற காலத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் தமது நிலைப்பாட்டை அது தொடர்பில் முன்வைத்து வருகின்றமையும் இடம் பெறுகின்றது. முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் இது ராஜபக்ஷ குடும்பங்களை பழி வாங்குவதற்காக திட்டமிடப்பட்டு முன்வைக்கப்படும் விவகாரம் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையில், அந்த காணொளியின் உள்ளடக்கங்களை முற்றாக நிராகரிப்பதாகவும் அவை உண்மைக்குப் புறம்பானவை மற்றும் அவை சோடிக்கப்பட்டவை என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தரப்பில் அமைச்சர்கள் பலரும் அது தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன் வைத்துள்ள நிலையில், செனல் 4 காணொளி ஒலிபரப்பிய விடயங்கள் உண்மையானால் அது தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கூற்றை நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அது தொடர்பில் தெரிவிக்கையில், அரசாங்கம் அந்த விவகாரம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தியுள்ளதாகவும் அது தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் காணப்படுவதுடன் ஜனாதிபதி அதற்காக துறை சார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய விசேட குழுவொன்றை நியமித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் அவ்வப்போது கருத்துக்களை முன் வைத்து வரும் கத்தோலிக்க சமூகத்தின் தலைவர் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, மேற்படி விவகாரத்தில் செனல் 4 காணொளி புதிய திருப்புமுனையாக அமைவதுடன் அது தொடர்பில் சர்வதேச விசாரணையே அவசியம் என்பதையும் வலியுறுத்தி வருகின்றார்.

இத்தகைய பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையிலும் உயிர்த்த ஞாயிறு குண்டுதாத்தாக்குதல் தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்த ஆணைக்குழுவின் ஆணையாளர் அது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்கு ஐ. நா வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பதிலளித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பணியானது உலகளாவிய பாரபட்சமற்ற தன்மை, புறநிலை மற்றும் தேர்ந்தெடுக்காத தன்மை, ஆக்கபூர்வமான சர்வதேச உரையாடல் மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் கொள்கைகளால் வழிநடத்தப்படல் வேண்டும் என்பதே தீர்மானங்கள் 60/251 மற்றும் 48/141 இன் தேவைப்பாடாகும்.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையைப் பொறுத்தமட்டில் அது அவ்வாறு இருப்பதாகத் தெரியவில்லை. 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. எனினும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் தனது பகுப்பாய்வில் பக்கச்சார்பான ஆதாரங்கள் மூலம் பெறப்பட்ட தவறான மற்றும் ஆதாரமற்ற தகவல்களைப் பயன்படுத்த முற்பட்டமை வருத்தமளிக்கிறது.

இலங்கை பலமுறை அறிவித்துள்ளபடி, இந்த தாக்குதல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தினால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உட்பட பல விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அவுஸ்திரேலிய பொலிஸ், அமெரிக்காவின் எப்.பி.ஐ. மற்றும் இன்டர்போல் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விடயங்களில் 79 பேர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இந்த தாக்குதல்களின் போது ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபர், அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர், பாதுகாப்புச் செயலாளர் மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு மீதான தீர்ப்பை இலங்கை உயர் நீதிமன்றம் 2023 ஜனவரி 12ஆம் திகதி வழங்கியுள்ளது.

அத்துடன் பொதுவாக சமூகத்தில் வெளிப்படும் கவலைகளை நிவர்த்தி செய்யும் வகையில் பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அது தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரின் தலைமையிலான குழுவொன்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது என்பதையும் இலங்கைக்கான வதி விடப் பிரதிநிதி தமது பதிலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

(06ஆம் பக்கம் பார்க்க)



வெள்ளவத்தை ருத்ரா மாவத்தையில் அமைந்துள்ள தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற பொன்விழாவில் சொற்கோ வி.என். மதிஅழகன் என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் சிரேஷ்ட ஒலி/ஒளிபரப்பாளர் வி.என்.மதிஅழகனுக்கு ஆனந்த் ஆங்கில கல்வி மைய மாணவர்கள் சுரேந்திரன் மற்றும் கிருஷந்தன் ஆகியோர் மலர் மாலை அணிவித்தனர்.



யாழ். நெல்லியடி ராஜ கிராமத்தில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் விடுத்த வேண்டுகோளுக்கமைய கனடாவை சேர்ந்த மெட்ரோலான் மீடியா நிறுவன ஊழியர்களின் நிதிப்பங்களிப்பில் 1,000 லீட்டர் தண்ணீர் தாங்கியொன்று வழங்கப்பட்டுள்ளது. மெற்ரோலான் மீடியாவின் இலங்கைக்கான செயற்பாட்டாளரும் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் தேசபந்து லயன் கலாநிதி நா.தனேந்திரன் தண்ணீர் தாங்கியையளித்தபோது பிடிக்கப்பட்ட படம். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவினால் இந்த 175 வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# இலங்கையை இராணுவத்தளமாக பயன்படுத்த எந்தவொரு நாட்டுக்கும் அனுமதி கிடையாது!

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் சந்திப்பு



'இலங்கையை இராணுவத் தளமாகப் பயன்படுத்துவ–தற்கு எந்தவொரு நாட்டுக்கும் அனுமதி கிடையாது. அது சந்தேகத்திற்கு இடமற்றது' என்று வெளிவிவ–கார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார். இலங்கையின் வெளி–யுறவுக் கொள்கையான அணிசேராமை என்பதன் அடிப்படையில் உலக நாடுகளுடனான உறவுகளை சிறப்புடன் பேணுவதற்கு முழுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமை–ச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்தார். சர்வதேச நாடுகளுடன் இலங்கை கொண்டிருக்கும் உறவுகள் மற்றும் நட்புறவைப் பேணுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைக–ள் குறித்து எமக்கு அவர் பேட்டியளித்தார்.

**கே: ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் சீன ஆரா–ய்ச்சிக் கப்பலை நிறுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதான தகவல்களின் மத்தியில் சீனாவு–க்கும் இந்தியாவுக்கும் இடையி–லான புவிசார் அரசியல் பதற்றங்கள் அதிகரிக்குமா என்ற கேள்வி எழுகின்றது. இதுபற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: இலங்கை தனது நடுநிலை நிலைப்பாட்டை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகிறது. அனைத்து நாடுகளுடனும் வர்த்தகம் மற்றும் ஒத்துழைப்பில் ஈடுபடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் சுயாதீனத்தை உறுதி செய்வதே எங்கள் அடிப்படை முன்னுரிமை. இலங்கையை இராணுவத் தளமாகப் பயன்படுத்துவதற்கு எந்தவொரு நாட்டையும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி உள்ளது.

இந்த நிலைப்பாட்டை சமநிலைப்படுத்துவது சவாலானது என்றாலும் அது மிகமிக அவசியமானதாகும். எங்கள் துறைமுகங்களில் நிறுத்த அனுமதிக்கப்படும் கப்பல்கள், இராணுவம் அல்லது வேறு வகைகளில் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்க, நிலையான செயல்பாட்டு நெறிமுறையை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

## அணிசேராமையின் அடிப்படையில் உலக நாடுகளுடனான உறவுகளை சிறப்புடன் பேணுவதற்கு இலங்கை முழுமையான நடவடிக்கை

**கே: இன்றைய உலகில், நடு–நிலையான அல்லது அணிசேரா வெளியுறவுக் கொள்கை சாத்தியமான அணுகுமுறையா?**

பதில்: உலகம் பரிணாம வளர்ச்சியடைந்துள்ளது, நமது இராஜதந்திர உத்திகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன. எந்தவொரு தேசத்துடனும் மிக நெருக்கமாக இணைந்திருப்பதானது சவால்களை எதிர்கொள்ளும் போது நம்மை தனிமைப்படுத்திவிடும் என்பதை வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொண்டோம்.

இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையானது அணிசேராதது அல்ல, மாறாக பல அணிகள் சார்ந்தது. ஒன்று அல்லது இரண்டு குறிப்பிட்ட விருப்பங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதற்குப் பதிலாக பல தேர்வுகளைப் பேணுவதன் மூலம் பல நாடுகளுடன் நாங்கள் ஈடுபாடுகளைக் கொண்டுள்ளோம். இந்த அணுகுமுறை நமக்கு மட்டும உரித்தானது அல்ல, இது இராஜதந்திரத்தின் அடிப்படை அம்சமாகும்.

இந்த சிக்கலான உறவுகளின் வலையமைப்பை அவதானமாகவும், விடாமுயற்சியுடனும் நிர்வகிப்பதே எங்கள் குறிக்கோள். இது ஒரு சவாலான பணியாகும், ஆனால் நமது வெளியுறவுக் கொள்கையானது இலங்கையின் நலன்களுக்கு முதலிடம் கொடுக்கும் கொள்கையில் வேரூன்றி உள்ளது. எந்த ஒரு தேசத்துடனும் பக்கபலமாக இருக்கவோ அல்லது தேவையற்ற முறையில் நெருங்கிப் பழகவோ முடியாது என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக நமது தேசத்தின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கிறோம். இலங்கையின் வெளியுறவுக் கொள்கை இலங்கைக்கு ஆதரவாக உள்ளது.

**கே: இந்து சமுத்திர விளிம்பு சங்க–த்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க இலங்கை தயாராகி வரும் நிலையில், சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ–பசிபிக் கருத்தாக்க–த்திற்கு அந்த நாடு எவ்வாறு பங்களி–க்க முடியும்?**

பதில்: இந்து சமுத்திர விளிம்பு சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்றுக் கொண்டது ஒரு இராஜதந்திர பார்வையைக் கொண்டதாகும். நாடுகளுக்கிடையேயான கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க இராஜதந்திரம் மற்றும் பேச்சுவார்த்தைகளை நாங்கள் நம்புகிறோம்.

கணிக்கக்கூடிய, விதிகள் அடிப்படையிலான வரிசையை மேம்படுத்துவதே எங்கள் நோக்கம். இதன் பொருள் அனைத்து தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட, வெளிப்படையான மற்றும் தன்னிச்சையான மாற்றங்களுக்கு உட்பட்ட விதிகளை உருவாக்குவது ஆகும். பேச்சுவார்த்தையானது பதற்றங்களைக் குறைக்கும்.

**கே: பிராந்திய நாடுகளுடனான பல்வேறு சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுடன் இலங்கையி–ன் முன்னேற்றம் மற்றும் பிராந்திய விரிவான பொருளாதார பங்கா–ளித்துவத்தில் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய அறிவி–ப்பை உங்களால் வழங்க முடியுமா? பிரிக்ஸ் உறுப்புரிமைக்கு விண்ண–ப்பிப்பது பற்றி ஏதேனும் பரிசீலனை உள்ளதா?**

பதில்: பொருளாதார வளர்ச்சியில் வர்த்தகம் முக்கிய பங்கு வகிக்கும் இன்றைய உலகில், சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் முக்கியமானவை. பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை இலங்கை தீவிரமாக முன்னெடுத்து வருகிறது. சமீப காலங்களில் விரைவாக வளர்ச்சியடைந்த பல நாடுகள் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டு முன்னேறி வருகின்றன.

இலங்கை ஒப்பீட்டளவில் மிகவும் சிறிய சந்தையென்பதால் எந்தவொரு வெளிநாட்டு நிறுவனமும் தானாக முன்வந்து இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள முன்வராது. இது உலகப் பொருளாதாரத்தில் 0.07 சதவீதத்தைக் கொண்டுள்ளது என்று நான் நினைக்கிறேன். எனவே, இலங்கையைப் பார்த்து யாரும் இலங்கையைக் கைப்பற்ற முயற்சிக்கவில்லை.

நமது பலம் மற்றும் நமது அளவு பற்றிய மிக விரைவான மதிப்பீட்டை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் அவசியம்.

முதற்கட்டமாக, தாய்லாந்துடனான ஒப்பந்தங்களை இறுதி செய்து சிங்கப்பூருடன் ஏற்கனவே உள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை அமுல்படுத்த உள்ளோம். சீனாவுடனான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன, மேலும் இந்தியாவுடனான எங்கள் பொருளாதார ஒத்துழைப்பையும் விரிவுபடுத்துகிறோம்.

பிரிக்ஸ் உறுப்புரிமையைப் பொறுத்தவரை, நாங்கள் இன்னும் அந்தப் பாதையில் இறங்கவில்லை, ஆனால் நமது வெளியுறவுக் கொள்கையானது ஈடுபாடு மற்றும் திறந்த உறவுகளில் கட்டமைக்கப்பட்டுள்ளது. எனவே, நாங்கள் எங்கள் விருப்பங்களைத் திறந்து வைத்திருக்கிறோம், மேலும் எங்களது முடிவுகள் இலங்கையின் சிறந்த நலன்களுடன் இணங்கும்.

**கே: கச்சதீவுப் பகுதியை இந்தியா கையகப்படுத்த வேண்டும் என்று இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் அழைப்பு விடுக்க–ப்பட்டுள்ளது. இது இலங்கையின் கண்ணோட்டத்தில் பேச்சுவார்த்தை–க்கு உட்பட்டதா?**

பதில்: கச்சதீவின் நிலை குறித்து ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது. இது பேச்சுவார்த்தைக்குட்பட்ட விடயம் அல்ல. சில சமயங்களில், தேர்தல்களின் போது அரசியல் விவாதங்கள் வெளிப்படும், ஆனால் இவை பெரும்பாலும் அரசியல் கருத்தாக்கங்களால் இயக்கப்படுகின்றன. நமது நாடுகளுக்கிடையேயான தீர்வு ஒப்பந்தங்களைப் பிரதிபலிக்காது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.



## கச்சதீவு விவகாரம் குறித்து ஏற்கனவே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது. இது பேச்–சுவார்த்தைக்குட்பட்ட விடயம் அல்ல!

**கே: கொவிட் –19 தகனம் சர்ச்சை போன்ற பிர–ச்சினைகளால் முஸ்லிம் நாடுகளு–டனான இலங்கையின் உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டது. நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், இந்த உறவுகளை சரிசெய்யவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படு–கின்றன?**

பதில்: இலங்கை பாரம்பரியமாக முஸ்லிம் மற்றும் இஸ்லாமிய உலகத்துடன், குறிப்பாக அணிசேரா இயக்கத்தின் மூலம் வலுவான உறவுகளைப் பேணி வருகிறது. துரதிர்ஷ்டவசமாக, கொவிட்19 நெருக்கடியின் போது, சில முடிவுகளும் செயல்களும் எம்மைப் பற்றிய நிலைப்பாட்டை சேதப்படுத்தி உறவுகளில் விரிசலை ஏற்படுத்தி விட்டன.

இந்த உறவுகளை மீளக்கட்டியெழுப்பவும், எமது முஸ்லிம் நண்பர்களின் நம்பிக்கையை மீளப்பெறவும் நாம் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றோம். இந்த முக்கிய உறவுகளை மீண்டும் ஒருங்கிணைப்பதே எங்கள் குறிக்கோள், மேலும் கடந்தகால தவறான புரிதல்களை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது 2019 ஈஸ்டர் ஞாயிறு படுகொலைக்குப் பின்னர் உடனடியாக நடந்தது.

அவை அறிவியல் அல்லது தர்க்கத்தால் இயக்கப்படவில்லை. அது முஸ்லிம்கள் மீதான வெறுப்பு. மேலும் அவர்கள் அந்த நேரத்தில் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் கூட்டாக தண்டிக்க விரும்பினர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அது இலங்கையர்களை தண்டித்தது. உலகத்தின் பார்வையில், இலங்கை மனித உரிமைகளை மீறும் ஒரு சகிக்க முடியாத அரசாகத் தோன்றியது, இறந்தவர்கள் மற்றும் உயிருடன் இருப்பவர்களின் உரிமைகளையும் கூட மீறுகிறது.

எனவே, நிறைய சீரமைக்கும் பணிகள் செய்யப்பட வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதன் பின்னர், அதற்கான புதிய கண்ணோட்டம் கொடுக்கப்பட்டுள்ளதாக நான் நினைக்கிறேன். இதை முஸ்லிம் உலகமும் பாராட்டுகிறது.

---




# இந்தியா முன்வைத்துள்ள பொருளாதாரப் பாதையில் இலங்கையும் இணைவதால் அனுகூலங்கள் அதிகம்!

சர்வதேச சமூகம் போட்டித்தன்மை வாய்ந்த புதிய பொருளாதார திட்டங்களின் ஊடாக ஒரு உற்பத்தி விநியோக வலையமைப்பு மற்றும் சந்தை ஆக்கிரமைப்பை அணுகுகிறது. வேகமாக முன்னேறுவது வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் நோக்கமாக மாறியுள்ளது. காலாவதியான பொருளாதாரக் கட்டமைப்புக்குப் பதிலாக புதிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருவதையும், பழைய கட்டமைப்பை உடைக்க புதிய கூட்டணிகள் உருவாக்கப்படுவதையும் குறிப்பிடலாம்.

புதுடில்லியில் கடந்த வாரம் நடைபெற்ற ஜி 20 உச்சிமாநாட்டின் முடிவில், தெற்காசியாவிலிருந்து மத்திய கிழக்கு வழியாக ஐரோப்பாவிற்கு தரை மற்றும் கடல் வழியாக ஒரு கலப்பு (ஹைபிரிட்) பாதை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் இதுவரை கிட்டாத புதிய வாய்ப்புகளை உருவாக்க வழிவகுக்கும் என்று நம்பப்படுகிறது.

இந்தியா தலைமையில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டில் ஐரோப்பா, அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட பத்தொன்பது நாடுகளுடன் ஆபிரிக்க ஒன்றியமும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. உலக மக்கள் தொகையில் அறுபது சதவீதம் இந்நாடுகளில் அடங்குகிறது. இந்நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியானது உலக சராசரியின் எண்பது சதவீதம் ஆகும். சர்வதேச வர்த்தகத்தில் எழுபத்தைந்து சதவீதம் இந்நாடுகளுக்குச் சொந்தமானது என்பதோடு, இதன் மூலம் இவற்றின் பலம் தெளிவாகத் தெரிகிறது.

பல நாடுகளை இணைக்கும் புதிய பாதை அமைக்கப்பட்ட பின்னர் பெருமளவு நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. எரிபொருளை எரிப்பதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைக்க முடியும் என்று காட்டப்பட்டுள்ளது. நாடுகளுக்கு இடையே பயணம் செய்வதில் நேரத்தை மீதப்படுத்துவதோடு, விமானப் பயணங்களுக்குப் பதிலாக பசுமை எரிபொருளைப் பயன்படுத்தும் வாகனங்களை ஈடுபடுத்துவதன் மூலம் போக்குவரத்தில் மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மசகு எண்ணெய் மற்றும் உற்பத்திப் பொருட்களின் போக்குவரத்தை கூட குறுகிய பாதையில் விரைவாக மேற்கொள்ள முடியும், மேலும் இது வாடிக்கையாளர் மீது சுமத்தப்படும் செலவையும் குறைக்கும் என்று கூறப்படுகிறது. மின்சார விநியோக கம்பி தொகுதியும், ஹைட்ரஜன் குழாய் அமைப்பும் மூன்று வலயங்களையும் இணைக்கும் பாதையில் சேர்க்கப்படும்.

இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவூதி அரேபியா ஆகிய நாடுகள் முன்மொழிந்த பாதையை நிலம் மற்றும் கடலைப் பயன்படுத்தி அமைக்க இந்தியா கொள்கை முடிவு எடுத்துள்ளது. இந்த முடிவை எடுப்பதற்கு முன்னர், அந்த நாடுகளின் தேசிய பாதுகாப்புத் தலைவர்கள் சவுதி அரேபியாவில் சந்தித்து உத்தேச பாதையின் அடிப்படைக் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துள்ளனர். பின்னர், ஐரோப்பிய ஒன்றியமும் அதற்கு ஒப்புக்கொண்டது.

தெற்காசியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பாவின் மூன்று பகுதிகளை வெளிப்புற ஆற்றல் மற்றும் டிஜிட்டல் தொடர்பு மூலம் இணைத்த பிறகு, உலகின் வளர்ச்சியை விரைவுபடுத்தும் ஒரு நவீன உற்பத்திகளாலான வளர்ந்து வரும் பொருளாதாரத்தை உருவாக்க முடியும். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மத்திய கிழக்கு நாடுகள் தொடர்பாக கொண்டுள்ள கொள்கை இப்புதிய தோற்றத்தின் மூலம் தெரியவருகிறது. அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்ட வெளிப்படையான முறைகள் மூலம் பல நாடுகளின் பொருளாதாரத்தை அபிவிருத்தி அடையச் செய்யும் மாறுபாடான பாரிய முயற்சி இதுவாகும்.

மத்தியகிழக்கு நாடுகள் புதிதாக முன்மொழியப்பட்ட பாதை குறித்து நம்பிக்கையுடன் பார்க்கின்றன. பெட்ரோலியத்திற்கான தேவை குறைந்த பிறகு, உயிர்வாழ்வதற்கான நவீன நடவடிக்கைகளுக்கான அணுகுமுறையாக இது தோன்றுகிறது. 2031 ஆம் ஆண்டளவில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தனது நாணயத்தில் நான்கு ட்ரில்லியன் வரை பெட்ரோலிய வர்த்தகத்திற்கு வெளியே மற்றைய துறைகளில் முதலீடு செய்ய எதிர்பார்க்கிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வகையில், பல அரபு நாடுகள் 26 புதிய வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திடவுள்ளன. இந்த பாதையை இணைக்கும் வகையில் அதிவேக ரயில் மற்றும் நெடுஞ்சாலை வலையமைப்பை உருவாக்கவும் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றைக் நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்கும் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் தேவைப்படுவதால், வளரும் நாடுகளில் திறமையான தொழிலாளர்களின் மகிழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளது.

முன்மொழியப்பட்ட திட்டம் நிறைவடைந்த பிறகு, ஐரோப்பாவுக்கு இந்தியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான நேரம் நாற்பது சதவீதமும், முப்பது சதவீத செலவும் குறைக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அது இங்கே கருத்தில் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம்.

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் தரைவழிப் பாதை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது இலங்கையுடன் மின்சாரம், மசகு எண்ணெய் தொடர்பாகவும் மற்றும் தரைவழியிலான பாதை குறித்தம் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்த பரிந்துரைகளின்படி இலக்கு நிர்ணயிக்கப்பட்டால் இலங்கையானது ஐரோப்பா வரை இணைக்கப்படும்.

இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகள் ஹைபிரிட் ரோட் மூலம் இணைக்கப்பட்டால் இலங்கையும் இதன் மூலம் பயனடையும். தற்போது ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை, ஆடைகள், மீன் உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றை மிகக் குறைந்த விலையில் குறுகிய காலத்தில் ஏற்றுமதி செய்வது பொருளாதாரத்துக்கு உதவியாக இருக்கும். அதிகரித்த செலவு குறைக்கப்பட்ட பிறகு, இலங்கை பொருட்களுக்கு கேள்வி ஏற்படும். உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். ஐரோப்பா மற்றும் மேற்குலக நாடுகளுடனான தொடர்பு வாழ்க்கை முறையை மாற்றும் மற்றும் அணுகுமுறைகளில் மாற்றங்களுக்கு வழிவகுக்கும்.

உலகின் போக்குகளை உணர்ந்து அதற்கேற்ப முடிவுகளை எடுப்பது நல்லது. துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் உலகுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ள இலங்கையானது தரைப் பாதை வழியாக இந்தியா ஊடாக ஐரோப்பாவை இணைப்பதனால் வாய்ப்புகளை உருவாக்க முடியும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

## எங்கள் கருத்து

# தாயகப்பற்றுடன் வாழும் புலம்பெயர் தமிழர்கள்!

இன்னும் நீங்காமலேயே உள்ளது.

உலகில் வாழ்கின்ற மனிதர் ஒவ்வொருவருக்கும் தாயகம் மீதான பற்றுதல் இயல்பானவே உள்ளது. சொந்த நாட்டில் வாழ்கின்றவர்களை விட புலம்பெயர்ந்து சென்று தொலைதூரத்தில் வாழ்வோரிடமே தாயகம் மீதான ஏக்கம் அதிகமாக உள்ளது எனலாம். அது ஏறக்குறைய பிரிவுத்துயர் போன்றது. புலம்பெயர்ந்து சென்றுள்ள இலங்கைத் தமிழர்களும் அவ்வாறானவர்களேயாவர்.

இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து சென்று நான்கு தசாப்தகாலம் கடந்து விட்டது. அந்த நாற்பது வருடகாலத்தில் உள்நாட்டில் நடந்துள்ள மாற்றங்கள் ஏராளம். அதேபோன்று புலம்பெயர் சமூகத்தில் இடம்பெற்றுள்ள மாற்றங்களும் ஏராளம்.

தாங்கள் வாழ்கின்ற நாடுகளில் பொருளாதாரம், கல்வி, அரசியல் போன்ற துறைகளில் புலம்பெயர் தமிழர்கள் உச்சத்துக்குச் சென்று விட்டனர். மேற்குநாடுகள் சிலவற்றின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் அவர்கள் விளங்குகின்றனர். மேற்குலகின் பலம் வாய்ந்த சமூகமாக அவர்கள் உள்ளனர் எனலாம்.

இலங்கையர் என்ற ரீதியில் அவர்களை இலங்கைத் தேசம் ஒருபோதுமே புறந்தள்ளி ஒதுக்கிவிட முடியாது. பொருளாதாரத்தில் பலமுள்ளவர்களாக விளங்கும் அவர்களை இலங்கையில் முதலீடு செய்ய ஊக்குவிப்பதன் மூலமும், சர்வதேச ஆதரவு பெறுவதற்கு அவர்களது உதவிகளைப் பெறுவதன் மூலமும் எமது நாடு நன்மைகளைப் பெற முடியும்.

புலம்பெயர் தமிழர்களுடன் நல்லுறவை வலுப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலதடவை தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியதை நினைவிருக்கலாம். அதேபோன்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை அரவணைத்துச் செல்ல வேண்டியதன் அவசியம் குறித்து பலதடவை சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

புலம்பெயர் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் எமது நாட்டை தாயகமாகக் கொண்ட இலங்கையர்கள் என்பதை ஒருபோதுமே மறந்துவிட முடியாது.

## 45,000 மாணவர்கள்...

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு 2,63,993 மாணவர்கள் தோற்றியதாகவும் அவர்களில் 1,66,936 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இது 63.3 சதவீதமாக காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

## அமெரிக்க தூதுவருடன்...

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவுக்குமிடையிலான சந்திப்பின் போது ஜம்இய்யத்துல்லாவின் கொள்கைகள், குறிக்கோள்கள், சமூகம் தொடர்பான பணிகள், தேசியம் மற்றும் சர்வதேசம் சார்ந்த முன்னெடுப்புகள், நல்லுறவுகள் தொடர்பான அறிமுகங்கள் தொடர்பாக அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டன.

இதன்போது ஜம்இய்யத்துல்லாவின் தலைவர் அஷ்ஷைக் முஃப்தி எம்.ஐ.எம்.ரிஸ்வி, கடந்த காலங்களில் சமூகம் மற்றும் தேசியம் சார்ந்து ஜம்இய்யத்துல்லா எவ்வாறான பணிகளை, செயற்பாடுகளை செய்திருக்கிறதென்பது தொடர்பாக தெளிவுபடுத்தினார்.

இந்த சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், அகில ஜம்இய்யத்துல் உலமா, சமூகம் தொடர்பாக மேற்கொள்ளும் முன்னெடுப்புகள், பணிகளை தான் மதிப்பதாக தெரிவித்ததுடன், மனிதநேயப் பணி, நல்லிணக்கம் ஆகியவற்றுக்காக ஒன்றாக செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

## எழுத்தாளர் சட்டநாதனுக்கு...

எழுத்தாளர் சட்டநாதனுக்கு விருதை கலாசார, மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க வழங்கிக் கௌரவித்தார். அருகே பேராசிரியர் பிரசாந்தனும் காணப்படுகிறார்.

## ஐ.நா. மனிதவுரிமை யில்...

இலங்கை பிரதிநிதி மார்க் அந்தரே ஏற்றுக்கொண்டதுடன், எதிர்காலத்தில் இது நிவர்த்தி செய்யப்படுமெனவும் தெரிவித்தார். அத்துடன், இலங்கைக்கான ஐ.நா. நிகழ்ச்சிநிரலுக்குள் மலையகத் தமிழர்களின் பிரச்சினைகள், தேசிய நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும், ஐ.நா.வின் இலங்கை பிரதிநிதி உறுதியளித்தார். தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், வேலுகுமார் எம்.பி., கேகாலை மாவட்ட அமைப்பாளர் பரணீதரன் மற்றும் ஐ.நா. தரப்பில் இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதி மார்க் அந்தரே, சமாதான சாளர ஒருங்கிணைப்பாளர் தாரக ஹெட்டியாராச்சி ஆகியோர் கலந்துகொண்ட சந்திப்பு தொடர்பாக மனோ கணேசன் எம்.பி. கருத்துத் தெரிவித்த போதே, இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அலுவலகம், காணாமல் போனோர் அலுவலகம், உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (Truth and Reconciliation Commission) ஆகியவை இன்னமும் இழுபறியில் இருக்கின்றன. இரு தரப்பிலும் குற்றங்கள் நிகழ்ந்தனவென்பதை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் பிடிவாதமாக மறுக்கின்றமையே இதற்கு பிரதான காரணமென நான், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் என்ற முறையில் சொன்னதை ஐ.நா.வின் இலங்கை பிரதிநிதி மார்க் அந்தரே அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார்.

## உலகளாவிய அபிவிருத்திக்கான...

பெர்மியுடெஸ் தலைமையில் மாநாடு ஆரம்பமானதுடன், மாநாடு தொடங்க முன்னதாக மாநாட்டில் பங்கேற்றுள்ள அனைத்து அரச தலைவர்களும் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர். இந்த மாநாட்டை கூட்டியது தொடர்பாக கியூபா ஜனாதிபதி மிகெல் டியெஸ் கெனெல் பெர்மியுடெஸை (Miguel DiazCanel Bermudez) பாராட்டி தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பலதரப்பு அமைப்புகளில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் நோக்கங்கள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் கியூபா ஆற்றியுள்ள வரலாற்றுப் பங்கை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "தொற்று நோய்கள், காலநிலை மாற்றங்கள், உணவு, உரம் மற்றும் வலுசக்தி நெருக்கடி ஆகியன நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தடைகளை ஏற்படுத்துகின்றன. அதேபோன்று, அந்த நிலைமையை உலகளாவிய கடன் நெருக்கடி மேலும் அதிகரிக்கச் செய்வதுடன், அதன் காரணமாக முன்னெப்போதும் இல்லாத சவால்களை எதிர்கொள்ளும் நிலைமை உலகளாவிய ரீதியில் தெற்கு நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளது.

15ஆம் நூற்றாண்டில் துப்பாக்கிக் குண்டுகள், பீரங்கிகள் மற்றும் கடல் பயணக் கப்பல்கள் போன்ற துறைகள் மூலம் ஐரோப்பா அடைந்த முன்னேற்றங்கள் காரணமாக அவற்றுக்கு உலகின் பிற நாடுகளை கைப்பற்ற முடிந்தது.

அதன் விளைவாக உலகில் இன்று தொழில்நுட்ப ரீதியிலான பல்வேறு ஏற்றத்தாழ்வுகள் தோன்றியுள்ளன. அதிக செலவு காரணமாக சில தொழில்நுட்ப முறைகளுக்கு பிரவேசிப்பதற்குள்ள வரையறைகள், போதுமான டிஜிட்டல் திறன்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாமை, கலாசார மற்றும் நிறுவன ரீதியில் நிலவும் தடைகள் மற்றும் நிதி தொடர்பான தடைகள் போன்ற சவாலான சூழ்நிலைகள் இத்தகைய ஏற்றத்தாழ்வுகளுக்கு வழிவகுத்ததென்பதே எமது நம்பிக்கையாகும் என்றார்.

## ஊழியர் சேமலாப நிதிக்கு...

நாம் வெளிநாட்டுக் கடனாக பெற்றிருப்பது, அந்தந்த நாடுகளின் மக்களின் வரிப்பணமென்பதுடன், நாம் அது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். அதனால், வெளிநாட்டுக் கடனை செலுத்த முடியாத நிலையிலுள்ள நாடென்ற வகையில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்காமல், வெளிநாட்டுக் கடன்களை மாத்திரம் மறுசீரமைக்க இடமளிக்குமாறு கோரிக்கை விடுக்க எமக்கு வாய்ப்பில்லை. எனவே, உள்நாட்டுக் கடனை மறுசீமைப்பது கட்டாயமாகும்.

நாம் EPFETF நிதியங்கள் மூலமாகவே அதிகளவில் உள்நாட்டுக் கடன்களை பெற்றுள்ளோம். அதனாலேயே, இது தொடர்பாக விவாதம் ஏற்பட்டுள்ளது. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை ஏன் வங்கிகளில் முன்னெடுக்கப்படவில்லையென்று சிலர் கேட்கிறார்கள். அதற்கு நாம் கூறக்கூடிய தெளிவான பதில் இதுவே, வங்கிகளுக்கு தொடர்ந்தும் சுமார் 30 சதவீதமளவில் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக வங்கிகளுக்கு இன்னும் சுமைகளை வழங்குவதன் மூலம் வங்கிகளில் கொடுக்கல், வாங்கல் செய்யும் பொதுமக்களே பொருளாதார ரீதியாக மேலும் பாதிக்கப்படுவர்.

ஆகையால், அரசாங்கமென்ற வகையில் பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்று, எதிர்காலத்துக்கு உள்நாட்டுக் கடன் மறுசீமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவோம். மேலும், பொது மக்கள் நிதியங்களின் உறுப்பினர்களுக்கு எவ்வித அநீதியும் ஏற்படாத வகையில் வாக்குறுதியளிக்கப்பட்ட 9 சதவீத நலனை எதிர்காலத்திலும் வழங்க நடவடிக்கை எடுப்போம். ஒருவருக்கு சொந்தமான பணத்தில் 9 சதவீத வருடாந்த நலன் தொடர்ச்சியாக வழங்கப்படும். அது தவிர, 14 சதவீதம் அல்லது 30 சதவீத வரி விதிக்கப்பட மாட்டாது. இது தொடர்பான உண்மைகளை சிலர் திரிவுபடுத்திக் கூறுகின்றனர். மக்களை தவறாக வழிநடத்துகிறார்கள்.

ஊழியர் சேமலாப நிதியத்திலுள்ள பணத்தை முதலீடு செய்த பின்னர் கிடைக்கும் இலாபத்துக்கே 14 சதவீத வரி விதிக்கப்படுகிறது. எமது 2.4 மில்லியன் தொழிலாளர்களில், ஒருவருக்கு இன்று வங்கியில் 10 இலட்சம் ரூபா வைப்பிலிருந்தால், அந்தத் தொகைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. அவர் தமது பணத்தை பெறும் போது, அவருக்கு அதற்காக ஆண்டுதோறும் 9 சதவீதமென்ற வகையில் சேர்க்கப்பட்ட நலனை வழங்கவும் தயாராகவுள்ளோம்.

மேலும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைக்கப்படா விட்டால் மாத்திரமே EPF / ETF நிதியத்துக்கு பாதிப்பு ஏற்படும். EPF / ETF தொடர்பாக உருவாக்கப்படும் கதைகள் வெறுமனே அரசியல் கதைகள் மட்டுமே. கதைகளை உருவாக்குபவர்களுக்கு எந்தவொரு வேலைத்திட்டமும் இல்லை. ஊழியர் சேமலாப நிதியம் உரித்தாகும் மத்திய வங்கி, ஒரு சுயாதீனமான நிறுவனமாக இருப்பதால், அதற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதென்பதை நம்பிக்கையுடன் கூறுகின்றேன். தொழில் அமைச்சினூடாக இந்த நிதியம் தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்பட மாட்டாதென்பதையும் நாம் பொறுப்புடன் தெரிவிக்க வேண்டும் என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல்களில்...

விடயம் தொடர்பாக சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கான சாத்தியம் தொடர்பாக தாம் ஆராய்வதாக, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடருக்கு முன்பதாக உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்காக ஜெனீவா சென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அதனைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவில் முக்கிய உயர்மட்ட சந்திப்புகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்நிலையில், கடந்த வியாழன்வரை வொஷிங்டனில் தங்கியிருந்த அவர், தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் டொனால்ட் லூ, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக், அமெரிக்க திறைசேரி அதிகாரிகள், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புகளை நடத்தியுள்ளார். அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான தூதுவர் பெத் வான் ஸ்காக் மற்றும் எம்.ஏ.சுமந்திரனுக்கிடையில் கடந்த வியாழன் நடைபெற்ற சந்திப்பின் போது, இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக அண்மையில் சனல் 4 செய்திச் சேவையினால் வெளியிடப்பட்ட ஆவணப்படம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

## ரயில்வே தொழிற்சங்க...

மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

ரயில்வே மேம்பாட்டு தொழிற்சங்க கூட்டமைப்பின் இணைப்பாளரான இந்திக தொடங்கொடவுக்கே அமைச்சர் பந்துல குணவர்தன இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அமைச்சர் பந்துல, தனது சட்டத்தரணி மினோலி ரொஷனாரா அலெக்சென்ட்ரா மூலம் செப்டெம்பர் 15ஆம் திகதியிடப்பட்டு அந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளதுடன், நட்டஈட்டை 14 நாட்களுக்குள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவ்வாறு அதனை வழங்கத் தவறினால், அவரால் ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாகவும் தனது கடிதத்தில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இனியும் அவ்வாறான கூற்றுக்களை வெளியிட்டு தமது தரப்பின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதற்கு முயற்சித்தால், அது தொடர்பாக எந்த முன்னறிவித்தலுமின்றி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சரின் சார்பாக அவரது சட்டத்தரணி அந்தக் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

மீரிகம முதல் மஹரவரை ரயில் பாதை சமிக்ஞை பொருத்தும் திட்டம் தொடர்பாக கடந்த செப்டெம்பர் 14ஆம் திகதி ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் இந்திக தொடங்கொட, அமைச்சர் பந்துல குணவர்தனவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையில் கூற்றுக்களை தெரிவித்துள்ளாரென்பதும் அவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சருக்கு எதிராக மிக மோசமான வகையில் பாரிய குற்றச்சாட்டை முன்வைப்பதாக அவரது கூற்றுக்கள் அமைந்துள்ளதுடன், போக்குவரத்து அமைச்சர் என்ற முறையில் அவர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக இந்திக தொடங்கொட தெரிவித்துள்ள கூற்று, ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளதையும் சட்டத்தரணி அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி மோசமான கூற்றுக்கள் மூலம் சிறந்த அரசியல்வாதியும் சிறந்த கல்விமானுமாகிய தமது தரப்பின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதை பொறுத்துக் கொள்ள முடியாத பெரும் பாதிப்பு மற்றும் இழிவு ஏற்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரூபா 80 கோடி செலவில் 1,591 குடியிருப்புகள்;

# தமிழகத்தில் இலங்கை தமிழருக்கான வீடுகள் இன்று திறந்துவைப்பு

### வேலூரில் முதல்வர் ஸ்டாலின் பங்கேற்பார்



இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத்தின் 13 மாவட்டங்களில் 79.70 கோடி ரூபா மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,591 வீடுகளை வேலூரில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (17) உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கிறார்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்நிகழ்வில் பங்கேற்று, காணொளி வாயிலாக திறந்து வைக்கவுள்ளதாக, தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகத்தில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் தமிழர்களுக்காக அரசு சார்பில் வீடு கட்டும் திட்டத்தை கடந்த 2021ஆம் ஆண்டு வேலூரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆரம்பித்து வைத்தார். இந்நிலையில், 142.16 கோடி ரூபாவில் 3,510 வீடுகள் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது 13 மாவட்டங்களில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 1,591 வீடுகளின் திறப்புவிழா வேலூரில் இன்று நடைபெறுகின்றது.

வேலூர் அடுத்த மேல்மொணவூரிலுள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் நடைபெறும் நிகழ்வில் பயனாளிகளிடம் வீடுகளை முதல்வர் ஸ்டாலின் ஒப்படைப்பார்.

# கிழக்கு தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகளுடன் ஆளுநர் சந்திப்பு

கிழக்கு மாகாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலைகளின் பிரதிநிதிகளை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், தனியார் வைத்தியசாலை அதிகாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினூடாக தனியார் வைத்தியசாலை பிரதிநிதிகளுக்கு மேலதிக உதவிகள் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கது.



# பொலிஸார் வேடத்தில் கொள்ளையர்கள் நடமாட்டம்

### பொதுமக்களை அவதானமாக இருக்க வேண்டுகோள்

பொலிஸ் உத்தியோகத்தர்கள் போன்று வீடுகளில் புகுந்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடும் நபர்கள் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சிவில் உடையில் தம்மை பொலிஸ் உத்தியோகத்தர்களாக கூறிக்கொண்டு வீடுகளில் சோதனை இடும் இந்த நபர்கள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுவதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி.), பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப்பிரிவு அல்லது வேறேதேனும் சிறப்பு பிரிவினருடன் இணைக்கப்பட்டிருந்தாலே தவிர, சிவில் உடையிலுள்ள அதிகாரிகளினால் இத்தகைய சோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லையெனவும், பொதுமக்களுக்கு பொலிஸார் தெளிவுபடுத்தியுள்ளனர். சோதனை நடத்த வேண்டியிருப்பின், அவர்களுக்கு அடையாள சான்றாக உத்தியோகபூர்வ பொலிஸ் அடையாளங்களை கோருவதற்கு பொதுமக்களுக்கு அதிகாரம் இருப்பதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# மறைந்த தலைவர் அஷ்ரபின் 23ஆவது ஞாபகார்த்த தினம்

அட்டாளைச்சேனை விசேட, பாலமுனை தினகரன் நிருபர்கள்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரபின் 23ஆவது வருட நினைவுதின நிகழ்வுகள் அட்டாளைச்சேனையில் நேற்று (16) நடைபெற்றன. மு.கா.வின் அட்டாளைச்சேனை மத்திய குழுவின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் காலாசார மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் மு.கா. தலைவர் ரவுப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஞாபகார்த்த உரையாற்றினார்.

இந்நிகழ்வில் மு.கா. வின் பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.உதுமாலெப்பை, பிரதி தலைவர் அப்துல் கபுர், பிரதி செயலாளர் நாயகம் மன்சூர் ஏ.காதர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதேவேளை, தேசிய ஐக்கிய நல்லிணக்க ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டிலும் மர்ஹூம் அஷ்ரப்பின் நினைவுதின நிகழ்வு வம்மியடி வீதியில் அமைந்துள்ள மஸ்ஜீதுஸ் ஸரீப் பள்ளிவாசலில் நடைபெற்றது.



## உயிர்த்த ஞாயிறு... (04ஆம் பக்க தொடர்)

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட பலரின் கருத்துக்களையடுத்து சபையில் அது தொடர்பில் தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, புலனாய்வு அமைப்புகள் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினரை குற்றஞ்சாட்டி நிறைவேற்றுத்துறை, பாராளுமன்றம் மற்றும் நீதித்துறையை அழிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இந்த விவகாரம் தொடர்பில் நீதித்துறை மீதான நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் சிலர் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்ட அமைச்சர், இது மிகவும் ஆபத்தான நிலை என்றும் இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது கண்டறியப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டுவதற்கான மறைமுக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நீதித்துறை மீதான நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் சிலர் சில யோசனைகளை உருவாக்கி வருகின்றனர். இது மிகவும் ஆபத்தான நிலைக்கே வழிவகுக்கும்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை எந்த அரசியல் கட்சியோ அல்லது நபரோ அங்கீகரிப்பதாக நான் நினைக்கவில்லை. அந்த வகையில் பயங்கரவாத தாக்குதலில் ஈடுபட்டவர்களை மறைக்க தற்போதைய ஜனாதிபதி முயற்சிப்பதாக சிலர் குற்றம் சாட்ட முயற்சிக்கின்றனர்.அந்த காலங்களில் பாதுகாப்பு சபைக் கூட்டத்திற்கு கூட தற்போதைய ஜனாதிபதி அழைக்கப்படவில்லை என்பது முழு நாடும் அறிந்த உண்மை. தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் அப்போது அமைச்சரவையில் அமைச்சராக இருந்தார். இந்த பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் அது தொடர்பில் விசாரணை செய்வதற்கு பாராளுமன்றக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்த பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் எப்.பி.ஐ.விசாரணைகளை நடத்தியது. அந்த அறிக்கையும் வழங்கப்பட்டது. அந்த அறிக்கை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் வழங்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையை மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். எப்.பி.ஐ.யை விட மேலும் சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என்றால், அது எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானிக்கலாம் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.இந்த தாக்குதல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியுதீன் எம்பி அது தொடர்பில் சபையில் தெரிவிக்கையில், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் இன்னும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அப்பாவிகளை விடுதலைசெய்து. உண்மையான சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்காக சர்வதேச விசாரணை ஒன்றுக்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும் என சபையில் கேட்டுக்கொண்டார்.ஆட்சிக் கதிரையில் ஏறவேண்டும் என்பதற்காகவே சில தரப்பினரால் ஈஸ்டர் தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் தற்போது செனல் 4 வெளியிட்டிருக்கும் புதிய காணொளி தொடர்பாக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தாம் ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். செனல்4 காணொளி விவகாரம் தொடர்பில் உள்ளக விசாரணை மட்டுமின்றி சர்வதேச விசாரணைக்கும் அரசாங்கம் தயாராக உள்ளனென்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்தார். செனல் 4 காணொளியில் வெளியிடப்பட்டவாறு சம்பவங்கள் இடம்பெற்றிருக்குமானால் அது தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எமது நாட்டுக்கு எதிராக பல்வேறு அறிக்கைகளும் காணொளிகளும் வெளியிடப்படுகின்றன. புலம்பெயர்ந்தோர் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் நாம் பிரச்சினைகள் தொடர்பில் புலம்பெயர் அமைப்புக்களின் தலைவர்களுடனும் கலந்துரையாடியுள்ளோம். ஈஸ்டர் தாக்குதலுக்கு 29 மாதங்களுக்கு முன்னர் அதுதொடர்பாக பாராளுமன்றத்தில் நான் விசேட உரையாற்றியிருந்தேன். அப்போதிருந்த அரசாங்கத்தின் ஊடகப் பேச்சாளர் உள்ளிட்டோர் என் மீது குற்றச் சாட்டுக்களை முன்வைத்தனர். தேசிய ஒருமைப்பாட்டை சீர்குலைக்கவே நான் அவ்வாறு தெரிவிப்பதாக அவர்கள் கூறினர். அன்று எனது கூற்றுக்களை கவனத்தில் எடுத்து ஆராய்ந்திருந்தால் அப்பாவியான மக்கள் இன்றும் உயிருடன் இருந்திருப்பார்கள். ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தான் ஓய்வுபெற்று செல்லும் போதே கூறியிருந்தார். ஆனால் அவரிடம் அது தொடர்பில் வாக்குமூலம் பெறச் செல்லும் போது நீதிமன்றத்தின் ஊடாக அதற்கு தடையுத்தரவைப் பெற்றுக்கொண்டார்கள். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பாக தற்போது 42 வழக்குகள் உள்ளன. அதேபோன்று தாக்குதல் தொடர்பாக உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேச விசாரணையை நடத்தவும் அரசாங்கம் தயாராகவே உள்ளது. அதை வேளை இன்று சர்வதேச விசாரணைகளை கோருபவர்களும் ஈஸ்டர் பயங்கரவாத குண்டுத்தாக்குதலின் போது அரசாங்கத்தில் இருந்தனர் என்பதையும் குறிப்பிட வேண்டும். செனல் 4 என்பது புலம்பெயர் மக்களுடன் இணைந்து செயற்படும் ஒரு ஊடக அமைப்பாகும். அந்த ஊடகம் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் இறந்த மக்களுக்கு நீதி வேண்டும் என்று கேட்கும் நேர்மையான நிலைப்பாட்டில் செயற்படும் ஒரு அமைப்பல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் செனல் 4 ஒளிபரப்பியவாறு சம்பவங்கள் நடந்திருந்தால் அது தொடர்பில் ஆராய்ந்து முழுமையான விசாரணை நடத்தப்படும் அதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறாயினும் நீண்ட காலமாக இழுபறி நிலையில் உள்ள இந்த விவகாரம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அரசாங்கம் அதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்பதே அனைவரதும் வேண்டுகோளாக உள்ளதுடன் எமது தாழ்மையான கருத்துமாகும்.

# அரசுடைமையாகும் கறுப்புப் பணம்

## வெளிநாடுகளில் உள்ள கறுப்புப் பணத்தை அரசுடைமையாக்குவதற்குப் புதிய சட்டம்!



AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @
A.G. Sarma & Co., (CA)
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்
+94–777–802–900
Email: swaminathan@
agsarma.com

வெளிநாடுகளில் உள்ள கறுப்புப் பணத்தை தேசியமயமாக்க புதிய சட்டம் எதுவும் தற்போது இலங்கையில் நடைமுறையில் இல்லை. கறுப்புப் பணத்தை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து அரசுடைமையாக்குவதற்காகப் புதிய சட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு அரசு முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

"கறுப்புப் பணம்" என்பது சட்ட விரோதமாக அல்லது முறையாக அறிவிக்கப்படாமல் சம்பாதித்த பணத்தைக் குறிக்கிறது. பெரும்பாலும் இது வெளிநாட்டுக் கணக்குகள் அல்லது நாட்டுக்கு வெளியே உள்ள பிற நிதி நிறுவனங்களில் வைக்கப்படுகின்றது. இலங்கையில் தவறான வழியில் சம்பாதித்து அல்லது சட்டத்திற்கு முரணாக பணத்தை ஈட்டி வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் இலங்கையர்களின் கறுப்புப் பணத்தை கைப்பற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. போதைப்பொருள் வர்த்தகம் மூலம் சம்பாதிக்கப்பட்ட அதிகமான சொத்துக்கள் டுபாய் உள்ளிட்ட வெளிநாடுகளில் உள்ளதாகவும், அவற்றைப் புதிய சட்டம் மூலம் இலங்கைக்குக் கொண்டுவர முடியும் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

**இலங்கை அரசாங்கம் சமீபத்தில் பின்வரும் ஆண்டுகளில் வரி மன்னிப்பு வழங்கியுள்ளது: 1989, 2004, 2016, 2021**

கறுப்புப் பணத்தை தேசிய மயமாக்கும் திட்டங்களுக்குக் கடந்த காலங்களில் முன்மொழிவுகள் இருந்தன. ஆனால் இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை. காரணம் அதில் பல சவால்கள் உள்ளன. பணத்தின் உரிமையாளர்களைக் கண்டுபிடிப்பதில் சிரமம், மற்றும் அத்தகைய நடவடிக்கையால் எழும் சட்டச் சவால்கள் போன்றன முக்கியமாக அமைகின்றன. அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் ஆகியோரால் தவறான வழியில் சம்பாதிக்கப்பட்ட பல பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான பணம் மற்றும் சொத்துக்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகி வருவதைக் காணலாம்.

இலங்கைக்கு வெளியில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணம் நாட்டின் பொருளாதாரத்தில் பல எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இவற்றில் பின்வருவன அடங்கும்.

**குறைக்கப்பட்ட அரசின் வரி வருவாய்:** கறுப்புப் பணத்துக்கு வரி விதிக்கப்படவில்லை. எனவே இது இலங்கை அரசாங்கத்தால் சேகரிக்கக்கூடிய உண்மையான வரி வருவாயின் அளவைக் குறைக்கிறது. இது பட்ஜெட் பற்றாக்குறைக்கு வழிவகுக்கின்றது. மேலும் இது அரசாங்கத்தின் தேவையான நிதிக்கு பல்வேறுவகையில் அழுத்தம் கொடுப்பதுடன், உட்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கியமான துறைகளில் முதலீடு செய்வதைக் கடினமாக்குகின்றது.

**நிதி அமைப்பைக் குறைமதிப்புக்கு உட்படுத்துதல்:** கறுப்புப் பணத்தை பல சவால்களுக்கு மத்தியில் சட்டபூர்வமாக அரசாங்கம் வெள்ளையாக்க முற்படும்போது மக்களிடம் நிதி அமைப்பின் மேலுள்ள நம்பிக்கையில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதோடு ஒருமைப்பாட்டைக் குறைமதிப்புக்கு உட்படுத்தும். இது வணிகங்களுக்கு கடன் மற்றும் முதலீடு செய்வதை மிகவும் கடினமாக்குகின்றது. அத்தோடு இது நிதி பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பதை அரசாங்கத்திற்கு மேலும் கடினமாக்குவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**அந்நிய செலாவணி கையிருப்பு குறைவடையும்:** கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி அமெரிக்க டொலர் போன்ற அந்நிய செலாவணியை வாங்கப் பயன்படுத்துவதை நடைமுறையில் காணக்கூடியதாக இருக்கின்றது. இது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பைக் குறைக்கும். இதன் காரணமாக அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளை இறக்குமதி செய்வதை அரசாங்கத்திற்கு மிகவும் கடினமாக்குதோடு நாட்டின் நாணயத்தின் நிலையான தன்மையையும் குறைப்பதை நடைமுறையில் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

**அதிகரித்த சமத்துவமின்மை:** கறுப்புப் பணத்தை ரியல் எஸ்டேட் (வீடு, நிலம் மற்றும் ஏனைய அசையாச் சொத்துக்கள்) மற்றும் வணிகங்கள் போன்ற சொத்துக்களில் முதலீடு செய்யப் பயன்படுத்தலாம். இது சமத்துவமின்மையை அதிகரிக்கும். இதனால் ஏனைய மக்கள் புதிய தொழில் தொடங்குவதும் அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதும் கடினமாகிவிடும்.



**நாட்டின் நற்பெயருக்கு அவப்பெயர் ஏற்படும்:** கறுப்புப் பணம் அதிகமாகக் காணப்படும் எந்தவொரு நாட்டிலும் வணிகம் செய்வதற்கான பாதுகாப்பான மற்றும் வெளிப்படையான இடமாக இருப்பதனை கேள்விக்குறியாக்கி, நாட்டின் நற்பெயரை சேதப்படுத்தும். இது வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதை மிகவும் கடினமாக்குவதுடன் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையில் கறுப்புப் பணத்தின் பொருளாதார தாக்கம் குறிப்பிடத்தக்கது. சமீப ஆண்டுகளில் கறுப்புப் பணத்தால் நாடு பில்லியன் டொலருக்கும் அதிகமான வரி வருவாயை இழந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முக்கியமான துறைகளில் முதலீடு செய்வதை அரசாங்கத்துக்கு கடினமாக்கியுள்ளதுடன் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமாகவும் அமைந்துள்ளது.

கறுப்புப் பணப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு செய்யக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. இவற்றில் முக்கியமாக பின்வருவன அடங்கும்.

**1. வரி முறையை வலுப்படுத்துதல்:** வரி முறையை அரசாங்கம் வலுப்படுத்துவதன் மூலம் மக்கள் வரி செலுத்தாதிருப்பதைத் தவிர்க்கலாம். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், நிதிப் பரிவர்த்தனைகளைக் கண்காணிப்பதை எளிதாக்குதல் போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

**2. பணமோசடி தடுப்புச் சட்டங்களை இயற்றுதல்:** பணமோசடி செய்வதை மேலும் கடினமாக்குவதற்கு அரசாங்கம் பணமோசடி தடுப்புச் சட்டங்களை இயற்றலாம். சந்தேகத்திற்கிடமான பரிவர்த்தனைகளைப் புகாரளிக்க வணிகங்கள் தேவை. அத்தோடு பணமோசடிக்கான அபராதங்களை அதிகரித்தல் போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும்.




**3. வெளிப்படைத்தன்மையை ஊக்குவித்தல்:** நிதிப் பரிவர்த்தனைகளை மக்கள் எளிதாகக் கண்காணிப்பதன் மூலம் அரசாங்கம் பொருளாதாரத்தில் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்க முடியும். வணிகங்கள் தங்கள் நிதித் தகவலை வெளியிட வேண்டும். அத்தோடு பொது மக்கள் இந்தத் தகவலை அணுகுவதை எளிதாக்குவது போன்ற நடவடிக்கைகள் இதில் அடங்கும்.

நாட்டுக்கு வெளியே பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்துக்கு எதிராக இலங்கையினால் கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு,

2017ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் பெருமளவிலான பணத்தை பதுக்கி வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் பல உயர்மட்ட நபர்கள் மீது "white collar crime" விசாரணையைத் தொடங்கியது. விசாரணையில் பலர் கைது செய்யப்பட்டு பல கோடி ரூபாய் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

2020ஆம் ஆண்டில், இலங்கை அரசாங்கம் ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றியது. இது அதிகாரிகள் பணமோசடி வழக்குகளை விசாரிப்பதற்கும் வழக்குத் தொடருவதற்கும் வசதி செய்தது. பணமோசடி குற்றங்களுக்கான தண்டனைகளையும் இந்த சட்டம் அதிகரித்தது.

2021ஆம் ஆண்டில், கறுப்புப் பணத்தின் ஆபத்துகள் மற்றும் சந்தேகத்திற்கிடமான நிதிப் பரிவர்த்தனைகளைப் புகாரளிப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசாங்கம் பொது விழிப்புணர்வு பிரசாரத்தைத் தொடங்கியது.

கறுப்புப் பணப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் சில எடுத்துக்காட்டுகளே இவை. கூடுதலாக, கறுப்புப் பணத்தை தேசியமயமாக்குவது மூலதனத்தை வெளியேற்ற வழிவகுக்கும் அபாயம் உள்ளது. ஏனெனில் மக்கள் தங்கள் சொத்துக்களை அரசாங்கத்தால் கைப்பற்றக்கூடிய நாட்டில் முதலீடு செய்வது குறைவாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

இருப்பினும், இந்த சிக்கலை திறம்பட சமாளிக்க இன்னும் அதிகமாக பல திட்டங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்பட வேண்டும். இலங்கை அரசாங்கம் அதன் பணமோசடி தடுப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறைகளை மேலும் வலுப்படுத்த வேண்டும். அத்தோடு, அது சர்வதேச பங்காளிகளுடன் அதன் ஒத்துழைப்பை மேம்படுத்த வேண்டும்.

கறுப்புப் பணப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுக்கக்கூடிய மேலும் சில குறிப்பிட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு அமையமுடியும்.

வணிகங்கள் தங்கள் ஆதாயமான உரிமைத் தகவலை வெளியிட வேண்டும் என்று சட்டத்தை இயற்ற வேண்டும். இது ஷெல்/ போலி நிறுவனங்கள் மற்றும் பிற வெளிநாட்டு நிறுவனங்களில் மக்கள் தங்கள் சொத்துக்களை மறைப்பதை மிகவும் கடினமாக்கும்.

நிதி அமைப்பின் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்க, வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் சந்தேகத்துக்கிடமான பரிவர்த்தனைகளைத் தகுந்த அதிகாரிகளுக்குப் புகாரளிப்பதனை ஒழுங்கு முறையாக மாற்றி அமைக்கலாம்.

மக்கள் தங்களுடைய கறுப்புப் பணத்தை இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு வரிச் சலுகைகளை வழங்குதல். திருப்பி அனுப்பப்பட்ட சொத்துக்களுக்கு குறைக்கப்பட்ட வரி விகிதத்தை வழங்குவதன் மூலம் இதைச் செய்யலாம்.

பணமோசடி தடுப்பு சட்டங்களின் அமுலாக்கத்தை வலுப்படுத்துதல். சந்தேகத்துக்கிடமான நிதிப் பரிவர்த்தனைகள் மீதான தணிக்கைகள் மற்றும் விசாரணைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் இதைச் செய்யலாம்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கை அரசாங்கம் நாட்டில் உள்ள கறுப்புப் பணத்தின் அளவைக் குறைப்பதற்கும், பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் உதவ முடியும். தனது எல்லைக்கு வெளியே வைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதில் உலக அளவில் வெற்றி பெற்ற நாடு என்று எதுவும் இல்லை. இருப்பினும், இந்தக் கடினமான சவாலில், எல்லை தாண்டிய கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்த சில நாடுகள் பின்வருமாறு செயற்படுவதனை பின்வருமாறு அவதானிக்கலாம்.

சுவிட்சர்லாந்து: சுவிட்சர்லாந்து நாட்டில் வங்கி இரகசியம் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இது கறுப்புப் பணத்திற்கான பிரபலமான இடமாக மாறியுள்ளது. இருப்பினும் சந்தேகத்துக்கிடமான பரிவர்த்தனைகள் குறித்து அதிகாரிகளுக்கு வங்கிகள் தெரிவிக்க வேண்டும் என்ற சட்டத்தை இயற்றுவது உட்பட பலவகையான முறையற்ற நடைமுறைகைளத் தடுக்க சுவிஸ் அரசாங்கம் சமீபத்தில் நடவடிக்கை எடுத்துள்ளது.

★ **யுனைடெட் ஸ்டேட்ஸ் (US):** அமெரிக்காவில் வலுவான நிதி நுண்ணறிவு பிரிவு (FIU) உள்ளது. இது சந்தேகத்துக்குரிய நிதிப் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்வதற்கு பொறுப்பாக உள்ளது. அமெரிக்க அரசாங்கம், பணத்தை மோசடி செய்த தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு எதிராக கிரிமினல் வழக்குகளைத் தொடர்வதிலும் தீவிரமாக உள்ளது.

★ **யுனைடெட் கிங்டம் (UK):** பணமோசடியை எதிர்த்துப் போராடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் இங்கிலாந்தில் காணப்படுகின்றன (குற்றச் சட்டம் 2002 (Crime Act 2002)). UK அரசாங்கம் சந்தேகத்துக்கிடமான நிதிப் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் தீவிரமாக உள்ளது.

★ **ஜெர்மனி:** ஜெர்மனியில் வலுவான FIU உள்ளது. மற்றும் இந்நாடு, பணமோசடி வழக்குகளை விசாரிப்பதில் தீவிரமாக உள்ளது. ஜேர்மன் அரசாங்கமும் நிதி அமைப்பின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கு வேலை செய்து வருகிறது.

★ **சிங்கப்பூர்:** பணமோசடித் தடுப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு நிதியளிப்புச் சட்டம் 2001 உட்பட, பணமோசடியை எதிர்த்துப் போராடுவதற்காக சிங்கப்பூரில் பல சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் உள்ளன. சிங்கப்பூர் அரசாங்கம் சந்தேகத்துக்கிடமான நிதிப் பரிவர்த்தனைகள் பற்றிய தகவல்களை மற்ற நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் தீவிரமாக உள்ளது.

கறுப்புப் பணத்தைக் கண்காணித்து கட்டுப்படுத்துவதில் வெற்றி பெற்ற நாடுகளின் சில உதாரணங்கள் இவை. கறுப்புப் பணத்தைக் கட்டுப்படுத்தல் என்பது ஒரு தொடர்ச்சியான போர் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். மேலும் எந்தவொரு நாடும் இந்த பிரச்சினையை முற்றிலுமாக ஒழித்துவிட்டதாகக் கூற முடியாது. எவ்வாறாயினும், மேலே கூறிய நாடுகள் இந்தப் பகுதியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன. மேலும் அவர்களின் முயற்சிகள் கறுப்புப் பணத்தை எதிர்த்துப் போராடும் இலங்கை போன்ற மற்ற நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக செயற்படுகின்றன.

கறுப்புப் பணத்தை மீட்பதற்காக இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய சட்டமானது முன்னேற்றத்தின் ஒரு படியாகும். இருப்பினும், சட்டம் பயனுள்ளதாக இருப்பதையும் குடிமக்களின் உரிமைகளை மீறாமல் இருப்பதையும் உறுதிசெய்ய கவனமாக வடிவமைக்கப்பட வேண்டும்.

---

# இரண்டக நிலையில் சிக்குண்டுள்ள தமிழ்ச்சமூகம்

ஈழத் தமிழர்களின் அரசியல் இன்று பிரதானமாக மூன்று வகைப்பட்டதாக உள்ளது. ஒன்று, "தமிழ்த் தேசிய அரசியல்" என்ற பிரகடனத்தின் கீழ் அரச எதிர்ப்பு மற்றும் தமிழின விடுதலையை மையப்படுத்திப் பேசுவதாகும். இதற்குத்தான் தமிழ்ப் பெருந்திரளினர் ஆதரவளிக்கின்றனர். இதனால் இந்தத் தரப்பே பாராளுமன்றத்திலும் மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திலும் முன்னிலையில் உள்ளது.

முன்னர் இது ஆயுதப் போராட்ட அரசியலாக – செயற்பாட்டு அரசியலாக இருந்தது. 2009க்குப் பின்னர், செயற்பாட்டுப் பாரம்பரியம் இல்லாதொழிந்து, பேச்சு அரசியலாக – அறிக்கை அரசியலாகச் சுருங்கி விட்டது.

அதனால்தான் இதை "தமிழின விடுதலையை மையப்படுத்திப் பேசுவது" என்று குறிப்பிடுகிறோம். இந்தப் பண்பினால்தான் இந்தத் தரப்புக்குக் கடுமையான விமர்சனங்களும் உண்டு. செயற்பாட்டுப் பாரம்பரியமொன்றிற்கூடாகப் பயணித்து வந்த மக்களுக்கு அது இல்லாமற் போனது ஏமாற்றத்தை அளிக்கிறது. ஆனாலும் இவை தம்மை மறுபார்வைக்குட்படுத்தவோ புதுப்பித்துக் கொள்ளவோ முயற்சிப்பதில்லை.

இதனால் எழுந்த புற அழுத்தங்களாலும் உள்ளக முரண்பாடுகளாலும் இந்தத் தரப்புப் பல அணிகளாக கடந்த பத்து ஆண்டுகளில் உடைந்து துண்டு துண்டுகளாகியுள்ளன. ஆயுதப் போராட்ட – செயற்பாட்டுப் பாரம்பரியத்திற்கூடாக வந்தவர்களும் அதற்கு மறுதலையாகப் "பேச்சுப் பாராம்பரியத்திற்குள்" சிக்கி விட்டனர் என்ற கசப்பான அனுபவத்தையும் நாம் ஜீரணிக்க வேண்டியுள்ளது.

இதற்குள் ஏராளம் கவனிக்க வேண்டிய புள்ளிகளும் கோடுகளும் உள்ளன.

இந்தத் தமிழ்த் தமிழ்த்தேசிய அரசியலில் அரச எதிர்ப்பைக் காட்டும் அளவுக்கு இந்திய விசுவாசம் அதாவது இந்தியாவுடன் நெருக்கம் காண்பிக்கப் படுகிறது. அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் (தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி) போன்ற ஒரு சில கட்சிகளைத் தவிர்த்து ஏனையவை அனைத்தும் இந்திய விசுவாசத்தின் கீழ் உறைந்து போயுள்ளன. இவையே இலங்கை – இந்திய உடன்படிக்கையைக் குறித்தும் ஆர்வமாகப் பேசிக் கொண்டிருப்பன. இலங்கை இந்திய உடன்படிக்கையின் விளைவான 13 ஆவது திருத்தத்தைப் பற்றி ஈடுபாட்டுடன் இவை இருப்பதையும் காணலாம். இன்னொரு நிலையில் இவை அனைத்தும் இந்தியா கை விட்டால் எப்படியும் சர்வதேச சமூகத்தின் (மேற்குலகின்) ஆதரவும் நீதியும் நியாயமும் கிடைத்து விடும் என்று ஆழமாக நம்பிக் கொண்டிருப்பன. இதையே மக்களுக்கு அவை "விடுதலைக்கான ஒரே வழி"யாகவும் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இவை எவையுமே தமிழ் மக்களின் விடுதலையிலும் சரி, அவர்களுடைய அரசியலிலும் சரி ஒரு போதுமே நெருங்கி நின்றதும் இல்லை. தீர்வை முழுமையாகப் பெற்றுக்கொள்ள உதவப் போவதுமில்லை. அதற்கான களச் சூழலும் சர்வதேச நிலைமையும் இப்போது வரைக்கும் இல்லை. இதுதான் உண்மை. இல்லையென்றால் இந்தக் குட்டி இலங்கையில் இந்த இனப்பிரச்சினை இப்படித் தீர்க்கப்படாமல் இழுபட்டுக் கொண்டிருக்காது. ஆனால் இவை பிரச்சினை முற்றிப் போகாமல் இருக்கும் அளவுக்கு ஒரு இடைத் தலையீட்டையும் மறைமுக அழுத்தத்தையும் கொடுக்கின்றன. இவற்றின் பாத்திரமும் இதுவரையான வகிபாகமும் அப்படித்தானுள்ளது.

அதேவேளை இந்தத் தமிழ்த்தேசியவாதச் சக்திகள் சமூக அசமத்துவத்தைப் பற்றியோ சமூக விடுதலையைப் பற்றிப் பேசுவதேயில்லை. மட்டுமல்ல தமிழ் மக்களின் பொருளாதாரம், அவர்களுடைய வாழ்க்கை நிலவரம் பற்றி ஒன்றுமே கதைப்பதில்லை. இது இவற்றின் பெருங்குறைபாடாகும்.

இதனால் பெருந்தொகுதி மக்கள் தொடர்ந்தும் சாதி, மதம், பிரதேசவாதம் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளனர். அத்துடன் மக்களுடைய பொருளாதார நிலையும் மோசமாகச் சரிவடைந்து சென்று கொண்டேயுள்ளது. இதற்கான மாற்றீடுகளும் எதிர்ப்பொறிமுறைகளும் இதுவரை காணப்படவில்லை. இது மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை இவை இன்னும் ஒரு புள்ளியில் தீர்வு பற்றியோ மக்களுக்கான அரசியற் பணிகள் பற்றியோ சிந்திப்பதற்கு இணையவில்லை. இதனால் தமிழ் மக்களுக்கான தீர்வு யோசனையை "13, 13 க்கு அப்பால், சமஸ்டி, இரு நாடு ஒரு தேசம்" என ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக முன்வைத்துள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலைப்பாட்டுடனும் உள்ளன.

இது மக்களுக்குக் குழப்பத்தை உண்டாக்குவதுடன், எதிர்த்தரப்பான அரசுக்கும் ஏனைய சக்திகளுக்கும் வசதியாக உள்ளது.

இரண்டாவது, அரசாங்கத்தின் மீது உள்ளார்ந்த விமர்சனங்கள், எதிர்ப்புணர்வு இருக்கும்போதும் அதைக் காட்டிக் கொள்ளாமல் அதனுடன் இணைந்து செயற்படும் தரப்பாகும். இவையும் ஒரு காலகட்டத்தில் அரசை எதிர்த்துப் போராடியவைதான். ஏன் ஆயுதப் போராட்ட அரசியலின் வழியாக வந்தவையும்தான். எப்படியோ இன்று இவை அரசுடன் இணைந்து ஜனநாயக நீரோட்டத்துக்குள் கரையத் தொடங்கிவிட்டன. இதை இணக்க அரசியல் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஆனால், அரச எதிர்ப்புத் தரப்பை விடவும் ஒப்பீட்டளவில் மக்களுக்கான தேவைகள், மக்கள் நலன்சார் நடவடிக்கைகள் என்ற வகையில் சில முன்னேற்றகரமான பங்களிப்புகளைச் செய்திருப்பவை. அதைத் தவிர அரசியல் ரீதியாக இவற்றினால் மக்களுக்கும் சரி, தமக்கும் சரி எந்த முழு வெற்றியையும் பெற முடியாதிருப்பவை.

இவை சர்வதேச சமூகத்தைப் பற்றிப் பெரிதாகப் பேசிக் கொள்வதுமில்லை. அக்கறைப்படுவதுமில்லை. ஆனால் இந்தியாவை தமது நெருங்கிய சகாவாகப் பார்க்கின்றன. இலங்கை இந்திய உடன்படிக்கையையும் 13 ஆவது திருத்தத்தையும் அதற்கும் மேலான தீர்வையும் யாசிப்பவை.

ஆனாலும் இவற்றினாலும் ஒரு போதும் தாம் குறிப்பிடும் எல்லைகளைக் கூட தொட முடியாது. வேண்டுமானால் இருக்கும் காலம் வரையிலும் ஒன்றிரண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமே தவிர, அரசியல் உரிமைகளைப் பெறவே முடியாது.

அடுத்த தரப்பு இந்திய எதிர்ப்புடன் கூடிய தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுப்பது. இது சற்றுத் தீவிரமானது. இவற்றுக்கும் சமூக அரசியல் பொருளாதாரப் பார்வை இல்லை. முற்றிலும் உணர்ச்சிரமான அதி தீவிர அரசியலை முன்னெடுப்பவை. இவற்றுக்குப் பெரிய அளவில் மக்கள் ஆதரவில்லை என்றாலும் இளைய தலைமுறையினரிடத்தில் இந்தத் தரப்புச் செல்வாக்குப் பெற்றுள்ளது.

அடுத்த தரப்பு மூன்றாவது. இது அரசுடன் இணைந்து கொள்ளாமல், அதற்கு வெளியே நின்று ஆதரிக்க வேண்டிய புள்ளிகளில் ஆதரித்தும் எதிர்க்க வேண்டிய விடயங்களில் எதிர்த்தும் தமது அரசியலை முன்னெடுப்பது. இதற்கு மக்கள் ஆதரவு ஒப்பீட்டளவில் குறைவு. ஆனால் இந்தத் தரப்பு அறிவுபூர்வமாக ஒவ்வொன்றையும் அணுக முற்படுவது. ஜனநாயகத்தைத் தன்னுடைய அடிச்சட்டகமாகக் கொண்டது. இனவாதத்தை முற்றாகவே நிராகரிப்பது. அதேவேளை பால் சமத்துவம், பிரதேச சமத்துவம், இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்த அரசியல் தளத்தையும் அரசியல் உறவையும் கட்டமைக்க விளைவது.

சுருக்கமாகச் சொன்னால் இதுவரையான அரசியலில் இருந்து விலகி, வேறுபட்டு ஒரு மாற்று அரசியலை முன்னெடுக்க விளைவது. அதாவது போருக்குப் பிந்திய அரசியலை, இலங்கைக்குத் தேவையான – புதிய எதிர்காலத்துக்கான அரசியலை, மக்கள் அரசியலை, அறிவுபூர்வமான அரசியலை முன்னெடுக்க விரும்புவது.

இது இனவாத அரசியலுக்கு – இனவெறுப்புக்கும் இனவொறுப்புக்கும் முற்றிலும் எதிரானது.

இப்படியான அரசியலை முன்னெடுக்கும்போதுதான் புதிய அரசியலின் முகத்தையும் அதன் பண்பாட்டையும் உலக அரங்கில் முன்வைக்க முடியும். மட்டுமல்ல, மக்களுக்கும் புதிய ஒன்றை வழங்க முடியும். அந்தப் புதியது மக்களுக்குப் பயனுள்ளது.

அதாவது, இலங்கையின் பின்னடைவுகளிலிருந்து இலங்கையை மீட்கக் கூடிய அரசியல் இது. இலங்கைச் சமூகங்களின் பிளவுகளிலிருந்தும் காப்பாற்றி ஒருங்கிணைவை வழங்கக் கூடியது. ஒவ்வொரு சமூகத்தையும் அதன் சுயம், அடையாளம் – தனித்துவம், முன்னேற்றம், சமநிலை ஆகியவற்றில் நிறைவாகத் தக்க வைப்பது.

அப்படியென்றால் இந்த அடிப்படையில் சிந்திக்கக் கூடிய தரப்பை மக்கள் தேர்ந்து ஆதரிக்க வேண்டுமே!

நிச்சயமாக இந்தக் கேள்வி நியாயமானதே. ஆனால் மக்கள் அவர்களை அறியாமல் இனவாதத்தினால் கட்டமைக்கப் பட்டுள்ளனர். என்பதால் அவர்களால் அதைக் கடந்து சிந்திக்க முடியாது. உண்மை எவ்வளவு பிரகாசமாக இருந்தாலும் அவர்களால் அதைக் கண்டுணர முடியாது. இது மிகத் துயரமான நிலையே.

இதில் இன்னும் துயரமானது படித்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் புத்திஜீவிகளும் அரசியல் ஆய்வாளர்களும் கூட இதைப் புரிந்து கொள்ள மறுக்கும் அளவுக்கு அவர்களும் இனவாத நரம்புகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதிய செல்போனை வாங்குகிறோம். புதிய காரை, புதிய செருப்பை, புதிய உடைகளை, புதிய பொருட்களை எல்லாம் வாங்குகிறோம். புதியவை தரமானவை. முன்பிருந்ததையும் விட New Version என்பது எப்போதும் Advance ஆக இருக்கும் என்று நம்புகிறோம். அது உண்மையும் கூட. இவற்றில் நாம் காண முற்படும் பொது அம்சம் என்னவென்றால், புதியவை வேகமும் தரமும் பல்பயன்பாடும். இலகுத் தன்மையும் உள்ளது என்பதாகும்.

ஆனால், அரசியலில் இதற்கு மாறாகவே மக்கள் சிந்திக்கிறார்கள். செயற்படுகிறார்கள். நாம் பழகியவற்றிலிருந்து கடந்து புதிய பிரவேசத்துக்குள் நுழைவதற்குப் பதற்றப்படுகிறார்கள். பயங்கொள்கிறார்கள். காரணம், இனவாதமே. மீறிச் சென்றால் தாம் தனித்து விடுவோம் என்று அச்சமடைகிறார்கள்.

ஆகவேதான் இந்த அரசியலை முன்னெடுப்பது இலகுவானதல்ல என்ற நிலை உள்ளது. ஏனென்றால் மக்கள் வழமையான – பாரம்பரியமான அரசியல் வழிமுறையின் வழியே நடந்து பழக்கப்பட்டவர்கள். இந்த இரண்டக நிலையில் தான் தமிழ்ச்சமூகம் சிக்குண்டுள்ளது. தமிழ்ச் சமூகம் மட்டுமல்ல, சிங்களச் சமூகமும்தான்.

சுயமாகச் சிந்திக்காத வரையில் எல்லாமே பிரச்சினைதான்.

கருணாகரன்

# மனிதஉரிமைகள் பேரவையில் மீண்டும் இலங்கை விவகாரம்!

## ஒவ்வொரு வருடமும் மார்ச், செப்டம்பர் மாதங்களில் இலங்கை மீது மேற்குலகம் பிரயோகிக்கும் அழுத்தம்!

**ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தற்பொழுது இடம்பெற்றுவரும் அமர்வில் இலங்கை விவகாரம் மீண்டும் கலந்துரையாடலுக்கு உள்ளாகியுள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து செயற்படுவதற்கான உறுதிப்பாட்டை அரசாங்கம் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்துள்ள நிலையில், ஒவ்வொரு வருடமும் மார்ச் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் இலங்கை விவகாரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பேசுபொருளாகி வருகிறது.**

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார சவால்களுக்கு மத்தியில் சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கு முழுமுயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும், சர்வதேச அரங்கில் அதற்கான பாராட்டுக்கள் கிடைக்கப் பெறுவதில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நடுநிலையாக அன்றி, பக்கச்சார்பான முறையில் செயற்பட்டு வருகின்றது என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்த நிலையில் மீண்டும் இந்த நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமானது. ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து இலங்கை விவகாரம் குறித்தும் கருத்தாடல்கள் இடம்பெற்றன. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 'இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் பதில் உயர்ஸ்தானிகர் நடா அல்நஷீஃப் உரையாற்றியிருந்தார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் உண்மை, நீதி மற்றும் தீர்வு என்பவற்றுக்குக் காத்துக்கொண்டிருப்பதாகவும், நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான பொறிமுறையைப் பலப்படுத்த வேண்டும் என்றும், உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் இலங்கை தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் பொறுப்புக்கூறல் செயல்முறையின் கீழ் ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கை முன்னேற்றகரமாக இடம்பெற்று வருவதாகவும் அவர் கூறியிருந்தார்.

இருந்தபோதும், சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்ந்தும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவதை அரசாங்கம் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வந்திருந்தது. இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படும் பரிந்துரைகள் மற்றும் முடிவுகள் தொடர்பாக வெளிவந்த பாதையானது, இலங்கைக்கு எதிராக இடைவிடாமல் தொடர்ந்த முன்கூட்டிய, அரசியல்மயப்படுத்தப்பட்ட மற்றும் பாரபட்சமற்ற சில கூறுகளின் நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிக்கின்றது.

இந்தப் பரிந்துரைகள் தவறான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அமைந்தவை எனச் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னரே இலங்கை தெட்டத் தெளிவாகக் கூறிவிட்டது. அப்போது வெளிவிவகார அமைச்சராகவிருந்த தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தன இதனை வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

கடந்த வருடம் நடைபெற்ற பேரவையின் அமர்விலும் இந்த நிலைப்பாடு தெளிவாகக் கூறப்பட்டது. இவ்வாறான பின்னணியில் தற்பொழுது நடைபெற்றுவரும் அமர்வில் இலங்கை விவகாரம் பற்றிய கருத்தாடல்களில் ஜெனீவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி சுபாசினி அருணதிலக பதில் வழங்கியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 46/1 மற்றும் 51/1 ஆகிய தீர்மானங்களை இலங்கை ஏற்கனவே நிராகரித்திருப்பதாகவும், இம்முறை வெளியிடப்பட்ட உயர்ஸ்தானிகரின் அறிக்கையிலுள்ள முடிவுரை மற்றும் பரிந்துரைகளை நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பான்மையான உறுப்பு நாடுகள் இந்தத் தீர்மானங்களை எதிர்த்தன அல்லது வாக்களிக்கவில்லை என்பதுடன், ஏற்றுக்கொள்ள முடியாத உள்ளடக்கத்துடன் அடிப்படை உடன்பாடு இல்லை, குறிப்பாக ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை நிறுவுவது முன்னெப்போதும் இல்லாத ஒரு நடைமுறை என்றும் வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பேரவையில் கொண்டுவரப்படும் தீர்மானங்கள் நாடுகளுக்குள் ஊடுருவும் நோக்கிலும், மனித உரிமைகளுடன் தொடர்பில்லாத உள்நாட்டு வாக்கு வங்கியை அடிப்படையாகக் கொண்டதாக சில நாடுகளால் கையாளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானங்களின் வரவுசெலவு நடைமுறைப்படுத்தல் குறித்து பல்வேறு நாடுகள் தமது அக்கறைகளை முன்வைத்திருப்பதுடன், பேரவையின் உறுப்பினர்கள் மற்றும் அதன் வளங்கள் வீணடிக்கப்படுவதற்கு வழிவகுத்துவிடும் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இருந்தபோதும், சர்வதேச சமூகத்துடனும், பேரவையுடனும் இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன், ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறது என்ற உறுதிப்பாட்டையும் அவர் வழங்கியிருந்தார்.

கடந்த வருடத்தில் இலங்கை அடைந்துள்ள பொருளாதார, சமூக மற்றும் நிதிநிலைப்படுத்தல் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பாராட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார மற்றும் நிதிச் சீர்திருத்தங்களைக் கையாள்வதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் நாட்டில் உருவாகியுள்ள வாய்ப்புகளில் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாடு மற்றும் அதன் அமைப்புகளின் ஜனநாயக பின்னடைவை கடந்த ஆண்டில் நிரூபித்ததையும் புறக்கணிக்கத் தேர்ந்தெடுத்திருப்பது வருத்தமளிக்கிறது.

பொருளாதாரம், நிதி, தேர்தல், அரசியல், உள்நாட்டு வரவு செலவுத் திட்டம் மற்றும் அபிவிருத்திக் கொள்கைகளின் அனைத்து அம்சங்களிலும் பரந்த மற்றும் ஊடுருவும் கருத்துக்களை வெளியிடுவதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணை அதிகரித்து வருவது தொடர்பான ஆழ்ந்த கவலைகளை இலங்கை மீண்டும் வலியுறுத்துகிறது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையைப் பொறுத்த வரையில் கொவிட் 19 தொற்று சூழல் மற்றும் அதன் பின்னரான பொருளாதார நெருக்கடி எனத் தொடர்ச்சியாக சவால்களுக்கு முகங்கொடுத்த நாடாக அமைகிறது.



UNHRC

இந்தச் சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதை குறிப்பிட்டுக் கூற முடியும்.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பின்னர் நல்லிணக்க செயற்பாடுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தியிருப்பதைப் பகிரங்கமாகக் காண முடிகிறது. விசேடமாக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டில் இருக்கும் ஜனாதிபதி, அதற்கு ஏதுவான முற்போக்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

அது மாத்திரமன்றி, காணாமல்போனோர் அலுவலகம், நஷ்டஈடுகளை வழங்குவதற்கான அலுவலகத்தின் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்கும் அவர் தலைமையிலான அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருக்கிறது.

இருந்தபோதும், இலங்கையில் ஒரு சில சக்திகள் குறிப்பாக தென்னிலங்கையிலும், வடபகுதியிலும் உள்ள சில தரப்புக்கள் தேவையற்ற மதரீதியான முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றன. விசேடமாக தொல்பொருள் ஆய்வுகள் என்ற அடிப்படையில் மதரீதியான குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகின்றன. குருந்தூர்மலை விவகாரம் உள்ளிட்டவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இந்த விடயங்களில் அரசியல்வாதிகள் ஒரு சிலரின் தலையீடுகள் சர்வதேச அரங்கில் நாட்டின் மீது தேவையற்ற அழுத்தங்களுக்கு வழிவகுக்கின்றன. உதாரணமாகக் கூறுவதாயின் குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றத்தின் செயற்பாடுகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் விமர்சிப்பது தேவையற்ற குழப்பத்துக்கு வழியை ஏற்படுத்துவதாக அமைகிறது.

வடபகுதியில் உள்ள அரசியல்வாதிகளும் ஏனைய தரப்பினரும் இதனைப் பிடித்துக்கொண்டு சர்வதேச அரங்குகளை நாடுகின்றனர். எனவே, அரசாங்கம் இதுபோன்ற விடயங்களை சரியான முறையில் கையாள்வதும் நாட்டுக்கு சர்வதேச அரங்கில் ஏற்படக்கூடிய தேவையற்ற அழுத்தங்களைத் தணிப்பதற்கு ஏதுவாக அமையும்.

மறுபக்கத்தில், அரசாங்கம் பல்வேறு சட்டத்திருத்தங்களைக் கொண்டுவந்து நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்ல முயற்சிகளை எடுத்துள்ளது. குறிப்பாக இலஞ்ச ஒழிப்பு, சுயாதீனமான மத்திய வங்கி போன்றவை குறித்த சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும் சூழ்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டமூலத்தைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் இந்தச் செயற்பாடுகள் சர்வதேச நாடுகளால் வரவேற்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மாத்திரம் தொடர்ந்தும் இலங்கை விமர்சிக்கப்பட்டு வருகிறது.

நாட்டில் உண்மையான முன்னேற்றங்களை இவர்கள் விரும்பவில்லையா என்ற கேள்வியும் எழுகிறது. இலங்கை அனைத்துத் துறைகளிலும் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் அழுத்தங்களைக் கொடுப்பதைவிடுத்து ஒரு சில நாடுகள் தமது நாட்டில் தமக்குக் காணப்படும் வாக்கு வங்கிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவது துரதிர்ஷ்டமானதாகும். இருந்தபோதும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை சர்வதேசத்துக்கு ஒத்துழையாமல் இருப்பதாக அறிவிக்கவில்லை. எனவே, சர்வதேச சமூகமும் இலங்கை குறித்து சாதகமான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்.

**இலங்கை அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் சர்வதேச நாடுகளால் வரவேற்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மாத்திரம் தொடர்ந்தும் இலங்கை மீது விமர்சனங்கள்!**

**பி.ஹர்ஷன்...**

# இந்தியா–மத்தியகிழக்கு நாடுகள்–ஐரோப்பாவை இணைக்கும் புதிய பொருளாதார பாதைத் திட்டம்!

## ஜி20 நாடுகளின் தலைவர்கள் ஏகமனதான இணக்கம்!

**சீனாவின் பட்டுப்பாதைக்கு நிகராக, இந்தியாவுடன் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் வகையில் புதிய பொருளாதார வழித்தடத்துக்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

சீனா தனது கனவுத்திட்டமான பட்டுப்பாதைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஆயத்தங்களை செயற்படுத்தி வருகின்றது.

ஆரம்ப காலம் தொடக்கம் பட்டு உற்பத்தியில் புகழ்பெற்றிருந்த சீனா, ஆசியாவில் வணிகத்தில் முன்னிலை வகித்தது. இந்தப் பட்டுப் பாதை, அமெரிக்கா உலக வல்லரசாகிய பின்னர் 1500ஆம் ஆண்டளவில் பலவீனமடைந்து போனது. இந்த நிலையில் அதேபோன்று ஒரு நவீன தடத்தை உருவாக்க தற்போது சீனா முயன்று வருகிறது. சீனா இந்த திட்டத்தை 2008 இல் தொடங்கியது.

சீனாவின் பட்டுப் பாதை ஒப்பந்தங்களில் பல நாடுகள் ஆர்வத்துடன் முன்வரவில்லை. ஆனால் இதில் சீனாவின் மிகப்பெரிய அரசியலும், சுயநலமும் இருப்பதாக உலக வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

சீனாவின் பட்டுப் பாதை திட்டத்தில் இருந்து விலகியிருக்கும் இந்தியா உள்ளிட்ட நாடுகள், சீனாவின் இந்தத் திட்டத்தை பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்க்கவில்லை. மாறாக, ஆசியப் பிராந்தியத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அதிலும் குறிப்பாக, இந்தியப் பெருங்கடலைக் கட்டுப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகக் கருதுகின்றன.

இந்தச் சூழலில்தான் தற்போது டெல்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டின்போது, இந்தியாவுடன் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஐரோப்பாவை இணைக்கும் வகையில் புதிய பொருளாதார வழித்தடத்துக்கான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது முன்னெப்போதும் இல்லாத மிகப்பெரிய அடிப்படை கட்டமைப்புத் திட்டமாகும்.

இதன் மூலம் வர்த்தகம், எரிசக்தி மற்றும் டிஜிட்டல் தகவல் தொடர்புகள் வளர்ச்சி பெறும். இதை இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா மற்றும் ஐரோப்பிய யூனியன், இத்தாலி, ஜெர்மனி ஆகிய நாடுகள் தொடங்கவுள்ளன. குறிப்பாக, இந்தத் திட்டம் சீனாவின் பட்டுப்பாதை முயற்சிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இருக்கும் எனக் கருதப்படுகிறது. அதேநேரத்தில், இந்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட பிறகு, இந்தியாவின் வர்த்தகத்தில் பெரிய ஏற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, "இனிவரும் காலங்களில், இந்தியா, மேற்கு ஆசியா மற்றும் ஐரோப்பா இடையே பொருளாதார ஒருங்கிணைப்பின் முக்கிய வழித்தடமாக இத்திட்டம் இருக்கும். இந்த புதிய வர்த்தகப் பாதை சர்வதேச இணைப்பு மற்றும் நிலையான வளர்ச்சிக்கு புதிய வேகத்தை வழங்கும். இத்திட்டம் மூலம் இந்தியாவை மேற்கு ஆசியா மற்றும் ஐரோப்பா உடன் நெருங்கி இணைத்துள்ளது" என அறிவித்தார்.

இதுதொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், "இது மத்திய கிழக்கில் செழிப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தம். இது, இரண்டு கண்டங்களின் துறைமுகங்களை இணைப்பதன் மூலம் மத்திய கிழக்கில் அதிக செழிப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் மிகப்பெரிய ஒப்பந்தம்" எனத் தெரிவித்துள்ளார்.

உலகின் பல்வேறு தலைவர்களும் இதை வரவேற்றுள்ள நிலையில், சீனா இத்திட்டத்தை விமர்சித்துள்ளது. எனினும், இந்த விஷயத்தில் சீனா அடுத்து என்ன செய்யப்போகிறது என்ற எதிர்பார்ப்பும் உருவாகியுள்ளது.

அமெரிக்கா, சவுதி அரேபியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து 'இந்தியா_ மத்திய கிழக்கு_ ஐரோப்பா பொருளாதார வழித்தடத்தை' பிரதமர் நரேந்திர மோடி புதுடில்லியில் ஆரம்பித்து வைத்ததையடுத்து சீனாவின் சந்தேகம் அதிகரித்துள்ளது.






**மத்திய கிழக்கில் செழிப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தம் இது. இரண்டு கண்டங்களின் துறைமுகங்களை இணைப்பதன் மூலம் மத்திய கிழக்கில் அதிக செழிப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் மிகப்பெரிய ஒப்பந்தம்!**

இந்தியா முதல் அமெரிக்கா, ஐரோப்பா முதல் மத்திய கிழக்கு வரையிலான நாடுகளின் தலைவர்கள் இதை ஒரு வரலாற்று ஒப்பந்தம் என்று அழைக்கின்றனர்.

'வர்த்தகத்தை துரிதப்படுத்தும் நேரடிப் பாதையாக இது இருக்கும்' என்று ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் உர்ஸுலா வோன் டேர் லேயன் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் மத்தியகிழக்கில் அமைந்துள்ள நாடுகள் ரயில் வலையமைப்பின் மூலம் இணைக்கப்பட்டு, பின்னர் அவை கப்பல் பாதை மூலம் இந்தியாவுடன் இணைக்கப்படும். இதன் பிறகு இந்த வலைப்பின்னல் ஐரோப்பாவுடன் இணைக்கப்படும்.

செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் ஜோன் ஃபைனர், இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கியிருந்தார்.

"இது வெறும் ஒரு ரயில் திட்டம் மட்டுமல்ல. இது கப்பல் மற்றும் ரயில் திட்டம். இந்தத் திட்டம் எவ்வளவு மதிப்புமிக்கது, இலட்சியபூர்வமானது, முன்னோடியானது என்பதை மக்கள் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்" என்றார் அவர்.

"இந்த ஒப்பந்தம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளுக்குப் பயனளிக்கும். உலக வர்த்தகத்தில் மத்திய கிழக்கு நாடுகள் முக்கிய பங்கு வகிப்பதற்கு இது உதவும்" என்று அவர் கூறினார்.

இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான இந்த ஒப்பந்தம் அடிப்படையில் ஓர் உட்கட்டமைப்பு திட்டமாகும்.

இதன் கீழ் துறைமுகங்கள் முதல் ரயில் பாதை இணைப்புகள் வரை எல்லாமே கட்டப்பட உள்ளன. இந்தியாவில் இருந்து ஐரோப்பாவிற்கு செல்லும் ரயில் பாதைத் தொடர்பு மிகவும் விரிவானது. ஆனால் மத்திய கிழக்கைப் பார்த்தால் அங்குள்ள ரயில் பாதைகள் ஒப்பீட்டளவில் விரிவாக இல்லை. இதன் காரணமாக சரக்குப் போக்குவரத்து பெருமளவில் வீதி அல்லது கடல் வழியாகவே செய்யப்படுகிறது.

ரயில்வே பாதைகள் இணைக்கப்பட்டால், மத்திய கிழக்கின் ஒரு மூலையில் இருந்து மற்றொரு மூலைக்கு சரக்குகளைக் கொண்டு செல்வது எளிதாகும்.

இதனுடன் கூடவே இந்தத் திட்டத்தால் உலகளாவிய வர்த்தகத்திற்கான புதிய கப்பல் போக்குவரத்து வழியையும் வழங்க முடியும். ஏனெனில் தற்போது இந்தியா அல்லது அதைச் சுற்றியுள்ள நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சுயஸ் கால்வாய் வழியாக மத்திய தரைக்கடலை அடைகின்றன. இதன் பிறகு அவை ஐரோப்பிய நாடுகளை சென்றடைகின்றன.

இதனுடன், அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள நாடுகளுக்குச் செல்லும் பொருட்கள் மத்தியதரைக் கடல் வழியாக அட்லான்டிக் பெருங்கடலில் நுழைந்து, பின்னர் அது அமெரிக்கா, கனடா அல்லது லத்தீன் அமெரிக்க நாடுகளை அடைகின்றன.

தற்போது மும்பையில் இருந்து ஐரோப்பாவுக்கு புறப்படும் கொள்கலன்கள் சுயஸ் கால்வாய் வழியாக ஐரோப்பாவை அடைகின்றன. எதிர்காலத்தில் இவை துபாயில் இருந்து இஸ்ரேலில் உள்ள ஹைஃபா துறைமுகத்திற்கு ரயிலில் செல்ல முடியும். இதற்குப் பிறகு அவை ஐரோப்பாவை சென்றடையும். இதனால் நிறைய நேரத்தையும் பணத்தையும் மிச்சப்படுத்த முடியும் என்று யூரேசியா குழுமத்தின் தெற்காசிய நிபுணர் பிரமீத் பால் சௌத்ரி கூறினார்.

தற்போது சர்வதேச வர்த்தகத்தின் 10 சதவீதம் சுயஸ் கால்வாயை நம்பியுள்ளது. இங்கு ஒரு சிறிய பிரச்சினை ஏற்பட்டாலும்கூட சர்வதேச வர்த்தகத்திற்கு அது பெரும் சவாலாக உள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடலுக்கு அடியில் கேபிள் போடப்படும். அது இந்தப் பகுதிகளை இணைத்து, தொலைத்தொடர்பு மற்றும் தரவு பரிமாற்றத்தை விரைவுபடுத்தும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் போக்குவரத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்படும். உலகிற்கு ஒரு புதிய வர்த்தகப் பாதையை இது கொடுக்கும் என்பதால் இந்த ஒப்பந்தம் ஆக்கபூர்வமானதாக இருக்கும்.

மத்திய கிழக்கு நாடுகளில் ரயில்வே வலைப்பின்னல் நிறுவப்படுவதன் மூலம், இந்த நாடுகளில் நிலைமை மேம்படும். ஒருபுறம், உள்ளூர் மக்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

மறுபுறம், இது மத்திய கிழக்கு நாடுகளை ஒன்றுக்கொன்று நெருக்கமாகக் கொண்டு வரும். ஏனெனில் ரயில்பாதை இணைப்புகள் வணிகரீதியாக நாடுகளை நெருக்கமாக்குகின்றன.

**எஸ்.சாரங்கன்...**

**ரயில்வே திணைக்களத்தின் சில தொழிற்சங்கங்கள் இவ்வாரத்தின் ஆரம்பத்தில் முன்னெடுத்த திடீர் வேலைநிறுத்தப் போராட்டம் மக்களுக்குப் பாரிய சிரமங்களை ஏற்படுத்தியிருந்தது. ரயில்வே துறையில் லொக்கோமோட்டிவ் என்ஜின் சாரதிகளே இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.**



# மக்களை மரணப்பொறிக்குள் தள்ளும் பணிப்பகிஷ்கரிப்புகள்!

## ரயில்வே தொழிற்சங்கப் போராட்டத்தின் பின்னணியில் அரசுக்கு எதிரான மறைமுக நோக்கங்கள்!



## நாடு பொருளாதார நெருக்கடிக்குள் இருந்து மீண்டெழுந்து வரும் வேளையில், இயல்புநிலைமையை குழப்பியடிக்கும் முயற்சிகள்!

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

இதனால் 119 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டது மாத்திரமன்றி, இரண்டு அப்பாவி உயிர்களையும் பலிகொடுக்க வேண்டியதாகி விட்டது. இலங்கையின் போக்குவரத்துத் துறையில் ரயில் பயணங்கள் ஒப்பீட்டளவில் செலவு குறைந்தவையாகக் காணப்படுவதால், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் பெருமளவானவர்கள் ரயில் சேவையை நம்பியுள்ளனர்.

குறிப்பாக வேலைநாட்களில் காலையிலும், மாலையிலும் அதிகமானவர்கள் இதனைப் பயன்படுத்துவது நாம் அனைவரும் அறிந்த விடயம். இவ்வாறான பின்னணியில் கடந்த திங்கட்கிழமை ரயில்வே தொழிற்சங்கங்கள் சில திடீரென வேலைநிறுத்தத்தில் குதித்தன.

திடீரென ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படும் நிலைமை ஏற்பட்டதால் நிர்க்கதிக்கு உள்ளான ஆயிரக்கணக்கான பயணிகள் கிடைக்கும் ரயில் சேவைகளில் முட்டியடித்துக் கொண்டும், சனநெரிசல்களிலும் பயணித்தனர். ரயில் பெட்டிகளுக்குள் காணப்பட்ட சனநெரிசல் காரணமாக பலர் பெட்டிகளுக்கு மேலே அமர்ந்து பயணித்தனர்.

இவ்வாறு பயணித்த 20 வயது பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ரயில்வே நிலையத்தின் கூரையுடன் மோதி கீழே வீழ்ந்து ரயிலில் சிக்குண்டு உயிரிழந்தார். மற்றுமொரு 41 வயதுடைய நபரும் ரயிலின் கூரையில் பயணிக்கும்போது வீழ்ந்து உயிரிழந்தார்.

உயிரிழப்புக்கு நஷ்டஈடாக ரயில்வே திணைக்களத்தினால் வழங்கப்படும் தொகை 5 இலட்சம் ரூபா மாத்திரமே. எனினும், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஏற்பட்ட இழப்பு பன்மடங்காகும். பல்கலைக்கழக மாணவர் ஒருவரை நம்பியிருந்த குடும்பமொன்றின் கனவு தொழிற்சங்கப் போராட்டத்தினால் கலைக்கப்பட்டுள்ளது.

உயிரிழப்புகளுக்கு அப்பால் பெருமளவு மக்களின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு பாதிப்புக்களும் ஏற்பட்டன. குறிப்பாக அலுவலகங்களுக்கு உரிய நேரத்துக்கு செல்ல முடியாமை, அலுவலகங்களில் பணியாளர்களின் வருகை குறைவாகக் காணப்பட்டமையால் ஏற்பட்ட சிக்கல்கள் எனப் பல்வேறு பாதிப்புக்களை நாடு எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டது.

மூன்று நாட்களாகத் தொடர்ந்த போராட்டம் புதன்கிழமை இரவுடன் கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், ஏற்பட்ட பாதிப்புக்களை யார் ஈடு செய்வது?

தொழிற்சங்கப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் முதலிலேயே பேச்சுக்களை நடத்தியிருந்தபோதும், அது வெற்றியளிக்காத நிலையில், ரயில்வே சேவையை அத்தியாவசிய சேவையாக வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தது.

அது மாத்திரமன்றி ரயில் நிலையங்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினரையும் கடமையில் ஈடுபடுத்தும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது. பொருளாதார ரீதியில் பாதிப்புற்றுள்ள நாட்டைப் படிப்படியாக சரியான பாதைக்குக் கொண்டுவர அரசாங்கம் கடுமையான முயற்சிகளை எடுத்துவரும் நிலையில், இதுபோன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்கள் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடையாக அமையும் என்பது நிதர்சனம். குறிப்பாகப் பொருளாதார ரீதியிலும் தாக்கம் செலுத்தும் என்பதை தொழிற்சங்கவாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் ரயில் பயணங்கள் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பிரபல்யமாகக் காணப்படுகின்றன. விசேடமாக மலைநாட்டுப் பகுதிகளுக்கான ரயில் சேவைகள் அதிகமாக அவர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

(17ஆம் பக்கம் பார்க்க)













## வடமாகாணத்தில் இடம்பெற்ற

# வரலாற்றின் பாரிய கைத்தொழில் கண்காட்சி வெற்றிகரமாக நிறைவு






ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலான Industry 2023 Jaffna Edition வட மாகாண கைத்தொழில் கண்காட்சி மிகவும் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து Getup Startup For A Wealthy Nation எனும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பமான கைத்தொழில் கண்காட்சி யாழ்ப்பாணக் கலாசார நிலையத்தில் இம்மாதம் 1,2,3 ஆகிய மூன்று தினங்களாக பெருமளவான மக்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய 20 துறைகளைச் சேர்ந்த 300 கண்காட்சிக் கூடங்கள் இந்தக் கண்காட்சியில் அமைக்கப்பட்டிருந்ததோடு, வட மாகாண கைத்தொழிலாளர்களும், நாட்டின் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்தியில் ஈடுபடும் ஏராளமான முன்னணி கைத்தொழிலாளர்களும் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டிருந்தனர்.

கண்காட்சியின் முதல் நாள் ஆரம்ப நிகழ்வு கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரனவின் தலைமையில் இடம்பெற்றதோடு, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பல அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நாள் ஆரம்ப நிகழ்வுகள் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கா ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் சாத்தியமுள்ள உள்ளூர் கைத்தொழில்களை இனங்கண்டு அவற்றை ஏற்றுமதி சார்ந்த உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி கொண்டு செல்வதற்கும், புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் தேவையான தொழிநுட்ப அறிவைப் புதுப்பித்து வடமாகாண மக்களுக்கு கைகொடுப்பதும் இந்தக் கண்காட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. அதன் வெற்றியை மக்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட கருத்துக்களை வைத்து இனங்கண்டு கொள்ள முடிந்தது. கண்காட்சியின் நிறைவு விழா இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் டாக்டர் சாரங்க அழகப்பெரும தலைமையில் இடம்பெற்றது.

**(எம். எஸ். முஸப்பிர்)**

---



## பரபரப்பை ஏற்படுத்திய

# வேற்றுக்கிரக வாசிகளின் உடல்கள்!



**அருள் சத்தியநாதன்**

மிகப் பண்டைய காலத்தில் இருந்தே மாற்று உலகம் தொடர்பான சிந்தனைகளும் சித்தரிப்புகளும் உலக மக்கள் மத்தியில் அவரவர் அறிவு, இலக்கிய வளர்ச்சிக்கேற்ப வளர்ந்தும் கிளைத்தும் வந்துள்ளன.

பைபிளில் இது தொடர்பான தகவல்கள் குறைவு. எனினும் கிரேக்க, பண்டைய எகிப்து நாகரிகத்தில் இவ்வுலக மனிதன் வெளி உலகம் செல்வது, திரும்பி வருவது போன்ற சித்தரிப்புகள் உள்ளன. வேற்று உலகங்களில் தேவர்கள், ராட்சசர்கள் வாழ்வது, பூமிக்கு வருவது, வெளி உலகங்களை கைப்பற்றுவது தொடர்பாக ஹொலிவுட் திரைப்படக் காட்சிகளுக்கு நிகரான சித்தரிப்புகள் ஏராளம். இவை நீங்கள் அறிந்தவை என்பதால் விவரிப்பு அவசியமில்லை.

விண் தேர்களில் ஏறி வேறு உலகங்களுக்கு பயணிப்பது தொடர்பாக இந்திய இதிகாச, புராணங்களில் நிறைய செய்திகள் உள்ளதால் அன்றைய இந்தியர்களுக்கு வெளிக்கிரக வாசிகள் பற்றிய அறிவு போதுமான அளவு இருந்திருக்க வாய்ப்புண்டு.

கடந்த நூறு ஆண்டுகளை எடுத்துக் கொள்வோமானால், அறிவியல் ரீதியாக கோள்கள் கண்டு பிடிக்கப்பட்டு, சக்தி வாய்ந்த தொலைக்காட்டிகள் ஊடாக தொலைதூர நட்சத்திர மண்டலங்களை மனிதன் ஆராயப் புகுந்ததன் விளைவாக விண்வெளி ரகசியங்கள் பல அவிழ்க்கப்பட்டன, அவிழ்க்கப்படுகின்றன.

விண்ணில் இருந்து விருந்தினர்கள் பூமிக்கு வருவது நமக்கு சமய, புராண ரீதியாக தெரிந்த விடயமாக இருந்தாலும், வெளிக்கிரகங்களில் உயிரினங்கள் உள்ளனவா? அவை ஏற்கனவே பூமிக்கு வருகை தந்துள்ளனவா, நாம் அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்க வேண்டாமா? இப்போதும் அவர்கள் நம்முடன் தொடர்பு கொள்கிறார்களா? எனப் பல கேள்விகள் நவீன விண்வெளி ஆய்வில் கேட்கப்பட்டு வருகின்றன.

1878ஆம் ஆண்டு டலஸ் நகருக்கு வெளிப்புறத்தில் ஒரு விவசாயி பறக்கும் தட்டைக் கண்டதாக செய்தி வெளியானது. பின்னர் 1947 ஜனவரி 24ஆம் திகதி கென்னத் ஆர்னோல்ட் என்ற அமெரிக்க விமானி ஒன்பது ஒளிரும் வட்ட வடிவிலான விண் பொருட்கள் கற்பனை செய்ய முடியாத வேகத்தில் பறந்து சென்றதைத் கண்டதாகத் தெரிவித்தார். அவர்தான் பத்திரிகை நிருபருடன் போகும் போது Flying Saucers (பறக்கும் தட்டுகள்) என்ற பதத்தை முதல் தடவையாக பயன்படுத்தியவர். ஆங்கிலத்தில் தற்போது இவ்வார்த்தைக்கு பதிலாக அடையாளம் தெரியாத பொருள் (UFO) என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. அடையாளம் காணப்படாத முரண்பாடான நிகழ்வு என்றும் அழைக்கிறார்கள்.

இத்தகைய மர்மப் பொருட்கள் வானில் தென்படுவது தொடர்பில் உலகெங்குமிருந்து பலரும் தகவல்கள் தெரிவித்துள்ளனர். அவை புகைப்படங்களாகவும், பத்திரிகை மற்றும் வீடியோ ஆதாரங்களாகவும் நூல்களாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. எழுபதுகளில் அமெரிக்காவில் ஸ்டீவன் ஸ்பில்பேர்க் இயக்கத்தில் வெளியான திரைப்படம் 'குளோஸ் என்கவுன்டர் ஒப் தேர்ட் கைன்ட்' என்பதாகும். Close encounter of Third kind என்ற இத் திரைப்படம் 1977இல் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. முதல் தடவையாக ஒரு வெளிக்கிரக வாகனம் பூமியில் இறங்குவதாகவும் சண்டைக்கு வராமல் சமாதானமாக திரும்பிச் செல்வதாகவும் அப்படம் சித்தரித்திருந்தது. இதற்கு முன்னர் வெளியான வெளிக்கிரக வாசி படங்கள் அனைத்தும் உலகை அழிக்க வந்தவர்களாகவே சித்தரிக்கப்பட்டிருந்தன. வெளிக்கிரகவாசிகளை நண்பர்களாகக் காட்டிய இத்திரைப்படம் உலக ரசிகர்களின் ஒட்டுமொத்த வரவேற்பைப் பெற்றது.

இரண்டாவது திரைப்படமும் ஸ்டீவன் ஸ்பில்பேர்க் தயாரித்ததுதான். பெயர் E.T. (Extra Terrestrial).

1982 இல் வெளியானது. அமெரிக்காவில் தரையிறங்கும் வெளிக்கிரகவாசிகள் தம்முடன் அழைத்து வந்த குட்டிப் பையனை தொலைத்துவிட்டு திரும்பிச் சென்று விடுகிறார்கள். அக்குட்டிப் பையனை காப்பாற்றும் சிறுவர்கள் தமது வீட்டில் மறைத்து வைத்து வெளிக்கிரக பெற்றோரிடம் ஒப்படைக்கும் நெகிழ்ச்சியான திரைக்கதையை ஈ.டி. கொண்டிருந்தது.

வெளிக்கிரகவாசிகளின் பூமி வருகையை சாதாரண மக்களிடம் சாத்தியமானதுதான், பயப்படுவதற்கு ஏதுமில்லை என்பதை நிலை நிறுத்திய திரைப்படமாக இவை விளங்கின. நியூயோர்க் மற்றும் வொஷிங்டன் நகரங்களில் மீது வானில் நின்று கொண்டு நகரங்களை அழிக்கும் வில்லன்களாக வெளிக்கிரகவாசிகளை சித்தரிக்கும் திரைப்படமாக வெளிவந்து பெரு வெற்றி பெற்றது 'இன்டிபென்டன் டே' என்ற ஹொலிவூட் திரைப்படம். பல தோல்விகளின் பின்னர் இறுதி முயற்சியாக மேற்கொள்ளப்படும் தாக்குதலில் அப் பிரமாண்டமான விண் கப்பல் எப்படி அழிக்கப்படுகிறது என்பதே கதை. 1996இல் வெளியாகி மிகப்பெரிய வெற்றி பெற்ற படம் இது.

நாம் தனியாகத்தான் இப் பேரண்டத்தில் வாழ்கிறோமா அல்லது அண்ட வெளியில் எங்கோ ஒரு மூலையில் நம்மைப் போல் அறிவுவிருத்தி பெற்ற உயிரினங்கள் வாழ்வது சாத்தியமா என்ற மனிதரிடம் நிலவும் சாதாரண சந்தேகமே விஞ்ஞானிகளின் தொடர்ச்சியான தேடல்களுக்கான காரணம்.

இந்த வகையில் கடந்த செவ்வாய்க்கிழமை மெக்சிகோவில் நடைபெற்ற ஒரு விசாணையில் காட்சிக்கு வைக்கப்பட்ட இரண்டு வெளிக்கிரக வாசிகளின் கல்லாகிப்போன இரு உடல்கள் உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது உண்மை.



மெக்சிகோ காங்கிரஸ் கடந்த செவ்வாய்க்கிழமை வெளிக்கிரகவாசிகளின் பூமி வருகை தொடர்பான ஒரு விசாரணையை நடத்தியது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அமெரிக்க காங்கிரசும் இத்தகைய விசாரணையை நடத்தியிருந்தது. அப்போது வெளிக்கிரகவாசிகள் அல்லது அவர்களது வாகனங்களின் வருகை தொடர்பான நூற்றுக்கணக்கான சம்பவங்கள் நிகழ்ந்து அவை பதிவு செய்யப்பட்டிருப்பதாக சாட்சியங்கள் அளிக்கப்பட்ட அதே சமயம் அமெரிக்க அரசு, பென்டகன், விமானப்படை என்பன இச்சம்பவங்களை மறுத்தும், மௌனம் காத்தும் வருவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

இதேபோன்ற ஒரு விசாரணையே மொக்சிகோவிலும் நடத்தப்பட்டது. அப்போதுதான் நேரடி காட்சியாக இரு பாறைப்படிவங்களான வெளிக்கிரகவாசிகளின் உடல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

இவை இரண்டுமே தோற்றத்தில் சிறியவை. மூன்று விரல்களே காணப்படுகின்றன. கண், மூக்கு, வாய் அனைத்தும் மனித முகச் சாயலில் அமைந்தள்ளதோடு தலையின் பின்புறம் நீண்டதாகக் காணப்படுகிறது. இவற்றின் உடல்கள் எக்ஸ்ரே செய்யப்பட்டபோது ஒன்றின் வயிற்றில் இரண்டு முட்டைகள் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த புதைபடிவங்கள் இரண்டும் 1700 ஆண்டுகள் பழைமையானவை என்றும் ஆய்வாளர்கள் கொன்ஸ்டான்டின் கொரோட்கோவி, ரஷ்ய மிர் 27 தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

மனிதனுக்கு உள்ளதைப் போலவே 23 தொகுதி க்ரமோசம்களைக் கொண்டிருப்பதாகவும் ஆனால் உடற்கூறு ஆய்வு அவை மனிதனுடையது அல்ல என்று கூறுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் ரஷ்யாவின் பீட்டர்ஸ்பேர்க் பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவரா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை. இணையதளத்தில் அவர் பெயரும் இல்லை என்பதும் சுட்டிக்காட்டுகிறது.

மேலும் இவரது தனிப்பட்ட இணையத் தளத்தில் தேடினால் 'பயோவெல்' என்ற பெயருடைய மருந்தொன்று விற்பனைக்கு விடப்பட்டிருப்பதாகவும் அதைப் பயன்படுத்தினால் மனிதரை சுற்றியுள்ளதாகக் கூறப்படும் ஒளியை அடையாளம் காணலாம் எனவும் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இவர் ஒரு போலி என்பதையே நிரூபிப்பதாக இத்தரப்பு கூறுகிறது.

பறக்கும்தட்டு ஆய்வாளரான ஜெய்மி முஸானோ, இப் புதைப் படிவங்களின் டிஎன்ஏ மனிதருக்கானவை அல்ல என்றும் மனிதன் என்று கொள்ளமுடியாத உருவங்கள் என்றும் கூறும் இவர், வெளிக்கிரக ஜீவிகள் என்று ஏற்றுக் கொள்ளவும் முடியாதென்கிறார்.

## பெருவில் காணப்படும் பெரும் சித்திரங்கள் ஏன் வரையப்பட்டன?

பெருநாட்டின் கடலோர நாஸியா பாலைவனத்தில் பிரமாண்டமான கோடுகளும் உருவங்களும் பாறைகளில் வரையப்பட்டுள்ளன. பல கிலோமீட்டர் அகலமும் நீளமும் கொண்ட இவை எவ்வாறான தோற்றம் கொண்டவை என்பதை தரையில் நின்று பார்த்தால் தெரியாது. வானில் இருந்து பார்த்தால் மட்டுமே இவற்றின் முழு உருவங்களை அவதானிக்க முடியும். பண்டைய பெருவியன் மக்கள் ஏன் இவ்வளவு பிரமாண்டமான கோடுகளையும் ஓவியங்களையும் வரைய வேண்டும்?

இக்கேள்விக்கு எரிக்வான் டெனிக்கன் என்ற ஜெர்மன் ஆய்வாளர் தன் 1968 நூலான 'செரயட் ஒப் கோட்ஸ்' (Chariot of Gods) என்ற புத்தகத்தில் பதில் தேடியிருந்தார். விண்வெளிவாசிகள் வந்திறங்கும் விமான நிலையமாக இது இருந்திருக்க வேண்டும் எனவும், அவர்களின் கண்களுக்கு தெரியும் வகையில் இப் பிரமாண்டான ஓவியங்கள் வரையப்பட்டன என்றும் அவர் விளக்கம் தெரிவித்திருந்தார். வெளிக்கிரகவாசிகள் பற்றிய ஆய்வுகளில் இப் புத்தகம் பிரளய புரட்சியை ஏற்படுத்தியது. வெளிக்கிரகவாசிகள் பூமிக்கு வருவதும் போவதுமாக இருந்தார்கள் என்றும் அறிவியல் மற்றும் பௌதீகவியல் சார்ந்த பல மாற்றங்கள் ஏற்பட அவர்கள் காரணமாக இருந்தார்கள் என்றும், பிரமிட் போன்ற அதிசயிக்கத்தக்க கட்டடங்களை அமைக்க அவர்களது அறிவு பயன்பட்டிருக்கிறது என்றும் அப்புத்தகத்தில் எரிக் நிறுவியிருந்தார்.

மெக்சிகோ காங்கிரசில் காட்சிப்படுத்தப்பட்டவை வெளிக்கிரகவாசிகளுடைய புதைபடிவங்கள் அல்ல என்கிறது இன்னொரு தரப்பு.

பண்டைய பெருவின் நஸ்கா கலாசாரம் மூத்தது என்று கூறும் இவர்கள், இம்மக்களின் புதைகுழிகள் கல்லறைத் திருடர்களினால் சீரழிக்கப்பட்டதாகவும் இப்போதும் மரியோ என்பவரது தலைமையில் புதையல் திருடர்கள் புதைகுழிளை தோண்டி வருவதாகவும் தெரிவிக்கின்றனர், இத்திருட்டுகள் தொடர்பாக பெரு கலாசார அமைச்சுக்கு தகவல்கள் தெரிவிக்கப்பட்ட போதும் அமைச்சு கண்டு கொள்வதில்லை எனக் குற்றம் சாட்டுகின்றனர். பெருவின் ஒரு பகுதியில் இருந்து 171 'மம்மி'கள் அகழ்ந்து எடுக்கப்பட்டதாகவும் இவை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டவை என்றும் குறிப்பிடும் இத்தரப்பு, பெருவில் இருந்து பண்டைய பொருட்களை இறக்குமதி செய்வதை அமெரிக்கா தடை விதித்திருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தத் திருட்டு புனித புதை படிவங்களில் இருந்து உருவாக்கப்பட்ட வேற்றுக்கிரகவாசிகளின் உருவமே தவிர இது அசல் வெளிக்கிரகவாசிகளின் புதைபடிவங்கள் அல்ல என்பது இத்தரப்பின் வாதம்.

பண்டைய நஸ்கா மக்களின் புதைப் படிவங்களை எடுத்து வெட்டியும் ஒட்டியும் இவற்றை உருவாக்கியுள்ளார்கள். ஒட்டு வேலைகள் வெளியே தெரியாவண்ணம் வெள்ளை வர்ணம் பூசப்பட்டுள்ளது என்றும் 'லைவ் சயன்ஸ்' என்ற அறிவியல் இணையதளம் தெரிவித்துள்ளது. இறந்த மனிதர்களின் சடலங்களை மனித சடலங்கள் இல்லை என நம்பவைப்பது தேசிய மற்றும் சர்வதேச நியமங்களை மீறும் செயல் என ஆய்வாளர்கள் கண்டித்துமிருக்கிறார்கள்.

அமெரிக்க காங்கிரசின் தெரிவுக் குழுவொன்று சமீபத்தில் பறக்கும் தட்டுகள் தொடர்பான விசாரணை ஒன்றை நடத்தியது. அவ்விசாரணையின் போது, அமெரிக்க அரசும், உளவுத் துறையும், நாசாவும், அமெரிக்க கடற்படை, விமானப்படையும் தான் அறிந்த வேற்றுக்கிரகவாசிகள், பறக்கும் தட்டுகள் பூமியில் இறங்கிய சம்பவங்கள் தொடர்பான உண்மைகளை மறைப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. இவற்றை சம்பந்தப்பட்ட தரப்பினர் நிராகரித்துவிட்டனர்.

## வெளிக் கிரகவாசிகள் எமக்கு ஏற்கனவே அறிமுகமானவர்களா?

பூமிக்கு வரும் வெளிக்கிரகவாசிகள் மனிதர்களை சிறைபிடித்து தமது கலங்களுக்கு கூட்டிக் செல்வதாகவும், பல்வேறு பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதாகவும், இருவேறு மனிதர்களையும் இணைத்து மனிதர் போல தோற்றமளிக்கும் கலப்பு மனிதர்களை பூமியில் தோற்றுவிக்க முயல்வதாகவும் அமெரிக்காவில் கருத்துகள் உள்ளன.

1947 – 1969 காலப்பகுதியில் 40 ஆயிரத்து 164 பறக்கும் தட்டு சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. விஸ்கொன்சின் மாநிலத்தில் மட்டும் 2,558 சம்பவங்கள் அறிவிக்கப்பட்டன. அமெரிக்க விமானப்படை, பறக்கும்தட்டு சம்பவங்களை ஆராய நீலப் புத்தகம் என்ற பெயரில் ஒரு ஆய்வைத் தொடங்கியது. ஆயிரத்து 112 வேற்றுக்கிரக வாகனங்கள் தொடர்பான ஆய்வுகள் 1,400 பக்கங்களில் மேற்கொள்ளப்பட்டன. வானில் மிதக்கும் பலூன்கள், சூரிய வெளிச்சம், காலநிலை, சதுப்பு நில வாயுக்கள் என பல சம்பவங்களின் உண்மைப் பின்னணி கண்டறியப்பட்டன. எனினும் விளக்கப்பட முடியாத சம்பவங்களும் அவற்றில் காணப்பட்டன. இந்த நீலப் புத்தக ஆய்வு காரணம் கூறப்படாமல் 1969ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது.

அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தின் கொனோவா ஏரியில் இளம் ஜோடியொன்று 1970 இல் படகு சவாரி செய்து கொண்டிருந்தது. அப்போது தூரத்தில் இளஞ்சிவப்பு வர்ணத்தில் ஒரு பந்து வானத்தில் சுழன்று கொண்டிருந்ததாகவும் பின்னர் அவர்களின் தலைக்கு மேலாக நின்று அந்த பொருள் விரைந்து மறைந்ததாகவும் பின்னர் பொலிசாரிடம் அவர்கள் தெரிவித்த போதிலும் அதை அவர்கள் சட்டை செய்யவில்லையாம்.

உலகெங்கும் உள்ள விண் ஆய்வாளர்கள் அண்டவெளியை நோக்கி சமிக்ஞை ஒலிகளை அனுப்பி வருகின்றனர். பதில் சமிக்ஞை கிடைக்கிறதா என்ற எதிர்பார்ப்பில். புதிதாக விண்ணுக்கு அனுப்பப்பட்ட ஜேம்ஸ்வெப் தொலைநோக்கி ஆழ்விண்வெளியில் தேடுதல் நடத்தி வருகிறது.

உயிரினங்கள் இருந்தால் அவை வெளிப்படுத்தக் கூடிய உயிரியல் வாயுக்களை அடையாளம் காண முடியுமா என்ற வகையில் ஆய்வு நடக்கிறது. இதை உயிரியல் கையெழுத்து என அழைக்கிறார்கள்.

மேலும் நம்மைப்போல முன்னேறிய ஜீவிகள் எங்கேனும் இருந்தால் அவை வெளிவிடக்கூடிய இரசாயன வாயுக்களையும் தேடுகிறார்கள். இதை 'டெக்னோ சிக்னேச்சர்' என அழைக்கிறார்கள்

இந்திய, கிரேக்க புராணங்களில் அரக்கர்கள் பற்றிய கதைகள் வருகின்றன. இராவணன், கும்பகர்ணன், தோர், கோலியாத், ஹேர்குலஸ் போன்ற இந்த அரக்கர்கள் யார்? பேரழிவு ஆயுதங்களுடன் இவர்களை அழிக்க வந்தவர்கள் யார்? என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன.

வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா என்ற கேள்வி நீண்டகாலமாக கேட்கப்படுகிறது. பதில்கள் எதுவுமே நிச்சயமானவையாக இல்லை!

# வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

உங்களது வியாபாரத்திற்குத் தேவையான எந்தப் பொருட்களையும் சீனா அல்லது இந்தியாவிலிருந்து தருவித்து கொள்வதற்கு What-sApp அழையுங்கள். 0706723953. 058906



### 233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

தேயிலைத் தொழிற்சாலைக்குத் தேவையான உபகரணம் மற்றும் மூலப் பொருட்கள் தேயிலைத் தொழிற்சாலைகளின் இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் புதிய இயந்திரங்கள் தயாரிக்கும் தற்போது மூடப்பட்டுள்ள மலைநாட்டு முன்னணி நிறுவனத்தில் தேயிலை ரோல் மேசைக்கு தேவையான கித்துல் தண்டு. பிரேக்கர் கிரேன்க் மற்றும் புதிய பெயாரிங் போன்ற இயந்திர உதிரிப்பாகங்கள் மற்றும் கொரியாவில் தயாரிக்கப்பட்ட கொபெல்கோ சீனச்சட்டி வெல்டிங் கோல் போன்றவை விற்பனைக்கு. உடன் அழையுங்கள் 0776042676. 058983




## வேலைவாய்ப்பு

### 303 உயர்தொழில்துறையாளரின் ஆலோசனை பொதுவான சேவைகள்

நோயாளிகளை பராமரிக்கும் சேவை தொடர்பாக உள்ளூர்/ வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் உங்களுக்கு சுகாதார துறையில் அனுபவமுள்ள வழிகாட்டிகளின் தலைமையின் கீழ் நடத்தப்படவுள்ள Caregiver Practical Training Program -OLD Age Care Foundation (Suwa Arana Care) நிகழ்ச்சித்திட்டம். 196/ 3, பழைய கொட்டாவ வீதி, மிரிஹான, நுகேகொட. தொலைபேசி 0112801675, 071444 6162, 0718088648, 0777983807 058494

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பத்தரமுல்லவில் உள்ள 2 பேர் கொண்ட வீட்டிற்கு 52 மற்றும் 58 வயதிற்கிடைப்பட்ட தங்கியிருக்கக்கூடிய பெண் வீட்டு வேலையாள் தேவை. சமையல், சலவை, அயன், வீட்டு சுத்திகரிப்பு மற்றும் பொதுவான வேலைகள். உணவு மற்றும் விடுதி. வீட்டில் வேலை செய்த முன் அனுபவம் கட்டாயமானது. கவர்ச்சிகரமான சம்பளம், அழையுங்கள் 0777 562555. 058969

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

இந்திகஹமுல ஹோட்டலுக்கு வெயிட்டர் மற்றும் கெசியர் தேவை. (Night/ Day) 0726317995. 058707

## பொது

### 427 டியூஷன்

ஆசிரியைகள் தேவை. கண்டியிலுள்ள முன்னணி நிறுவகத்திற்கு ஆங்கில பெண் ஆசிரியை தேவை. ஒன்லைன் வகுப்புகள் பேசுதல் மற்றும் பிரயோக வகுப்புக்கள் மாத்திரம். நல்ல சம்பளம் (தமிழ் அல்லது முஸ்லீம் ஆசிரியைகள் மாத்திரம்) மேலதிக தகவலுக்கு தமிழ் 075 8585950, ஆங்கிலம் 070 7585950 058405



## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

இரத்மலானயில் நான்கு படுக்கையறைகள் மேல்மாடி வீடு, 6 பேர்ச்சுகளில் உள்ளது. இரட்டை அணுகுவழிகள். காலி வீதிக்கு 100மீ, KDU பல்கலைக்கழகத்திற்கு அருகில். விலை 34 மில்லியன் ரூபா பேசித்தீர்க்கலாம். தரகர் தேவையில்லை, நேர்மையான கொள்வனவுக்காரர்கள் மாத்திரம். 077 0528876 058555

கல்கிசை காலி வீதி பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்னால் நீதிமன்றத்திற்கு அருகில் 8.4 பேர்ச். ஆறு மில்லியன் ஒரு பேர்ச். 0710523354, 0773975558. 058693

கல்கிசை பான்ஸ் அவென்யூ 23.5 பேர்ச் இல் பெரிய மாடி, வர்த்தக, குடியிருப்புக்குப் பொருத்தமானது. 0715233354, 077 3 9 75558. 058692

நுகேகொடை, விஜேராம 3 படுக்கையறைகள், 1 குளியலறை, தனிமாடி கட்டிடக் கலைஞர்களினால் புதுப்பிக்கப்பட்ட வீடு TITANIUM சீமெந்து தரை, மாஸ்டர் படுக்கையறை AC உடன், இணைக்கப்பட்ட குளியலறை, சோலார் முறை, நீர் சூடாக்கல், வாகன நிறுத்துமிடம், சுப்பர் மார்க்கட்டுக்கள் மற்றும் வங்கிகளுக்கு நடைதூரம் அண்ணளவாக 10 பேர்ச்சுக்கள் 35 மில்லியன் பேசித் தீர்க்கலாம் அவசர தேவைக்கு மாத்திரம் அழைக்கவும் அல்லது வட்ஸ்அப் 0777557915 059203

இரத்மலானை பொருளாதார நிலையத்திற்கு 300 மீட்டர். 7 பேர்ச் கட்டப்படுகின்ற கட்டிடம் விற்பனை நிலையத்துடன் விற்பனைக்கு. கூடிய விலைக் கோரிக்கைக்கு. 0770778021. 058038

பேலியகொட கட்டுநாயக்க அதிவேக வீதி அருகில் ஸ்வஸ்திக்க பூங்காவில் 30 பேர்ச் இல் அமைந்த வீடு விற்பனைக்கு. 0272246292 0718391873 0723333357 059056

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

நுவரெலியா நகர எல்லைக்குள் 48 பேர்ச் தெளிவான பட்டா காணி விற்பனைக்குண்டு. ஒரு பேர்ச் 30 இலட்சம். தொடர்புக்கு 0773882333/ 071 8625625 059137

ரம்மியமான காட்சிகள் கொண்ட குளிர் மலைநாட்டின் சுகத்தை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக சிறந்த வர்த்தக மற்றும் குடியிறுப்பு 100 காணித் துண்டுகள். முழுப்பகுதியும் 25 இலட்சம். சிறந்த கழிவுடன் வட்டி இன்றி தவணை முறையில், அழையுங்கள் சிரிபெல லேண்டஸ் 0702 4 84848 059096

ஹட்டன் நகரிற்கு அருகில் 10 பேர்ச் கொண்ட பெறுமதியன 100 காணித்துண்டுகள் விற்பனைக்கு. குழாய்நீர் மற்றும் மூன்று சுற்று மின்சாரம். முழுக்காணியும் 25 இலட்சம். தவணை கொடுப்பனவு மற்றும் விசேட கழிவுடன் உங்களது காணியை இன்றே ஒதுக்கிக் கொள்வதற்கு அழையுங்கள் சிரிபெல லேண்ட்ஸ் 0702484848 059087

### 636 வீடு சொத்து யாழ்ப்பாணம் மாவட்டம் விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரில் 46 பேர்ச் காணி கே.கே.எஸ் வீதியிலிருந்து 100 மீற்றர் வண்ணார்பண்ணையில் விற்பனைக்கு. 1 பேர்ச் 1.8மி. தொடர்பெண் kdrange@hotmail.com. 074186762. 054065

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

வெள்ளவத்தை மெனிங் பிளேஸ் 24/ 18/ 1/ 1 முகவரியில் 2 படுக்கையறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. 07 74079099. 058691






# வாரமஞ்சரி BUDGET ADZ

It suits your budget







































இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த 06.09.2023 அன்று கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் உலகறிந்த ஒலி, ஒளிபரப்பாளர் வி.என்.மதி அழகனின் "சொற்கோ வி.என்.மதி அழகன்" பொன்விழா மலர் வெளியீட்டு விழாவில் கவிஞரும் சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான எஸ்.ரபீக் வழங்கிய கவி வாழ்த்து.

# மதி அழகனே !



மதி அழகனே !
மன அழகனே !
வண்ணச் சொற்களில்
உன்னை நான்
வாழ்த்திப் பாடுகிறேன்

விண்மீனை ஒரு
மின்மினி
வாழ்த்துவதைப் போல

வானத்தின்
வல்லமையை
ஒரு வானம்பாடி
ராகம் பாடுவதைப் போல..

உன்னை நான்
வாழ்த்திப் பாடுகிறேன்..
என் கனவுகளின்
சிறகுகளுக்கு
ஆகாயம் அறிமுகமானது
வாழ்க்கை எனும்
சாலையில்
எனக்கு நீ
அறிமுகமான பிறகுதான் !

உன் இதயமோ
நைல் நதியின்
நீளம் !

பண்பிலோ நீ
இமயத்தின் உயரம் !

உன்னுடன் பேசும் போது
புல் வெளியில் நடக்கின்ற
பூரிப்புக் கிடைக்கும்.

உன்னுடன் பழகும் போது
பூங்காவுக்குள் வசிக்கின்ற
புளகாங்கிதம் கிடைக்கும்

கனிகளில் கூட
நான் கண்டதில்லை
உன்னிடம் இருக்கும்
கனிவின் சுவை
இதைக் கை தட்டி
ஆமோதிக்குமே
இந்த அழகிய அவை !

உன் வாழ்க்கை கூட
நீ அணியும் ஆடைபோல்தான்
அத்தனை நேர்த்தி
அதனால்தான் உனக்கு
இத்தனை கீர்த்தி

என் நண்பன் ஒருவன்
இனிமைக்கு இன்னொரு சொல்
எதுவெனக் கேட்டான்
உன் குரலைச் சொன்னேன்.

சொற்களுக்கு அரசன்
யார் எனக் கேட்டான்
உன் பெயரைச் சொன்னேன்.

பலரும் வியக்கும்
விசித்திரம் நீ
இலங்கை தமிழ்
தொலைக்காட்சி வரலாற்றில்
முதல் செய்தி வாசிப்பாளன்
எனும் சரித்திரம் நீ !
ஒரு காலத்தில் எங்கள்
தொலைக்காட்சிப்
பெட்டியில்
உன் செய்தி வாசிப்பை
காண வந்த
அக்கம் பக்கத்தாரால்
அடிக்கடி
திரையரங்காய் மாறியது
எங்கள் வீட்டுத் திண்ணை

வானொலியில்
"ஊர் கோலம்" நடத்த
ஊர் ஊராய்
ஊர்வலம் போன
மேகம் நீ !

வானொலியிலும்
தொலைக்காட்சியிலும்
வண்ண வண்ணமாய்
நீ வார்த்துக் கொடுத்த
எத்தனையோ நிகழ்ச்சிகள்
இப்போது நினைத்தாலும்
நெஞ்சம் தித்திக்கும்
மறக்காது எத்திக்கும்

ஒலிபரப்பு உதவியாளனாய்
பணியில் இணைந்தாய்
உன் அயராத உழைப்பினால்
ஒலிபரப்புக் கோபுரமாய்
உயர்ந்து நின்றாய்.

நிருவாகத்தில்
நீ ஒரு கலாசாலை
"சொற்கோ வி. என் மதி அழகன்"
பொன்விழா மலரோ
பொற்கால பொக்கிஷங்களின்
நூதனசாலை !

உனது பணிக்காலம்
ஒரு பொற்காலம்
எப்போது எண்ணினாலும்
மனதுக்குள் மேளதாளம் !

பாரதி இன்று
இருந்திருந்தால்
தமிழ் மொழிக்கு
நீ ஆற்றிய தொண்டுக்காய்
உனக்கு
பாமாலை சூடி
பரவசப் பட்டிருப்பான் !

மார்க்கோனி
இன்று இருந்திருந்தால்
ஒலிபரப்பில் உன்
ஒப்பற்ற சேவைக்கு
மலர் மாலை அணிவித்து
மகிழ்ந்திருப்பான் !

அதனால்தானோ
யாழ் பல்கலைக்கழகம்
'மதியழகன் சொல்லும்
செய்திக'ளை
உசாத்துணையாக்கி
உன்னை வளவாளனாக்கி
உனக்கு மணி மகுடம்
சூட்டியிருக்கிறது.
என் கவிதையை
இப்படி நிறைவு செய்கிறேன்
கவிதைக்கு
ஒரு கவிக்கோ – அப்துர் ரஹ்மான்
ஒலிபரப்பிற்கு
ஒரு சொற்கோ – வி. என். மதி
அழகன்



எஸ்.ரபீக்

# அம்மம்மாவால் பரிதாபமாக கொலை செய்யப்பட்ட சிறுமி

## மருத்துவ தாதியான பாட்டி கைது யாழில் பரபரப்பு

பேத்தியின் எதிர்காலம் குறித்த கவலையில் பேத்திக்கு விஷ ஊசி செலுத்தி நானே கொலை செய்தேன். கொலை செய்த பின்னர் நானும் உயிர்மாய்த்துக்கொள்ள ஊசியை செலுத்திக்கொண்டேன் என பாட்டியார் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

திருநெல்வேலி பகுதியில் உள்ள தனியார் விடுதி அறையில் இருந்து 12 வயது சிறுமி சடலமாகவும், பெண்ணொருவர் சுயநினைவற்ற நிலையிலும் கடந்த செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டனர்.

சுயநினைவற்ற நிலையில் மீட்கப்பட்ட பெண், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையின் பின் உடல்நலம் தேறிய நிலையில் அவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்,

பொலிஸ் விசாரணைகளின் போது, தனது பெயர் நாகபூசணி (வயது 55) எனவும் தான் ஒரு மருத்துவ தாதியாக கடமையாற்றியவர் எனவும் கூறியுள்ளார். அத்துடன் தனது பேத்தியின் பெயர் பாத்திமா ஹீமா (வயது 12) எனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து விசாரணைகளில்,

"நான் மருத்துவ தாதியாக பணியாற்றியுள்ளேன். எனது மகள் வேறு இன இளைஞன் ஒருவரை காதலித்து திருமணம் செய்து அவர்களுக்கு பெண் பிள்ளை பிறந்த நிலையில், அவர்களுக்குள் பிணக்கு ஏற்பட்டு இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். இதனால் அவர்களது பிள்ளை என்னுடன் வளர்ந்து வந்தது.

சிறிது காலத்தில் இருவரும் வெவ்வேறு திருமணம் செய்து வாழ சென்று விட்டனர். பேத்தி என்னுடன் வளர்த்து வந்தார். இந்நிலையில், பேத்தியின் தகப்பன், "எனது பிள்ளையை என்னுடன் அனுப்புங்கள், நான் வளர்க்கிறேன்" என கூறி எனது பேத்தியை அழைத்து சென்று விட்டார்.



பேத்தி என்னை விட்டு பிரிந்ததும், அவளின் பிரிவுத்துயரும், அவளின் எதிர்காலம் எப்படி இருக்க போகுதோ என்ற கவலையும் எனக்கு ஏற்பட்டது. அதனால் நான் சில மாதங்கள் மனஉளைச்சலுக்கு உள்ளாகி இருந்தேன்,

கடந்த சில தினங்களுக்கு முன்னர், திருகோணமலைக்கு சென்று, எனது பேத்தியின் தந்தையிடம், பேத்தி சில நாட்கள் என்னுடன் இருக்கட்டும், வீட்டுக்கு கூட்டிச் சென்று சில நாட்களில் மீண்டும் அழைத்து வந்து விடுகிறேன் எனக் கூறி அவளை அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்தேன்

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் பேத்திக்கு மருத்துவம் செய்ய வந்துள்ளோம் என கூறி அந்த மருத்துவ மனைக்கு அருகில் உள்ள தங்குமிடத்தில் அறையை வாடகைக்கு பெற்று தங்கி இருந்தோம்.

அப்போது, பேத்தியின் எதிர்காலம் எப்படி இருக்க போகுதோ என்ற கவலையில் பேத்தியை கொலை செய்து விட்டு, நானும் உயிரை மாய்த்துக்கொள்ளலாம் என முடிவெடுத்தேன்.

அறையில் பேத்தியை விட்டு விட்டு, அருகில் உள்ள மருந்தகத்திற்கு சென்று மாத்திரைகளையும் ஊசியையும் (சிறிஞ்) வாங்கினேன். என்னிடம் மருத்துவ தாதி என்பதற்கான அடையாள அட்டை இருந்தமையால், அதனை காட்டி மருந்துகளை வாங்கினேன்.

அறைக்கு வந்து பேத்திக்கு தூக்க மாத்திரைகளை போடக் கொடுத்து, அவள் தூங்கிய பின்னர் மருந்துகளை கலந்து ஊசி மூலம் அவளின் உடலில் செலுத்தினேன்.

பின்னர் நானும் அதனை எனக்கும் செலுத்திக்கொண்டேன். ஊசி ஏற்றியதில் அவள் இறந்து விட்டாள், நான் காப்பாற்றப்பட்டு விட்டேன்" என தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து மேலதிக விசாரணைகளின் பின்னர் உயிரிழந்த சிறுமியின் பாட்டியை வியாழக்கிழமை பொலிஸார் யாழ். நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது, அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு, மன்று உத்தரவிட்டுள்ளது.

அதேவேளை, "எங்கள் இறப்பிற்கு யாரும் காரணம் இல்லை. எங்களை வீட்டுக்கு எடுத்து செல்ல வேண்டாம்" என சிறுமியின் பாட்டி பொலிஸாருக்கு எழுதிய கடிதமும் பொலிஸாரினால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அ. சுரேஷ்

# சிங்கப்பூர் ஜனாதிபதியாக பதவியேற்றார் தர்மன் சண்முகரத்தினம்

ஜனாதிபதி தர்மன் சண்முகரத்தினம் ஒரு ஈழத்தமிழர் என நம்மவரில் சிலர் குறிப்பிட்டு வருகின்றனர். ஆயினும் தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூரில் பிறந்த ஒரு சிங்கப்பூரியன் ஆவர்!!!

அவரது "பூர்வீகம்" யாழ்ப்பாணம், ஊரெழு எனச் சொல்லப்படுகின்றது. தர்மன் தனது பூர்வீகத்தை பெருமையுடன் வெளிப்படுத்துபவர். தனது பூர்வீகம் பற்றிப்பேசும்போது ஊரெழு என்ற யாழ்ப்பாணத்துக் கிராமத்தைப் பற்றி அவர் குறிப்பிடுவார்.

சிங்கப்பூர்க் குடியரசானது தனது குடிமக்களை நான்கு பெரும் பிரிவுகளாக அடையாளப்படுத்தி வருகிறது. (1) சீனர் (மொத்த சனத்தொகையில் 74.3வீதம்) (2) மலாய்காரர்கள் (13.5 வீதம்), (3) "இந்தியர்கள்" (9.0 வீதம்), (4) "பிறர்" Others (3.2 வீதம்).

மேலே சொல்லப்பட்ட "இந்தியர்" என்ற பதம் 'பாரத' நாட்டவர்களை குறிப்பதாக நினைத்து குழம்பிவிடக் கூடாது. (ஈழத்தமிழர் உட்பட தெற்காசியர்கள் நாம் எல்லாருமே பாரத நாட்டினை அடியாகக் கொண்டவர்கள் என்ற வாதம் தனி.)

சிங்கப்பூர் குடிமக்கள் ஆகிக் கொள்ளும் "தமிழகத்துத் தமிழர்கள்", "தெலுங்கர்" "மலையாளிகள்" "சீக்கியர்" "பஞ்சாபியர்" "குஜராத்திக்காரர்கள்" இன்னபிற. மற்றும் இலங்கையிலிருந்து வந்த தமிழர்கள், "சிங்களவர்" "முஸ்லிம்கள்" அனைவருக்கும் "இந்தியர்" என்ற இனக்குழும பொது அடையாளமே சிங்கப்பூரில் கிட்டும்.

இந்தவகையில் அங்கு வாழும் 9.0 வீத சிங்கப்பூர் 'இந்தியர்'களுக்கான உத்தியோகபூர்வ மொழி தமிழ் ஆகும்..! ஆனால் மொத்த சிங்கப்பூர் சனத்தொகையில் தமிழரின் எண்ணிக்கை சுமார் 4.9 வீதம் மட்டுமே..!!



இந்த 4.9 அளவிலுள்ள சிறுபான்மையரின் மொழியான தமிழுக்கு, 74.3 வீதமாயிருக்கும் சீனர்களின் சீன மொழியோடு சமஉரிமை கொடுத்து இயங்கிவருகிறது சிங்கப்பூர்.

# புவிசார் அரசியல் போட்டிக்குள் வியட்நாம் - வடகொரிய நகர்வுகள்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

சர்வதேச அரசியலில் கடந்தவாரம் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் அரங்கேறியிருந்தன. அத்தகைய அரசியலானது இந்தியாவில் நிகழ்ந்த ஜி20 மகாநாட்டினை மையப்படுத்தி தொடங்கின. ஆனால் அம்மாநாட்டில் இரு முக்கிய மேற்கு எதிர்ப்புவாதத் தலைவர்களான புட்டினும், ஜின்பிங்கும் கலந்து கொள்ளாததன் விளைவுகளை கடந்தவாரம் இப்பகுதியில் உரையாடியிருந்தோம். அச்சந்தர்ப்பத்தில் வடகொரியாவின் தலைவர் ரஷ்யாவுக்கு மேற்கொண்ட விஜயமும் அதற்கு பதிலாக அமெரிக்க ஜனாதிபதி வியட்நாமுக்கு மேற்கொண்ட பயணமும் முக்கிய அரசியலாக அமைந்திருந்தது. இது இரு அணிகளுக்கும் இடையிலான போட்டியாகவே தெரிகிறது. இக்கட்டுரையும் இரு தலைவர்களது, இரு நாடுகளுக்குமான சர்வதேச அரசியலில் எத்தகைய முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை தேடுவதாக அமைந்துள்ளது.

முதலில் வடகொரிய தலைவரின் ரஷ்ய விஜயத்தின் முக்கியத்துவத்தை நோக்குவோம். கடந்த 13.09.2023 அன்று ரயில் மூலம் ரஷ்யாவின் பிரிமோர்ஸ்கி க்ராய் ரயில் நிலையத்தை அடைந்த கிங் ஜோன் உன்னை வோஸ்டோச்னில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் வரவேற்றார். இதன் பின்னர் வோஸ் டோச்னியிலுள்ள ரஷ்ய ரொக்கட் ஏவுதளத்தில் இருநாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இக்கலந்துரையாலில் வடகொரியாவினது சொந்த தயாரிப்பான செயற்கைக்கோள் மற்றும் ரொக்கட்டுகளை ஏவுவதற்கு ரஷ்யா உதவுவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளது. இதன் போது வடகொரியாவின் ஆயுதங்களை ரஷ்யாவுக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருக்கலாம் எனவும் அது பற்றிய கலந்துரையாடல் நிகழ்ந்திருக்கலாம் எனவும் உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு தேவையான ஆயுதங்களை பெறுவதில் இரு தலைவர்களது உரையாடலும் அமைந்திருக்கலாம் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. அதே நேரம் வடகொரிய ஜனாதிபதி மேற்குக்கு எதிரான ரஷ்யாவின் புனிதப் போருக்கு வடகொரியா, தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றார்.

உலகளாவிய அரசியலில் கூட்டுப் பாதுகாப்பு நாடுகளதும் வல்லரசுகளதும் இருப்பினைப் பாதுகாக்கும் உபாயமாகவுள்ளது. இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் அமெரிக்காவின் பிரதான பாதுகாப்புக் கொள்கையாக கூட்டுப் பாதுகாப்பு காணப்படுகிறது. அத்தகைய உபாயத்துடனேயே ரஷ்யா, சீனா மற்றும் ஈரான் போன்ற நாடுகளது உலகளாவிய அரசியல் இராணுவ நகர்வுகள் காணப்படுகின்றன. இத்தகைய உத்தியை பின்பற்றும் உன் மற்றும் புட்டின் தமது நாடுகளின் பாதுகாப்பு சார்ந்தும் பொருளாதார தேவைகள் சார்ந்தும் ஒன்றிணைந்துள்ளனர். இரு நாட்டுத் தலைவர்களும் உரையாடிய விடங்களில் பாதுகாப்புக்கான ஆயுத தளபாடங்கள் மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தினை வடகொரியாவுடன் ரஷ்யா பகிர்ந்து கொள்ள முன்வந்திருப்பது முக்கியமான அரசியலாக உள்ளது. அதே நேரம் ரஷ்ய ஜனாதிபதி தனிமைப்படுத்தப்படுகிறார் என்ற நிலையை தகர்த்ததோடு வடகொரியா மீதான பொருளாதாரத் தடையையும் எதிர்கொள்வதாக உரையாடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ரஷ்யாவின் உக்ரைன் மீதான போர் ரஷ்யாவின் இறைமையையும், பாதுகாப்பினையும் மேலாதிக்க சக்திகளிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்கானதே என வடகொரியத் தலைவர் வெளிப்படுத்தியிருந்தார். இரு நாட்டுத் தலைவர்களது உக்ரைன் மீதான ரஷ்ய நடவடிக்கையை நியாயப்படுத்தும் அதேவேளை உக்ரையின் போர் தொடர்பில் மேற்கு கொண்டுள்ள உத்திகளை தகர்ப்பதாகவே அமைந்திருந்தது. மேற்கு ரஷ்யாவுக்கான ஆயுத விநியோகத்தை கட்டுப்படுத்துவதன் வாயிலாக போரை உக்ரைனுக்கு சாதகமானதாக மாற்றலாம் என விவாதிக்கின்றது. அதனை ரஷ்யா தனது நட்பு நாடுகளுடன் இணைந்து தோற்கடித்துவருகிறது. வடகொரியா மீது தொடர்ச்சியாக பொருளாதாத் தடைகளை மேற்கொண்டுவரும் மேற்கு நாடுகள் தற்போதும் வடகொரியா மீது எச்சரிக்கைகளை விடுத்து வருகின்றன. ரஷ்யா ஏற்கனவே ஆசிய மற்றும் ஆபிரிக்க கண்டத்து நாடுகளுடன் நெருக்கமான உறவை பின்பற்றிவருகிறது. மேற்குலகத்தின் உபாயமான ரஷ்யாவை உலக நாடுகளிடமிருந்து தனிமைப்படுத்தல் என்பதை புட்டின் தகர்த்து வருவதாகவே தெரிகிறது. இது வடகொரியாவுக்கும் பொருத்தமானதாகவே அமைந்துள்ளது.

அதேநேரம் இரு நாடுகளது பொருளாதார அடிப்படையிலான உரையாடலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதாக மேற்கு ஊடகங்கள் மற்றும் பென்ரகன் கருத்து தெரிவித்துவருகிறது. வடகொரியாவின் உணவுத் தேவையை நிறைவு செய்வதிலும் சக்திவளத்தை பெற்றுக் கொள்வதிலும் வடகொரியத் தலைவர் கவனம் செலுத்தியுள்ளதாகவும் மறுபக்கத்தில் புட்டின் வடகொரியாவிடமிருந்து ஆயுத தளபாடங்களை தருவிக்க



நடவடிக்கை எடுத்திருக்கலாம் எனவும் அமெரிக்காவின் பாதுகாப்புத் தளங்கள் உரையாடுகின்றன. இதற்கான வாய்ப்புக்கள் அதிகமானதாகவே உள்ளன. இரு நாடுகளது நலன்களின் அடிப்படையில் இருநாட்டு உறவுகள் அமைவதுண்டு. ஆனால் உக்ரைன் போர் ரஷ்யாவின் ஆயுத தளபாடங்களின் பற்றாக்குறையை மட்டுமல்ல மேற்குலகத்தின் ஆயுத தளபாடங்களிலும் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது. கடந்த வருடத்தில் இப்போரில் 11 மில்லியன் ஆட்லறி குண்டுகள் மட்டும் ரஷ்யாவால் பயன்படுத்தப்பட்டுள்ளதாக Royal United Services Institute தெரிவித்துள்ளது. இத்தொகை 2023 இன் நடந்து முடிந்த மாதம் வரை 7 மில்லியன் ஆட்லறி குண்டுகள் எனவும் அந்நிறுவனம் அறிவித்துள்ளது. உலக வரலாற்றிலே மிக அபாயகரமான போர் என வேர்சோ பல்கலைக்கழகத்தின் அரசியல் மற்றும் சர்வதேசக் கற்கைக்கான பேராசிரியர் Dorota Heidrich யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வருகைதந்த சந்தர்ப்பத்தில் அரசறிவியல்துறை மாணவர்களுடனான கருத்தரங்கில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார். இவ்வாறு உக்ரைன் போர் ஆயுத தளபாடங்களின் அளவினாலும் அதன் தன்மையாலும் தீர்மானிக்கப்படுகிறதாகவே தெரிகிறது.

இரண்டாவது, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனது வியட்நாம் விஜயம் (11.09.2023) முக்கியத்துவம் பெற்றதாக அமைந்துள்ளது. ஜோ பைடனது முதல் அரசமுறைப் பயணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அமெரிக்க ஜனாதிபதியை வரவேற்ற வியட்நாம் ஜனாதிபதி வன் தோங் இரு நாட்டுக்குமான போட்டித்தன்மை பொருந்திய உபாயங்கள் கொண்ட சமாதானத்திற்கான உறவு எனத்தெரிவித்தார் மேலும் அவர் குறிப்பிடும் போது ஒத்துழைப்பு, நிலையான அபிவிருத்தி மற்றும் பொருளாதார திட்டமிடலுக்கான உறவாக அமைந்துள்ளதாக தெரிவித்தார். இரு நாட்டுக்குமான நீண்ட கசப்பான விடயங்களை கோடிட்டுக் காட்டிய வன் தோங் அதனைக் கடந்து பொருளாதார மற்றும் பாதுகாப்பான சமாதான முன்முயற்சியில் கவனம் கொள்வதாக அவரது உரை அமைந்திருந்தது. இரு நாட்டுத் தலைவர்களும் உரையாடிய விடயங்களில் பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கல்வி மற்றும் ஒத்துழைப்புக்கான பயிற்சிகள் என பல விடயங்கள் அமைந்திருந்ததோடு அவற்றில் உடன்பாடு எட்டப்பட்டது.

1988ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க, வியட்நாம் உறவில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. அது டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்காலத்தில் மேலும் பலமடைந்தது. தற்போது புதிய உத்திகளுடன் இரு நாட்டு உறவும் அமைந்துள்ளது. குறிப்பாக சீனாவின் தென் சீனக்கடல் மீதான நடவடிக்கையை அடுத்து வியட்நாம் சீன உறவு பலவீனமடைந்துள்ளது. அண்மைக் காலப்பகுதியில் (27.03.2023) வியட்நாம் பாதுகாப்பு கப்பல்கள் மீதான சீன போர்க்கப்பல்கள் ஏற்படுத்திய நடவடிக்கைகள் அதிக அதிர்வுகளை தென்சீனக் கடல் பகுதியில் ஏற்படுத்தியிருந்தது. வியட்நாம் படகுகளுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் அமெரிக்கப் போர்க்கப்பல்கள் நகர்ந்தமை இரு நாட்டுக்குமான இராஜதந்திர உறவை நெருக்கடிக்கு உள்ளாக்கியது. ஏற்கனவே சீன, அமெரிக்க உறவு ஒரு பனிப்போர் சூழலை நோக்கி நகரும் போது அமெரிக்காவின் நடவடிக்கைகள் அதனை மேலும் முதன்மைப்படுத்துவதாக உள்ளதாகவே தெரிகிறது. அதன் இன்னோர் கட்டமாகவே ஜோ பைடனது வியட்நாம் விஜயம் நோக்கப்படுகிறது.

எனவே இரு நாட்டுத் தலைவர்களது விஜயங்களும் உலக அரசியலில் இரு துருவங்களது நிகழ்வுகளாகவே தெரிகிறது. ரஷ்யா வடகொரிய உறவானது, அமெரிக்கா மற்றும் மேற்குக்கு எதிரானதாக அமைந்திருப்பதுடன் அமெரிக்க வியட்நாம் உறவு புதிய சகாப்தத்தை நோக்குகின்ற போதும் அடிப்படையில் சீன, ரஷ்ய அணிக்கு எதிரான நகர்வாகவே தெரிகிறது. முன்னாள் சோஷலிஸ சிந்தனையைக் கொண்டது மட்டுமல்லாது அமெரிக்காவுடன் நீண்ட போரை எதிர்கொண்ட வியட்நாம் அமெரிக்காவுடன் கைகோர்ப்பதென்பது சீன, ரஷ்ய அணிக்கு எதிரான புவிசார் அரசியலை உருவாக்கும் நகர்வாகவே தெரிகிறது. இது ஒரு தந்திரோபாய அரசியல் பொருளாதார உறவுக்கான நடவடிக்கையாகவே உள்ளது.

மஞ்சரி மலைக்கதிர்

எஸ். ஸ்ரீகாந்த் | shrikanth.tkn@gmail.com




# சுகாதாரம், கல்வித் துறையின் பரிணாம வளர்ச்சியும் வீழ்ச்சியும்

மலையக மக்கள் ஏனைய துறைகளை போலவே சுகாதார, வைத்திய துறைகளிலும் மலையகத் தமிழர் புறக்கணிப்பிற்கு ஆளாக்கப்பட்டோராக இருந்து வருகின்றனர், சுகாதாரம் என்பது வெறுமனே நோயற்ற, பலவீன நிலைமைகள் மட்டுமல்ல. அது பூரணமான உடல், உள, சமூக நன்னிலையினை உள்ளடக்கியதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஆகவே இது பூரணத்துவ வாழ்நிலையினைக் குறிக்கின்றது. இன, மத, அரசியல், பொருளாதார, சமூக பாரபட்சமின்றி அதிஉச்ச சுகாதார தரத்தினை அனுபவிப்பது ஒவ்வொருவரினதும் அடிப்படை உரிமை என்று ஐ. நா. சாசனம் கூறுகின்றது. மலையக மக்கள் இவ்விடயத்தில் அசமத்துவ நிலையில் இருப்பது வெளிப்படை உண்மை. இன்றைய பரம்பரையினரின் முன்னோர் தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்த காலம் முதல் சுகாதார, வைத்திய வசதிகள் அற்றோராகவே இருந்துள்ளனர்.

குடியேற்ற நட்டு ஆட்சி காலத்தில் தோட்டத் தொழிலார்களின் சுகாதாரம் பாதுகாக்கப்படுவது பொருளாதார ரீதியில் முக்கியத்துவமானது என கருதியதாக வித்தியாசாகர எனும் நூலாசிரியர் கூறுகின்றார். (Health care in the Plantation sector Vidyasaakara) சுகாதார, வைத்திய நிலைமைகளை அவர் மூன்று கட்டங்களாக ஆராய்ந்துள்ளார். குடியேற்ற அரசாங்க ஆட்சியின் பொது, தோட்டங்களில் நோய்களைக் குணப்படுத்துவதனை மையமாகக் சுகாதார சேவை இருந்துள்ளதனை அவர் குறிப்பிட்டுள்ளார். துரைமார் தம்மிடம் குறிப்பிட்ட அளவு மருந்துகளை வைத்துக் கொண்டு நோயாளர்களுக்கு கொடுத்துள்ளனர். பின்னர், சில தோட்டங்களை இணைத்து மருந்தகங்களை அமைத்து, வைத்தியர்களும் நியமிக்கப்பட்டனர். ஆளுநர்கள் காட்டிய அக்கறையின் காரணமாக 1865 இல் எஜமானர்கள், பணியாளர்கள் சட்டம் இயற்றப்பட்டது. அதன் படி, வேலை கொள்வோர் தொழிலாளர்கள் நோய்வாய்ப்படும்போது தங்க வைத்து, உணவளித்து, மருத்துவம் பார்க்கப்பட வேண்டியதாயிற்று.

1872 ஆம் ஆண்டின் 14 ஆம் இல சட்டம் துரைமாரால் மேற்கொள்ளப்பட்ட வைத்திய வேலைத் திட்டம் அரசாங்கத்தின் கட்டுப்பாடோ, மேற்பார்வையோ இன்றி எல்லைக்குட்பட்டதாக இருந்ததாகக் கூறியதோடு அதன் தோல்வியினையும் குறிப்பிட்டது. இதன் போதாமையை 1879 ஆம் ஆண்டு விசாரணைக்குழு கண்டறிந்தது. இதனை நிவர்த்தி செய்வதற்காக 1880 இல் 17 ஆம் இல. வைத்திய சேவைகள் சட்டம் இயற்றப்பட்டது. இதில் காணப்பட்ட முக்கிய விடயம் தொழிலாளர்களை வைத்திய சேவைப் பொறுப்பினை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்பதாகும். இதன்படி, தோட்டங்கள் குழுக்களாக அமைக்கப்பட்டு,ஒவ்வொரு பகுதிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்காக மாவட்ட வைத்திசாலைகள் அமைக்கப்பட்டு,ஒரு மாவட்ட வைத்திய அதிகாரியும்,2 உதவியாளர்களும் நியமிக்கப்பட்டனர். என்றாலும், அனுமதிக்கப்பட்ட நோயாளர்களின் மரண வீதம் அதிகரித்தே காணப்பட்டது. இதனால், வைத்தியசாலை மரணம் பற்றிய ஆணைக்குழு தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களுக்கு அருகிலேயே வைத்திய வசதிகளைச் செய்யும்படி பரிந்துரைத்தது. இதன் பலனாக வைத்திய உதவி மருத்துவரின் கீழ் இயங்கும் தோட்ட மருந்தக முறைமை உருவானது. இதன்படி 1876 இல் 15 மருந்தகங்கள் அமைக்கப்பட்டு 1903 இல் அவை 143 ஆக விரிவடைந்தன. 1912/20 ஆம் இல. வைத்திய தேவைகள் சட்டத்தின் படி சுகாதார ஏற்பாடுகள் வைத்திய அதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதனோடு பிரசவ தொழிலார்களுக்கு உதவுவதற்காக வரி விலக்கும் கொடுக்கப்பட்டது. எனினும் பயிற்சி பெற்ற தாதியர் பற்றாக்குறை தொடர்ந்தது. நாடு சுதந்திரம் பெற்றதன் பின்னர் மலையகத்தார் பல்வேறு முறையில் தொல்லைகளுக்கும்,துன்பங்களுக்கும் ஆளாக்கப்பட்டனர். திட்டமிட்டவாறும், நிறுவனமயமானதாகவும் ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். குடியுரிமையும், வாக்குரிமையும் பறிக்கப்பட்டு உரிமை கோர முடியாத பிரிவினராயினரின் இதனால் குடியுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டு, பெயரளவிலான குடியுரிமை கொடுக்கப் படும் வரையில் சுகாதார, வைத்திய வசதிகளும் மங்கத்தொடங்கின. எனினும் அவர்களது உழைப்பினால் கிடைத்த செல்வத்தால் மற்ற சமூகங்களின் சேமநலத் திட்டங்கள் உத்வேகத்தோடு விரிவாக்கப்பட்டது. பீட்டரிடம் கொள்ளையிட்டு பவுலுக்கு தானம் செய்வது என்ற ஆங்கில பழமொழிக்கேற்ப அவை பீறிட்டு விரிந்தன.

குடியுரிமையும், வாக்குரிமையும் கிடைத்ததன் பின்னர் தேர்தல்களில் ஓட்டு யாசகத்திற்காக புதிய முனைப்புகள் தோன்றின. இதில் இடைத்தரகர்களாக மலையக தொழிற்சங்க முதலாளிகள் ஈடுபட்டு, அவர்களையும் வளர்த்துக்கொண்டனர். 1972 இல் தோட்டங்கள் அரசுடமை ஆக்கப்பட்ட பின்னர் சுகாதார, வைத்திய சேவைகளை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பாயிற்று. ம. தோ. அபி. வி. சபை/அ. பெ. தோ. யா. ஆகியன முகாமைத்துவ பொறுப்பாளிகள் ஆகின. இவற்றின் அதிகாரத்தின் கீழிருந்த சமூக அபிவிருத்திப் பிரிவு தோட்டங்களின் நலன்புரி வேலைகளுக்கு பொறுப்பாளியாகியது, ஆங்கிலேயர் காலத்தில் பல தோட்டங்களில் பிரசவ விடுதிகள் அமைக்கப்பட்டதன் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றின் நிதி உதவியோடு சில தோட்டங்களில் பிரசவ விடுதிகள் அமைக்கப்பட்டன.

தோட்டங்கள் கம்பனிகளிடம் மீள கையளிக்கப்பட்ட பின்னர் தோட்ட மருந்தகங்களும், பிரசவ விடுதிகளும் கைவிடப்பட்டு பாழடைந்து போயுள்ளன. பெருந்தோட்ட சுகாதார சேவை நலன்புரி அமைப்பிடம் சுகாதார, வைத்திய வசதிகளின் பொறுப்பு கம்பனிகள் சட்டத்தின் கீழ் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது தோட்ட வைத்திய அதிகாரிகளின் மூலமாக பெருந் தோட்ட அபிவிருத்தி நிதியத்தால் தோட்ட முகாமைத்துவத்தின் பொறுப்பில் இச்சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்று தோட்டங்கள் யாவும் 88 மருத்துவ சுகாதார அதிகாரிகள் பிரிவுகளாக எல்லை படுத்தப்பட்டு பொது சுகாதார பரிசோதகர்கள் மூலமாக வைத்திய சுகாதார அத்தியட்சகர்களின் மேற்பார்வையின் கீழ் தோட்ட சுகாதார வைத்திய சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான அமைப்பு ரீதியான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள போதிலும் தோட்ட மக்களுக்கு திருப்திகரமான சுகாதார வைத்திய சேவைகள் கிடைப்பதில்லை. ஒப்பீட்டளவில் தற்போது இச்சேவைகள் வீழ்ச்சி அடைந்துள்ளன. தோட்டங்களில் நன்றாக இயங்கிக்கொண்டிருந்த மருந்தகங்களும், பிரசவ விடுதிகளும் மூடப்பட்டு கைவிடப்பட்டுள்ளன. அதேவேளை தோட்ட வைத்திய அதிகாரிகளின் தொகை பெருமளவு குறைந்துள்ளன. பல தோட்டங்கள் ஒருவரால் சுழற்சி முறையில் பராமரிக்கப்படும் பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

குழம்பிபோயுள்ள நாடு நிலமையைப் போன்று தோட்ட சுகாதார, வைத்திய நிலைமைகள் சீர்கெட்டு, தொழிலாளர்கள் நிவாரண மார்க்கமின்றி அல்லற்படுகின்றனர். சிவில், தொழிற்சங்க அமைப்புகள் இதன்பால் கவனத்தை செலுத்தி நிவாரணம் தேட வேண்டும். தொழிலாளர்கள் உடனடியாக நிவாரணம் பெறக்கூடிய தோட்டங்களுக்கான பிரத்தியேக சுகாதார, வைத்திய நலன்களுக்கான அமைப்பினை ஏற்படுத்துவதே இதற்கான சரியான பொறிமுறையாகவும் இருக்கும்.

மலையக மக்கள் சுய முயற்சியால் உயர்த்திக்கொண்ட ஒருதுறை கல்வித்துறையாகும். கல்வி தனி மனிதனின் விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுய தேடலை ஊக்குவித்து, வாழ்க்கையின் மேனிலை நோக்கிய நகர்வுக்கு வழிகாட்டுகின்றது. அது கலாசார விழுமியங்களையும், நியதிகளையும் போதிப்பதன் மூலமாக குழந்தைகளை சமூக மாயமாக்குகின்றது என்று கூறப்படுகின்றது. அவர்களை சமூகத்தின் ஆக்கச் செயல்பாட்டாளர்களாக ஆக்குவதற்கான திறன்களைக் கொடுக்கின்றது. விசேடமாக ஒரு பாடசாலையில் முறைமைப் படுத்தப்பட்ட போதனையை நல்கும் செயல்முறையாக அது அமைகின்றது. இவ்வாறான கல்வி வாய்ப்புகளை பூரணமாக அனுபவிக்கக் கிட்டாதவர்களாக மலையக மக்கள் இருந்துள்ளது வரலாறு கூறும் உண்மை.

வேறு வார்த்தைகளில் கூறுவதெனில் மலையக மக்களின் கல்வி உரிமை மறுக்கப்பட்டு நீண்டகாலமாக இருந்துள்ளனர். கோப்பித் தோட்டங்களில் வேலைசெய்த 1823 68 கட்டத்தில் அவர்களது கல்விக்கான பயன்தரத்தக்க ஏற்பாடுகள் இருக்கவில்லை. மக்கள் வாழ்க்கையின் இருண்ட யுகத்தினை இறுக அழுதிக்கொண்டிருந்த பெரிய கங்காணிமார் இவ்விடயத்தில் கருணை உள்ளோராக இருந்துள்ளனர். லயக் காம்பராக்களில் சிறார்களுக்கு எழுத, வாசிக்க உதவி செய்துள்ளனர். லயக் காம்பராக்களே மலையகத்தின் அரும்புநிலை முறைசாரா போதனா மையம். கிறிஸ்தவ மத பரப்புரைக்காக வந்த போதகர்கள் அடுத்த கட்ட நகர்வினை மேற்கொண்டனர்.

கிறிஸ்தவ மிஷனரிகளின் வற்புறுத்தலால் 1869 இல் வெளியிடப்பட்ட விசேட அறிக்கை தோட்ட உரிமையாளர்கள் பாடசாலைகளை அமைப்பதற்கு ஊக்கப்படுத்தியதோடு, நிதி உதவியும் செய்யப்பட்டன. இதனால் லயக் காம்பராக்களில் இயங்கி வந்த பாடசாலைகள் படிப்படியாக தனி கட்டடங்களில் இயங்கும் நிலை ஏற்பட்டது. தோட்ட உரிமையாளர்களே ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுத்தனர். ஆசிரியர்கள் மதியம்வரை ஆசிரியப் பணியாற்றி, பின்னர் தோட்ட அலுவலகங்களில் எழுதுவினைஞராக பணியாற்றினர். ஆரம்பத்தில் குடிபெயர்த்தோரில் ஓரளவு கல்வித் தகமை உடையோர் ஆசிரியர்களாக இருந்தனர். அவர்களுக்கு ஆசிரிய பயிற்சி இருக்கவில்லை. ஆண்டுக்கு ஒரு முறை கல்வி அதிகாரி வந்து பரிசோதனை செய்து வகுப்பேற்றம் செய்தனர்.

நாளடைவில் வடபுலத்து ஆசிரியர்கள் வந்து இப்பணியினை சிறப்பாக முன்னெடுத்துச் சென்றனர். அவர்களும் பயிற்சி பெறாதவர்களாவே இருந்து 1980 க்கு பின்னர் படிப்படியாக பயிற்சி பெற்றோராய் ஆகினர். இதனால் முறைசார் கல்வி முறை விரிவடைந்தது. இதற்கு வடபுல ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு காரணமாக இருந்தது. தோட்டங்களில் பாடசாலைகள் அமைக்கப்பட்டதன் பின்னர் லயங்களில் இரவுப் பாடசாலைகள் தொடர்ந்து இயங்கின. இதன் தொடர்ச்சி 1970 வரை தொடர்ந்தது. போதிய அளவு பாடசாலைகள் இல்லாததால் தனியார் பாடசாலைகள் உருவாகின.

'இவை கற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை தந்ததோடு, கல்வி அபிவிருத்திக்கும் உதவின. குறிப்பாக மஸ்கெலியா, சாமிமலை, ரசாத்தோட்டம், அக்கரப்பத்தன, லிந்துலை போன்ற பகுதிகளில் இவை பெரும் பங்காற்றியுள்ளன.

பௌத்த மடாலயம்சார் போதனா முறையாக மாற்றப்பட மிஷனரிகளே முன்னோடிகளாக இருந்துள்ளதோடு, தோட்டப் பகுதிகளுக்கும் அதனை விரிவாக்கினர். இதன் சாதக அம்சங்கள் பேரினவாத கண்ணோட்டத்தோடு பார்க்கப்பட்ட அளவுகோல் மலையகத்துக்கு பொருந்தாது. தேசாபிமானி வேடமிட்ட பல சிங்கள அரசியல்வாதிகளின் நாமாவளி பெயர்களை கொண்டு இதனை விளங்கிக்கொள்ளலாம். தமிழர் பகுதிகளில் கல்வி விரிவாக்கத்திற்கு வழிஅமைத்தது மிஷனரிகளே. தோட்டங்களிலும், அவற்றை அண்டிய நகரங்களிலும் பாடசாலைகளை அமைத்து கல்வி விரிவாக்கத்தினை ஏற்படுத்தியது அவையேயாகும்.

தோட்டப் பகுதி கல்வி நிலை பற்றி ஆய்வு செய்த ஏஞ்செலா லிட்டில் அதன் வளர்ச்சிப் படி நிலையினை, 1. குடியேற்ற ஆட்சி காலத்தில் 1830 1920 கட்டங்களில் ஏற்பட்ட வளர்ச்சி. 2. குடியேற்ற ஆட்சி அரசாங்கத்தால் 1920 48 கட்டங்களில் ஏற்பட்ட சட்டபூர்வமான வளர்ச்சி. 3. குடியேற்ற ஆட்சிக்கு பிந்திய அரசாங்க தலையீட்டுடனான 1948 77 கட்ட வளர்ச்சி. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே இங்கும் அவர்கள் அக்கறை காட்டத்தொடங்கினர். 1903 இல் இங்கிலாந்து பாராளுமற்றதில் நடத்தப்பட்ட விவாதத்தின் விளைவாக தோட்ட உரிமையாளர்கள் கல்வித் பொறுப்பினை ஏற்பதற்கான அழுத்தம் கொடுக்கப்பட்டது. மதம் சார்ந்த கல்வி அதிலிருந்து விடுபட்ட காலமும் இதுவே.

1945 இல் இலவசக் கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அடிமட்ட மக்களின் குழந்தைகள் கல்வி பெறக்கூடிய வாயில் திறக்கப்பட்டது. சுதந்திர இலங்கையின் தேச பிதா குடி உரிமையையும், வாக்குரிமையும் பறித்து மலையக மக்களை முடமாகியது போன்றே இலவசக் கல்வியின் தந்தையும் மலையகக் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியை நிராகரித்து இனவாதியாக நடந்து கொண்டார்.

அப்போது இயற்றப்பட்ட சட்டம் தோட்டங்களில் பள்ளிகளை அமைப்பது அரசாங்கத்தின் கடமை என்று விதித்த போதிலும் புதிதாக பாடசாலைகள் உருவாக்கப்படவில்லை. மாறாக 1948 51 காலத்தில் பெருந்தொகையான பாடசாலைகள் மூடப்பட்டன அல்லது இணைக்கப்பட்டன. 1948 க்கும் 1955 க்கும் இடையில் 24 பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. மொழி ரீதியான பாகுபாட்டால் இதில் அசமந்த போக்கும், பின்னடைவும் தொடர்ந்து கொண்டே இருந்தது. 1972 இல் தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டதன் பின்னர் தோட்டத்துறை மந்தமாகி,பொருளாதாரம் வீழ்ச்சி உற்றதால் கல்வி மோசமாக பாதிக்கப்பட்டதோடு, தோட்ட முகாமையாளர்கள் இதில் அக்கறை அற்றோராய் மாறினர்.

1980 களில் ஏற்பட்ட உள்நாட்டு, பிராந்திய அரசியல் போக்குகளின் புதிய பரிமாணம் மலையகத்தாருக்கு குடி உரிமையும், வாக்குரிமையும் கொடுக்கப்பட நிர்ப்பந்தித்தது. இதன் விளைவாக அரசியல் அதிர்வுகளை தீர்மானிக்கக்கூடிய வாக்கு பலமும், பேரம் பேசும் சக்தியும் மலையகத்தாருக்குக் கிடைத்தது. துரதிஷ்டமாக சோரம்போன அரசியல் தரகு செயற்பாட்டால் இதன் மூலமாக பெற்றிக்கக்கூடிய பலாபலன்களை பூரணமாக பெறமுடியாமல் போனது. 2008 இல் பிரித்தானிய தொழிற்கட்சியினை சேர்ந்த குழு ஒன்று மலையக மக்களின் நிலைமைகளை கண்டறிவதற்காக நுவரெலியாவில் நடத்திய கலந்துரையாடல் ஒன்றின் போது கட்டுரையாளர் மலையக மக்களுக்கு விளக்கிக்கொண்டிருந்தபோது குறுக்கிட்ட ஒருவர் முகத்தில் அடித்தாற்போல 1980 கு பின்னர் அமைக்கப்பட்ட எல்லா மந்திரி சபைகளிலும் உங்கள் சமூகத்தைச் சார்ந்த ஒருவரோ, இருவரோ அமைச்சர்களாக இடம்பெற்று வந்துள்ள நிலையில் நீங்கள் எப்படி இவ்வாறு கூறமுடியும் என்று கேட்டபோது இதன் தாற்பரியத்தினை புரிந்துகொள்ள முடிந்ததோடு, வாய்ப்புகளை தவறவிட்ட உண்மையினையும் உணர முடிந்தது. 1990 களில் சுவீடன் நாட்டின் நிதி உதவியோடு மேற்கொள்ளப்பட்ட சீடா நிறுவன செயற்திட்டத்திலும் இக்கறை படிந்த மறைக்கரம் பூரண பலனை பெற்றுக்கொள்வதில் சாபமாக படிந்தது. இடமாற்றத்திற்கு உள்ளான பெண் அதிபர் ஒருவர் வழக்கு தாக்கல் செய்யப்போவதாகக் கூறிவிட்டு தமிழ் நாட்டிற்கு போய்விட, அதற்குக் காரணமானவர் அங்கு போய் பாவ மன்னிப்பு கோரி அவரது கணவருக்கு சீடா திட்ட அதிகாரியாக நியமனம் தருவதாக வாக்களித்து நிறைவேற்றிய தகவல் உண்டு. சாமி வரங்கொடுத்தும் பூசாரி தட்டிப் பறித்த கதையாக, கிடைக்கப்பட்ட வாய்ப்புகள் முடமாக்கப்பட்டமை கல்வி வளர்ச்சியில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது.



1970 க்கு பின்னர் மலையக இளைஞர்களுக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்கப்பட்டு, அவர்களின் தொகை படிப்படியாக அதிகரிக்கத்தொடங்கியது. இடமாற்றப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி ஆகிவற்றின் மூலமாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் மூலம் கல்வியில் தொகை மாற்றமும், பண்பு மாற்றமாகும் ஏற்பட தொடங்கியது. இதேவேளை பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்களின் தொகை அதிகரித்து, பின்னர் பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்றோரின் சேவையாலும் கல்வித் தரம் உயரலாயிற்று. இன்று பெரும்பாலான ஆசிரியர்கள் திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவனம்,வெளிவாரி கற்கை ஆகிவற்றின் மூலம் தமது கல்வித்தரத்தினை உயர்திக் கொள்கின்றனர். இதன் பெறுபேறாக 5 ஆம் தர புலமை பரிசில்பரீட்சை, க. பொ. சா/உ தர பரீட்சைகளில் சித்தி பெறுவோரின் தொகை அதிகரித்து வருகின்றது. சமூக உணர்வாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகிவற்றின் உதவிகளும் கல்வி வளர்ச்சிக்கு உதவி வருகின்றன. உயர்கல்வி மாணவர்களுக்கு நிதி உதவி நல்கும் அமைப்புகளும் உதவிகள் புரிகின்றன. சில தொண்டு நிறுவனங்களாலும், பிரிடோ போன்ற அமைப்புகளாலும் முன் கல்வி போதனையும் வளற்சி பெற்று வருகின்றது. 1980 களில் அறிமுகப் படுத்தப்பட்ட இலவச பாடநூல் வினியோகம்,1993 இல் தொடக்கப்பட்ட இலவச சீருடை விநியோகம் ஆகியவற்றால் மலையக பெற்றோரின் சுமை சிறிது குறைந்தது.



இலங்கையில் இன்று கல்வி வணிகமயமாகியுள்ளது. மாணவர்கள் மகிழ்ச்சியினை தொலைத்த கூட்டத்தினராக மாற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சாப்பிட, விளையாட, ஓய்வு பெற நேரம் இன்றி படிப்புப் பளு கூடியுள்ளது. ஆசிரியர்கள் சிறுவோர் உளவியலை ஒதுக்கி வைத்துள்ளனர். தலைமுறை மாற்றத்தோடு மூளை வளர்ச்சியும் உயர்கின்றது. இந்த உண்மையினை கல்விப் புலத்தோர் ஏற்காதோராக இருப்பதாக எண்ணத்தோன்றுகிறது. வகுப்பறை போதனைக்கு மேலதிகமாக மாணவர்களை வருத்த வேண்டுமா என்ற தேடல் இன்று தேவைப்படுகின்றது. மன உளைச்சலும், விரக்தியும் இளம் சமுதாயத்தினரை கொள்ளை அடிக்க வேண்டுமா என்று ஆழ்ந்து சிந்திப்போமா?

பீ. மரியதாஸ்...




உள்ளங் கையில்
உப்பு வெச்சாலும்
உசுரு உள்ளவரை
உனக்கு நன்றியிருக்கணும்

உண்ண உணவுமில்லை
உடுத்த உடையுமில்லை
உருகிய நெஞ்சே
உனக்கு ஆறுதலாயிருந்தேன்

அறிவு கெட்டவளே
அலைய விட்டவளே..
ஆனந்தமாய் நீயிருக்க
அனாதையாய் நானிருக்கேன்

மாரி மழை
மறக்காமல் வந்திருச்சி
வாய்க்கால்
வரம்பும் உடைந்திருச்சி

நதி ஓரமாய்
நான் நின்றிருக்கேன்
வெள்ளமாய் நீ வந்து
என்னை இழுத்து செல்லு

# குடும்பத்தின் சீத்துவம்

– மபாஸ்

எப்படி இருந்திருக்க வேண்டுமென்பது
ஏதாவதொரு கட்டத்தில்
எண்ணத் தோன்றிவிடும்.
இனி இது போன்ற நாட்கள்
வரப்போவதில்லை,
தூரமாக்கி சென்றது நேரமில்லை,
குழி தோண்டி புதைக்க வேண்டியே
கொள்கையின் எல்லை.

பணத்தின் படாடோபம்
இன்றியமையாதது என்பதிலிருந்து
சீராக்க முற்படாது.
மனித இனத்தின் விருத்தி
புனிதமாகாது திருத்தி
திருப்தியை கொழுத்தி

இப்படி கோர்க்கப்பட்ட
வார்த்தைக்கு வலி
வரைவிலக்கணமாகும்.

பகிரப்படாதது பரப்பப்படுவது
பல பரிணாமத்தில்
பலப்பரீட்சை செய்கிறது.
தலைமைத்துவத்தின் தொடக்கம்
முடிவாகும் அல்லது முரணாகும்
வழிகாட்டல் வழிகெடவும்,
வலுச்சேர்க்கவும் வசமாகும் வம்சம்.
கடைசியில் வாழ்வியலின் அழகியல்
எப்படியோ, எப்படியென்றாலும்
வாழ்ந்து விடுவதில்
வடிவமைக்கப்பட்டு விடுகிறது.








# யாருக்கென்ன லாபம்?

தேடித் தொலைந்த
வெறுமைகளைப்பற்றி,
உணர்ச்சியற்று திரும்பிய
அன்பினைப் பற்றி,
காய்ந்து வற்றிப்போன
காதல் சேதிகளைப்பற்றி,
உதறித்தள்ளிய
காலக்கொடுமைகளைப் பற்றி
பிடிமானத்தை அறுத்தெறிந்த
சக மனிதர்களைப்பற்றி,

முட்டி மோதி சிக்கித் தவித்த
உள்ளுணர்வுகள் பற்றி,
நிர்க்கதியற்று தவித்த நீங்கா
நினைவுகள் பற்றி,
திரும்பத் திரும்ப நினைத்து
மனம் வேதனைப்படுவதில்
யாருக்கென்ன லாபம்...

ஷிமாம் முஸ்தாக்.
கருங்கொடித்தீவு

# உறங்காத விழிகள்



உனைக் காணாத நாளெதுவும் அமாவாசைதான்!
என் நினைவெல்லாம் உன்னழகு பாசைதான்!

விழிகளிரண்டும் உன்னசைவைத் தேடியே இசைகின்றன!
அதனால் உறங்காமல் எந்நாளும் அசைகின்றன!

காதல் கொண்ட மனசு அழகுதான்!
அதற்காய் சாதல் கூடத் தூசுதான்!

வசைபாடும் உள்ளங்கள் புகழ் பாடுவதில்லை!
நல்லார் அன்பு கண்டு குதூகலிப்பதுமில்லை!

மனதில் கயமைகொள்வார் விழிகள் உறங்குவதில்லை!
அயலார் காதல் கண்டு மகிழ்வதுமில்லை!

ஜவ்ஹர் கிண்ணியா

# கவிஞன்

பொய்யை மெய்யாய்
சொல்லி வைப்பான் அதை
பொருத்தமாக
சொல்லிவைப்பான்
நதியைப் பெண்ணென்பான்
நாணலும் அவளென்பான்
நிலாவையும் பெண்ணென்பான்
நீல வானம் கூட
அருகில் என்பான்

கடல் அவன்
கைக்குள் என்பான்
காற்று அவள் மூச்சென்பான்
கண்ணை கயல் மீன் என்பான்

கூடவே
இடுப்பையும் இஞ்சி என்பான்
நீ இல்லாமல்
நான் இல்லையென்பான்

நிமிடத்தை வருடமென்பான்
வருடத்தை நிமிடமென்பான்
கூந்தலைக் கார்மேகமென்பான்
கூடவே மேகத்தை
மெத்தையாக மாற்றிடுவான்
இத்தனைக்கும் மேலாக
கற்பனை செய்திடுவான்
கவிஞன்.

குருமண்வெளி ரவி

# பூமியின் புன்னகை

அழகிய வானம்
அருமையான நேரம்
கருமையாகிடும் முகில்...
துளித்துளியாய் விழும்
மழைத்துளிகள் பூமியில்...!

கதிரவன் ஒளியில்
தூறிடும் மழையில்
கருவிழிகளில் வானவில்
கவர்ச்சியாய்த் தெரியும்...!
கடற்கரை ஓரம்
கடலலை சத்தம்

தென்றல் மாருதம்
வீசிடும் நேரம்
அப்பிரதேசம்
அழகோவியமாய்த் தெரியும்...!

இயற்கையின் வண்ணம்
மனதினில் புது எண்ணம்
கனவில் தொலை தூரம்
பூமியின் புன்னகையில்...!!

செல்வி. தமிழினி தமிழேந்திரன்
கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி.

# நானெனும் ஓர்மை!

நாச்சியாதீவு பர்வீன்.

நானெனும் ஓர்மை
நாயனுக்கே உண்மை
நானிலம் படைத்தாளும்
அந்த ஒருவனின் தன்மை!

வீணாக நீயும்
வீறாப்பு கொள்ளாதே
விதித்தவன் அறிவான்
நீ விதைத்ததை அறுப்பாய்!

தேனென வாழ்வு
தேடிக் கிடைக்காது
நாடி அவன் நல்கணும்
வாடிய பயிர் செழிக்க!

கோடியில் புரண்டு
கோமானாய் வாழ்ந்தவன்
நொடிப் பொழுதினில்
தெருக் கோடியில் கிடப்பான்
அவன் நாடின்.

மூடிய இருளில்
முற்றும் மறந்து நீ
ஆடிய ஆட்டம்
அவன் அறிவான்!

நீ தேடிய பொருளும்
உன் தேவையின் அளவும்
நீ தேக்கி வைத்துள்ள
பாக்கியின் பலனும்
நோக்கும் அவனுக்கு
நொடியில் தெரிந்துவிடும்!

வாக்கு மாறினாய்
வரம்பு மீறினாய்
சாக்குபோக்குச் சொல்லி
சகலதும் செய்தாய்

நாயன் அவன்
பிடியிலிருந்து தப்பலாம்
பீடிகை போட்டு
பின்கதவால் ஓடலாம்
வடிவாய் வாழ்க்கையை
வளைத்து மாற்றலாம்
என்று நினைத்தா!

சாக்கடை செயல்கள்
சத்தமின்றி செய்தாய்
பூக்கடை நீயென
பூரிப்பு அடைந்தாய்!

பிரச்சினை தீர்க்கமட்டும்
பிரார்த்தனை செய்தாய்
பிந்திய நேரங்களை
அந்திமம் வரைக்கும்
மந்தியாய் மாறியே
குந்தகம் செய்தாய்!

மரணத்தின் பிடியில்
மாட்டுகின்ற நொடியில்
அஸ்தமிக்கும் விடியல்
அப்போது தெளியும்
போதையில் கழித்த
பொறுப்பற்ற நாட்கள்



# காரிருள் கவியும்

திக்குவல்லை கமால்

கல்விச் செல்வம் பெரும் செல்வம்
கவலை இல்லை கைபிடித்தால்
கல்விச் செல்வம் இல்லாரை
கவலைப் பேய்கள் கைபிடிக்கும்

கற்றோர்க் கெந்த இடத்தினிலும்
கவனிப்புண்டு ; கல்லாதார்
சொற்கள்கூட அவை ஏறாச்
செல்லாக் காசாய்ப் போய்விடுமே

இலங்கை நாட்டில் எமக்கெல்லாம்
இலவசக் கல்வி இருந்தென்ன
அலட்சியம் செய்யும் பேர்வழிகள்
அதிகம்; ஏனோ தெரியவில்லை.

நாளை உலகில் விஞ்ஞான
நுட்பம் செறிந்து நிரம்பிவிடும்
கோழையாக நாமிருந்தால்
காரிருள் வாழ்வில் கவிந்துவிடும்



# கார்குழலி

இறுவில் வாசீசன்

நீலவண்ண பட்டுடுத்தி
நீலவண்ண குடைபிடித்து
நீண்டு செல்லும் சாலையோரம்
நினைவுகளை தந்துவிட்டு
நீங்கிப்போகும் மங்கையவள்

கார்முகில் கண்ட கானமயிலா
கார்கால வானின் தேவதையா
காரிருளில் வந்த வான் நிலவா
கார்மேகம் தந்த வானவில்லா
கார்கால வாடைக்காற்றா

கார்குழலால் என்மனதில் வந்தாள்
காரிருளை நீக்கி ஒளி தந்தாள்
கார்கால தென்றல் என்மன வானில்
கார்மேகம் கண்ட கானமயிலாய்
கார்குழலி கண்ட நான் ஆனேன்

# மௌனம்



காரைநகர்
வ.வடிவழகையன்

சத்தமேதுமில்லாத,
சப்த நாடியும்
அடங்கி ஒடுங்கியதுதான்
மௌனம்!

இல்லையில்லை
மொழி
ஊமையாகிப் போனதுதான்
மௌனம்!

இல்லையில்லை
பாஷைகளின்
பாசாங்கு நித்திரைதான்
மௌனம்!

யார் சொன்னது
இவைகள்தாம்
மௌனம் என்று?

மௌனத்திற்குள்
ஒரு
அழுகை ஒளிந்திருக்கலாம்...

மௌனம்
ஒரு விசும்பலை
ஒளித்து வைத்திருக்கலாம்...

ஒரு
விஷச் சிரிப்பை...

ஒரு
விசமப் புன்னகையை...

பாரியபெரும்
துரோகமொன்றை....

ஆயிரம்
அணுகுண்டு வெடிப்பின்
அதிர்வலைகளை...

ஒரு
இலட்சியம் நோக்கிய
ஓர்மத்தின்
ஆர்ப்பரிப்பை...

மனசாட்சி சமுத்திரத்தின்
பௌர்ணமி நாள்
கொந்தளிப்பு அலைகளை...

ஒரு
கோடைச் சுடுவெயிலின்
தகிக்கும் மணற்பரப்பை...

ஒரு
அடங்காத
ஆசையொன்றின்
ஏக்கத் தவிப்பை...

ஒரு
பிரளயத்தின்
பிரவாகிப்பை...

இங்கே
சொல்லவியலாத
இன்னும் ஏதோவொன்றை...

இப்படி
இவற்றையெல்லாம்
உள்ளடக்கி வைத்திருப்பதை
மௌனமென்று
எவ்வாறு அழைப்பது?

மௌனம்
சம்மதத்தின் அறிகுறியென்று
சதாகாலமும்
நம்பிக்கொண்டிருக்கிறவர்களே!

நீங்கள்
புரிந்துகொள்ள ஞாயமில்லை

இருந்தாலும்
இலகுவாக சொல்வதென்றால்...

மௌனம்!
ஒரு
கடவுளைப்போல.

# காதல் கல்வெட்டு

இதய சிம்மாசனத்தில் இருந்தவன்
இரக்கமற்று இருப்பதேனோ
இவள் குரல்வளை நெரிக்கப்படுகிறதே
இருளும் மனமும் பாதாளமாக

காலமெலாம் காதலாய் பொழிய
கவலை மறந்து சிறகடித்ததும்
கண்மூடி திறப்பதற்குள் கானலானது
கண்ணீரை மெத்தையிட்டபடியே!

நெடுந்தூரக் கனவு பாதியில்
நிலையாமல் போனது காலவெள்ளத்தில்
முரண்களின் அரண்களில் மேடையிட்டு

முன்னும் பின்னுமாக நியாயத்தராசு
கடிவாளமிட்டது குடும்ப மரியாதை
கண்ணீர்விட்டது காதல் இதயம்
வேரறுந்து போன மரமாய் நானும்
வேதனையில் மீட்டும் ஆலாபனை

உதயமாகும் பொழுதில் உதயமேது
உயிருடன் வடித்துவிட்டேன் புதுமெட்டு
பாதைகள் மாறிய பயணம் பலதில்
பாரறியா இந்த காதல் கல்வெட்டு!

கவிச்சுடர் சிவரமணி
திருகோணமலை



# பூச்சி புழுக்கள் அரித்த இலைகள்

என் வீட்டுப் பூந்தோட்டம்
எழில் இழந்து வருவதாக
என் மனைவி புலம்புகிறாள்...!

ஓ...
பூச்சி புழுக்களின் பட்டாளம்
படை எடுக்கும் இடமாக...
அவை, ஆர்ப்பாட்டம் செய்யும்
அமர்க்களமாக...!

பாடுபட்டு வளர்த்த பூஞ்செடிகள்
கேடுகெட்ட பூச்சி புழுக்களால்
"சித்திர வதை" செய்யப்பட்டு
வருவதாக – அவள்
சிணுங்குகிறாள்...
கண் கலங்குகிறாள்...!!

"எழுத்துப் புரட்சி" செய்யும்
உங்கள் அழகிய முற்றத்தில்
இந்தப் படைகளுக்கு எதிராகப்
புரட்சி செய்ய இயலாதோ...?"
என்கிறாள்...!
"புன்னகை சிந்திய பூந்தோட்டம்
புலம்புதே – இன்று தினம் தினம்"
என ஏங்குகிறாள்...!
"புறப்படுங்கள்...
பூச்சிநாசினி வாங்கிவந்து
பூண்டோடு அழியுங்கள்" என்று
போர்க்கொடி ஏந்துகிறாள்...!!

இலையுதிர் காலத்தில்
இலைகள் உதிரும்

இலை துளிர் காலத்தில்
இலைகள் துளிர்க்கும்...!!

பூச்சி புழுக்கள்
அரிக்கும் காலத்தில்
அவைகள் அரித்தே தீரும்...
"எதுவும் கடந்தே போகும்...!!"

எனக்குள் நானே
சொல்லிக் கொள்கிறேன்...
வாழ்வியல் தத்துவங்களாக...
உலகியல் உண்மைகளாக...!!
இப்போது அந்தப்
பூச்சி புழுக்கள் அரித்த
இலைகளைக் "கவி உள்ளம்"
கொண்டு நுணுகிப் பார்க்கிறேன்...!

அரிதட்டுகள் போலவே
அவை தோன்றினாலும்...
அழகாகவே மிகவும் தெரிகின்றனவே...
என் பார்வையிலே...!
இரசிக்கிறேன்...!

எத்தனை எத்தனையோ எண்ணில்லா
வண்ணச் சித்திரங்களாய்
"இந்த இலைகள்" என்
கண்களில் படுகின்றனவே...
நெஞ்சம் குளிர்கிறேன்...!

உலகப் பிரசித்தி பெற்ற
அத்தனை ஓவியர்களும்
சிற்பிகளும் தோற்றே விடுவார்களே
– இத்தனை
சித்திரிப்புகளுக்கும்
செதுக்குதல்களுக்கும் முன்னாலே...!
என் இல்லத்தரசியோ
இதனை அறிவாளோ...?
"சித்திர வதை" அல்ல
சிந்தையைத் தொடும்
சித்திரங்களே
இவையென்பதைப் புரிவாளோ...?

என்ன செய்வேன் நான்...?
பூச்சி புழுக்களுக்கு
எதிராகவும் போராட்டம்
நடத்த முடியுமோ...?

அவளைச் சமாளித்தே
ஆகவேண்டுமே...!
நடக்கிறேன் நகரத்தை நோக்கி...
பூச்சிநாசினி
வாங்குவதற்காக அல்லவே...!
புதிய பூக்கன்றுகள்
வாங்குவதற்காகவே...!

என் வீட்டு
உரப் பைகளிலும்
பழைய கோப்புகளிலும்
எவரது கவனிப்புமின்றியே...
எலிகளாலும் பூச்சிகளாலும்
அரிக்கப்பட்ட நிலையிலே...

தூசுகள் படிந்து கிடந்து வரும்
"என் கவிதைப் பூக்கள்"
பூச்சி புழுக்கள் அரித்த
இலைகளாகவே என்
மனத்திரையிலே
நிழலாடுகின்றனவே...
அழியாத கோலங்களாக...!!

விவேகவெளி தமிழேந்திரன்
(சரவணமுத்து நவேந்திரன்)

# கூட்டாண்மை வங்கியியல் அனுபவத்தை மேம்படுத்தும் அமானா வங்கி

கூட்டாண்மை வங்கியியல் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் அமானா வங்கி அண்மையில் தனது கூட்டாண்மை வங்கியியல் அலுவலகத்தை இடமாற்றம் செய்திருந்தது.

புதிய வளாகத்தின் திறப்பு நிகழ்வில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பராலி, முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் தில்ஷான் ஹெட்டியாரச்சி, திஷான் சுபசிங்க மற்றும் மொஹமட் ஆடமலி, வியாபார வங்கியியல் பிரிவின் உப தலைவர் இர்ஷாத் இக்பால், உதவி உப தலைவர் மற்றும் கூட்டாண்மை வங்கிப் பிரிவின் தலைமை அதிகாரி ரஜேந்திர ஜயசிங்க மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கொழும்பு 3, காலி வீதியில் அமைந்துள்ள, அமானா வங்கியின் பிரதான கிளையின் 5ஆம் மற்றும் 6ஆம் மாடிகளில் அமைந்துள்ள புதிய கூட்டாண்மை அலுவலகத்தினூடாக ஒப்பற்ற சௌகரியம் மற்றும் செயற்பாடுகள் போன்றன பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

பிரத்தியேகமான வங்கியியல் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில், புதிய வளாகத்தில் மாநாட்டு அறைகள் மற்றும் பிரத்தியேக சந்திப்புப் பகுதிகள்



போன்றன அமைந்துள்ளதுடன், இரகசியத்தன்மை வாய்ந்த கலந்துரையாடல்களை முன்னெடுக்க உதவும் வகையில் அமைந்துள்ளன.

## பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பிரத்தியேக மையத்தில் Uber சவாரி

கொழும்பில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) சவாரியாளர்கள் வாகனங்களில் ஏறுவதற்கான பிரத்தியேகமான இடத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக Uber இன்று அறிவித்துள்ளது.




இலங்கைக்கு வருகை தரும் பயணிகள் இப்போது இந்த விசேடமாக நியமிக்கப்பட்ட இடப் பகுதியில் தமது Uber சவாரியை எளிதாகக் கண்டுபிடித்து, பயணம் தொடர்பான மன அழுத்தம் மற்றும் யூகங்களை இனிமேலும் முகங்கொடுக்க தேவையற்ற ஒரு விடயமாக மாற்றிக்கொள்ள முடியும்.

இது இலங்கையில் தொழில்துறையில் இந்த வகையில் முதன்முதலாக அறிமுகமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்ள பயணிகள் வருகை முனையத்தில் அமைந்துள்ள Uber வாகனங்களில் ஏறிக் கொள்ளும் இடத்தில், Uber இன் பயணிகள் வரவேற்பு பற்றிய உரிய தகவல் விபரங்களுக்கு பயணிகள் இப்போது சேவை மையங்களை அணுகலாம். நியமிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் பண வடிவமில்லா பரிவர்த்தனைகள் மூலம் ஓட்டுநர்கள் பயனடைவார்கள்.

ஓட்டுநர் கூட்டாளர்களுக்கான மேம்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் Uber வாகனங்களில் ஏறிக் கொள்வதற்கான பயணிகளுக்கான தெளிவான வழி கண்டறியும் அடையாளங்களுடன், இந்த விமான நிலைய கூட்டாண்மை விமான நிலைய பயணத்திற்கான தரத்தை மேம்படுத்தும் மற்றும் சவாரியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு பயனளிக்கும்.

# 'மிகவும் கவர்ச்சிமிக்க' கம்பனிகளில் ஒன்றாக கொமர்ஷல் வங்கி

இலங்கையின் சர்வதேச வர்த்தக சபையால் (ICCSL) அமெரிக்காவின் சான்றளிக்கப்பட்ட பொது கணக்காளர் நிலையம் (AICPA) மற்றும் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA) என்பனவற்றின் ஒத்துழைப்புடன் நாட்டின்' 'மிகவும் கவர்ச்சிமிக்க பத்து கம்பனிகளில்' ஒன்றாக கொமர்ஷல் வங்கி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.




இலங்கையின் தனிச்சிறப்பு மிக்க தனியார் வங்கி இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளமை இது ஐந்தாவது தடவையாகும். தகுதி தரம் என்பனவற்றுக்கான செயற்பாட்டு குறிகாட்டிகளின் அடிப்படையில் தீவிரமான மதிப்பீட்டின் பின் இத்தெரிவு இடம்பெற்றுள்ளது.

இந்தக் குறிப்பிடத்தக்க கௌரவம் பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க "ஒரு கூட்டாண்மை நிறுவனத்துக்கு கவர்ச்சியைத் திரட்டும் முக்கிய காரணிகளில் ஒன்றாக நிலைத்தன்மை செயற்பாடுகள் இருக்கும் அதேவேளை சிறந்த கூட்டாண்மை பிரஜை, சுற்றாடல் மற்றும் சமூக ஆளுகை, தார்மிக இணக்கப்பாடுகள், வாடிக்கையாளர் பதில்கூறல் இயல்புகள் என்பனவும் சம அளவில் முக்கியத்துவம் பெறுவதாகவே நாம் நம்புகின்றோம். கொமர்ஷல் வங்கியின் முக்கிய அவதானப் புள்ளிகளாக இவை காணப்படுகின்றன.

இதனால் தான் நாம் மிகவும் கவர்ச்சிகரமான கம்பனிகளின் பட்டியலில் மீண்டும் அங்கீகாரம் மிக்க இடத்தைப் பெற்றுள்ளோம். இது எம்மை மேலும் உற்சாகப்படுத்துகின்றது" என்று கூறினார்.

# இலங்கையின் மிகவும் பாராட்டப்பட்ட நிறுவனங்கள்; NDB வங்கிக்கு அங்கீகாரம்

சிறந்த நிதிச் செயல்திறனுடன் சிறந்த நிர்வாகத்தை நிலைநிறுத்தியதற்காக இலங்கையின் மிகவும் போற்றப்படும் நிறுவனங்களின் 2022 விருதுகளில் NDB வங்கி இவ்வருடமும் கவுரவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக NDB வங்கிக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வை பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம்(CIMA) இலங்கை, ஒழுங்கு செய்து இருந்தது. அமெரிக்க சான்றளிக்கப்பட்ட பொது கணக்காளர்கள் நிறுவனம் (AICPA), இலங்கையின் சர்வதேச வர்த்தக சம்மேளனம் (ICCSL) மற்றும் Daily FT ஆகியவை வணிக செயல்திறன் மற்றும் தனித்துவமான செயல்திறன் அளவுகோல்களின் பல்வேறு அம்சங்களில் சிறந்து விளங்கிய மற்றும் குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய நிறுவனங்களை அங்கீகரிக்கின்றன. மிகவும் போற்றப்படும் நிறுவனங்களின் இந்த தரவரிசை, சக நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுள்ள தொழில்முனைவோருக்கும் ஒரு உத்வேகமாக அமைகின்றது.இந்த அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க நிதி செயல்திறன் மற்றும் நீடித்த வளர்ச்சியை அடைவதன் மூலம் தொடர்ந்து தங்கள் திறமையை வெளிப்படுத்தியுள்ளன, மேலும் பாராட்டத்தக்க வணிக செயல்திறனை வழங்குகின்றன.




இந்த நிகழ்வில் கருத்து தெரிவித்த NDB பிரதம நிறைவேற்று அதிகாரி திமந்த செனவிரத்ன, "எங்கள் பங்குதாரர்களுக்கு மதிப்பை வழங்குவதில் நிலையான மற்றும் வலுவான நிதிச் செயல்திறனை உறுதிசெய்யும் அதே வேளையில், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்ற நம்பிக்கையை NDB உறுதியாக நிலைநிறுத்துகிறது. தரமான மற்றும் அளவு செயல்பாட்டு அம்சங்களுக்கு இடையே ஒரு இணக்கமான சமநிலை அவசியம்."

## க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கு Saegis Campus இல் புலமைப்பரிசில்

இலங்கையில் உயர் கல்விச் சேவைகளை வழங்கும் முன்னணி கல்வியகமான Saegis Campus, தனது பத்து வருட பூர்த்தியை இவ்வாண்டு கொண்டாடும் நிலையில், க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு 75% வரை புலமைப்பரிசில்களை வழங்க முன்வந்துள்ளது.



ஆகக்குறைந்தது 3 பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இந்த கற்கைகளை தொடர்வதற்கு இணைய முடியும். அவர்கள் பெற்றுக் கொண்ட சித்திகளின் அடிப்படையில் புலமைப்பரிசில் வழங்கப்படும். மூன்று பாடங்களிலும் 'A' சித்தியைப் பெற்றவர்களுக்கு 75% புலமைப்பரிசிலும், 'B' சித்தி பெற்றவர்களுக்கு 45%, 'C' மற்றும் 'S' சித்தி பெற்றவர்களுக்கு முறையே 30% மற்றும் 15% புலமைப்பரிசில் வழங்கப்படும்.

கற்கைநெறியின் முதல் வருடத்துக்கு இந்தப் புலமைப்பரிசில் பொருத்தமானதாக அமைந்திருக்கும் என்பதுடன், மாணவரின் கல்விசார் தேர்ச்சியின் அடிப்படையில் அடுத்து வரும் ஆண்டுகளுக்கும் நீடிக்கப்படும்.

தெரிவு செய்யக்கூடிய கற்கைளில் Bachelor of Business Management (Hons) சுற்றுலாத்துறையில் அல்லது விருந்தோம்பல் துறையில் விசேடத்துவம் பெறுவது, சந்தைப்படுத்தல், மனித வளங்கள் முகாமைத்துவம் அல்லது கணக்கீடு மற்றும் நிதியியல், Bachelor of Business Administration (BBA), முதல் Bachelor of Science Honours (BSc (Hons)) உடன் கணனி விஞ்ஞானம், மென்பொருள் பொறியியல் மற்றும் IT ஆகியவற்றில் விசேடத்துவம், மற்றும் Bachelor of Information Technology (BIT) போன்றன அடங்கியுள்ளன.

## 120 மில்லியனை பதிவு செய்த நவலோக்க மருத்துவமனைக் குழுமம்

நவலோக்க மருத்துவமனை குழுமம் ஜூன் 30, 2023 இல் முடிவடைந்த முதல் காலாண்டில் 120 மில்லியன் ரூபாய் வரிக்கு முந்தைய இலாபத்தைப் பதிவு செய்துள்ளது.



அண்மையில் வெளியிடப்பட்ட இடைக்கால நிதி அறிக்கை இந்த நிதி செயல்திறன்களை அறிவித்தது மற்றும் நிறுவனத்தின் வரிக்கு முந்தைய இலாபம் முந்தைய நிதியாண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 158% அதிகரித்துள்ளது.

நவலோக்க மருத்துவமனை குழுமத்தின் சமீபத்திய கட்டமைப்பு மாற்றங்கள், மேம்படுத்தப்பட்ட மருத்துவ சேவைகள் மற்றும் சிறந்த நோயாளர் பராமரிப்பு சேவைகள் ஆகியவை இந்த நிதிச் செயல்திறனுக்குக் காரணம் என நிதி அறிக்கை கூறுகிறது.

நவலோக குழுமத்தின் புரள்வு 2.6 பில்லியன் ரூபாவாக அமைந்துள்ளதுடன், மேலும் இது முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2.1 பில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 21% வளர்ச்சியைக் காட்டுகிறது.

இதற்கு சமாந்தரமாக நவலோக்க குழுமத்தின் செயற்பாட்டு இலாபம் 580 மில்லியன் ரூபாவாகும், இது கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட 200 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் 185% வளர்ச்சியை எட்டியுள்ளது.

நவலோக்க மருத்துவமனை நிறுவனத்தின் பங்கு ஒன்றின் வருமானமும் சாதகமாக வளர்ச்சியடைந்தது மற்றும் ஜூன் 30, 2023 இல் முடிவடைந்த முதல் காலாண்டில் 0.085 இல் காணப்பட்டது.

# சேவைகளை மேம்படுத்தும் எஸ்டிபி வங்கி

சிறிய மற்றும் நடுத்தர தொழில் வாண்மையாளர்களுக்கும் அனைத்து முன்னேற்றகரமான இலங்கையர்களுக்கும் தனிப்பட்ட வங்கியியல் தீர்வுகளை வழங்குவதனால் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் தெளிவான தூரநோக்குடைய தனித்துவமான வங்கியான, எஸ்டிபி வங்கியானது, அதனது ஹிங்குரண கிளையை இடம்மாற்றியுள்ளது. அதனுடைய முந்தைய அமைவிடத்திலான 12 வருடத்திற்கும் மேலான துரித சேவையின் பின்னர், ஹிங்குரணஎஸ்டிபி வங்கியானது தன்னை JSQ 3/B, கைத்தொழில் வலயம், ஹிங்குரண எனும் இடத்தில் அமைத்துக்கொண்டுள்ளது.

இடமாற்றமானது 28 ஆகஸ்ட் 2023 அன்று எஸ்டிபி வங்கியின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி நிரஞ்சன் தங்கராஜா, கிளை முகாமையாளர் ஆர்.என்.பி. குமார மற்றும் பிராந்திய முகாமையாளர் சுந்தரலிங்கம் கேஷாந்த் முதலிய குறிப்பிடத்தக்க தனிநபர்களது பிரசன்னத்தினால் மெருகூட்டப்பட்டு



விசேட திறப்பு விழாவாக அடையாளப்படுத்தப்பட்டது. தமன்ன பிரதேச செயலகத்தினை பிரதிநிதித்துவப்படுத்திய திருமதி. ஏ.எம். அஜந்த குமாரி அவர்களும் நிகழ்வின் பெறுமதியான பங்கேற்பாளர்களில் ஒருவராக விளங்கினார்கள். நிகழ்வில் ஏனைய சிரேஸ்ட அதிகாரிகள், நேயமிகு வாடிக்கையாளர்கள், பன்முக பணியாளர்கள் மற்றும் மதிப்புமிகு விருந்தினர்களும் பங்கேற்றதுடன் பரஸ்பர மதிப்பு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் உறவுகளை கட்டியெழுப்பும் எஸ்டிபி வங்கியின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துமாறும் பங்காற்றினர்.

# 20வது வருட நிறைவைக் கொண்டாடும் DPL

டேவிட் பீரிஸ் குழும நிறுவனத்தில் இணைந்த உறுப்பினரான டீபி லொஜிஸ்டிக் (பிரைவட்) லிமிடட் நிறுவனம் சரக்குப்போக்குவரத்துத் துறையில் தனது குறிப்பிடத்தக்க 20வருட பயணத்தை நினைவு கூர்ந்தது.

2003ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் முதற்கட்டமாக பஜாஜின் இரு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களின் செயற்பாடுகளுக்கு, அதாவது அதன் இறக்குமதி, அனுமதி பெறுதல், போக்குவரத்துக்கு மற்றும் அவற்றின் விநியோகம், இறுதிப்படுத்தப்பட்ட பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் போன்றவற்றுக்கான களஞ்சியப்படுத்தல் உள்ளிட்டவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கியது. காலப்போக்கில் டீபிஎல் நிறுவனமானது இலங்கையில் சரக்குப் போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவத் தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமாக வளர்ச்சிபெற்றது.

போக்குவரத்து, பண்டகசாலை முகாமைத்துவம், சரக்கு அனுப்புதல், சுங்கத் தரகு, ஆலோசனை மற்றும் திட்டப் போக்குவரத்து மற்றும் ஆவண முகாமைத்துவம் மற்றும் காப்பகப்படுத்தல் போன்ற பரந்துபட்ட சேவைகளில் நுகர்வோரை மையமாகக் கொண்ட அணுகுமுறை மற்றும் சிறந்த அர்ப்பணிப்பு மூலம் வழங்கிவரும் சேவை குறித்து நிறுவனம் பெருமை கொள்கிறது. அதிநவீன தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் மற்றும் வணிக இயக்கவியல் பற்றிய ஆழமான புரிதல் மூலம் டீபிஎல் உடனடியாக போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலித் தீர்வுகளை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது.

குழுமத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவான டீபி இன்ஃபோடெக் (பிரைவட்) லிமிடட் நிறுவனத்துடன் இணைந்து பண்டகசாலை செயற்பாடுகளுக்காக டிபிஎல் நிறுவனம் ரெபோட்டிக் செயற்பாட்டு தானியங்கி முறைமையை அறிமுகப்படுத்தியது.

## பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான ஆதரவை விஸ்தரித்துள்ள யூனியன் வங்கி

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைத் துறை (SME) கருதப்படுவதுடன், இது பன்முகப்படுத்தப்பட்ட துறையாகவும் அமைந்துள்ளது. நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவான ஆதரவை இந்தத் துறை வழங்குகின்றது. நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்திக்கு இந்தத் துறை பெருமளவில் பங்களிப்பு வழங்குவதுடன், பிரதான தொழில் வழங்குநராக இயங்குகின்றது.

25 வருடங்களுக்கு மேலாக, நாட்டின் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைத் துறைக்கு ஆதரவளித்து மேம்படுத்துவதற்கான சேவைகளை யூனியன் வங்கி வழங்கியுள்ளது. சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை வியாபாரங்களின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு மேலதிகமாக, பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதிலும் வங்கி பெருமை கொள்கின்றது. பெண் தலைமைத்துவ வியாபாரங்கள் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர்களை கட்டியெழுப்புவதற்கு தனது சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதில் முக்கிய பங்காற்றுகின்றது. இந்தத் துறைக்கான நிதித் தீர்வுகளை வழங்குவதற்கு மேலதிகமாக, சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மை கடன் வசதியினூடாக, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு மானியங்களைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்துகின்றது. இந்த கடன் வசதியினூடாக, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு 10% மேலதிக கடன் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன், தெரிவு செய்யப்பட்ட துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு 25% மேலதிக கடன் பெறுமதிகள் வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.



# சுவனத்துப் பூங்காவை நோக்கி...!



தினம் தினம் சுடுகின்ற மனத்தினளாய் சுமையா வெந்து தணிந்து கொண்டிருக்கின்றாள். அவளது இதயத்து வேதனையை எவராலும் புரிந்துகொள்ளவியலாத இருள் சூழ்ந்த வாழ்க்கை யோட்டத்தில் தனித்து விடப்பட்டவள் போன்று மனம் குமுறிக்கொண்டிருக்கின்றாள், அந்த இளம் மொட்டு.

சுமையாவை பொறுத்தவரை கடந்து போதல் என்பது காலத்தின் கட்டாயமானதே. இரவும் பகலும் அவளுக்கு ஒன்றுதான். இப்போதெல்லாம் அவளை யாரும் கண்டுகொள்வதில்லை. வீட்டிலும் சரி வெளியிலும் சரி அவள் ஜடமாகவே இருந்தாள். மனது கொதித்துக் கொண்டே இருந்தது.

ஒரு போதும் முக்காடு கழற்றாத ஒரு பிறவி அவள். குறைவில்லாத அழகு நிரம்பியவள். பார்ப்போர் கண்படுமளவுக்கு சுந்தரியாகவே காணப்பட்டாள். ஆனால் அவள் அனுபவிக்கின்ற துயரத்தை அவளைப் பெற்றெடுத்த தாய் சுபைதா மட்டுமே அறிவாள். குடும்பத்துக்கு தானொரு சுமை என்ற வேதனையில் கடந்து போகிறது சுமையாவின் காலம்.

இரவும் பகலும் சுமையாவுக்கு ஒன்றுதான். சுமையா பிறந்து பத்து வயது வரையில் ஊரின் இயற்கை அழகில் மயங்கிக் கிடந்தாள். தோழிகளோடு துள்ளி விளையாடிய அந்தக் காலம் அவளைால் மறக்கவே முடியாதது. படிப்பிலும் கெட்டிக்காரியாகவே இருந்தாள். அந்தப் பத்து வயது வரை, ஐந்தாம் வகுப்பு வரை படித்தவள், அதுவரையில் இயற்கையை கண்கூடாகவே கண்டு ரசித்தவள் அதன் பின்னர் சிறிது சிறிதாக தன் பார்வையை இழக்க தொடங்கினாள்.

இதனைக் கண்ட பெற்றோர் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் உடனடியாகவே சுமையாவை சிறந்த கண் மருத்துவரிடம் காட்டினர். அடுத்தடுத்து கண் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதும் அவளது கண் நோயை சரியாக அடையாளம் காண முடியாது டாக்டர்கள் தடுமாறிப் போனார்கள். கண்ணுக்கு கண்ணாடி போட்டுப் பார்த்தார்கள். அதனால் எந்தப் பயனும் கிட்டவில்லை.

கொழும்பில் கண் மருத்துவமனையில் பல மாதங்களாக பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட போதிலும் சுமையாவின் கண்ணில் ஏற்பட்ட வியாதியை கண்டு பிடிக்க முடியவில்லை.

டாக்டர்களும் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பதிமூன்று வயதாகும்போது சுமையாவின் பார்வை முழுமையாக குன்றிப் போய்விட்டது. சுமையாவின் தந்தை முஸ்தகீம் ஹாஜியார் தனது முழுச் சொத்தையும் இழக்கத் தயார். தன் ஒரே மகளின் கண்பார்வை கிட்டினால் போதுமென்று எதிர்பார்த்தார். ஆசையோடு பெற்றெடுத்த மகளின் நிலை கண்டு வேதனைக்குள் தள்ளப்பட்டார். முஸ்தகீம் ஹாஜியாரும் சுமையாவின் தாய் சுபைதாவும் ஐவேளை தொழுகையில் இறைவனிடம் கரமேந்திப் பிரார்த்தித்தார்கள்.

அந்தத் தாயும் தந்தையும் கண்ணீர் விட்டு அழாத நாளில்லை. அந்த வீடே இருள் சூழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. அவர்களுக்கு உலகமே இருண்டு போனது. பெரும் கவலையில் மூழ்கினர். இறைவனிடம் மன்றாடாத நாளே இல்லை. படைத்தவன் தனது மகளைக் கைவிட்டான் என்ற உணர்வில் குடும்பமே துவண்டுபோனது.

இப்படியே காலம் கரைந்தோடியது. சுமையா இப்போது இருபது வயதைத் தாண்டிவிட்டாள். தன்னால் இனிமேல் இந்த உலகத்தையும், தாய் தந்தையையும் உறவுகளையும் பார்க்க முடியுமா என்ற ஏக்கத்தில் மூழ்கிப் போனாள். இப்போதெல்லாம் சுமையா எல்லாவற்றையும் தன் மகன் கண்ணால் மட்டுமே பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

மகளின் வாழ்க்கை இருளாகிப் போன வேதனையில் தாயும் தந்தையும் அனைத்துச் சந்தோஷங்களையும் இழந்து போனார்கள். அந்த இளம் மொட்டு மொட்டிலேயே கருகிப்போன வேதனையால் ஊரே கலங்கி நின்றது. காலக்கொடுமை இந்தப்பிள்ளைக்கு வருவதற்கு என்ன பாவமோ என்று ஊரே வேதனையில் மூழ்கியது.

சுமையாவின் காலம் தொழுகை விரிப்போடு முடங்கிப்போனது. சில சந்தர்ப்பங்களில் தாயும் மகளும் ஒரே தொழுகை விரிப்பில் நின்றுகொண்டு இரவு நீண்ட நேரம் கால்கடுக்க நின்றவண்ணம் தொழுவதிலும், பிரார்த்தனை செய்வதிலும் செலவிட்டனர். இறைவனிடம் மன்றாடினர்.

தாயும், மகளும் இரவு பூராவும் தொழுகையில் அழுதழுது பிரார்த்திப்பதை பார்த்து முஸ்தகீம் ஹாஜியார் அழுதுபுலம்பினார். சிறு பாவமேனும் செய்ய நினைக்காத தமது குடும்பத்திற்கு இப்படியொரு சோதனையையா? யா அல்லாஹ் உனது பெருங் கருணையை எனது மகள்மீது சொரிய மாட்டாயா? என்று தொழும் பாயிலிருந்தபடியே அழுது புலம்பினார்.

இப்படியே காலவோட்டம் நீண்டு கொண்டே போனது. தனது பிள்ளைக்கு ஒரு நல்வழியை காட்டுமாறு பள்ளிவாசலுக்குப் போய் தொழும் நேரங்களிலெல்லாம் துஆச் செய்யத்தவறமாட்டார். ஊரே அந்தப்பிள்ளைக்காக பிரார்த்தித்தது இப்படியொரு சோதனை எதற்காக நாம் பாவப்பட்ட ஜன்மங்களா? என குடும்பமே கவலையில் மூழ்கியது.

வீடும், ஊரும் ஏன் உலகமே தனக்காக அழுவதை பொறுத்துக்கொள்ள முடியாமல் சுமையா தான் தொழும் போதெல்லாம் அவர்களுக்காகவும் பிரார்த்திக்கத் தவறவில்லை. ஒரு நாளா இரண்டு நாளா இருபது வருடங்கள் அந்த ஊரே இருள் சூழ்ந்து வெறுமையில் துவண்டுபோனது.

காலவோட்டத்தில் ஒரு நாள் சுமையா பஜ்ர் தொழுகையை முடித்துவிட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபோது அவளது உள்ளத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. அவளது மனக்கண் திறந்து கொண்டது போன்ற உணர்வுடன் கூடிய மகிழ்ச்சி பூத்தது. காலையில் கவலையில்லாத மனத்துடன் வாப்பாவையும், உம்மாவையும் பார்த்து எனக்கு ஒரு ஆசை. அதை நிறைவேற்ற உதவ முடியுமா? எனக் கேட்டாள்.

மகள் நீ இந்த உலகில் எதைக்கேட்டாலும் நிறைவேற்றுவேன் என்றார் தகப்பன் முஸ்தகீம் ஹாஜியார்.

வாப்பா! என்னை ஒரு தடவை உம்ராவுக்கு அழைத்துச் செல்வீர்களா? எனக் கேட்டாள். சுமையாவின் கண்களை பறித்த இறைவன் அவளது மனக்கண்களை திறந்துவிட்டான். அவளிடம் ஆன்மீக பண்புகள் வளர்ந்தோங்கத் தொடங்கின. காலையும் மாலையும் ஒவ்வொரு தொழுகையின் போதும் குர்ஆனை ஓதிவந்தாள். தனது பெற்றோருக்காக ஒவ்வொரு தொழுகையிலும் பிரார்த்திக்கத் தவறமாட்டாள்.

தமது மகளின் மனக்கண்ணை இறைவன் திறந்துவிட்டான் என்பதை அந்தக் குடும்பம் உணர்ந்துகொண்டது. கருணை மிக்க இறைவன் தங்களது பிரார்த்தனைக்குப் பதில் தந்துவிட்டதாக நினைத்து தாயும், தகப்பனும் ஆறுதலடைந்தனர்.

மறுநாள் காலை, பஜ்ர் தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் சென்ற முஸ்தகீம் ஹாஜியார் பள்ளிவாசல் இமாம் முஸ்தபா ஆலிமைச் சந்தித்து, தமது மகளின் கோரிக்கையை முன்வைத்தார். இமாம் முஸ்தபா ஆலிம், தனது தொழுகை முஸல்லாவில் இருந்தபடியே புன்முறுவல் பூத்தவராக இரு கரமேந்தியபடியே இறைவனுக்கு நன்றி கூறிப் பிரார்த்தித்துவிட்டு "ஹாஜியார்! உங்கள் மகள் சுமையாவின் இதயக் கண்களை படைத்த ரப்பு திறந்துவிட்டான். அந்தப் பிள்ளையின் ஆசையை உடனடியாக நிறைவேற்றுங்கள் எனக்கூறி அவசரப்படுத்தினார்.

முஸ்தகீம் ஹாஜியார் உடனடியாக மகளுக்கும், மனைவிக்கும் பாஸ்போர்ட் செய்து உம்ரா பயணத்துக்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்தினார். மறுவாரமே அவர்களது பயணத்துக்கான ஏற்பாடுகள் திட்டமிடப்பட்டன. அவர்களுக்காக உறவுகளும் ஊராரும் இறைவனிடம் பிரார்த்தித்தனர்.

உம்ராவுக்குப் புறப்படும் நாளில் தனது உறவுகளையும் தனக்காக பிரார்த்தித்த ஊர் மக்களையும் வீட்டுக்கு அழைத்து விருந்தளித்து தனக்காக துஆச் செய்யுமாறு வேண்டிக்கொண்டாள். அத்தோடு எல்லோரையும் ஒருவேளை கூடத் தவறமல் தொழுது வருமாறும் வலியுறுத்திக் கூறிய சுமையா தனக்காக, இரவு பகல் பாராது பிரார்த்தித்தமைக்காக நன்றியையும் தெரிவித்தாள். இறைவன் நம் அனைவரையும் சுவனத்தின் பக்கம் பொருந்திக்கொள்வானாக என்றும் மனநிறைவோடு அவள் துஆச் செய்தாள்.

அன்றிரவு சுமையாவின் வீடும், அந்த ஊரும் சந்தோஷப்பட்டதோடு மறுபுறம் அனைத்து வீடுகளிலும் பெண்கள் கூடி இறை பிரார்த்தனையிலீடுபட்டனர்.

நாளை விடியும் வேளையில் பள்ளிவாசல் வழமைக்கு மாறாக மக்களால் நிரம்பி வழிந்தது. பஜ்ர் தொழுகையை அடுத்து சுமையா தனது தாய் தந்தையருடன் விமான நிலையத்தை நோக்கிப் புறப்படத் தயாரானாள். வீட்டை விட்டு வெளியே வந்தபோது சுமையாவின் கண்கள் தன்னை அறியாமலேயே கண்ணீரை கொட்டியது. அவளது விழியோரமாக கண்ணீர் ஆற்றுவெள்ளம் போல் கரைந்தோடியது. தனது தாய் மண்ணுக்கு திரும்பி வரப்போவதில்லை என்ற உணர்வு அவளில் நிலைகுத்தி நின்றது.

வெளியே வந்த சுமையா எல்லோருக்கும் சலாம் உரைத்தாள். தனது புறக்கண்களால் அங்குகூடி நின்றவர்களைப் பார்க்க முடியாத போதும் எல்லோரையும் அகக்கண்களால் கண்டாள். அவளால் மேற்கொண்டு பேசமுடியவில்லை. விம்மிய இதயத்தோடு தாயின் உதவியுடன் வாகனத்தில் ஏறிக்கொண்டாள். தந்தை முஸ்தகீம் ஹாஜியாராலும் பேசமுடியவில்லை. வாயடைத்துப் போனவராக வாகனத்தில் ஏறிக்கொண்டார்.

கூடிநின்றவர்கள் உரத்த தொனியில் சலாமுரைக்க சுமையா மௌனியாக கையசைத்து விடைபெற்றாள். முஸ்தபா ஆலிம்கூட மனசு வெம்பிய நிலையில் அந்த மொட்டுக்காக மனதளவில் பிரார்த்தித்தார்.

விமான நிலையத்திற்கு ஒரு மணி நேரப் பயணம் சுமையா மௌனியாக தாயின் மடியில் சாய்ந்து கொண்டாள். தாயுடனான இறுதி அணைப்பு என்பதை அவள் புரிந்துகொண்டாள். தாய்க்கும், தந்தை முஸ்தகீம் ஹாஜியாருக்கும் கூட இது புரியாமலில்லை. அவர்கள் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அந்த சுவனத்து மலருக்காக மனதளவில் துஆச் செய்தனர். விமான நிலையம்வரை யாருமே பேசவில்லை.

இதோ ஜித்தாவை நோக்கி விமானம் புறப்பட்டுவிட்டது. சுமையாவையும், தாய், தகப்பனை சுமந்துசென்றது அந்த விமானம். சுமையா தனது மனக்கண்கள் மூலம் ஈமானியத்தை வென்றவளாக மதீனத்து மண்ணின் சுவனத்துப் பூங்காவை நோக்கி பயணிக்கிறாள். சுவனத்து மங்கையரோடு கலப்பதற்காக...!

**ஈழத்து நூன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 87

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | ■ | 04 | 05 | 06 | 07 |
| 08 | | | 09 | ■ | 10 | | |
| 11 | | ■ | 12 | 13 | ■ | ■ | |
| | ■ | 14 | | | ■ | 15 | ■ |
| 16 | 17 | | | ■ | 18 | | 19 |
| ■ | 20 | | ■ | 21 | | | |
| 22 | | | ■ | 23 | | | |
| 24 | | | ■ | 25 | | ■ | ■ |

திரு/திருமதி.செல்வி ....................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ....................................

....................................

....................................

.................... ....................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 87
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 87

### இடமிருந்து வலம்

1. போர்
4. கல்யாணமான பெண்ணின் பெயருக்கு முன்னால் குறிப்பிடுவது
8. இந்த விலங்கு அவுஸ்திரேலியாவில் அதிகம்
10. கெட்டிக்கார சிறுவர்களை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
11. ஒருவகை மரம்
12. ரகம் அல்லது பிரிவு
14. சமையலறையில் இருப்பது. இப்போது இதன் பாவனை குறைந்து விட்டது.
16. துன்பநிலை (திரும்பியுள்ளது)
18. மூலதனம்
20. மறைமுகத் திட்டம் ( திரும்பியுள்ளது)
21. எரித்தல் (குழம்பியுள்ளது)
22. ஏழு நாட்களைக் கொண்ட காலப்பகுதி (குழம்பியுள்ளது)
23. ஒரு பறவை (குழம்பியுள்ளது)
24. உள் மனம்
25. கண்களைப் பாதுகாப்பது

### மேலிருந்து கீழ்

1. இருவருக்கிடையிலான நட்பு அல்லது பழக்கம்
2. பெண்
3. மழைக்காலத்தைக் குறிக்கும் (கீழிருந்து மேல்)
5. அத்தாட்சி
6. உயிரிழப்பையும் குறிக்கும்
7. சற்று மேடாகத் தெரியும் சிறுபகுதி
9. உருவம் அற்ற நிலை (குழம்பியுள்ளது)
13. இருப்பதைவிட அதிகப்படுத்தப்பட்டது (தலைகீழ்)
14. காரியத்தை நிறைவேற்ற முயலும் விரைவு நிலை
15. அனுகூலம்
17. நெற்றிப்பொட்டு (குழம்பியுள்ளது)
18. ஆரம்பநிலையில் இருப்பது
19. வெப்பநிலை (தலைகீழ்)
21. மொழி அல்லது மத அடிப்படையில் அமையும் மக்கள் பிரிவு ( தலைகீழ்)
22. ஆவல் (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 86

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. உத்தரவு
4. சாவி
6. குதி
7. அமைதி
8. மந்தி
10. ஆதி
11. துறை
12. உதிரம்
13. மகுடி
16. வால்
17. பல
18. சவால்
20. வயல்
21. அதிதி
22. துன்பம்

**மேலிருந்து கீழ்**

1, உளுந்து
2. தகுதி
3. ரதி
4. சாமை
5. விதி
7. அதிரடி
9. மறைவு
10. ஆகுதி
12. உமல்
14. கலவன்
15. அசதி
16. அல்வா
17. பயம்
19. வாதி
20. பல்

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 86

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **என். கமலாக்ஷி,** B1, F22, புளூமெண்டல் தொடர்மாடி கொட்டாஞ்சேனை | **எம்.எம்.எம். நிஸாம்,** 176/14 ஏ, ஒல்கொட் மாவத்தை, காலி | **ஏ.எல். கலீல்,** 114, ஏ.எல். ஹுதா வீதி, இறக்காமம் |

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். சஞ்சனா** வந்தாறுமூலை

**2. அப்துல் வாஹிட்** பதுளை

**3. கே. புண்ணியநேசன்,** காரைதீவு

**4. கு. ரஞ்சிதம்,** களுதாவளை

**5. என். கே. வேணி** பலாங்கொடை

**6.பெ. ரதிமலர்** கல்முனை

**7. செ.ஞானராசா,** திருகோணமலை

**8. எம். எம். ஷசாத்** மருதமுனை

**9. ஆர். ஜனா சைனப்** கிண்ணியா

**10. மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை

# உன்னதமான ஊடகவியலாளர் ஏ.எல்.எம் சலீம்



ஏ.எல். எம் சலீம் என்று அறியப்பட்ட பத்திரிகையாளனுக்கு கடந்த 14ஆம் திகதி வயது 75. அதே நேரம் அவரது ஊடகத் தொழிலுக்கு வயது 57. இத்துணை அனுபவமுள்ள ஊடகவியலாளன் ஒருவரை பற்றி எழுதுவதற்கு இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவரது ஊடகப் பணிக்கு 50 வயதான போது அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் ஒரு நினைவு மலரினை வெளியிட்டது. அப்போது என்னிடமும் ஒரு கட்டுரை கேட்கப்பட்டது. ஏதோவொரு காரணத்தினால் அப்போது அதனை எழுத முடியாமல் போய்விட்டது. இப்போது அந்த குறையை தீர்க்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. சலீம் எழுதப்பட வேண்டியவர்; பதிவுசெய்யப்பட வேண்டியவர் பாடப்பட வேண்டியவர். கொண்டாடப்பட வேண்டியவர்.

ஜனநாயகத்தை வலுப்படுத்த செய்ய வேண்டிய சக்திகளுள் மிக முக்கியமானது ஊடகத்துறை. சட்டம், நீதி, நிர்வாகத்துறை முதலானவை போல ஊடகத்துறையும் கருதப்பட வேண்டியதொன்று எனக் குறிப்பிடுவர். இவற்றுள் முதன்மையானது ஊடகத்துறை என்று குறிப்பிடுவாரும் உளர். இத்துணை சக்தி வாய்ந்த துறையிலேதான் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் சலீம்,

அந்தக் காலத்தில் இந்தக் காலத்தை போல அதிக ஊடகங்களின் செல்வாக்கு இருக்கவில்லை. ஆனால் ஊடகங்களுடனான மக்களின் ஈடுபாடு வலுவுள்ளதாக இருந்தது. பத்திரிகைகள்தான் அந்தக் காலத்து மக்களின் ஒரே ஊடகமாக இருந்தது. அது பிந்திக் கிடைக்கின்ற செய்தியாக இருந்தாலும் நிரந்தரமானதும் வலுவுள்ளதும் பாதுகாப்பானதும் நினைத்த நேரத்தில் அனுபவிக்கக் கூடியதுமாகவும் இருந்தது. அவ்வாறு பத்திரிகைகளை நாங்கள் அரவணைத்து இருந்த காலத்தில் கல்முனை பகுதியிலிருந்து றஷீட், பகுர்டீன், சலீம் என்று ஒரு சிலர்தான் பத்திரிகை நிருபர்களாக இருந்தனர். அப்போது சலீமின் பத்திரிகைப் பணி வீரகேசரியில்தான தொடங்கியது அது எஸ்.டி.சிவநாயகத்தின் காலம். அவர் ஐக்கிய தீபம், உதயம், தினகரன், சுதந்திரன், வீரகேசரி என்று பல பத்திரிகைகளில் பணியாற்றியவர். எம்.டி. குனசேனாவின் வெளியீடாக இருந்த தினபதி, சிந்தாமணி, சூடாமணி பத்திரிகைகளிலே அவர் பணியாற்றிய காலம் பொற்காலமாகும். அக்காலத்தில் தனக்கென எழுத்தாளர் பரம்பரையையும் ஊடகவியலாளர் பரம்பரையையும் உருவாக்கியவர் அவர். அவர்களை உயரச் செய்தவர். அவர்களில் ஒருவராகவே நிந்தவூர் சலீம் மேற்கிளம்புகிறார். ஊடகவியல் பணி சாதாரணமானதல்ல. மிகக் கஷ்டமானதாகும். ஊடகங்களோடு தொடர்புபடுவதென்பது உலகத்தோடு தொடர்புபடுகிற விடயமாகும். ஊடகவியலாளர்கள் மிகப் பொறுப்பும் மரியாதையும் மிக்கவர்கள். அவர்கள் மிகப் பிரசித்தமாக விளங்கினார்கள். ரிச்சர்ட்.டி. சொய்ஸா, பிரகீத் எக்னெலிகொட, லசந்த, தராக்கி இப்படி பல ஊடகவியலாளர்களை இன்றும் நாம் மறக்க முடியாதுள்ளது. இப்படி பணி செய்பவர்கள் மிகமிகக் குறைவு.

இன்று நம்மில் சில ஊடகவியலாளர்கள் இந்த பணியினை அற்பமாகக் கருதுகிறார்கள். அடிப்படை தகவல்களோடு மாத்திரம் தமது செய்தியை குறுக்கிக் கொள்கிறார்கள். புகைப்படம் எடுப்பதனை மாத்திரமே தமது பணியாக கருதுகிறார்கள். தாம் எழுதிய செய்தியை பிரசுரிப்பதை விட நிகழ்ச்சியை ஒழுங்கு செய்பவர்கள் எழுதிக் கொடுக்கின்ற செய்தியை வாங்கிப் பிரசுரிப்பவர்களும் உண்டு.செய்தி சேகரிப்பது என்பது மிக ஆபத்தான பணியும்கூட. எல்லா வேளைகளிலும் சுதந்திரமாகவும் இயல்பாகவும் செய்தியை சேகரித்து விட முடியாது. விபத்து நடந்த இடத்திலும் குண்டு வெடித்த இடத்திலும் தீப்பற்றிய இடத்திலும் அவ்வாறான சம்பவங்கள் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள இடங்களிலும் தமது உயிரை பணயம் வைத்தே செய்திகளை சேகரிக்க வேண்டும். யுத்த காலத்தில் யுத்த பிரதேசங்களிலும் செய்திகளை சேகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இன்னொரு பக்கம் அரசியல் விடயங்களை செய்திகளாக கொண்டு வருவதும் மிகவும் சுவாரஸ்யமான பணியாகும். அரசியல்வாதிகளின் உள்ளம் அறிந்து செய்திகளை எழுத வேண்டிய நிலைக்கு செய்தியாளர்கள் தள்ளப்படுவார்கள். அவர்களுடைய அட்டகாசங்களுக்குள் நின்று உண்மைகளை எழுதுவது மிகக் கஷ்டமான பணியாகும். அரசியல்வாதிகளால் அச்சுறுத்தப்பட்ட பல செய்தியாளர்களும் இருக்கிறார்கள். ஈழத்தில் 1980கள் ஊடகவியலாளர்களுக்கு மிகச் சோதனைமிக்க காலமாகும். அரச ஊடகங்களும் தனியார் ஊடகங்களும் ஒன்றுக்கொன்று முரணான செய்திகளை எழுதின. ஊடகங்கள் இனத்தின் பெயரால் அடையாளப்படுத்தப்பட்டன. ஊடகவியலாளர்கள் இனத்தின் பெயரால் அவஸ்தைப்பட்டனர். இந்த காலங்களையெல்லாம் கடந்து வந்தவர்தான் ஏ.எல். எம். சலீம். தமிழர் அரசியல் விடுதலையை உரமூட்டுவதிலும் முஸ்லிம் அரசியல் விடுதலைக்காக பாடுபடுவதிலும் அவர் அக்கறையோடு செயற்பட்டார். அவ்விரு கட்சிகளினதும் தலைவர்களோடு சரிசமமாக தனது எழுத்துக்களை பகிர்ந்து கொண்டவர். தன் அரசியல் அடையாளம் வெளிப்படாது தானொரு ஊடகவியலாளர் என்பதையே அவர் எப்போதும் அடையாளப்படுத்தினார். தமிழ் முஸ்லிம் தீவிர முரண்பாட்டு நெருக்கடிக்குள் தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்காகவே தன்னை நிலைப்படுத்தியவர். ஒரு பிரதேசத்திற்குள் மாத்திரம் தன்னுடைய பணியை வரையறுத்துக் கொண்டவர் அல்ல அவர். வடக்கு கிழக்கு எங்கும் தமிழ் பேசும் மக்கள் பரந்து வாழும் இடமெல்லாம் அவர்களின் நடப்புக்களை ஆவணப்படுத்தியவர். வடக்குக்கென்று இருக்கின்ற விசேடமான தனியான பத்திரிகை உலகுக்குள் கிழக்கு மக்களின் செய்திகளை அடையாளப்படுத்தியவர். முஸ்லிம்களுக்குள் இருந்த தனித்தனி அரசியல் அபிலாசை கட்சி வேறுபாடுகளுக்குள் அவர் ஒருபோதும் அமிழ்ந்து விடவில்லை. அப்போதும்கூட தான் ஊடகத்துறையின் விழுமியங்களை பாதுகாத்து எழுதுகின்றவராகவே இருந்தார். அதனால் அவரை எல்லா அரசியல் தலைவர்களும் ஒருங்கே பாராட்டினர். அப்படியான வாய்ப்பு எல்லா ஊடகவியலாளர்களுக்கும் வாய்ப்பதில்லை. ஆனால் அது சலீமுக்கு வாய்த்திருந்தது. அதற்கு அவரது பொன் விழா மலரே சாட்சியாகும். காலம் கடந்தும் ஓர் உன்னதமான ஊடகவியலாளர் என்ற நாமத்தோடு வாழ்பவர் சலீம். எந்த கட்சிக்கும் சேவகம் செய்யாது ஊடகத்துறைக்கு வாழ்நாளெல்லாம் சேவகம் செய்து வாழ்பவர். அதற்காக தேசியம் முதல் பிரதேசம் வரையும் மேலும் அரசு சார்பாகவும் அரசு சார்பற்ற அமைப்புக்கள் சார்பாகவும் ஊடகத்துறை சார்பான பல விருதுகளை வென்றவர். அவர் இன்னும் பல்லாண்டு காலம் ஊடகத்துறைக்கு பணியாற்ற வேண்டும் என நாம் ஆசிக்கின்றோம்.



பேராசிரியர்
**றமீஸ் அப்துல்லாஹ்**
தமிழ் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

VEHICLE VALUATION REPORTS
ACCEPTED BY LEASING AND FINANCE COMPANIES, BANKS, GOVERNMENT & NON- GOVERNMENTAL INSTITUTIONS
AA CEYLON Estd. 1904
CALL:-
Automobile Association of Ceylon
40, Sir M.M.M. Mawatha, Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 214)

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.09.14
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5237 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,718,568.00
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 9 6 1 0 6 0

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-14 — சீட்டிழுப்பு இலக்கம் 546 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,575,913.20
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 04 44 56 57 — விசேட இலக்கினம் விருச்சிகம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1585 — 14/09/2023 — 75184 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 407,719,424.00
ஆங்கில எழுத்து V — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 02 22 45 73
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3479 — சீட்டிழுப்பு திகதி 2023.09.14 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,377,647.60
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 09 43 46 72 — விசேட எழுத்து C
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 01510

தன நிதானய — தேதி 2023/09/14 — சீட்டிழுப்பு இலக்கம் 1267 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,961,961.60
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 32 73 75 76 — விஷேட ஆங்கில எழுத்து P
Double Chance இலக்கம் 11660

Lucky 7 — திகதி 14.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0063
வெற்றி இலக்கினம் கடகம் — L7 இலக்கம் 3 0 — வெற்றி இலக்கங்கள் 7 8 8 0 3 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,898,424.96

# நூலறிமுகம்

**நூலின் பெயர்**
முல்லைத்தீவு முதல் புத்தளம் வரை
தீனுடையானின் அனுபவப் பகிர்வு
**நூலாசிரியர்** முஸ்தபா மன்ஸூர்.
**வெளியீடு** வெள்ளாப்புவெளி
எம்.எம்.எம். மன்ஸூர்,
தாருஸ் ஷனூபா,
பெருக்குவட்டான்,
கொத்தான்தீவு

'இளைய முஸ்தபா எனத் தன்னை முன்னிறுத்தும் முஹம்மது முஸ்தபா மன்ஸூரின் இரண்டாவது பனுவல் இது. வன்னியில் நம்மூவர் என்கிற பிரதி இவரது தமிழ் முஸ்லிம் உறவின் சாட்சியமாய் அமைந்தது. இந்தப் பனுவல் வழியே ஒரு ஆன்மீகப் பயணம் நிகழ்கிறது. முல்லைத்தீவு முதல் புத்தளம் வரையான இவரது பயணத்தில் தீன் எனும் ஆன்மீக வாழ்வீடுபாட்டை அனுபவ பகிர்வாகத் தந்துள்ளார்' இவ்வாறு இந்நூலுக்கு வழங்கியுள்ள புலரிச் சொற்கள் பகுதியில் வெள்ளாப்புவெளி வெளியீட்டகத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அதேநேரம் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் மாவட்டத் தலைவரும், காஸிமிய்யா அரபுக் கல்லூரி அதிபருமான அஷ் ஷெய்ஹ் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் இந்நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில், இத்தொகுப்பின் ஊடாக நூலாசிரியர் எதிர்பார்ப்பதைப் போன்று சகலரும் இந்நூலினை வாசித்து அவர் பெற்ற தீனுடைய இன்பங்களை நாமும் பெற முயற்சிக்க வேண்டும்' என்றுள்ளார்.




'நூலாசிரியர் தன்னுடைய முதுமையிலும் நோய்க்கு உள்ளாகியுள்ள போதிலும் தனது மரணத்திற்கு பின் தன்னுடைய அடையாளம் சமுதாயத்தில் இருக்க வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில், தான் பிறந்து வளர்ந்த தண்ணீரூற்று முதல் புத்தளம் வரை தன்னுடைய சொந்த வாழ்விலும் சமூக வாழ்விலும் பெரும் மாற்றத்திற்கு காரணமாக அமைந்த புனித தஃவத் தப்லீக்குடைய பணி பற்றியும் அதன் அடிப்படை உஸூல்கள் பற்றியும் எழுதி படைத்திருப்பது இவர் இச்சமூகத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்கும் விட்டுச் செல்கின்ற அடையாளச் சின்னமாக அமைந்துள்ளது' என்று புத்தளம் மன்பஉஸ் ஸாலிஹாத் பெண்கள் அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான கருத்துக்களை தாங்கி வெளிவந்துள்ள இந்நூல் அழகான முறையில் வடிவமைக்கப்பட்ட அட்டைப் படத்தைத் தாங்கி கைக்கு அடக்கமான வரலாற்று நூலாக 61 பக்கங்களில் அமைந்துள்ளதோடு, எவரும் படித்தும் பயன்பெறக்கூடியதாக உள்ளது எனலாம்.

**மர்லின் மரிக்கார்**

## மக்களை மரணப்பொறிக்குள்... (03ஆம் பக்கத் தொடர்)

ஒன்லைன் மூலம் முற்பதிவு செய்துகொண்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் டிக்கட்டுக்கள் இரத்துச் செய்யப்பட்டமையால் அவர்கள் ரயில் நிலையங்களில் நிர்க்கதியாகி இருந்தமை தொலைக்காட்சி செய்திகளில் காண்பிக்கப்பட்டது.

அது மாத்திரமன்றி ரயில் சேவை இரத்துச் செய்யப்பட்டமையால் தொலைதூரப் பகுதியொன்றில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குழுவொன்று தமது பயணப் பொதிகளையும் சுமந்துகொண்டு தண்டவாளங்களில் நடத்து சென்ற காட்சிகளும் செய்திகளில் காண்பிக்கப்பட்டன. இது போன்ற செய்திகள் சுற்றுலாத் துறைக்கு நேரடியான பாதிப்பை ஏற்படுத்தும். ஏற்கனவே வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை படிப்படியாகத் தலைதூக்கிவரும் சூழலில் இது போன்ற பாதகமான செய்திகள் அத்துறைக்குப் பாதிப்பை ஏற்படுத்தி நாட்டுக்குப் பொருளாதார ரீதியில் மேலும் பின்னடைவையே கொடுக்கும்.





ரயில்வே தொழிற்சங்கங்கள் இதற்கு முன்னர் மேற்கொண்ட தொழிற்சங்கப் போராட்டங்களாலும் மக்களுக்கு இதுபோன்ற பாதிப்புக்களும், சிரமங்களும் ஏற்பட்டிருந்தன. இதுபோன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்தியாவசிய சேவையாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவது இதற்கு முன்னரும் எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இருந்தாலும், தொழிற்சங்கவாதிகள் அது குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. இதற்குக் காரணம் தமக்கு எதிராக எவ்வித கடுமையான நடவடிக்கையும் எடுக்கப்படாது என்பதை நன்கு அறிந்தவர்களாக அவர்கள் இருக்கின்றனர்.

அது மாத்திரமன்றி, தொழிற்சங்கங்களின் தலைவர்கள் உயர்மட்ட அரசியல் செல்வாக்கைக் கொண்டவர்களாக இருப்பதால் தமக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் அதிலிருந்து இலகுவில் விடுபட்டுக் கொள்கின்றனர். எனவே அரசாங்கம் மக்கள் பற்றிச் சிந்தித்து உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும். அதற்காக போராடுவதற்குத் தொழிற்சங்கங்கள் கொண்டிருக்கும் உரிமையை மறுப்பது ஜனநாயக நாட்டில் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். அதனால், தொழிற்சங்கங்களும் மக்களை சிரமங்களுக்குள் தள்ளாது தமது கோரிக்கைகளை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை, ஆயிரக்கணக்கானவர்கள் நம்பியிருக்கும் போக்குவரத்துச் சாதனமாக ரயில் காணப்படுவதால் இதன் சேவையை மேம்படுத்துவது குறித்தும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரயில் என்ஜின் சாரதிகளுக்குக் காணப்படும் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, புதியவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கி அவர்களை உள்வாங்கி வெற்றிடங்களை நிரப்புவது, மற்றும் பயணிகளுக்கு நன்மை அளிக்கக் கூடிய வகையில் பயண நேரசூசிகளைத் தயாரித்து, மேலதிக ரயில்களை சேவையில் ஈடுபடுத்துவது குறித்தும் போக்குவரத்து அமைச்சு கவனம் செலுத்த வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில் ஒப்பீட்டளவில் கட்டணம் குறைவான போக்குவரத்து சாதகமான ரயில் சேவை காணப்படுவதால் மக்களின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. இதுபோன்ற அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க ரயில்வே ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பின் பின்னால் அரசுக்கு எதிரான சக்திகளின் மறைமுகத் திட்டங்களும் உள்ளதாக செய்திகள் வெளிவந்தமை நினைவிருக்கலாம். அத்திணைக்களத்தின் சில தொழிற்சங்கங்கள் அரசுக்கு எதிராக அரசியல் சக்திகளின் செல்வாக்கைப் பெற்றிருப்பதாக செய்திகள் உலவுகின்றன.

எது எவ்வாறானாலும் அப்பாவி மக்களைப் பாதிக்கும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை ஒருபோதுமே அனுமதிக்க முடியாதென்பதே உண்மை!

## விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கான ஜனாதிபதி விருது

2020ஆம் ஆண்டில் விஞ்ஞானத்தில் ஒரு புதுமைக்கான சர்வதேச அல்லது தேசிய காப்புரிமையைப் பெற்ற இலங்கை நிறுவனத்துடன் இணைந்த இலங்கை விஞ்ஞானிகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

மூலப் பிரமாணங்களின் பிரகாரம், கொடுக்கப்பட்ட ஆண்டுகளுக்கான சர்வதேச காப்புரிமைதாரர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதும், கொடுக்கப்பட்ட ஆண்டுகளுக்கான தேசிய காப்புரிமை பெற்றவர்களுக்கு விஞ்ஞான ஆராய்ச்சிக்கான NRC மெரிட் விருதும் வழங்கப்படும்.

2023 ஒக்டோபர் 2ஆம் திகதிக்கு முன் இந்த அலுவலகத்தை அடையக்கூடிய வகையில் உங்கள் விண்ணப்பத்தை (முகப்பு கடிதம் மற்றும் காப்புரிமைச் சான்றிதழின் நகல்) அனுப்பவும்.

தலைவர்,
தேசிய ஆராய்ச்சி சபை,
120/7, வித்யா மாவத்தை,
கொழும்பு 07.

**தொலைபேசி:** 011 2675176 / 071 4533419
**இணையதளம்:** www.nrc.gov.lk

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

## பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2022/2023

### மொழிபெயர்ப்புக் கற்கைகளில் (சிங்களம்/ ஆங்கிலம்) கலைமாணி (கௌரவ) பட்டப்படிப்பினைத் தொடர்வதன் பொருட்டு தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரல்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறும் மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 'இலங்கைப் பல்கலைக்கழகங்களில் 2022/2023 கல்வியாண்டுக்கான கலைமாணி பட்டப்படிப்புகளுக்கான அனுமதி தொடர்பான கையேட்டின் 2.2.8.25 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பல்கலைக்கழக அனுமதிக்கான குறைந்த பட்சத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட பாடப்பிரிவில் அனுமதி பெற விரும்பினால் மேற்குறிப்பிட்ட தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பித்து அப்பரீட்சையில் தேர்ச்சியடைதல் வேண்டும்.

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக, சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மொழிகள் பீடத்தின் மொழிகள் துறையானது கலைமாணி பட்டதாரிகளுக்கு மொழிபெயர்ப்பு சார்ந்த கோட்பாட்டு மற்றும் செயற்பாட்டு ரீதியான அறிவை வழங்கும் பொருட்டு மொழிபெயர்ப்புக் கற்கைகளில் (சிங்கள/ ஆங்கிலம்) கலைமாணி (கௌரவப்) பட்டம் எனும் பட்டப்பாடநெறியினை அறிமுகப்படுத்தியுள்ளது. தேசிய மும்மொழிக் கொள்கையை செயல்படுத்த முன்னுரிமை அளித்தல் வேண்டும் என்ற இலங்கையின் தேசிய தேவையினைப் பூர்த்தி செய்வதற்கான ஒட்டுமொத்த மூலோபாய முயற்சியின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்ட, நிபுணத்துவம் வாய்ந்த இக்கற்கைநெறி நான்கு வருட பட்டப்பயில்பாடநெறியாகும்.

2022 ஆம் ஆண்டு G.C.E (A/L) தேர்வில் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் தோற்றிய விண்ணப்பதாரர்கள் மேற்கூறிய தகுதிகாண் பரீட்சையில் பங்கேற்கத் தகுதியுடையவர்களாவர். நான்கு வருட பட்டப்படிப்பை திறம்படவும் வெற்றிகரமாகவும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் மொழி (சிங்களம்/ ஆங்கிலம்) புலமை கொண்ட மாணவர்களின் குழுவை தெரிவு செய்வதே இத்தகுதிகாண் தேர்வின் நோக்கமாகும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தகுதிகாண் தேர்வுக்கான விண்ணப்பங்களை 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன் www.sab.ac.lk என்ற பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள விண்ணப்ப இணையதள முகப்புப் பக்கத்தினூடாக (https://www.sab.ac.lk/trl-aptitude-test/) நிகழ்நிலையில் (Online) சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்ப முகப்புப் பக்கத்தில் உங்களுக்கான கணக்கினை உருவாக்கி அப்பக்கத்தில் காணப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி 1500 ரூபாவினை செலுத்துவதோடு, பின்வரும் ஆவணங்களின் தெளிவான வருடப் பிரதிகளையும் (scanned copies) இணைத்தல் வேண்டும்.

- பொது சாதாரணப் பரீட்சையின் பெறுபேறுகள் உள்ளடங்கலாக உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுத்தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி. (doenets.lk மூலம் தரவிறக்கம் செய்யப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட பெறுபேற்றுத் தாளும் ஏற்றுக்கொள்ளப்படும்.)
- விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் மற்றும் பிற ஆவணங்களில் ஏதேனும் வேறுபாடுகள் இருப்பின், அவை பற்றி தெளிவுபடுத்தும் சத்தியக் கடதாசி மற்றும் சான்றிதழ்கள்.

தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தகுதிகாண் பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன தொடர்பில் பின்னர் அறியத்தரப்படும் அதேவேளை, பரீட்சை அனுமதி அட்டை விண்ணப்ப இணையதள முகப்புப் பக்கத்தில் (online application portal) தரவிறக்கம் செய்து கொள்ளக்கூடிய வகையில் பதிவேற்றம் செய்யப்படும். தகுதிகாண் பரீட்சைக்கு சமுகமளிக்கும் தினத்தன்று பரீட்சை அனுமதி அட்டையின் வன்பிரதியினை சமர்பித்தல் வேண்டும்.

**பதிவாளர்**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**
**பெலிஹுல்லோயா**
14-09-2023

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை (இதுஅ)

### கொழும்பு துறைமுகத்தில்

### JCT I & II இல் "A" & "B" உள்ளக வீதிகளின் திருத்தம்

1. **கொழும்பு துறைமுகத்தில் JCT I & II இல் "A" & "B" உள்ளக வீதிகளின் திருத்தத்திற்காக** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இதுஅ இன் தலைவரின் சார்பாக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். (**Contract No.: EW/JCT/02/2023/01)**
2. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக

   (அ) விலைமனுதாரர் வீதி வேலைகளில் விஷேடத்துவம் பெற்ற தரம் **சி-6 ஒப்பந்தக்காரராக ICTAD பதிவை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

   (ஆ) **1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ்** வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவுச் சான்றிதழ், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் பதிவானது தேவைப்படுத்தப்படுகின்றது.
3. கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தொழில்நுட்ப நூலகத்தில் **2023.09.27ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு** விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தள விஜயமொன்றும் நடைபெறும்.
4. விலைமனுப்பிணைத் தொகையானது 400,000 ரூபாவென்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் இயங்கும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமுமாகவுமிருத்தல் வேண்டும்.
5. பெசேவ அடங்கலாக மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக **3,500 ரூபாவை** செலுத்திய பின்னர், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சிவில் பொறியியல் பிரிவின் பிரதான பொறியியலாளரினால் (சிவில்) **2023.09.19 ஆம் திகதியிலிருந்து 2023.10.10 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில்** விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணங்களை அதே அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பாதுகாப்பாக முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் **"Rectification of Internal Roads 'A' & 'B' at JCT I & II in Port of Colombo (Contract No.: EW/JCT/02/2023/01)'** என குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர்-திணைக்கள பெறுகைக் குழு, பிரதான பொறியியலாளர் (சிவில்) மே/பா, சிவில் பொறியியல் பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள முகவரியின் பிரதான பொறியியலாளரின் (சிவில்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் **2023.10.11 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணியளவில்** சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
8. எந்தவொரு மேலதிக விபரங்களையும் மேலேயுள்ள முகவரியின் பொறியியலாளரிடமிருந்து (JCT) பெற்றுக் கொள்ளலாம் (தொலைபேசி: 011-2482878)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை.**

# அறிவித்தல்

## கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்

## தகுதிகாண் பரீட்சைக்காக விண்ணப்பம் கோரல்

### பல்கலைக்கழகப் பிரவேசம் - 2022/ 2023 கல்வி ஆண்டு

### கட்புலக் கலை இளமானி / அரங்கக் கலை

**(சங்கீதம்/ நடனம்/ நாடகம் மற்றும் அரங்கம்)**

### கௌரவ பட்டக் கற்கைநெறி

**(2022 க.பொ.த. உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில்)**

2022ஆம் வருடத்தில் நடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் 2022/ 2023 கல்வி ஆண்டிற்காக தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள அபேட்சகர்களிடமிருந்து தககிகாண் பரீட்சைக்காக 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான ஆகக்குறைந்த தகைமைகள்

    (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள ''இலங்கை பல்கலைக்கழகத்தில் ஆரம்ப பட்டக் கற்கை நெறிக்கான அனுமதி, 2022/ 2023 கல்வி ஆண்டு (க.பொ.த. உயர்தர பரீட்சை 2022)'' மாணவர் கையேட்டின் பிரகாரம் பல்கலைக்கழக அனுமதிக்காக பூர்த்தி செய்யவேண்டிய ஆகக்குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மற்றும்

    சித்திரம் மற்றும் சிற்பக் கலை / சங்கீதம் / நடனம் / நாடகம் மற்றும் அரங்கக் கலை போன்ற பாடங்களில் கற்பதற்கு எதிர்பார்க்கும் கற்கை நெறிக்கு குறித்த வருடத்தில் 2022 க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக் குறைந்தது திறமைச் சித்திகள் (C) சகிதம் தோற்றி மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல்.

    (ii) பல்கலைக்கழக அனுமதிக்குத் தேவையான மேற்கூறிய ஆகக்குறைந்த தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் அதற்குப் புறம்பாக கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

02. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**

    விண்ணப்பதாரர்கள் பின்வரும் இணைப்பின் (Link) ஊடாக பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் முகாமைத்துவ முறைமையில் (EMS) பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிகழ்நிலை (online) முறையில் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும். https://ems.vpa.ac.lk/aptitude_test_registration?id=3 விண்ணப்பிக்க வேண்டிய இறுதி நாள் 2023 ஒக்டோபர் 06ஆம் திகதியாகும்.

03. கொடுப்பனவு செய்ய வேண்டிய முறை

    தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து ஒரு கற்கை நெறிக்காக 2000.00 ரூபா கட்டணம் அறவிடப்படும். இந்தக் கொடுப்பனவை கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கி சுதந்திர சதுக்க கிளையில் பேணப்படும் 84072227 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவாகும் வகையில் இலங்கையின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் மேற்கொள்ளலாம். வங்கிக் கிளையில் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது உங்களுக்குக் கிடைக்கும் அனுமதி இலக்கத்தை (Admission Number) அதில் குறிப்பிடுதல் கட்டாயமாகும். பண வைப்பு இயந்திரம் (CDM) மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் செல்லுபடியாகாது.

    க.பொ.த (உ/த) அழகியற்கலை இரண்டு பாடங்களில் தோற்றி அந்த இரண்டு பாடங்களுக்காகவும் தகுதிகாண் பரீட்சைக்காக தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் அபேட்சகர்கள் அந்த இரண்டு பாடங்களையும் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். இரண்டு பாடங்களுக்காக இரண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் இதன்போது ஒவ்வொரு பாடத்திற்காகவும் கிடைக்கும் அனுமதி இலக்கத்தை (Admission Number) அதில் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

    விண்ணப்பதாரர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப் பிரதிகளை பல்கலைக்கழகத்தினால் எப்போதாவது சமர்ப்பிக்குமாறு அறிவித்தால் சமர்ப்பிப்பதற்கு அதனை பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். (i) வங்கிக் கிளைக்கு செலுத்தியிருந்தால் குறித்த பற்றுச்சீட்டு (ii) தேசிய அடையாள அட்டை (iii) 06 மாதத்திற்கு எடுக்கப்பட்ட தெளிவான மேற்புற புகைப்படம் (iv) 2022 க.பொ.த உயர்தர பெறுபேறு ஆவணம்.

04. முழுமையற்ற, பொய்யான தகவல்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான வேளையில் விண்ணப்பதாரரினால் செலுத்தப்பட்ட கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.
05. கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக அனுமதிக்காக தோற்றும் சகல மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.
06. இந்த தகுதிகாண் பரீட்சை நடாத்தப்படும் நாளில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களின் கையடக்கத் தொலைபேசிக்கு குறுஞ்செய்தியாக (SMS) அல்லது அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு (e-mail) மட்டும் அறியத்தரப்படும் என்பதுடன் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. இந்த தகுதிகாண் பரீட்சை சிங்கள மொழியில் மட்டும் நடாத்தப்படும்.
07. மேலதிக விபரங்களுக்கு பல்கலைக்கழக (www.vpa.ac.lk) இணையதளத்திலுள்ள "Aptitude Test - 2022/2023" இற்குப் பிரவேசிக்கவும்.

**பதிவாளர்,**
**கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம்,**
**தொ.பே. : 011-2033710**
**2023-09-13**

# மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்

மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழு என்பது, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படவுள்ள மேன்முறையீட்டு அதிகார அமைப்பாகும் என்பதுடன் மேற்படி சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றின் பிரதான கணக்கீட்டு அலுவலரினால் செய்யப்பட்ட ஒரு முடிபு மூலம் இன்னலுறும் எவரேனுமாள் அத்தகைய முடிபுக்கு எதிராகக் குறித்த குழுவிற்கு மேன்முறையீடு செய்யலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முடிபொன்றினால் இன்னலுறும் எவரேனுமாளின் மேன்முறையீடுகளை விசாரணை செய்து தீர்ப்பளிப்பதற்காக மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்குப் பரிசீலிக்கப்படுவதற்காக, கணக்காய்வு, சட்டம் மற்றும் அரசாங்க நிதி முகாமைத்துவம், பொது நிர்வாகம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் அனுபவமுடைய ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் இந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாவார்கள்.

பாராளுமன்ற இணையதளத்தில் (www.parliament.lk) தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2023 ஒக்டோபர் 09** அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

அல்லது **constitutionalcouncil@parliament.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலாயின் அதன் விடயமாக, "அரசியலமைப்புப் பேரவை: மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழு" எனச் சுட்டிக்காட்டவும்.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்,**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
2023.09.17

The Housewives' companion
Classifieds on
Daily News

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

### சுகாதார அமைச்சு

## SPMC இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சர்வதேச போட்டி ரீதியான விலைகோரல் - (ICB)

### கேள்வி இல: SPMC/03/2023 - 2023 ஒக்டோபர் 31ஆம் திகதி முடிவுறுத்தப்படும்

## மருந்தாக்கல் மூலப்பொருட்களுக்கான பெறுகை

1. இலங்கை, இரத்மலானை, கந்தல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளர் அவர்களால் 2023 ஒக்டோபர் 31ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை மருந்தாக்கல் மூலப்பொருட்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | அளவு (KG) | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் (இல. ரூபா) |
|---|---|---|---|
| 1 | Amoxicillin Trihydrate BP (Compacted) | 36,000.00 | 40,000.00 |
| 2 | Atorvastatin Calcium IP | 2,000.00 | 15,000.00 |
| 3 | Benzhexol Hydrochloride BP | 50.00 | 500.00 |
| 4 | Carbamazepine BP | 2,000.00 | 10,000.00 |
| 5 | Cetirizine Dihydrochloride BP | 400.00 | 2,000.00 |
| 6 | Ciprofloxacin Hydrochloride USP | 2,000.00 | 5,000.00 |
| 7 | Cloxacillin Sodium BP | 9,000.00 | 20,000.00 |
| 8 | Clarithromycin USP | 1,500.00 | 15,000.00 |
| 9 | Diltiazem Hydrochloride USP | 1,000.00 | 5,000.00 |
| 10 | Domperidone Maleate BP | 200.00 | 1,000.00 |
| 11 | Famotidine USP | 1,000.00 | 4,000.00 |
| 12 | Gliclazide BP | 18,000.00 | 50,000.00 |
| 13 | Mebendazole USP(Polymorph Type "A") | 600.00 | 2,000.00 |
| 14 | Prednisolone BP | 500.00 | 12,000.00 |
| 15 | Salbutamol Sulphate BP | 300.00 | 3,000.00 |
| 16 | Spironolactone USP | 300.00 | 6,000.00 |
| 17 | Verapamil Hydrochloride BP | 300.00 | 3,000.00 |
| 18 | Ammonio Methacrylate Copolymer (Type B) USNF | 1,000.00 | 5,000.00 |
| 19 | Di Basic Calcium Phosphate (Dihydrate) USP/ BP | 5,000.00 | 1,000.00 |
| 20 | Colloidal Silicon Dioxide USP/USNF | 800.00 | 2,000.00 |
| 21 | Crospovidone BP/USNF | 200.00 | 500.00 |
| 22 | Hydroxypropyl Cellulose-L JP USP/ BP/ USNF | 1,000.00 | 5,000.00 |
| 23 | Hydroxypropylmethyl Cellulose Phthalate USNF (HP 55) | 200.00 | 500.00 |
| 24 | Hydroxypropylmethyl Cellulose (Hypromellose) USP | 1,000.00 | 1,000.00 |
| 25 | Lactose Monohydrate BP /USP/ USNF (100Mesh) | 2,000.00 | 1,000.00 |
| 26 | Lactose Monohydrate BP /USP/ USNF (200 Mesh) | 40,000.00 | 9,000.00 |
| 27 | Magnesium Stearate BP | 2,000.00 | 500.00 |
| 28 | Maize Starch BP | 36,000.00 | 3,000.00 |
| 29 | Microcrystalline Cellulose USNF/ BP/ USP | 7,000.00 | 2,000.00 |
| 30 | Microcrystalline Cellulose USNF (PH 200 LM) | 5,000.00 | 2,000.00 |
| 31 | Polyethylene Glycol USP/ NF | 200.00 | 500.00 |
| 32 | Povidone K-30 USP/ BP | 1,000.00 | 2,000.00 |
| 33 | Purified Talc BP | 7,000.00 | 500.00 |
| 34 | Sodium Starch Glycolate BP | 10,000.00 | 4,000.00 |
| 35 | Stearic Acid BP (Grade 50) | 400.00 | 500.00 |
| 36 | Titanium Dioxide BP | 600.00 | 500.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 30ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணி இடையே மேலே கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெறலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீள் செலுத்தப்படாத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வாகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுத் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் பெறுகைகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 2623298)

   ''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)

   வெளிநாட்டு முதன்மையாளர்கள் விலைமனு ஆவணங்களை எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். (உள்நாட்டு முகவர்களால் பிரதிநிதித்துவம் செய்யப்படாதவர்கள், அத்தகைய விலைக்கோரல்களுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விலைமனு ஆவணத்திற்கான கட்டணங்களை நிகரான ஐ.அமெரிக்க டொலர் (**US$**) பெறுமதி/பெறுமதிகளில் வங்கி வரைவாக விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும்.)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.**
**தொலைபேசி இல.** : **(00) 94-11-2635353/ (00) 94-11-2637574/(00) 94-11-2636966/(00) 94-11-2636967**
**மின்னஞ்சல்** : chairman**@spmc.gov.lk**
**இணையத்தளம்** : **www.spmc.gov.lk**
**தொலைநகல் இல.** : **(00) 94-11-2634771, 2626621**

Best way
to fulfil
your
Future Dreams

Marriage
Proposals

in the

Sunday Observer

## இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இளமாணிப் பட்டக் கற்கை நெறிகளுக்கான அனுமதி – கல்வியாண்டு 2022/2023

**விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தகவல் முறைமைகள் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் உளச்சார்பு பரீட்சை**

**கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி (UCSC) (096T), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகக் கணினிப் பீடம் (096C) மற்றும் இலங்கையின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கணினிப் பீடம் (096L)**

கொழும்புப் பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி (UCSC), ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணினிப் பீடம் மற்றும் இலங்கையின் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் கணினிப் பீடம் ஆகியவற்றினால் நடாத்தப்படும் தகவல் முறைமைகள் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கான (கல்வியாண்டு 2022/2023) உளச்சார்புப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 10ஆம் திகதி ஒக்டோபர் 2023 வரை (Online) ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளங்களைப் பார்வையிடவும்.

https://ucsc.cmb.ac.lk
https://www.sjp.ac.lk/
https://www.sab.ac.lk/

**பணிப்பாளர்**
**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கல்லூரி**
**17.09.2023**

---

**தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

# பெறுகை அறிவித்தல்

## கொரிய தொழில் பெறுநர்கள் மற்றும் விசேட வேளைகளுக்கு உணவு பானங்கள் வழங்குதல் மற்றும் உபசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் - PR/02/01-01

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால், கொரிய தொழில் பெறுநர்கள் மற்றும் ஏனைய விசேட வேளைகளுக்கு உணவு பானங்கள் வழங்குதல் மற்றும் உபசார நடவடிக்கைகளின் பொருட்டு வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் சகிதம் மேற்கூறப்பட்ட வேலைகள் தொடர்பில் சிறந்த அனுபவம் மற்றும் முகாமைத்துவம் உள்ள நிறுவனங்களிடமிருந்து 2023-10-11ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை தேசிய போட்டி ரீதியான கேள்வி நடைமுறைகளின் ஊடாக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விகளுடன் கேள்விதாரரின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியொன்றுடன் சான்றுபடுத்திய பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சித்துப் பார்த்ததன் பின் மூலப் பிரதி அவ்வேளையிலேயே மீண்டும் ஒப்படைக்கப்படும்.

மீளளிக்கப்படாத 10,000.00 ரூபா வைப்புத் தொகையை பணியகத்தின் காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தி 2023-09-18ஆம் திகதி முதல் 2023-10-10ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அம்மாதிரிப் படிவங்களைப் பூர்த்தி செய்து இரு பிரதிகளில் விலைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். பணியகத்தின் பெறுகைப் பிரிவில் கடமை நேரங்களில் இலவசமாக கேள்வி கோரல் ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கொரிய தொழில் பெறுநர்கள் மற்றும் ஏனைய விசேட வேளைகளுக்கு உணவு பானங்கள் வழங்குதல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைமை அலுவலக இரண்டாம் மாடியின் பிரதிப் பொது முகாமைத்துவப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2023-10-11ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன், இந்த வேலைகள் முடிவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும். கேள்விப் படிவங்களைத் திறக்கும் வேளையில் கலந்து கொள்வதற்கு கேள்விதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவருக்கு அனுமதி வழங்கப்படும்.

இந்தக் கேள்வி சம்பந்தமான இறுதித் தீர்மானத்தை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,**
**இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

**தொலைபேசி இல.** : 011-2880550, 011-2887585
**மின்னஞ்சல்.** : mgr_procurement@slbfe.lk
**இணையதளம்** : www.slbfe.lk

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைக்கோர்ப்போம்**

---

**தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**

## பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல்

### கேள்வி இல. - PR/02/19-04

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் பாவிக்கப்பட்டு, தற்போது பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட பின்வரும் வாகனங்களை விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| வாகன இலக்கம் | வகை | இயந்திரக் கொள்ளளவு | வர்க்கம் | உற்பத்தி வருடம் |
|---|---|---|---|---|
| LW-0080 | AMBULANCE | 3150.00 CC | NISSAN | 1995 |
| GA-3315 | L 200 (Double Cab) | 2477.OO CC | MITSUBISHI | 2000 |

| | |
|---|---|
| வாகனத்தைப் பரீட்சித்துப் பார்க்கக்கூடிய இடம் | 2023-09-18ஆம் திகதி முதல் 2023-10-10ஆம் திகதி வரையான வார நாட்களில் பணியகத்தின் அனுமதியின் பேரில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல எனும் இடத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம். |
| விலைமனுப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் இடம் | பெறுகைப் பிரிவு, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல |
| மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகை | 2,500.00 ரூபாவை 2023-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் காசாளருக்குச் செலுத்துதல் வேண்டும். |
| மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை | 25,000.00 ரூபாவை 2023-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் காசாளருக்குச் செலுத்துதல் வேண்டும். |
| கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் | 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை |
| கேள்விகள் திறக்கப்படுதல் | 2023-10-11ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பணியகத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் இடம்பெறும். |
| கேள்விகளைச் சமர்ப்பித்தல் | கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாவிக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல் (வாகன இலக்கம்)'' எனக் குறிப்பிட்டு முகாமையாளர், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்லயில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தின் இரண்டாம் மாடியில் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். |

கேள்விதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இதில் கலந்துகொள்ளலாம். கேள்வியைக் கையளித்தல் அல்லது இரத்துச் செய்யும் முழுமையான அதிகாரத்தை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,**
**இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி இல.** : 011-2880550, 011-2887585
**தொலைநகல்** : 011-2880564
**இணைதளம்** : www.slbfe.lk

---

**தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**
**இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்**

## பயிற்சி நிலையம் மற்றும் விடுதிக்காக கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக் கோரல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சிலாபம் நகரத்தில் அமைந்துள்ள பயிற்சி நிலையம் மற்றும் விடுதியை நடாத்திச் செல்வதற்காக குருநாகல் நகர மத்தியிலிருந்து 2 கி.மீற்றருக்குள் (கி.மீற்றர் அளவை இடத்தின் பிரகாரம் கவனத்திற் கொள்ளலாம்) அமைந்துள்ள சுமார் 15000 சதுர அடி இடவசதிகளைக் கொண்ட பயிற்சி நிலையமொன்றுக்கு அல்லது விடுதியொன்றுக்குப் பொருத்தமான வீடொன்றை/ கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
கட்டிடம் சம்பந்தமாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

**விரிவுரை மண்டபம்**

- ஒரு கற்கை நெறியின் பொருட்டு சுமார் 40 பயிலுநர்கள் வரையில் கலந்துகொள்ளக்கூடிய 08 வகுப்பறைகளுக்கான இடவசதி சகிதம் (ஒரு அறையின் பரப்பளவு 450 சதுர அடி வரையில்) இடவசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- அதற்குப் புறம்பாக பின்வரும் மாதிரி அமைப்புக்காக கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு அலகுக்கான இடவசதிகள் தேவையாகும்.

| இல. | அலுவலக இடப்பரப்பு வசதிகள் | சதுர அடி அளவு |
|---|---|---|
| 1 | 02 மாதிரி பென்ட்றி அறைகள் | 20x15 |
| 2 | 02 மாதிரி குளியறைகள் | 20x15 |
| 3 | 02 மாதிரி உறங்கும் அறைகள் | 20x15 |
| 4 | 01 சிறுவர் மற்றும் குழந்தை பாதுகாப்புக்கான அறை | 20x15 |
| 5 | சலவை செய்யும் பிரதேசம் (Washing area) | 20x15 |
| 6 | துணி அழுத்தும் பிரதேசம் (Ironing area) | 20x15 |
| 7 | வசிக்கும் அறை (Living room) | 20x15 |
| 8 | உணவு உண்ணும் பிரதேசம் (Dining area) | 20x15 |
| 9 | நோயாளர் சிகிச்சைக்கான மாதிரி அறை (Invalid room) | 20x15 |
| 10 | ஒடுதல் மற்றும் Display area அமைக்கக்கூடிய அளவிலான இடவசதி (10×05 சதுர அடி வரையில்) | 10x5 |
| 11 | Sick room (பயிலுநர்கள் நோயுறும் வேளைகளில் இளைப்பாறுவதற்காக) | 10x5 |

**விடுதி வசதி**

- பெண் பயிலுநர்கள் சுமார் 150 வரையில் தங்கக்கூடிய இடவசதியுடனான மண்டபமொன்று (ஒரு கட்டிலுக்கு 25 அடி வரையில்) இருத்தல் வேண்டும்.
- பயிலுநர்களின் பாவனைக்காக 15 மலசலகூடங்கள் (01 கொமட் சகிதம்) இருத்தல் வேண்டும். விடுதிக்குள் குறைந்தபட்சம் 02 மலசலகூடங்கள் இருத்தல் வேண்டும்.
- ஒரே தடவையில் சுமார் 15 பயிலுநர்கள் குளிப்பதற்கான குழாய் வசதிகளுடனான இடமொன்று இருத்தல் வேண்டும்.
- பயிற்சிப் போதனாசிரியர்கள் மற்றும் மகளிர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான மலசலகூடம் மற்றும் குளியலறை வசதிகள் சகிதம் 01 அறை இருத்தல் வேண்டும்.
- விடுதியினுள் மின் விசிறிகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் போதுமான காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் இருத்தல் வேண்டும்.
- பயிலுநர்களின் பைகள் மற்றும் ஏனைய பொருட்களை வைக்கக்கூடிய இடவசதி இருத்தல் வேண்டும்.
- ஒரே தடவையில் 200 பயிலுநர்கள் வரையில் உடற்பயிற்சி செய்வதற்குப் பொருத்தமான 1000 சதுர அடி பரப்பளவான மைதானமொன்று இருத்தல் வேண்டும்.
- தேநீர் தயாரிப்பதற்காக சிறிய அளவிலான சமையலறையொன்று இருத்தல் வேண்டும்.

**அலுவலக இடப்பரப்பு**

- 07 பணியாட் தொகுதியினருக்குப் போதுமான அலுவலக இடவசதியிருத்தல் வேண்டும்.
- 20x20 அளவிலான களஞ்சிய அறை இருத்தல் வேண்டும். (400 சதுர அடி)
- பாதுகாப்பு கூடாரமொன்றை நிர்மாணிப்பதற்காக அலுவலகப் பிரதேசத்தில் இடவசதி இருத்தல் வேண்டும்.
- பயிற்சி நிலையத்தைச் சுற்றி படலை சகிதம் மதில் இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் நாளாந்தம் 10 வாகனங்கள் வரையில் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதி இருத்தல் வேண்டும்.
- பணியாட் தொகுதியினர் மற்றும் வெளியாட்கள் பாவிப்பதற்காக சுமார் 06 மலசலகூடங்கள் வரையில் வெவ்வேறாக இருத்தல் வேண்டும்.
- சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தரும் சுமார் 10 சேவை பெறுநர்கள் அமர்ந்து தமது கடமை சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான இடவசதி கட்டிடத்தினுள் இருத்தல் வேண்டும்.
- நேரடி நீர்க் குழாய் இணைப்புகளுடன் வேறான நீர் மானி இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டிடத்தில் 20,000 லீற்றர் அளவு சேமித்து வைக்கக் கூடிய நீர்தாங்கி/ தாங்கிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- குடும்ப தினம் மற்றும் விரிவுரைகள் நடாத்துவதற்கு குறைந்தபட்சம் 75 பேர் இருக்கக்கூடிய விரிவுரை மண்டபம் இருத்தல் வேண்டும்.
- கட்டிடம் மாதாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
- கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளை பாவித்து இலகுவாக அடையக் கூடிய வர்த்தக மயமான பிரதேசத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- மூன்று சுற்று மின் வழங்கலுடன் வேறாக மின் மானி இருத்தல் வேண்டும். மின்சாரம் தடைப்படும் வேளையில் பாவிப்பதற்கு மின் பிறப்பாக்கி இயந்திரம் இருப்பது மேலதிக தகைமையாகும்
- நிலையான தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- பிரதான மின் விநியோக பலகையுடன் அடிப்படை மின் கட்டுப்பாட்டு அமைப்பு மின் விசிறிகள் மற்றும் ஏனைய துணைப்பாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டதாக அறிவித்த பின்னர் கட்டிடம் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2 வாரங்களுக்குள் வழங்கக்கூடிய இயலுமை இருத்தல் வேண்டும்.
- கழிவு நீர் மற்றும் மலக்கழிவுகளை அகற்றும் முறைமைகள் முறையாகத் தயார் செய்யப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்
- அறைகளை வேறாக்குதல் பணியகத்தின் தேவையின் பிரகாரம் இடம் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்தை நடத்திச் செல்வதனால் குறித்த கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த தொந்தரவும் அற்ற இடமாக இருத்தல் வேண்டும். அருகில் வசிப்பவர்களால் அலுவலக வேலைகளுக்கு இடையூறு ஏற்படாத இடமாகவிருத்தல் வேண்டும்.
- அதிகாரிகள் தங்குமிட வசதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வேறாக்கப்பட்ட இரண்டு அறைகள் அல்லது பல அறைகள் மலசலகூட வசதிகளுடன் கட்டிடத்தினுள் அமைந்திருத்தல் மற்றும் அதன்பொருட்டு வேறான நுழைவாயில் இருத்தல் வேண்டும் மற்றும் இந்த வளவினுள் இதற்கான கட்டிடமொன்று அமைந்திருத்தல் மேலதிக தகைமையாகும்.
- குத்தகை வழங்குநரால் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகை தொகை அரச மதிப்பீட்டு அறிக்கைக்கு உட்பட்டு கொடுப்பனவுகள் இடம் பெறும் (குறைந்தபட்ச தொகை)

**கட்டிட உரிமையாளரால் இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்**

- விலைமனு பத்திரத்துடன் பணியகத்திற்கு வழங்கப்படும் கேள்வி ஆவணம்
- மாதாந்த குத்தகைத் தொகை ரூபா
- குத்தகைக்கு இயைபான ஆதனத்தின் நிலையான முகவரி
- கட்டிட உரிமையாளர் உரிமைத்துவத்தைப் பெற்றுக் கொண்ட காணி உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
- சம்பந்தப்பட்ட ஆதனத்தின் வரைபடம்
- சான்றுபடுத்திய அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம். (குறித்த கட்டிட வரைபடம் A4 அளவாக அல்லது A3 அளவாக சிறியதாக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படப் பிரதியாக இருத்தல் வேண்டும்)
- குத்தகை வழங்குநரின் பெயர்/முகவரி/தேசிய அடையாள அட்டை இல மற்றும் அதன் தெளிவான புகைப்படப் பிரதி
- கட்டிட உரிமையாளரின் தொலைபேசி இலக்கம்
- இணக்கச் சான்றிதழ்
- கடந்த 06 மாதத்திற்குள் மின்சாரம், தொலைபேசி, வரிக்கட்டணம் போன்றவற்றின் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதிகள்
- குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் ஆதனம் தொடர்பில் பிரத்தியேக உரிமைத்துவம் இல்லாத வேளையில், அதாவது குறித்த ஆதனத்தின் மூல உரிமையாளர் இலங்கைக் குடியரசு எனும்போது (ஸ்வர்ணபூமி/ ஜயபூமி / வழங்கல் பத்திரம் / 30 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட காணி போன்றன) அதனை குறித்த பிரதேச செயலாளரின் அனுமதி சகிதம் கடிதமொன்றுடன் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.
- இது சம்பந்தமாக பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மட்டும் தெளிவுபடுத்திக் கொள்ளுமாறும், இடைத்தரகர் அல்லது வேறு எந்தவொரு அதிகாரி, வெளி தரப்பினருடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளல் இந்த விலைக்கோரல் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம்.

பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, இலக்கம் 234, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தின் 2ஆம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.10.11ம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். உங்களது விண்ணப்பத்தை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டிடத்தை வாடகை அடிப்படையில்/குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தல். PR/02/04-1 (62)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பமொன்றை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைகளுக்கு உட்பட்டு தெரிவுகள் இடம்பெறும். மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையை இலங்கை வங்கியில் 0000001650 எனும் பணியகத்தின் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து பின்வரும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகங்களிலிருந்து 2023-09-18ஆம் திகதி முதல் 2023-10-10ஆம் திகதி வரையான அலுவலக நேரத்தினுள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | கிளை அலுவலகம் | முகவரி |
|---|---|---|
| 01 | பயிற்சி நிலையம் - சிலாபம் | இல. 118, மயிலங்குளம், சிலாபம். |

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி / தொலைநகல் : 2880550/ 2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைக்கோர்ப்போம்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

ITN SriLanka YOUR FAMILY CHANNEL | வசந்தம் FM | வசந்தம் TV | PRIME TV CATCH THE REFLECTION | digital WE THINK INDEPENDENT

## சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

# வெற்றிடம்

### முகாமையாளர் செய்தி மற்றும் நடப்பு விவகாரம் (டிஜிட்டல் ஊடகம்) – ஒப்பந்தம்

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் முகாமையாளர் செய்தி மற்றும் நடப்பு விவகாரம் (ஒப்பந்தம்) பதவிக்காக ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. குறித்த வெற்றிடம் தொடர்பான விபரங்கள் 2023.09.17ம் திகதி Sunday Observer பத்திரிகை மற்றும் **www.topjobs.lk** அல்லது **www.itn.lk** ஆகிய இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கூறிய பதவிக்காக விண்ணப்பங்கள் பொறுப்பேறகப்படும் இறுதி திகதி 2023.10.07 ஆகும்.

**சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு**
**விக்ரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**
2023.09.13

---

## தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

SLBFE

# வடமத்திய மாகாண புலம்பெயர் வள நிலையத்திற்கு வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுராதபுரம் நகரத்தில் அமைந்துள்ள புலம்பெயர்வள நிலையத்தை நடாத்திச் செல்வதற்காக அனுராதபுரம் நகர மத்தியிலிருந்து 2 கி.மீற்றருக்குள் (கி.மீற்றர் அளவை இடத்தின் பிரகாரம் கவனத்திற் கொள்ளலாம்) அமைந்துள்ள சுமார் 5000 - 6500 சதுர அடி இடவசதிகளைக் கொண்ட புலம்பெயர் வள நிலையமொன்றுக்கு பொருத்தமான கட்டிடமொன்றை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கட்டிடம் சம்பந்தமாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

- ஒரு தடவையில் அண்ணளவாக 30 பயிலுநர்களுக்கு பாடம் நடாத்தக்கூடிய 400 சதுர அடி அளவான 02 விரிவுரை மண்டபம் இருத்தல் வேண்டும்.
- கட்டிடத்தைச் சுற்றி படலை சகிதம் பாதுகாப்பு மதில் இருத்தல் வேண்டும்.
- நாளாந்தம் குறைந்தபட்சம் 05 வாகனங்கள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
- பணியாளர்கள் மற்றும் வெளி தரப்பினர் பயன்படுத்துவதற்காக சுமார் 06 மலசலகூடங்கள் வெவ்வேறாக இருத்தல் வேண்டும்.
- சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் சுமார் 10 நபர்கள் ஒரே தடவையில் அமர்ந்திருந்து தமது கடமை சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான இடவசதி கட்டிடத்தினுள் இருத்தல் வேண்டும்.
- நேரடி நீர்க் குழாய் இணைப்புகளுடன் வேறான நீர்மானி இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டிடத்திற்கு மேலாக நீர் கிட்டத்தட்ட 2000 லீற்றர் அளவு சேமித்து வைக்கக் கூடிய நீர்தாங்கிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- இக் கட்டிடம் மாதாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
- இக் கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளை பாவித்து இலகுவாக அடையக் கூடிய வர்த்தக மயமான பிரதேசத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- வங்கி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் இருத்தல் வேண்டும்.
- மூன்று சுற்று மின் வழங்கலுடன் வேறாக மின்மானி இருத்தல் வேண்டும். மின்சாரம் தடைப்படும் வேளையில் பாவிப்பதற்கு மின் பிறப்பாக்கி இயந்திரம் இருப்பது மேலதிக தகைமையாகும்
- நிலையான தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- பிரதான மின் விநியோக பலகையுடன் அடிப்படை மின் கட்டுப்பாட்டு அமைப்பு மின் விசிறிகள் மற்றும் ஏனைய துணைப்பாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- வளிச்சீராக்கி முறைமை பொருத்தப்பட்டிருத்தல் மேலதிக தகைமையாகும்.
- இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டதாக அறிவித்த பின்னர் கட்டிடம் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டு 02 வாரத்திற்குள் வழங்கக்கூடிய தகைமை இருத்தல் வேண்டும்.
- கழிவு நீர் மற்றும் மலக்கழிவுகளை அகற்றும் முறைமைகள் முறையாகத் தயார் செய்யப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்.
- அறைகளை வேறாக்குதல் மற்றும் கணனி வலையமைப்பிடல் வேலைகளுக்கு பணியகத்தின் தேவையின் பிரகாரம் இடம் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்தை நடத்திச் செல்வதனால் குறித்த கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த தொந்தரவும் அற்ற இடமாக இருத்தல் வேண்டும்.
- அதிகாரிகள் தங்குமிட வசதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வேறாக்கப்பட்ட இரண்டு அறைகள் அல்லது பல அறைகள் மலசலகூட வசதிகளுடன் கட்டிடத்தினுள் அமைந்திருத்தல் மற்றும் அதன்பொருட்டு வேறான நுழைவாயில் இருத்தல் வேண்டும் மற்றும் இந்த வளவினுள் இதற்கான கட்டிடமொன்று அமைந்திருத்தல் மேலதிக தகைமையாகும்.
- குத்தகை வழங்குநரால் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகை தொகை அரச மதிப்பீட்டு அறிக்கைக்கு உட்பட்டு கொடுப்பனவுகள் இடம் பெறும் (குறைந்தபட்ச தொகை)

**கட்டிட உரிமையாளரால் இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்**

- விலைமனு பத்திரத்துடன் பணியகத்திற்கு வழங்கப்படும் கேள்வி ஆவணம்
- மாதாந்த குத்தகைத் தொகை ரூபா
- குத்தகைக்கு இயைபான ஆதனத்தின் நிலையான முகவரி
- கட்டிட உரிமையாளர் உரிமைத்துவத்தைப் பெற்றுக் கொண்ட காணி உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
- சம்பந்தப்பட்ட ஆதனத்தின் வரைபடம்
- சான்றுபடுத்திய அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம். (குறித்த கட்டிட வரைபடம் A4 அளவாக அல்லது A3 அளவாக சிறியதாக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட புகைப்படப் பிரதியாக இருத்தல் வேண்டும்)
- குத்தகை வழங்குநரின் பெயர்/முகவரி/தேசிய அடையாள அட்டை இல மற்றும் அதன் தெளிவான புகைப்படப் பிரதி
- கட்டிட உரிமையாளரின் தொலைபேசி இலக்கம்
- இணக்கச் சான்றிதழ்
- கடந்த 06 மாதத்திற்குள் மின்சாரம், தொலைபேசி, வரிக்கட்டணம் போன்றவற்றின் கட்டணப் பற்றுச்சீட்டின் பிரதிகள்
- குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் ஆதனம் தொடர்பில் பிரத்தியேக உரிமைத்துவம் இல்லாத வேளையில், அதாவது குறித்த ஆதனத்தின் மூல உரிமையாளர் இலங்கைக் குடியரசு எனும்போது (ஸ்வர்ணபூமி/ ஜயபூமி / வழங்கல் பத்திரம் / 30 வருட குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட காணி போன்றன) அதனை குறித்த பிரதேச செயலாளரின் அனுமதி சகிதம் கடிதமொன்றுடன் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.
- இது சம்பந்தமாக பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மட்டும் தெளிவுபடுத்திக் கொள்ளுமாறும், இடைத்தரகர் அல்லது வேறு எந்தவொரு அதிகாரி, வெளி தரப்பினருடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ளல் இந்த விலைக்கோரல் நிராகரிக்கப்படுவதற்கு ஏதுவாகலாம்.

பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, இலக்கம் 234, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தின் 2ஆம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.10.11ம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். உங்களது விண்ணப்பத்தை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''கட்டிடத்தை வாடகை அடிப்படையில்/குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தல். PR/02/04-01(65)'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பமொன்றை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக்கொள்ளும் உரிமையை பணியகத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைகளுக்கு உட்பட்டு தெரிவுகள் இடம்பெறும். மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகையை இலங்கை வங்கியில் 0000001650 எனும் பணியகத்தின் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து அதன் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து பின்வரும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகங்களிலிருந்து 2023-09-18ஆம் திகதி முதல் 2023-10-10ஆம் திகதி வரையான அலுவலக நேரத்தினுள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | கிளை அலுவலகம் | முகவரி |
|---|---|---|
| 01 | வடமத்திய மாகாண புலம்பெயர் வள நிலையம் | இல. 29, வான் எல இல்லம், அபய பிளேஸ், அனுராதபுரம். |

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/ தொலைநகல் : 2880550/ 2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

SLSI SYSTEM CERTIFIED ISO 9001

**அக்கரையில் மாண்புற இக்கறையில் கைக்கோர்ப்போம்**

---

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை

USDA

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் செயற்படுகின்ற நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) பதவியின் (MM1-1) பொருட்டு தகுதிகளையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து உள்ளக மற்றும் வெளியக ரீதியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆட்சேர்த்துக் கொள்வதற்கான பொதுவான தகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும்,

(அ) இலங்கை பிரஜை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) பதவியில் ஒப்படைக்கப்படுகின்ற பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பணிபுரியத் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தேர்ச்சியினைக் கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

(இ) சிறந்த நன்னடத்தையினையுடைய ஒருவராக இருத்தல் வேண்டும்.

**வெளியக விண்ணப்பதாரிகளின் பொருட்டான கல்வித் தகைமைகள்:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்ட இளமாணிப் பட்டம் ஒன்று

**மற்றும்**

(ஆ) சட்டத்தரணி ஒருவராக ஆங்கில மற்றும் சிங்கள மொழியில் பணியாற்றும் அதிகாரத்துடனான நொத்தாரிசுப் பணியில் 02 வருட சேவை அனுபவம்

**மற்றும்**

(இ) பட்டத்தினைப் பெற்றதன் பின்னர் அரசாங்க அல்லது அரசாங்க நிர்வாகத்திலுள்ள நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது அரசாங்கம் அங்கிகரித்த தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து சட்ட நடவடிக்கைகள் மற்றும் நொத்தாரிசுப் பணிகள் தொடர்பில் ஆகக் குறைந்தது இரு வருட சேவை அனுபவம் இருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரிகளின் பொருட்டான தகைமைகள்:**

(அ) நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கனிஷ்ட முகாமைத்துவ சேவைத் தொகுதியின் (JMM-1-) 1ம் தரத்தின் குறித்த துறையில் 05 வருட திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றிருத்தல்.

**பொதுவான நிபந்தனைகள்:**

| | | |
|---|---|---|
| **சம்பள அளவுத்திட்டம்** | : | MM 1-1-2016 Rs.53, 175 - 10 x 1,375 - 15x 1,910 – Rs.95, 575 |
| **சம்பளம்** | : | Rs.53, 175/- |
| **வயதெல்லை** | : | 25 வயதிலும் குறையாத மற்றும் 45 வயதிற்கு மேற்படாத ஒருவராக இருத்தல் வேண்டும். உள்ளக ரீதியான விண்ணப்பதாரிகளுக்கு உச்சபட்ச வயதெல்லை ஏற்புடையதல்ல |
| **பிற நன்மைகள்** | : | *வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு<br>*நிறுவனத்தினால் 12% ஊ.சே.நி (EPF) மற்றும் 3% ஊ.ந.நி (ETF) பங்களிப்பு<br>*அரசாங்க மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பிற நன்மைகள் |

அரச திணைக்களங்கள் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளில் தற்பேது பணியாற்றும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பப்படிவங்கள் உரிய நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். முழுமையான சுய விபரத் தரவுகளுடனான விண்ணப்படிவங்களை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2023.10.02ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது மின்னஞ்சல் முகவரியில் சமர்ப்பித்தல் வேண்டும்

**பணிப்பாளர் நாயகம்**
**நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை**
**09ம் மாடி,**
**செத்சிறிபாய, பத்தரமுல்லை**
**தொலைபேசி இலக்கம்** : 011-**2871305**
**பெக்ஸ்** : **011-2865512**
**மின்னஞ்சல்** : **admnusda@gmail.com**

---

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

# கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிகள் 2022/ 2023

### கௌரவப் பட்டம் (B.Sc. Honours) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்தும். கௌரவப் பட்டம் (B.Sc. Honours) உடற் கல்வியியல்

**மொழிமூலம் : ஆங்கிலம்**

மேலே குறிப்பிடப்பட்ட பட்டப்படிப்பை கற்க விரும்பும் மாணவர்களை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் பரீட்சை விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

உள்நுழைவு தேவைப்பாடுகள், விண்ணப்ப செயற்பாடுகள், தேவைப்படும் ஆவணங்கள், செயன்முறைப் பரீட்சை மற்றும் ஏனைய விபரங்களுக்காக கீழ்க்காணும் இணையதளத்தை தயவு செய்து பார்வையிடுங்கள் (www.sab.ac.lk)

உடற் கல்வியியல் கௌரவ பட்டம் (B.Sc. Honours) அல்லது விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ கௌரவ (B.Sc. Honours) பட்டத்திற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ பட்டத்திற்காக மாத்திரம் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு அல்லது அவர்களது முன்னுரிமையின் அடிப்படையில் ஏனைய சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பிக்க முடியும். பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த முன்னுரிமை பாதிக்காது.

இரண்டு பட்டப்படிப்புக்களுக்கும் ஒரு விண்ணப்பதாரி விண்ணப்பிக்க முடியும். இவ் வகை விண்ணப்பதாரிகள் ஒரு நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பத்தை மாத்திரம் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட ஆவணங்களின் வருடல் பிரதிகளுடன் (Scan copies) அனுப்புதல் வேண்டும்.

தரப்பட்டுள்ள link மூலம் நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பத்தை விண்ணப்பதாரி சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் உண்மை வருடல் பிரதிகளான (original scanned copies) கல்விச் சான்றிதழ்கள், மருத்துவ சான்றிதழ், வங்கி செலுத்தல் உறுதிச் சீட்டு (Paying voucher) மற்றும் வங்கி செலுத்தல் பற்றுச்சீட்டுகளை (paying slip, பச்சை நிற பற்றுச் சீட்டு) இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி செலுத்தப்பட வேண்டிய பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு

| பாடநெறி | பணம் |
|---|---|
| கௌரவப் பட்டம் (B.Sc. Honours) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்தும். | ரூ. 1000.00 |
| கௌரவப் பட்டம் (B.Sc. Honours) உடற் கல்வியியல் | ரூ. 1000.00 |
| இரண்டிற்கும் :- கௌரவப் பட்டம் (B.Sc. Honours) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்தும், மற்றும் கௌரவப் பட்டம் (B.Sc. Honours) உடற் கல்வியியல் | ரூ. 1500.00 |

நிகழ்நிலை (ஓன்லைன்) விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2023 ஐப்பசி 04 ஆகும்.

தகுதிகாண் பரீட்சைக்கான நேர அட்டவணை பின்வருமாறு

| எழுத்துமூல பரீட்சை | | |
|---|---|---|
| **பாடநெறி** | **திகதி** | **நேரம்** |
| கௌரவப் பட்டம் (B.Sc. Honours) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம். | 23.10.2023 | மு.ப. 09.00 - மு.ப. 10.00 |
| கௌரவப் பட்டம் (B.Sc. Honours) உடற் கல்வியியல் | 23.10.2023 | மு.ப. 11.00 - மு.ப. 12.00 |

| செயன்முறைப் பரீட்சை (இரண்டு பாடநெறிக்கும்) | |
|---|---|
| **திகதி** | **நேரம்** |
| 23.10.2023 | மு.ப. 11.00 - பி.ப. 06.00 |
| 24.10.2023 | மு.ப. 08.00 - பி.ப. 06.00 |
| 25.10.2023 | மு.ப. 08.00 - பி.ப. 06.00 |

குறிப்பு: 2023 புரட்டாதி (செப்டம்பர்) 18ம் திகதி முதல் இங்கே குறிப்பிட்டுள்ள இணையதள (www.sab.ac.lk) முகவரியில் விண்ணப்பங்கள் கிடைக்கும். (www.sab.ac.lk)

**பதிவாளர்,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய.**
**Email : aptsspe@appse.sab.ac.lk**

# வாரபலன்



17.09.2023 - 23.09.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

வாரத்தின் மத்தியில் நிகழும் குருவின் வக்கிர கதியால் தேவையற்ற செலவுகள் குறையும். வருமானம் அதிகரிக்கா விட்டாலும் செலவுகள் குறைவதால், பணச் சிக்கல்கள் குறையும். சனி தொழில் ஸ்தானத்தில் இருக்கின்றார். சூரியனுக்கு 6இல் இருக்கின்றார். எனவே, தொழில் லாபங்கள் ஸ்திரமாக இருக்கும். பகை, போட்டிகள் குறையும். மனதில் துணிச்சல் ஏற்படும். இராசிநாதன் செவ்வாய் 6ஆம் இடத்தில் இருப்பதால் சகோதர ஒற்றுமை ஓங்கும். எட்டுக்குரிய செவ்வாய் 6இல் இருப்பதாலும், குருவின் பார்வையாலும் எந்தப் பிரச்சினைகளும் அதிகரிக்காமல் கட்டுக்குள் இருக்கும். பிள்ளைகள் நன்கு படிப்பார்கள். அவர்களைப் பற்றிய கவலை வேண்டாம். தெய்வ தரிசனம் உண்டு. அரசாங்க காரியங்களில் அனுகூலமும் உண்டு.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

இராசிநாதன் சுக்கிரன் 3இல் இருப்பதால் எதையும் மனத் துணிச்சலோடு சமாளிக்கும் ஆற்றல் உண்டு. பாக்கியஸ்தான சனி, சில எதிர்பாராத நன்மைகளைச் செய்வார். உடல் நிலை முன்னேறும். அலுவலகத்தில் அதிகாரிகள் ஒத்துழைப்பு கிடைக்கும். நிதி நிலைமை சரியாகும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். வீடு வாங்கவும் மனை வாங்கவும் யோகம் உண்டு. ஆறில் உள்ள கேது உங்களுடைய காரியங்களை வெற்றிகரமாக்குவார். எதிலும் வாய் கொடுத்து மாட்டிக் கொள்ள வேண்டாம். முன் யோசனையுடன் அவசரம் காட்டாது காரியங்களைச் செய்யவும். உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

இலாபாதிபதி செவ்வாய் கன்னி இராசியில் பலமாக இருக்கின்றார். அவர் 8ஆம் பார்வையாக தனது (இலாப இராசியை) பார்க்கின்றார். எனவே நிலம், வீடு முதலியவை உங்களுக்கு லாபகரமாக இருக்கும். புதிய வீடுகள் வாங்கலாம், அல்லது இருக்கும் வீட்டை விரிவுபடுத்தலாம். மேலதிகாரிகள் உங்களுக்கு ஆதரவாகச் செயல்படுவார்கள். இராசிநாதன் புதன் ஆட்சி பெற்ற சூரியனோடு இணைந்து உங்களுடைய புத்தியை கூர்மையாக்குவார். ஆத்ம காரகரான சூரியன் 3இல் இருப்பதால் உங்களுக்கு அரசாங்க உதவிகளும் நன்மைகளும் கிடைக்கும். பிள்ளைகளால் நன்மை உண்டு. கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் நீங்கும். கடன்கள் குறைய ஆரம்பிக்கும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

சுகாதிபதி சுக்கிரன் இராசியிலேயே வக்கிரமாக இருக்கிறார். 2ஆம் இடத்தில் சூரியன் ஆட்சி பெற்று புதனோடு இணைந்து இருப்பதால் எதிலும் விரைவாக யோசித்து நடவடிக்கை எடுக்கும் குணம் பிரகாசிக்கும். அது உங்களுக்கு வெற்றியைத் தரும். கண்டச் சனி என்று கலங்க வேண்டாம். சனி வக்கிரகதியில் இருப்பதால் துவக்க குழப்பங்கள் மாறி உங்களுக்கு நன்மையைச் செய்யும் வாய்ப்பு உண்டு. ஆறாம் இடத்தை குரு பார்ப்பதால் போட்டிகள் குறையும். கவனத்தோடு நிதியை கையாளுங்கள். பண விஷயங்களில் அலட்சியம் வேண்டாம். புதிய வாகனங்கள் வீடுகள் வாங்கும் வாய்ப்பு உண்டு. பயன்படுத்திக் கொள்ளுங்கள். மூன்றாம் இடத்தில் செவ்வாய் பலமாக இருந்து உங்கள் பாக்கிய ஸ்தானத்தையும் தொழில் ஸ்தானத்தையும் பார்ப்பதால் சகோதர உதவிகளும் ஒத்துழைப்பும் கிடைக்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

இராசிநாதன் வலுவடைந்து விட்டால் அவர்களுக்கு எப்படிப்பட்ட சூழ்நிலையையும் கையாளும் திறன் கிடைத்துவிடும். தன குடும்ப புதனுடன் இராசியில் சூரியன் ஆட்சி பெற்று இருக்கிறார். 7ஆம் இடத்தையும் அவர் பார்க்கிறார். எனவே, குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகன்று அன்பும் ஒற்றுமையும் அதிகரிக்கும். லாபத்திற்குரிய புதன் சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகம் ஏற்படுத்துவதால் உத்தியோகத்திலும் தொழிலிலும் நல்ல முன்னேற்றம் இருக்கும். 12இல் உள்ள சுக்கிரன் பரவசமான நன் மைகளைத் தருவர். 3இல் உள்ள கேது உங்களுக்கு தன்னம்பிக்கையையும் வெற்றியையும் தருவார். 6ஆம் இடத்தில் உள்ள சனி உங்கள் செயலை நல்ல விதமாக முடித்து வைப்பார். பெரும்பாலான கிரக நிலைகள் சாதகம் என்பதால் சில எதிர்கால நடவடிக்கைகளை நீங்கள் துவக்க வேண்டும்

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

தைரிய ஸ்தான செவ்வாய் உங்கள் இராசியில் இருந்து ஏழாம் இடத்தைப் பார்க்கிறார். இதுவரை தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த குரு அஷ்டமத்தில் வக்கிரம் பெறுவதால் அவரே சில நன்மைகளைச் செய்யவும் வாய்ப்பு உண்டு. அமைதியாகவும் சமாதானமாகவும் நீங்கள் பேசுவதால் உங்களோடு முறுக்கி பகை கொண்டிருந்தவர்கள் உங்களை நெருங்குவார்கள். அதனால் சாதகம் உண்டு. அதற்கு துணையாக சுக்கிரன் இலாப ஸ்தானத்திலிருந்து உதவுவார். குருவின் பார்வை உங்கள் சுகஸ்தானத்தில் விழுவதும் இதை உறுதி செய்கிறது. பிரச்சினைகள் இருந்தாலும் அதை நல்ல முறையில் தீர்வு காணும் வாய்ப்புகளும் உண்டு என்பதை மறந்து விடாதீர்கள்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

இலாபஸ்தானத்தில் புதன். அவரோடு சூரியன் ஆட்சி. புத ஆதித்ய யோகம் நன்கு செயல்படும். எதிலும் அலட்சியம் இல்லாமல் கவனத்தோடு இருந்தால் வெற்றி நிச்சயம். பெரியவர்கள் ஆசி உண்டு. குரு உங்கள் ராசியைப் பார்ப்பது, எதையும் தெளிவோடு நிதானமாக அணுகுகின்ற மனநிலையைத் தரும். காரிய தடைகள் விலகும். கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் நீங்கும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும். நண்பர்கள் சந்திப்பு நிகழும். நண்பர்களால் ஆதாயம் உண்டு.

வாகனங்கள் பழுதாகலாம். பிரயாணங்களில் தாமதம் நிகழலாம். தாயின் உடல் நிலையிலும் சில பின்னடைவுகள் ஏற்படலாம். கவனம் தேவை.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

அர்த்தாஷ்டம சனி நீங்கி 3இல் சனி திரும்ப வந்திருப்பது உங்களுக்கு சில நன்மைகளுக்கான மறு வாய்ப்பினைத் தருகிறது. பாக்கியஸ்தானத்தில் 7ஆம் அதிபதி சுக்கிரன் இருப்பதால் கணவன் மனைவி உறவுகள் அன்பும் ஆதரவும் கொண்டதாக இருக்கும். எழுத்துத் துறை, பத்திரிகைத் துறை, தொழில்நுட்பத் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் உண்டு. அரசாங்க காரியங்கள் அனுகூலமாகும். 11இல் செவ்வாய் பக்குவமாக அமர்ந்திருப்பதால் வீடு கட்டும் யோகம் உண்டு. சகோதர உதவிகளும் உண்டு. கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் உண்டு. மனதில் உற் சாகம் பிறக்கும். தெய்வ தரிசனம் உண்டு. 3இல் சனி வக்கிரமாக இருப்பதால் இளைய சகோதரர்களிடம் சில பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பு உண்டு.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

வக்ரகதியில் இருந்தாலும் இராசிநாதன் இராசிநாதன் தானே. அவர் திரிகோண ஸ்தானத்திலிருந்து மற்றொரு திரிகோண ஸ்தானமான இராசியைப் பார்ப்பதால் உங்களுக்கு வருகின்ற பிரச்சினைகள் மிக விரைவாக நீங்கிவிடும். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போவது போல் போய்விடும். அது மட்டும் அல்ல, கொஞ்சம் நிதானத்தோடு மட்டும் இருந்தால் உங்களுக்கு வருகின்ற பிரச்சினைகளே, புதிய வாய்ப்புகளையும் தரும். திட்டமிட்ட வேலைகளை மிக விரைவாக நிறைவேற்றும் வழிகள் புலப்படும். சுக்கிரன் அஷ்டமத்தில் இருந்தாலும் அது அவருக்கு நல்ல இடம். அது மட்டும் அல்ல. வக்கிரமாக இருப்பதால் சில எதிர்பாராத நன்மைகளையும் தருவார். தம்பதிகள் ஒருவருக்கொருவர் ஆலோசனை செய்து காரியங்களை நடத்தினால் குடும்பம் சிறப்பாக இருக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

இராசியில் சனி வந்து அமர்ந்திருக்கிறார். மகர, கும்ப இராசிகளுக்கு சனி பெரிய இடையூறுகளைச் செய்ய மாட்டார். அத்தோடு இராசியில் அவர் வக்கிரகதியில் இருப்பதும் ஒரு விதத்தில் நல்லது தான். தனஸ்தான அதிபதி இராசியில் அமர்ந்திருப்பதால் வருவாய் அதிகரிக்கும். கடன் பிரச்சினைகள் தீரும். கையில் ஓரளவு சேமிப்பு தங்கும். குடும்ப விஷயங்களில் சற்று தாமதமானாலும் செயல்கள் நீங்கள் நினைத்தபடி நிறைவேறும் வாய்ப்பு உண்டு. குரு அஷ்டம இராசியை பார்ப்பதால் கஷ்டங்கள் குறையும். கட்டுக்குள் இருக்கும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

7 இல் சூரியன் ஆட்சியோடு இருக்கிறார். பஞ்சமாதிபதி புதனுடன் இணைந்து உங்கள் இராசியைப் பார்ப்பது சிறப்பான பலனைத் தரும். குடும்ப அமைதியையும் ஆக்கபூர்வமான செயல்களையும் காட்டும். மூன்றாம் இடத்தில் உள்ள ராகு உங்களுக்கு தைரியமான மனநிலையை தந்து சிக்கல்களை எதிர்கொள்ளும் ஆற்றலைத் தருவார். பணப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். வருமான உயர்வுக்கு வழிகாட்டுவார். ஜென்ம சனி சற்று விலகி நிற்பதால் அனுகூலங்கள் உண்டு. ஆரோக்கியத்தில் முன்னேற்றம் இருக்கும். அலுவலக சூழல் நன்றாக இருக்கும். வக்கிர சனியால் தொழில் முன்னேற்றம் உண்டு. பூர்வீக சொத்து பிரச்சினைகள் சாதகமாகும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

வக்கிரமாக இருந்தாலும், இராசிநாதன் குரு இரண்டிலிருந்து உங்களுடைய தொழில் ஸ்தானத்தைப் பார்வையிடுவது சிறப்பு. விரயத்தில் இருந்த சனி சற்று மாறி இலாபஸ்தானத்தில் இருப்பது மற்றொரு சிறப்பு. அது அவருக்கு ஆட்சி வீடாக இருக்கும். தடைப்பட்டிருந்த முயற்சிகள் நிறைவேறலாம். வருமானத்தில் பெரிய அளவு மாற்றம் இருக்காது. நீங்களாக கெடுத்துக் கொள்ளாத வரை குடும்ப அமைதிக்கு உத்திரவாதம் உண்டு. சகோதரர்கள் உதவுவார்கள். வீடு மற்றும் பூமி வாங்கும் யோகங்கள் உண்டு. ஊதிய உயர்வு, பதவி உயர்வு கிடைக்கலாம். அதிகாரிகளுடன் பேசும்போது கவனமாகப் பேசுங்கள்.

---

# தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 04

## அதிசயங்கள் நிறைந்த மசூவின் ஆலயம்




'கோலாலம்பூர் முத்து விடுதி' தமிழில் ஹோட்டல் பெயரா? இல்லை ஹோட்டல் பெயரை தமிழில் மொழிப்பெயர்த்துப் பார்த்தேன்.

'The Pearl' KUALA LUMPUR நாம் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹோட்டல். காலை உணவுக்கும், ஓய்வுக்கும், இரவு நித்திரைக்கும் திருப்தியான உத்தரவாதத்தை தந்தது.

கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 38 கிலோமீற்றர் தொலைவில் கோலாலம்பூர் மாநகரின் எல்லைக்குள்ளேயே அமைந்திருந்தது. இந்த ஹோட்டலுக்கு 10 கிலோ மீற்றர் தொலைவில் 'சுல்தான் அப்துல் அசீஸ் விமான நிலையம்' அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சுபாங், சிலாங்கூரில் அமைந்துள்ள இவ் விமான நிலையமும் உள்ளக, சர்வதேச விமான சேவையில் 1965ம் ஆண்டு தொடக்கம் சேவை வழங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஹோட்டலின் 11வது தளத்தில் அறையொன்றுக்கு இருவர் என்றவாறு அறை ஒதுக்கப்பட்டிருந்தது. எனக்கும் இரா. மகேஸ்வரனுக்கும் ஓர் அறை வழங்கப் பட்டிருந்தது. அறையின் திறப்பை பெற்ற வண்ணம் அறையை நோக்கி லிப்டில் நகர்ந்தோம். கிடைத்த அறிவுறுத்தலின் படி காலை கடன்களை முடித்து வெந்நீர் குளியலுடன் விடுதியின் ஐந்தாம் தளம் நோக்கி விரைந்தோம். காலை உணவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இடம் இத் தளத்தில்தான் அமைந்திருந்தது. இலவச வைபை, வாகனத் தரிப்பிடம், உணவகம், அறைவசதிகள், நீச்சல் தடாகம், உடற் பயிற்சிக் கூடம், சிறுவர்களுக்கான நீச்சல் தடாகம், சலூன் போன்ற சேவைகளோடு காலை உணவுக்கான சிறப்பிடமாக பெயர்பெற்று இவ் விடுதி விளங்கியது.

காலை உணவுக்கான மண்டபத்தில் விதவிதமான சைவ, அசைவ உணவுகள் வகைவகையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. சுய பரிமாற்றம் என்ற வகையில் விருப்பமான உணவுகளையும் பானங்களையும் எடுத்து சுவைத்தோம். மாநாட்டுக்கு பிற நாடுகளில் இருந்து வருகைதந்த பேராளர்களை முதன் முதலாக சந்தித்துக்கொள்ளும் வாய்ப்பாக அது அமைந்தது. இவ் அறிமுக களத்தில் பலரோடு அறிமுகம் இடம்பெற்றது. 'காலை உணவுக்கு சிறப்பிடம்' என்பதை நிரூபித்த உணவை உண்ட திருப்தியில், விடுபட்ட நேற்றைய இரவின் தூக்கத்தை அனுபவிப்பதற்காக மீளவும் எங்கள் அறைக்கு சென்றோம்.

பகல் 12 மணி, எமக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய ஹோட்டலின் கீழ் தளத்துக்கு விரைந்தோம். புதிய நட்புகளின் அறிமுகங்கள் தொடர்கின்றன. மாநாட்டுக்கு வருகை தந்தவர்கள்




இவ் விடுதியிலேயே தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். ஆறு பஸ்கள் தயாரான நிலையில் இருந்தன. இலங்கை, இந்தியா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களாகவே இப் பேராளர்கள் காணப்பட்டார்கள். தென் கிழக்காசிய நாடுகளை சேர்ந்தவர்கள் வேறு இடங்களில் இருந்து வருகை தந்தார்கள். மத்திய கிழக்கு, அமெரிக்க நாடுகளில் இருந்து பேராளர்களின் வருகையும் உள்வாங்கப்பட்டிருந்தது. பஸ்ஸை நோக்கி நகர்ந்தோம். எம்மை மிக ஆவலோடு பயண வழிகாட்டி போல் வரவேற்றார். அதிவேக பாதை வழியாகவும் பயணம் தொடர்ந்தது. பகல் போசனத்திற்கு பெயர் பெற்ற உணவு விடுதி நோக்கியே எமது பயணம் அமைந்திருந்தது. வாகன ஓட்டுனர் தமிழில் பேசிய வண்ணம் பல தகவல்களை சொல்லிக்கொண்டே வந்தார். மலேசிய மண் எம்மை விருந்தோம்பலின் உச்சத்துக்கே கொண்டு சென்றது. அங்கு முதல் பகல் உணவை திருப்தியோடு உண்ட களைப்போடும் பஸ்ஸை நோக்கி விரைகிறோம். குட்டித் தூக்கம் எனை ஆட்கொண்டது. வழிகாட்டியின் அறிவிப்புச் சத்தம் செவியில் விழுந்து விழித்த போது சீனக் கடல் தெய்வமான மசூவின் ஆறு அடுக்கு ஆலயத்தின் வளாகத்தில் பஸ் நின்றிருந்தது. அரை மணித்தியாலயத்தினுள் ஆலயத்தை பார்வையிட்டு வரவேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

ஆலய வளாகம் அழகியல் உணர்வோடு வடிவமைக்கப்பட்டிருந்தது. மதங்களை, மொழிகளை கடந்து அழகியலை நேசிக்கும் நோக்கோடு பார்வையை செலுத்த உலகின் எல்லாத் திசைகளில் இருந்தும் பயணிகள் வந்து போவதுண்டு. பார்க்குமிடமெல்லாம் வண்ண மயமாகவே காட்சி தந்ததுடன் அலங்கார உச்சத்தை தொட்டதாகவே இருந்தது. இரு மருங்கிலும் இரண்டு பெண் தெய்வங்களின் சிலைகள் காணப்பட்டன. பெண் தெய்வ சிலைகளுக்கு முன்னால் கௌதம புத்தரின் சிறிய அளவிலான சிலைகள் வைக்கப் பட்டிருந்தன. குபேரனுடைய சிலைகளும் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தன. ஊதுபத்திகளும் விளக்கு வடிவில் உருவாக்கப்பட்டிருந்த மெழுகுவர்த்திகளுமே ஆராதனைப் பொருட்களாக வடிவமைக்கப்பட்டிருந்தமை கவனிக்கத்தக்கது. ஒவ்வொரு மாடித் தளத்துக்கும் பிரயாணிகள் முறையாக பயணிக்கும் வழிப்படுத்தலை மேற்கொள்ள பாதை வழிகாட்டி அடையாளங்கள் தெளிவாகவும் முறையாகவும் இடப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும். சன நெரிசலிலும் அமைதியான ஓர் சூழல் உத்தரவாதப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக கட்டடங்களின் கூரை வேலைப்பாடுகள் தென் கிழக்காசிய நாடுகளில் தனித்துவ பாணியை கொண்டமைந்திருக்கும். சீனாவின் கூரை அலங்காரத்தை ஒத்த பாணியிலான அலங்



காரத்தை அடையாளப்படுத்துவதாக அமையப்பெறும். அவ்வாறே கூரையின் கீழான வேலைப்பாடுகளும் மனதைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சிற்பங்களும் ஓவியங்களும் கண்ணை கவருவது மட்டுமல்ல, மனதுக்கு இதத்தையும் தருவதாகவே அமையப்பெற்றுள்ளன.

ஆலய வளாகம் மட்டுமல்ல 1.67 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்திருந்த ஆலயத்தை சூழவுள்ள வெளிப்பரப்பும் சிற்பங்களாலும் ஓவியங்களாலும் வடிவமைக்கப்பட்டிருந்தமையும் சிறப்பம்சமாகும். நந்தவனத்துக்குள் ஓர் ஆன்மிகத் தளமாக உல்லாச பிரயாணிகளின் கண்கவர் இடமாக அழகியல் உணர்வோடு அமைக்கப்பட்டுள்ள இத்தளம் சீனாவின் பூர்வீக வழிபாட்டு முறைமையின் அடையாளமாக திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். உலகிலுள்ள எல்லா இனங்களும் இயற்கை நெறிமுறையுடன் கூடிய வழிபாட்டு பாங்கை நிலைநிறுத்தி வந்துள்ளமையை இதன் மூலமாகவும் அறிய முடிகிறது. 'Federal Territory Union Association' பரிபாலனத்தில் இயங்கும் இவ் ஆலயம் 'ரெபட் சௌ' எனும் கட்டட வடிவமைப்பாளரினால் வடிவமைக்கப்பட்டு 1981இல் நிர்மாணப் பணிகள் தொடங்கி 1987இல் நிறைவுற்று 1989ம் ஆண்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. வெசாக் பண்டிகையும் வருடாந்த உற்சவமும் மிக சிறப்பான கொண்டாட்டமாக களைகட்டுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

மத வழிபாட்டு முறைகளில் பல்வேறுபட்ட நம்பிக்கைகள் ஊடுகடத்தப்படுவதை அவதானிக்கலாம்.

குறிப்பாக சோதிடத்தை கால அடிப்படையில் கணித்துப் பார்க்கின்ற நடைமுறைகள் தமிழர்களிடையே காணப்படுவது யாவரும் அறிந்ததே! கிளி சோதிடம் தமிழர்களிடையே மிக வரவேற்பை பெற்ற முறையாகும். பெட்டிக்குள் அடைக்கப்பட்டுள்ள கிளியை திறந்து விட்டதும், அப் பெட்டியை சுற்றி வந்து சீட்டுகள் அடங்கிய அட்டைகள் அடுக்கப்பட்டுள்ள இடத்துக்கு கிளி சென்று சோதிடரின் அறிவுறுத்தலுக்கு அமைய சீட்டு ஒன்றை வாயில் எடுத்து அவரின் கரங்களில் வழங்கும். செய்யுள் வடிவத்தில காணப்படும் அட்டையின் உள்ளடக்கத்தை பாடலாகப் பாடி சோதிடர் விளக்கமளிப்பார். பயபக்தியோடு விளக்கத்தைக் கேட்டு தட்சணையை வழங்கி அவரிடம் ஆசீர்வாதம் பெறுவார்கள். மலையக வீதிப்பாடல் யுகம் மலையக புனைவு இலக்கியத்தில் மிக முக்கியத்துவத்துக்குரியது.

இந்தக் காலகட்டத்தில் மலையக வீதிப் பாடல்களைப் படைத்து இத்துறையை வலிமைப் படுத்தியதில் ராஜப்பா முக்கியத்துவம் பெறுகிறார். இவர் இறுதிக் காலகட்டத்தில் கிளி சோதிடம் பார்ப்பதையே தன் பிழைப்பாகக் கொண்டிருந்தார். இவரை நினைவு கூரும் வகையில் நாவலப்பிட்டி, இம்புலபிட்டி, கல்லாறு பிரிவில் அமைக்கப்பட்டுள்ள வீடமைப்பு திட்டத்துக்கு 'இராஜப்பா புரம்' என பெயரிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த அணுகுமுறையை ஒத்ததாக இவ் ஆலயத்திலும் சோதிடம் கூறும் நுட்பம் கையாளப்படுவதை அவதானிக்க முடிந்தது. குறி சொல்லுவதற்கு ஒத்ததாக இச் செயற்பாடு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. வட்ட வடிவான உயரமான மேசையில் காணப்படும் துவாரத்தில் பானக்குழாயை ஒத்த குழாய்களை வைத்தவாறே உயர்த்திப் போடுதல் வேண்டும். அவ்வாறு இடுகின்ற போது ஒரு குழாய் மாத்திரம் உயர்ந்து நிற்கும். அக் குழாய் காட்டி நிற்கும் எண்ணை அருகில் இருக்கும் சிறிய பெட்டித் தொகுதிகளில் இருந்து எடுத்து அதில் குறிப்பிடப்படும் விபரங்களை அறிதல் வேண்டும்.

இந்த முயற்சியில் நாங்கள் ஈடுபட்ட போது, பஸ்சை நோக்கி வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

***பயணம் தொடரும்...***

# படித்ததும் பகர்வதும் 159

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### பிற மொழிகளை கற்றுக் கொள்வோம்!

இலங்கையின் பிரதான பேசும் மொழிகளாக இருப்பவை சிங்களமும் தமிழும் ஆகும். ஆங்கிலம் இரு தரப்பினருக்கும் பொதுவானதாகவும், இணைப்பு மொழியாகவும் இருக்கிறது. இவை தவிர மலாய், அரபு, உருது, ஹிந்தி மொழிகளும் இலங்கையில் சிறிய அளவில் சிலரால் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை வாழ் மக்கள் பிரதானமாக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தொடர்புகொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. மொழியென்பது ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதற்கும், கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும், ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்வதற்கும், அவர்களுக்கிடையே புரிந்துணர்வையும் நல்லுறவையும் வளர்த்துக்கொள்வதற்கும் அவசியமான ஊடகமாக திகழ்கிறது. ஒரு மொழியை பேசுகின்ற மக்களோடு உரையாடி உறவாடி தொடர்புகளையும், நல்லுறவையும், சகவாழ்வையும் விருத்தி




செய்து கொள்வதற்கு அம்மொழியை தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கையில் பெரும்பான்மையின மக்கள் சிங்களத்தையே தமது தாய் மொழியாக கொண்டிருப்பதுடன், அவர்களில் பெரும் சதவிகிதத்தினர் தமிழில் பேசவோ, எழுதவோ, வாசிக்கவோ தெரியாதவர்களாகவே இருக்கின்றனர். தமிழில் பேசுவதை சிறிய அளவில் கூட அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. இதே நிலை பெரும்பாலான தமிழ் பேசும் மக்களிடையேயும் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

தென்னிலங்கை சிங்களவர்கள் வட இலங்கை தமிழர்களின் தமிழ் மொழியை விளங்கிக்கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். இவ்வாறே வட இலங்கை தமிழர்கள், தென்னிலங்கை சிங்களவர்களின் சிங்கள மொழியை புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். சிங்களவர்களை தமிழர்களும், தமிழர்களை சிங்களவர்களும் சரியாக விளங்கிக்கொள்ள முடியாதிருப்பது மிகவும் துரதிர்ஷ்டமான நிலைமையாகும். இதனால் ஒருவரையொருவர் சரியாக விளங்கி, நல்ல புரிந்துணர்வோடு தொடர்புகளை வளர்த்துக்கொள்ள முடியாதிருப்பதோடு ஒருவர் மீது மற்றவர் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதற்கும், தவறான முடிவுகளுக்கு வருவதற்கும் காரணமாகிறது.

இவை மட்டுமன்றி அயலவர்களாக இருக்கும் பிறமொழி பேசுபவர்களோடு, திறந்த மனதோடு தொடர்புகளை வைத்துக் கொள்வதற்கும், நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்கும் இயலாமல் போகிறது. இவை போன்ற எண்ணற்ற எதிர் விளைவுகள் உருவாகுவதை பலரும் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர்.

இத்தகைய நிலைமையில் ஒவ்வொருவரும் மற்றவர்களின் மொழியை, குறிப்பாக சிங்களவர்கள் தமிழையும், தமிழர்கள் சிங்களத்தையும் கற்றுக்கொள்ள முன் வர வேண்டும். எழுதுதல் வாசித்தல் என்பவற்றை இரண்டாவது கட்டத்தில் வைத்துக்கொண்டாலும், பேசுவதற்கும் பிறர் பேசுவதை விளங்கிக் கொள்வதற்கும் போதுமான அளவிலேனும் மற்ற மொழியை கற்றுக்கொள்ள ஒவ்வொரு இலங்கையரும் முன்வரவேண்டும்.

இவ்வாறு, இவ்விரு மொழிகளையும் பேசுவோரையும் சுதந்திரமாக தொடர்பு படுத்தக்கூடிய நிலைமை வரும்வரை, தற்போது இணைப்பு மொழியாகத் திகழும் ஆங்கில மொழியிலான ஆற்றல்களையும், அதன் பாவனையையும் விருத்தி செய்து கொள்ள ஒவ்வொருவரும் ஆர்வம் செலுத்த வேண்டும்.

சகவாழ்வையும், நல்லுறவையும், ஒருவருக்கொருவர் மீதான நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ளவும், நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவவும் இன முறுகல்கள் மறைந்து, சகவாழ்வு சிறப்புறவும் பிற மொழிகளைக் கற்றுத்தேறுதல் அவசியம் என்பதை உணர்ந்து செயல்படுவோம்.

## நெஞ்சுக்கு நீதி

பிற மொழிகளைக் கற்றறிவது தனித் திறமை
நல்லுறவுகள் வளர்வதற்கு அதுவும் வலிமை
அறிஞர்கள் சொல்கிறார்கள் அதன் பெருமை
அம்மொழிகளை கற்றிட்டால் வரும் மகிமை

## வாசித்ததில் வசீகரித்தது

### பரிபூரணமான உடல் நலம்

இன்று உடல் நோயைக் குணப்படுத்த எத்தனையோ விதமான மருத்துவ முறைகள் உள்ளன. அவை எதைக் காட்டுகின்றன வென்றால் மக்களிடையே நோய்கள் அதிகமாகப்பரவியுள்ளன என்பதைத்தான். இந்த மருத்துவ முறைகள் ஒவ்வொன்றும் மக்களின் உடல் நோய்களை அறவே இல்லாது அழித்தொழிக்காவிட்டலும் ஏதோ இயன்றவரை மக்களின் துன்பம் துடைக்கின்றன.

மக்களின் உள நோய்களை நீக்க எத்தனையோ மதங்கள் தோன்றிய போதிலும் பாவமும் துயரும் இன்னும் உலகில் நிலவி வருவது போன்று மக்களின் உடல் நோய்களைப் போக்க எத்தனையோ மருத்துவ முறைகள் தோன்றிய போதிலும் இன்னும் நோயும் நொம்பலமும் உலகில் இருந்து கொண்டுதான் உள்ளது.

பாவத்தையும் துயரத்தையும் போன்று நோயும் நொம்பலமும் மருந்துகளால் முற்றிலும் அழித்




தொழிக்க இயலா வண்ணம் மனித சமுதாயத்திலேயே ஊறிப்போயுள்ளன. நம்முடைய நோய்களுக்கான முக்கிய காரணம் நம்முடைய உள்ளத்தில் பதிந்திருக்கும் எண்ணங்களாகும்.

இவ்வாறு நான் கூறுவதிலிருந்து உடல் நிலைக்கும் நோய்க்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்று ஒருபோதும் பொருள்படாது. உடல் நிலையானது நோய்களை உண்டுபண்ணுவதில் முக்கியமான பாகம் வகிக்கிறது.

காலரா நோய்க்குக் காரணம் என்ன? காலராக் கிருமிகள் அக்கிருமிகள் உற்பத்தியாவதற்குக் காரணம் துப்புரவு இன்மை. துப்புரவு இன்மை எதனால் ஏற்படுகிறது? மனிதனின் ஒழுக்கங்கள் சீர்குலைந்து இருப்பதனால்தான்.

கண்ணுக்குத் தெரியக்கூடிய எண்ணம் தான் செயல். நாம் நோய் என்று கூறும் உடல் கோளாறானது, பாவத்தோடு தொடர்பு கொண்டுள்ள மனிதனுடைய தவறான எண்ணங்களினால் ஏற்படுகின்றது.

மனிதனுடைய மனதில் பல்வேறு மாறுபட்ட எண்ணங்கள், ஆசைகள் படையெடுத்து அதன் அமைதியைக் குலைத்துக் கொண்டுள்ளன. அதன் காரணமாக அவனுடைய உடல் நிலையும் சீர்குலையத் தொடங்கிவிடுகிறது.

மிருகங்களுக்கு இவ்விதம் மாறுபட்ட பல்வேறு எண்ணங்களும் ஆசைகளும் தோன்றுவதுமில்லை. அவற்றால் அவை நோய் வாய்ப்படுவதுமில்லை. அவை தங்களுடைய சூழ்நிலைகளுக்கு ஏற்ற வண்ணம் வாழ்கின்றன. அவற்றுக்குக் கவலையும் ஏக்கமும் ஏற்படுவதுமில்லை அதனால் அவற்றுக்கு எவ்வித நோயும் உண்டாவதில்லை.

மனிதன் மகான் தன்மையை நோக்கி உயரும் பொழுதுதான் தன்னுடைய மனதைக் குழப்பமடையச் செய்யும் எண்ணங்களையும் ஆசைகளையும் விட்டொழித்து தன்னுடைய பாவங்களையும் பாவ உணர்ச்சிகளையும் வெற்றிகொண்டு துன்பத்தையும் துயரத்தையும் விரட்டியடிப்பான். இவ்வாறு அவன் தன்னுடைய எண்ணங்களைச் சீர்படுத்தி மன அமைதி பெற்றுப் பரிபூரணமான உடல் நலத்தைப் பெற்று விடுவான்.

நூல்: மனதை வெல்லுவாய் மனிதனாகுவாய், ஆசிரியர்: அப்துற் ரஹீம், முதற்பதிப்பு: ஆகஸ்ட் 1958, பக்கங்கள்: 96, வெளியீடு: யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ் சென்னை.

## சிந்தனை செய் மனமே

### வேகம்! விவேகம்!

ஒரு டீ கடைக்காரனிடம் ஒரு மல்யுத்த வீரன் எப்போதும் டீ அருந்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஒரு முறை டீ கடைக்காரனுக்கும், மல்யுத்த வீரனுக்குமிடையில் தகராறு வந்தது. கோபம் கொண்ட மல்யுத்த வீரன் டீ கடைக்காரனை தன்னுடன் மல்யுத்த சண்டைக்கு அழைத்தான். அவர்களது இனத்தில் மல்யுத்த சண்டைக்கு ஒருவன் அழைத்தால் நிச்சயம் ஒப்புக்கொள்ள வேண்டும். இல்லாட்டால் அது பெரும் அவமானமாகக் கருதப்படும். எனவே டீ கடைக்காரன் அந்த சவாலுக்கு ஒப்பு கொண்டான்.



ஆனால் இதில் எப்படி நாம் ஜெயிக்க போகிறோம் எனப் பயந்தான். எனவே ஒரு துறவியை சந்தித்து இவ்விடயத்தில் தனக்கு அறிவுரை வழங்குமாறு வேண்டினான். அவனது மல்யுத்த வீரனுடனான கதையை முழுமையாகக் கேட்ட துறவி, "சண்டைக்கு இன்னும் எத்தனை நாட்கள் இருக்கின்றன" என்று கேட்டார்.

"முப்பது நாட்கள்" என்றான் அவன். "இப்போது நீ என்ன செய்கிறாய்?" என்று அவர் கேட்டார்.

" டீக்கடையில் டீ ஆற்றுகிறேன்" என்றான்.

அதற்கு அந்த துறவி, "அதையே தொடர்ந்து செய்" என்றார்.

ஒரு வாரம் கழித்து வந்த டீக் கடைக்காரன். துறவியிடம்," எனக்கு பயம் அதிகரித்த வண்ணம் இருக்கிறது ஐயா. என்ன செய்யலாம்?" என்று கேட்டான்.

“இன்னும் கூடுதலான ஈடுபாட்டோடு, இன்னும் வேகமாக டீ ஆற்று" என்றார் துறவி.

தன் பயத்தை எல்லாம் வேகமாக மாற்றி வெறித்தனமாய் டீ ஆற்றினான் டீக் கடைக்காரன்.

இரண்டு வாரம் முடிந்தது. அப்போதும் அதே அறிவுரைதான். “வேகமாக டீ ஆற்று".

போட்டி நாள் அருகில் வந்து விட்டது. டீக் கடைக்காரன் நடுக்கத்துடன் அந்த துறவியிடம், "நான் இப்போது என்ன செய்ய வேண்டும் ஐயா?" என்று கேட்டான்.

"போட்டிக்கு முன் ஒரு டீ சாப்பிடலாம் என்று நீ அவனைக் கூப்பிட்டு, அவன் பார்த்திருக்க நீ அதிவேகமாக டீ ஆற்று" என்றார் துறவி.

மல்யுத்த வீரன், குறிப்பிட்ட நாளன்று போட்டிக்கு வந்து விட்டான். "வா.. முதலில் டீ சாப்பிடு" என்றான் டீக் கடைக்காரன். "சரி" என்று அமர்ந்தான் மல்யுத்த வீரன்.

டீக் கடைக்காரன் துறவி சொன்னதுபோல், அவனுக்கு முன்னாள் மிக வேகமாக டீ ஆற்றத் தொடங்கினான். அவனது டீ ஆற்றும் வேகம் கண்டு மிரண்டு போய் விட்டான் மல்யுத்த வீரன். இதற்கு முன்பும் அவன் டீ ஆற்றுவதை, மல்யுத்த வீரன் பார்த்திருக்கிறான். ஆனால் இப்போது அவனது வேகம் எவ்வளவு கூடியிருக்கிறது. என்ன ஒரு வேகம்!

ஒரு சாதாரண டீ ஆற்றும் விஷயத்திலேயே அவன் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தால், போட்டிக்கு எந்த அளவுக்கு தன்னை தயார் செய்திருப்பான். அவனோடு என்னால் போட்டி போட முடியுமா? என்று தனக்குள்ளேயே எண்ணி, அச்சம் கொண்டு போட்டியே வேண்டாம்' என சென்று விட்டான்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207



# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 55

கே. பத்மானந்தன்



## திருவள்ளுவத்தில் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்

உண்மையில் பொறுப்பு அளிக்கத் தெரிவு செய்யப்படும் நபர் பொறுப்பு அளிக்கப்படும் துறையில் அறிவு உள்ளவரா என்பதையும் சிரேட்ட முகாமையாளர் பரிசீலிக்க வேண்டும். உதாரணமாக நிதி முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுபவர் அத்துறையிலும் மனிதவள முகாமைத்துவம் தொடர்பான பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்படுபவர் அத்துறையிலும் அனுபவமும் அறிவும் கொண்டிருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் அவர் நிறுவனத்தின் மீதும் அதன் இலக்குகள் மீதும் நம்பிக்கையும் அன்பும் கொண்டவராகவும் தனது கடமைகளில் தெளிவு உள்ளவராகவும் நிறுவன சொத்துகளுக்கு ஆசைப் படாத முறைகேடுகளில் ஈடுபடாத ஒருவராகவும் இருக்க வேண்டும் என்பதை சிரேட்ட முகாமைத்துவம் உறுதி செய்ய வேண்டும். இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ் வரும் ஈரடியில் தெளிவு படுத்துகின்றார்.

**“அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும் நன்குடையான் கட்டே தெளிவு”. (குறள் 513)**

நிறுவனம் அல்லது ஏற்றுக்கொண்ட செயல் அல்லது முகாமைத்துவத்தின் மேல் அன்பு, அவற்றுக்கு நன்மை தருவதை அறியும் அறிவு அல்லது அந்தச் செயலைச் செய்வதற்கான அறிவு, அதற்கான செயல்களைச் செய்யும்போது உறுதி அல்லது சிந்தனைத் தெளிவு, பணியில் பொருள் வந்தால் அதன்மீது ஆசையின்மை ஆகிய இந் நான்கு பண்புகளையும் நிலையாக உடையவனிடம் பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பது தான் சிறப்பு என்கிறார் திருவள்ளுவர்.

இங்கு திருவள்ளுவர் அன்பு என்று குறிப்பிடுவதன் மூலம் செயல் மீது உள்ளார்ந்த ஈடுபாடு (Passion) கொள்வதை வலியுறுத்துகின்றார். அதேபோன்று அறிவு என்று செயலறிவு அல்லது தொழிலறிவை வலியுறுத்துகின்றார். தேற்றம் என்று குறிப்பிடுவதன் மூலம் தனக்குக் கொடுக்கப்பட்ட பணியின் நோக்கம் என்ன, பணி நிறைவுக்கான கால அளவு என்ன, முகாமையாளர் தன்னிடம் எதை எதிர்பார்க்கின்றார், செயலினை ஆரம்பித்த பின்னர் ஏற்படும் இடையூறுகளை எதிர்கொள்ளும் ஆற்றல், ஏற்படும் இடையூறுகளிற்கு எவ்வாறு தீர்வு காண வேண்டும் என்ற தெளிவு ஆகியவற்றை வலியுறுத்துகின்றார். அவாவின்மை என்று குறிப்பிடுவதன் மூலம் தனக்கு உரிமையல்



லாத பொருளின் மேல் ஆசை கொள்ளக்கூடாது அல்லது தன்னை நம்பிப் பொறுப்புக்களைத் தந்த நிறுவனத்திற்குரிய பொருள்களை கவர்ந்து கொள்ள நினையாமை என்ற கருத்தினைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். ஆகவே இத்தகைய தன்மைகளைக் கொண்ட ஒருவரிடமே முகாமையாளர் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

அதுமட்டுமல்லாமல் மேலே கூறியது போல ஒரு நிறுவனத்தில் பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கும் போது அப்பொறுப்புகளை ஏற்று எத்தகைய இடையூறுகள் சவால்கள் பிரச்சினைகள் வந்தாலும் அவற்றை எல்லாம் சமாளித்துத் தனது கடமைகளைச் சரியாகச் செய்யக் கூடிய ஒருவரிடமே சிரேஷ்ட முகாமைத்துவம் பொறுப்புகளைப் பகிர்ந்துகொடுக்க வேண்டுமே தவிர தனக்குத் தெரிந்தவர் என்பதற்காக அப்பொறுப்புகளைச் சரிவரச் செய்ய முடியாத ஒருவரிடம் வழங்கக் கூடாது. இக்கருத்துக்களை கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

**“அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான் சிறந்தானென்று ஏவற்பாற் றன்று”.(குறள் 515)**

செய்யும் வழிமுறைகளை அறிந்து தடை வந்தாலும் இடையூறுகளைத்தாங்கிச் செய்து முடிக்கும் திறமை உடையவனிடம் பொறுப்புகளைக் கொடுக்காமல் இவன் நம்மவன், நமது கட்சி, நமது இனம், நமது மதம் என்று எண்ணி மற்றவனைவிடச் சிறந்தவன் என்று கருதி பொறுப்புகளை ஒப்படைக்கக்கூடாது என்கிறார் திருவள்ளுவர். அதாவது வேலையின் தன்மையை அறிந்து அதனால் வரும் அழுத்தத்தைத் தாங்கிச் செயல் முடிக்கும் ஆற்றல் உடையவனிடம் அல்லாமல் சிறந்தவன் எனக் கருதி வேறு எவரிடமும் பொறுப்புக்களைப் பகிர்ந்து அளிக்கக் கூடாது என்கிறார் திருவள்ளுவர்.

எந்தச் செயலாக இருந்தாலும் செயலாற்றுந்திறன் தெரிந்து ஒப்படைக்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். எல்லாத் துறைக்கும் செயலுக்கும் எல்லாரும் பொருந்த முடியாது. எத்துறை ஒருவரிடம் கொடுக்கப்படுகிறதோ, அத்துறையில் அவருக்கு அறிவு அதாவது நல்ல பயிற்சியும் அனுபவமும் இருக்க வேண்டும். அதைவிடுத்துவிட்டு எல்லாராலும் அறியப்பட்டவர் என்ற காரணத்திற்காக ஒருவரை பழக்கமில்லாத வேறு ஒரு துறையில் ஈடுபடுத்தக்கூடாது. ஒருவரிடம் இருக்கும் பொதுத் திறமையையும் குறித்த வேலைக்குத் தொடர்பில்லாத வேறு திறமையையும் கருத்தில் கொண்டு அவரை அவருக்குத் தெரியாத துறையில் அமர்த்தக்கூடாது. தான் சிறந்தவர் என்று கருதும் ஒருவரைப் பணியின் தன்மையைக் கருத்தில் எடுக்காமல் பொறுப்புக்களை வழங்கக்கூடாது அவ்வாறு பொறுப்புக்கள் வழங்கப்பட்டால் அவரால் தனது பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்ற முடியாது என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

அதேபோன்று ஒருவருக்கு பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கும்போது பொறுப்பு ஒப்படைக்கப்படும் நபரின் குணங்கள், திறன்கள், அனுபவம், வெளிப்பாடு மற்றும் நிபுணத்துவம், பணியின் சிக்கலான தன்மையை (எதிர்பார்ப்புகள், தரம் மற்றும் செயல்பாட்டில் உள்ள சவால்கள்) மதிப்பீடு செய்து, பணியைச் செய்வதற்கான சரியான நேரத்தை மதிப்பீடு செய்து, பணியை திறம்பட முடிக்கும் வகையில் முகாமையாளர்கள் பணியை ஒப்படைக்க வேண்டும். இக்கருத்துக்களைக் கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

**“செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு எய்த உணர்ந்து செயல்” ( குறள் 516).**

செய்கின்றவனுடைய தன்மையை ஆராய்ந்து, செயலின் தன்மையையும் ஆராய்ந்து, தக்க காலத்தோடு பொருந்துமாறு உணர்ந்து செய்விக்க வேண்டும் என்பது இக்குறளின் பொருள். இங்கு என்ன செயல் செய்யவேண்டும், அதை யார் செய்ய வேண்டும் எக்காலத்தில் செய்யவேண்டும் என்பதை எல்லாம் கவனத்தில் கொண்டு பிறரிடம் முகாமையாளர் பொறுப்புக்களை ஒப்படைக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். ஒரு செயலைச் செய்து முடிப்பதில் செய்வோரின் திறன், செயலின் நோக்கம், செயற்பாட்டுக் காலம் ஆகிய மூன்றும் ஒத்திசைந்தாலே செயல் வெற்றியாகும் என்பது திருவள்ளுவரின் கருத்து.

நோய்களை உண்டாக்கக்கூடிய உடல் அல்லது மனரீதியான பதட்டம் அளிக்கும் எந்தவொரு உடலியல், இரசாயன அல்லது மனவியல் காரணிகளை மன அழுத்தம் எனக் கருதலாம். பொதுவாக இரண்டு வகையான அழுத்தங்கள் உள்ளன: நேர் அழுத்தம் (eustress "positive stress") மற்றும் சவால்கள் அல்லது அதிக பளு என பொருள்படும் எதிர்மறை அழுத்தம் (distress "negative stress"). மன அழுத்தம் அதிகமாகும் போதும், அது சரியாக நிர்வகிக்கப்படாமல் இருக்கும் போதும் எதிர்மறை விளைவுகள் ஏற்படுகின்றன. மன அழுத்தம் ஏற்படுத்தும் முக்கிய காரணங்களாக வாழ்வியல் அழுத்தம், உள்நிலை அழுத்தம், சுற்றுச்சூழல் அழுத்தம் மற்றும் களைப்பு மற்றும் அதிக வேலைப்பளு என்பன அமைகின்றன.

மன அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ள முகாமையாளர்களோ அல்லது ஊழியர்களோ தங்களது கடமைகளை நிறைவேற்றுவதில் சிக்கல்களை எதிர்நோக்குவார்கள். இதனால் நிறுவனங்கள் தமது இலக்குகளை அடைவதில் தாமதம் ஏற்பட்டு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே பொறுப்புகளை ஒப்படைக்கும் போது முகாமையாளர்கள் இத்தகைய மன அழுத்தத்திற்கு உள்ளானவர்களுக்கு அவர்கள் இவ்வழுத்தத்தில் இருந்து விடுபட்டுச் சுமுகமாக வேலை செய்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். மன அழுத்தத்தில் இருந்து எவ்வாறு விடுபடலாம் என்பது பற்றி கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் எடுத்துக் கூறுகின்றார்.

**“இடுக்கண் வருங்கால் நகுக அதனை அடுத்தூர்வது அஃதொப்ப தில்”. (குறள் 621)**

நாம் அறியாமலே நமக்கு ஒரு துன்பம் வந்தால் மனம் தளராமல் மனத்துள் மகிழ வேண்டும் வந்த அந்தத் துன்பத்தைத் தோற்கடிக்க அம்மகிழ்ச்சியை விட ஆற்றல் மிக்கது வேறொன்றும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். எனவே முகாமையாளர்கள் தமக்கு ஏற்படும் மன அழுத்தங்களில் இருந்து தாம் விடுபடுவதுடன் தமது ஊழியர்களினை எந்தவிதமான அழுத்தங்களிற்கும் உட்படுத்தாத வகையில் வேலை செய்யக் கூடிய வகையில் பொறுப்புகளை பகிர்ந்தளிப்பதுடன் அதற்கான சூழலையும் உருவாக்க வேண்டும் என்ற கருத்தினை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

(தொடரும்)

## உதவிக்கரம் நீட்டியுள்ள இணைந்த கரங்கள்





நாடு முழுவதும் பரந்துபட்ட அளவில் செயற்பட்டு வரும், இணைந்த கரங்கள் அமைப்பானது, இம்முறை, பதுளை மாவட்டம், ஸ்பிரிங்வெளியில் அமைந்துள்ள ஊவா/ பது/மேமலை தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு தனது உதவிக்கரங்களை நீட்டியுள்ளது.

ஏறத்தாழ 150இற்கும் மேற்பட்ட இம் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வானது, பாடசாலை அதிபர் எஸ். திருச்செல்வம் தலைமையிலும், இணைந்த கரங்கள் உறவுகளான சி. காந்தன், எல்.கஜரூபன், .எம். ஜெகனாதன், . எல்.சங்கீதா, திருமதி. ஏ.பங்கயற்செல்வி ஆகியோரது ஒருங்கிணைப்புடனும் கடந்த 15ஆம் திகதி மு.ப.10.00 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோரும் கலந்து கொண்டிருந்ததுடன், இம்மகத்தான சேவையை முன்னெடுக்கும் இணைந்த கரங்கள் உறவுகளுக்கு பாடசாலை அதிபரால் நன்றிகளும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 80

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | 08 | 09 | 10 |
| 11 | 12 | | 13 | | 14 |
| | 15 | 16 | | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 22 | |
| | | 23 | 24 | 25 | 26 |

பெயர் ....................................................
வகுப்பு ....................................................
தொலைபேசி இல ....................................................
பாடசாலை பெயர் ....................................................
வதிவிட முகவரி ....................................................
....................................................
.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) மாணவர்களாகிய உங்களின் கல்வித் திறமையைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக அவ்வப்போது நடத்தப்படுவது. இதில் நீங்கள் கூடிய மதிப்பெண் பெற்றால் திறமையான மாணவர்களாகக் கருதப்படுவீர்கள்.
(6) இரவில் உணவு தேடும் பறவை இது. இரவு நேரத்தில் எங்காவது மரக்கிளைகளில் அமர்ந்து கொண்டு இப்பறவை எழுப்புகின்ற ஒலி அச்சத்தைத் தரும். இப்பறவையின் கண்களும் அச்சம் தருபவை.
(9) திடீரென்று ஒருவருக்கு உண்டாகின்ற ஆத்திர உணர்ச்சி இது. இதனால் தீமையே விளையும். இந்த மனஉணர்வைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும். (தலைகீழான சொல்)
(14) எமது கை மற்றும் கால் விரல்களின் நுனிப்பகுதியில் அமைந்திருப்பது. வளர்ந்து கொண்டேயிருப்பதால் இடையிடையே கத்தரித்துக் கொள்வது அவசியம். (தலைகீழான சொல்)
(17) புவியின் மேற்பரப்பில் சுமார் முக்காற்பங்கு பகுதி இது.
(21) நிலைக்கண்ணாடி முன்பாக நின்று பாருங்கள். கண்ணாடியில் தெரிவது இது.

### மேலிருந்து கீழ்

(1) மக்களுக்கு குணம்தான் முதலில் முக்கியம் என்று சொல்வார்கள். ஆனால் இன்றைய உலகில் குணத்தைத் தவிர இதற்குத்தான் அதிகம் மதிப்புக் கொடுக்கின்றார்கள் பலர்.
(4) மனிதனின் துன்பங்களுக்கெல்லாம் காரணம் இதுதான் என்றார் புத்தர்பெருமான். எதன் மீதும் அளவோடுதான் விருப்பம் கொள்ள வேண்டும். (தலைகீழான சொல்)
(8) மிகவும் மெதுவாக ஊர்ந்து செல்லும் உயிரினம். ஆபத்தை எதிர்கொள்ளும் போது தனது உடலை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும். (தலைகீழான சொல்)
(10) சிறார்கள் மாத்திரமன்றி, வயதானவர்களும் நூல் கட்டி ஆகாயத்தில் ஏற்றி மகிழ்வது.
(15) யானையின் ஒத்தபொருள் சொல் இது. எரிந்த விறகுக்கட்டைக்கும் இப்பெயர் பொருந்தும்.
(17) பாடலையும், பாடல் இயற்றுபவனையும் குறிக்கும் சொல்.
(19) உணவை நன்கு அரைத்து மென்று உண்பதற்கான உடல் அங்கம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 79

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கடலாமை 07. நிருபர் 11. வால்
15. காவி 17. பேன் 19. கதவு 23. மோதிரம்

**மேலிருந்து கீழ்**

01. கறுவா 03. நிலா 04. கருமை
05. கர்ணன் 12. தவில் 16. காகம் 17. பேத்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 78

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். மோகனா**
தரம் 10, பாரதி த.ம. வித்தியாலயம்,
இல. 44/B, நிதங்கல வத்த, எல்கடுவ வீதி, வத்தேகம.

**2. ஹாலா ரிஸ்வான்**
தரம் 06, அல்மின்ஹாஜ் தேசிய பாடசாலை,
இல. B 40/2, ஹபுகஸ்தலாவ.

**3. லீனா மர்யம் முஜாஹித்**
தரம் 05, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

**4. எம்.ஏ. ஆக்கியா ஸைனப்**
தரம் 07, அலிப் சர்வதேச பாடசாலை,
இல. 41 B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**5. எச்.எப். சீணஸ்**
தரம் 04, அல் ஹிக்மா மகா வித்தியாலயம்,
பாடசாலை வீதி, கந்துவெவ, நொச்சியாகம.

**6. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**7. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 80
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**வாய்மை:** வாய்மை எனப்படுவ தியாதெனின்
யாதொன்றந் தீமை யிலாத சொலல்

**தெளிவுரை :**
வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

# பகைமை மறப்போம்



மாவீரன் அலெக்சாண்டரின் தந்தை பிலிப் சிறந்த அறிவாற்றல் மிக்கவர். பலம் பொருந்திய மன்னராக ஆட்சி செய்து வந்தார். அவரது பகுதிக்கு உட்பட்ட ஜமீன்தார் ஒருவர் மன்னரைப்பற்றி எப்போதும் குறை கூறிக் கொண்டு இருப்பார். இது மன்னரின் காதுக்கு எட்டியது. அந்த நாட்டு வழக்கப்படி அது தேசவிரோதம். அந்த ஜமீன்தார் ஆர்க்கீடியஸ் இருக்கும் பகுதிக்கு சென்ற மன்னர் தன் அதிகாரிகளிடம் அந்த ஆர்க்கீடியஸை அழைத்து வரும்படி கூறினார். தன் மந்திரியிடம் ஆர்க்கீடியஸ் என்னிடம் கொண்டுள்ள பகைமைக்கு இன்று முடிவு கட்டுகின்றேன் என்றார்.

விபரம் அறிந்த ஆர்க்கீடியஸ் மிகவும் பதற்றம் அடைந்தார். தன் ராஜதுரோகச் செயலுக்கு மரணதண்டனைதான் கிடைக்கும் என்ற கலவரத்தில் புறப்பட்டுச் சென்றார். அவர் வந்ததும் மன்னர், எல்லா அதிகாரிகளையும் வெளியில் அனுப்பி விட்டு தனிமையில் சந்தித்தார். மன்னரின் தண்டனையை நிறைவேற்ற அதிகாரிகள் வெளியில் தயாராக காத்து இருந்தனர்.

சிறிது நேரம் கழித்ததும் மன்னரும் ஆர்க்கீடியஸும் கைக்கோர்த்துக் கொண்டு புன்முறுவலுடன் வெளியில் வந்தனர். எல்லோருக்கும் அதிர்ச்சி.

மந்திரி, 'மன்னா பகைவனை ஒழித்துக் கட்டுவேன் என்றீர்கள்' என ஆச்சரியத்தின் விளிம்பில் கேட்டார்.

அதற்கு மன்னர், 'ஆம், பகைவனை ஒழித்து கட்டிவிட்டு அவனிடத்தில் ஒரு புதிய நண்பனை உருவாக்கி விட்டேன். ஆர்க்கீடியஸ் நல்ல மனிதர், என்னைப் பற்றி தவறாக புரிந்து கொண்டு இருந்துள்ளார். நேரில் பேசியதில் அது புரிந்து எங்களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கியது. என்னைச் சரியாக புரிந்து கொண்டதால் அவர் என்மீது கொண்டிருந்த பகை உணர்வுகள் நீங்கி நட்பு மலர்ந்து உள்ளது' என்றார்..

பகைவனை அழிப்பது என்றால் பகைமையை அழிப்பது என்று தான் அர்த்தம், பகைவனைக் கொல்வதல்ல! அப்படி செய்தால் பகைமை அழியாது. வம்ச வம்சமாகத் தொடரும் என்றார்.

## இவ்வார மழலை



என். கீர்த்தி சாரா
நடேசன் / ரஜினி



மெலோ முத்து என்பது உலகின் மிக அரிதான முத்து ஆகும். இது கடல் நத்தை மூலம் உருவாகிறது. இதன் மதிப்பு சுமார் 25,000 பொலர்கள்.

# மூன்று

- ★ மா, பலா, வாழை **மூன்று**
- ★ இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் **மூன்று**
- ★ ஆக்கல், அழித்தல், காத்தல் **மூன்று**
- ★ சேர, சோழ, பாண்டியர் **மூன்று**
- ★ இயல், இசை, நாடகம் **மூன்று**
- ★ வீரமுரசு, கொடைமுரசு, மங்கலமுரசு **மூன்று**
- ★ சுக்கு, மிளகு, திப்பிலி **மூன்று**
- ★ சூரியன், சந்திரன், அக்கினி **மூன்று**

சாரணா கையூம்...

# நான்கண்ட தெய்வம்..!



அன்பாக அமுதூட்டும் அம்மா– என்னை
அரவணைத்து வளர்க்கின்ற அம்மா
கண்போல காத்துநிற்கும் அம்மா
கடலளவு பாசங்கொண்ட அம்மா.

கல்வியிலே நான்சிறந்து விளங்க
கவனமாக வழிகாட்டும் அம்மா
பண்பான குணநலன்கள் கொண்டு
பலர்போற்ற வாழவைக்கும் அம்மா.

என்வாழ்வின் எதிர்காலம் பற்றி
எப்பொழுதும் கனவுகாணும் அம்மா
தன்வாழ்வின் துயரங்கள் தாங்கி
தவவாழ்வு வாழுகின்ற அம்மா.

இவ்வுலகில் நான்கண்ட தெய்வம்
என்தாய்தான் வேறுதெய்வம் இல்லை
தினமவளின் காலடிகள் தொழுது
திக்கெட்டும் புகழ்மணக்க வாழ்வேன்!

ஷெல்லிதாசன்
திருகோணமலை.






எம். சித்தார்த்தன்
தரம் 08, கேம்பிரிஜ் பாடசாலை, கொழும்பு 15

# புவிஈர்ப்புவிசை இல்லாத இடங்கள்



**நாம்** வாழும் பூமியில் உள்ள புவிஈர்ப்புவிசையின் உதவியினால் தான் நாம் நடக்கின்றோம். பூமியில் மட்டும் புவிஈர்ப்பு விசை இல்லையென்றால் நம்மால் நடக்க முடியாது நாம் அனைவரும் மிதக்கதான் வேண்டும். ஆனால், நமது புவியில் சில இடங்களில் புவிஈர்ப்பு விசை இல்லாத இடங்களும் உள்ளன.

**ஹட்சன் பே: (கனடா)**
கனடா நாட்டில் உள்ள ஹட்சன் பே என்னும் இடத்தில் உலகில் எங்கும் இல்லாத அளவிற்கு மிகவும் குறைவான ஈர்ப்பு விசை இருக்கிறது. இதற்கு காரணம் அங்குள்ள பனிக்கட்டிகள் உருகியதால் பூமியின் நிறையில் சிறிய மாற்றம் ஏற்பட்டு ஈர்ப்பு விசை குறைந்துள்ளது என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

**மிஸ்டரி ஸ்பொட் (கலிபோர்னியா):**
அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள இந்த இடம் மிஸ்டரி ஸ்பொட் அதாவது, மர்ம இடம் என்று அழைக்கப்படுகிறது. இந்த இடம் 1939ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இங்கு ஏதோ இரகசியம் இருப்பதாக ஆய்வாளர்கள் உணர்ந்தனர். அதை ஆழமாக ஆராய்ந்த பிறகு தான் தெரிந்தது, அங்கு 150 சதுர அடி பரப்பளவில் ஈர்ப்பு விசை செயல்படாது என்பது.

இங்குள்ள காந்தப்புலத்தில் சில மாற்றங்கள் நிகழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. அதாவது நீர் மேல்நோக்கி பாய்கிறது. இந்த இடத்தில் நீங்களே கீழே விழ முயற்சித்தாலும் விழ முடியாது.

**செயின்ட் இக்னாஸ் மிஸ்டரி ஸ்பாட்:**
அமெரிக்காவில் உள்ள செயின்ட் இக்னாஸ் மிஸ்டரி ஸ்பாட் (St. Ignas Mystery Spot) இந்த இடம் மர்ம இடம் என்று அழைக்கப்படுகிறது. 1950களில் சிலர் இந்த இடத்தை கணக்கெடுப்பு செய்தபோது, அவர்களின் சாதனங்கள் திடீரென்று வேலை செய்யாமல் நின்றுவிட்டன.

அதனால் அவர்கள் இந்த இடத்தைப் பற்றி விரிவான ஆய்வினை நடத்தியபோது, இங்குள்ள 300 சதுர அடி பரப்பளவில் ஈர்ப்பு விசை செயல்படாது என்பதை கண்டறிந்தனர். இங்கு புவிஈர்ப்பு விசை இல்லாததால் மக்கள் நாற்காலிகளை சுவரில் நிற்கவைப்பது மற்றும் அதில் உட்கார்ந்து மகிழ்வது போன்ற வித்தியாசமான நிகழ்வுகள் நிகழ்கின்றன.

## கண்டுபிடிப்பாளர்கள்

# அய்மே ஆர்கண்ட்



அய்மே ஆர்கண்ட் (Aim Argand) சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த இயற்பியலாளரும், வேதியியலாளரும் ஆவார். இவர் எண்ணெய் விளக்கின் வடிவமைப்பை மேம்படுத்தியவர். இவர் புதிதாக வடிவமைத்த எண்ணெய் விளக்கு இவரது பெயரை கொண்டு ஆர்கண்ட் விளக்கு என அழைக்கப்பட்டது.

இவரது முழுப்பெயர், பிரான்சுவா பியேர் அமி ஆர்கண்ட். இவர் 1750ஆம் ஆண்டு ஜூலை மாதம், 5ஆம் திகதி சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் 10 பிள்ளைகளுள் ஒன்பதாவதாகப் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு கைக் கடிகாரம் செய்பவர். அய்மே ஆர்கண்ட் ஒரு மதகுரு ஆகவேண்டும் என அவரது தந்தையார் விரும்பினார். ஆனால் இவருக்கு அறிவியல் மீதே அதிக ஆர்வம் இருந்தது. இதனால், புகழ் பெற்ற தாவரவியலாளரும், காலநிலையியலாளருமான ஹோராஸ் பெனடிக்ட் டி சோசுரே என்பவரிடம் மாணவராகச் சேர்ந்தார். இவர் தனது இருபதுகளின் பிற்பகுதியில் பாரிசில் இருந்தபோது காலநிலையியல் தொடர்பான பல கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பின்னர் இவர் வேதியியல் ஆசிரியராகப் பணியேற்றுக் கொண்டார்.

ஆர்கண்ட் விளக்கு (Argand lamp) 1780 ஆம் ஆண்டளவில் அய்மே ஆர்கண்ட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு உரிமம் பெறப்பட்டது.

இது அக்காலத்தில் இருந்த எண்ணெய் விளக்குகளிலும் கூடுதலான ஒளியை வழங்கி வீடுகளில் கிடைக்கக்கூடிய ஒளியின் அளவை மேம்படுத்தியது. இது சுமார் 6 தொடக்கம் 10 மெழுகுதிரிகள் வழங்கக்கூடிய ஒளியை வழங்கக்கூடியது. இது ஒரு வட்டவடிவில் அமைந்த திரியைக் கொண்டது. இது ஒன்றினுள் இன்னொன்றாக அமைந்த இரண்டு உலோக உருளைகளுக்கு இடையில் பொருத்தப்பட்டிருந்தது. இதனால், திரியின் நடுப்பகுதி ஊடாகவும், வெளிப்புறத்திலும் வளி சென்று வரக்கூடியதாக இருந்தது. அக்காலத்து முறையில் தேய்த்துச் செய்யப்பட்ட கண்ணாடி உருளை ஒன்றினால் திரி பக்கங்களில் மூடப்பட்டிருந்தது. இது சுவாலையை உறுதியாக எரியும்படி செய்ததுடன், சுவாலையைச் சுற்றிய காற்றோட்டத்தையும் மேம்படுத்தியது.

இவ் விளக்கில் திமிங்கில எண்ணெய் போன்ற நீர்ம எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. தனியான கொள்கலன் ஒன்றிலிருந்து இந்த எண்ணெய் திரிக்கு வழங்கப்பட்டது. இவ்விளக்கின் வடிவமைப்பு கூடுதலான ஒளியைக் கொடுத்தது ஒருபுறம் இருக்க, எண்ணெயும், திரியும் முழு எரிதலுக்கு உள்ளாவதால் அடிக்கடி திரியை வெட்டிச் சுத்தம் செய்யவேண்டிய தேவையும் இருக்கவில்லை.

1822 ஆம் ஆண்டில் சார்லஸ் வில்சன் பீலே எனபவரால் வரையப்பட்ட அவரது சகோதரர் ஜேம்ஸ் பீலேயின் உருவப்படத்தில் ஆர்கண்ட் விளக்கு வரையப்பட்டுள்ளது.

இவ் விளக்கு, ஏனைய வகை விளக்குகளைப் பயன்பாட்டிலிருந்து நீக்கியது. பல்வேறு அழகிய வடிவங்களில் இவ் விளக்குகள் செய்யப்பட்டன. சிக்கல் கூடிய அமைப்பின் காரணமாக, இவை அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த எண்ணெய் விளக்குகளை விடக் கூடிய விலை கொண்டவையாக இருந்தன. இதனால் முதலில் பண வசதி கொண்டவர்களே இவற்றைப் பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. எனினும், விரைவிலேயே நடுத்தர வசதி கொண்டவர்களும், பின்னர் குறைந்த வசதி உள்ளவர்களும் கூட இவ்விளக்குகளைப் பயன்படுத்தும் நிலை வந்தது.

1850 ஆம் ஆண்டுகள் வரை இவ் விளக்கே எல்லோராலும் விரும்பப்பட்டது. 1850 ஆம் ஆண்டளவில், தட்டையான திரியும், நடுவில் பருத்த அமைப்பும் கொண்ட கண்ணாடி உருளைகளுடன் கூடிய மண்ணெய் விளக்குகள் அறிமுகமாயின.

# விளையாட்டு





# பிரத்தியேக சாதனைகளுடன் இன்று களமிறங்கும் இலங்கை

ஆசிய கிண்ணத் தொடர் என்பது இலங்கைக்கு விசேடமானது. வேறு எந்தத் தொடர்களை விடவும் ஆசிய கிண்ணத்தில் இலங்கை அலாதித் திறமையை வெளிப்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் டி20 வடிவத்தில் ஆசிய கிண்ணம் நடந்தபோது ஒப்பீட்டளவில் பலவீனமான அணியாக களமிறங்கிய இலங்கை சம்பியன் கிண்ணத்தை வென்றது.

இம்முறையும் இதே கதை தான். நடப்புச் சம்பியனாக இலங்கை ஆசிய கிண்ணத்தில் களமிறங்கியபோதும் ஒருநாள் வடிவத்தில் போட்டி நடைபெறுவது என்பது இலங்கைக்கு சாதகமாக இருக்கவில்லை.

ஆப்கானுடன் லாகூறில் நடைபெற்ற ஆரம்ப சுற்றில் இலங்கை நூலிழையில் வெற்றியீட்டி சுப்பர் 4 சுற்றுக்கு தகுதி பெற்றது. பின்னர் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணியை தீர்மானிக்கும் பாகிஸ்தானுடனான சுப்பர் 4 போட்டியில் இலங்கை அணி கடைசி பந்து வரை போராடி வெற்றியீட்டியது.

அதாவது இலங்கை அணி ஆசிய கிண்ணத்தில் இறுதிப் போட்டிக்கு முன்னேறி இருப்ப இது 13 ஆவது தடவையாகும். வேறு எந்த அணியை விடவும் இது அதிகமாகும்.

அதேபோன்று ஆசிய கிண்ணத் தொடரில் இந்தியாவுக்கு அடுத்து அதிக முறை சம்பியன் கிண்ணத்தை வென்ற அணியாகவும் இலங்கை உள்ளது. இதில் பாகிஸ்தான் 7 தடவைகள் கிண்ணத்தை வென்றிருப்பதோடு இலங்கை 6 தடவைகள் சம்பியனாகியுள்ளது.

அதாவது ஆசிய கிண்ணத்தில் பலம்மிப்ப பாகிஸ்தான் அணியின் துரதிருஷ்டம் தொடர்ந்து துரத்துகிறது என்று குறிப்பிடலாம். இம்முறை போட்டியை நடத்தும் அணியாக களமிறங்கிய பாகிஸ்தான் உலகின் முதல் நிலை ஒருநாள் அணியாக இருந்தபோதும் இந்தியாவிடம் மோசமாக தோற்று, இலங்கையிடமும் தோல்வியை சந்தித்து வெளியேறியது.

இந்தியா இதுவரை இரண்டு முறை தான் ஆசிய கிண்ணத்தை வென்றிருக்கிறது. அதுவும் ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இதுவரை எதிர்த்தாடியதில்லை என்ற சாதனை இந்த ஆண்டிலும் தொடர்கிறது.

இதன்படி இலங்கை மற்றும் இந்திய அணிகள் இன்று (17) ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் களமிறங்குகிறது. அணிகளின் ஏற்றத்தாழ்வுகள் ஒரு பக்கம் இருக்க இறுதிப் போட்டி நினைத்தபடி நடப்பதற்கு காலநிலை கைகொடுக்க வேண்டும்.

கொழும்பில் தொடர்ந்து மழை பெய்தபோதும் முக்கிய போட்டிகளில் அது பெரிதாக தாக்கம் செலுத்தாமல் தவிர்க்க முடிந்திருக்கிறது. குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான சுப்பர் 4 போட்டிக்கு மேலதிக நாள் ஒதுக்கப்பட்டதால் அந்த ஆட்டம் தப்பித்துக் கொண்டது. இலங்கை பாகிஸ்தான் போட்டியும் ஓவர்கள் குறைக்கப்பட்டு அதிகாலை 1 மணி வரை நீடிக்க வேண்டியதாயிற்று.

எவ்வாறாயினும் இறுதிப் போட்டிக்கு திங்கட்கிழமை மேலதிக தினமாக ஒதுக்கப்பட்டிருப்பதால் முடிவு ஒன்று கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்திய அணி வலுவான அணியாகவே தொடர்ந்து ஆடி வருகிறது. ரோஹித் ஷர்மா, சுப்மன் கில், கே.எல் ராகுல், விராட் கொஹ்லி என்று துடுப்பாட்ட வரிசை வலுவாக இருப்பதோடு பும்ரா முதற்கொண்டு பந்துவீச்சு வரிசையும் எதிரணிக்கு கடும் சவாலாக உள்ளது.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் இந்திய அணியின் ஆட்டமே இதற்கு நல்ல உதாரணமாக உள்ளது.

எனவே, இந்திய அணியை வீழ்த்துவதென்றால் அதிக கரிசனையுடன் இன்றைய தினத்தில் ஆடுவது இலங்கைக்கு மிக முக்கியம். இலங்கை அணி தனது இரண்டாவது நிலை பந்துவீச்சாளர்களுடனேயே ஆசிய கிண்ண தொடரில் களமிறங்கியதோடு துடுப்பாட்ட வரிசையிலும் ஏகப்பட்ட குறைபாடுகள் உள்ளன.

முதலில் ஆரம்ப வரிசை இன்னும் வலுவாக இல்லை. திமுத் கருணாரத்ன தனது பணியை செய்யாத நிலையில் குசல் ஜனித் பெரேரா பாகிஸ்தானுடனான போட்டியில் அழைக்கப்பட்டார். அவர் தனது வழக்கமான பாணியில் அதிரடியாக ஆடியபோதும் ரன் ஆவுட் ஆனது துரதிருஷ்டமே. எனவே இன்றைய போட்டியிலும் அவர் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கலாம்.

பத்தும் நிசங்க இன்னும் தனது திறமைக்கு திரும்பவில்லை என்பதோடு அணித்தலைவர் தசுன் ஷானக்க துடுப்பாட்டத்தில் தொடர்ந்து சோபிக்கத் தவறி வருகிறார்.

என்றாலும் குசல் மெண்டிஸ், சதீர மரவிக்ரம, சரித் அசலங்க மற்றும் தனஞ்சய டி சில்வாவின் துடுப்பாட்டங்களே கடந்த போட்டிகளில் உதவின.

துனித் வெள்ளலகேவின் சகலதுறை ஆட்டம் அணிக்கு தீர்க்கமாக அமையும் என்று இந்தியாவுக்கு எதிரான சுப்பர் 4 போட்டியில் உறுயானது.

பந்துவீச்சு வரிசையில் முக்கியமானவராக இருக்கும் மஹீஷ் தீக்ஷன உபாதைக்கு உள்ளாகி இருப்பது பெருத்த பின்னடைவு. பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின்போது தொடை பகுதியில் தசைப்பிடிப்புக்கு ஆளான அவர் இன்றைய தினம் களமிறங்குவதற்கு காலநேரம் பொருந்தி வரவேண்டி இருக்கும். இல்லாவிட்டால் துஷான் ஹேமன்த களமிறங்க வாய்ப்பு உள்ளது.

இலங்கை அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்கள் காயத்தால் விளையாடாத நிலையில் புது நம்பிக்கை தரும் இளம் வேகப்பந்து வீச்சாளர் மதீஷ பதிரண இன்றைய தினம் சோபிப்பது இலங்கை அணி இந்திய துடுப்பாட்ட வீரர்களை மிரட்டுவதற்கு தீர்க்கமாக இருக்கும்.

கடந்த போட்டியில் கசுன் ராஜித்தவுக்கு பதில் களமிறக்கப்பட்ட பிரமோத் மதுஷான் சிறப்பாக செயற்பட்ட நிலையில் இன்றைய தினம் அவர் களமிறங்க வாய்ப்பு இருக்கிறது. துனித் வெள்ளாலகேவின் சுழற்பந்தும் இந்தியாவுக்கு சவாலாக இருக்கும் என்று நம்பலாம்.

எல்லாவற்றுக்கும் மேலே சொந்த மண்ணில் ரசிகர்களின் ஆதரவுக்கு மத்தியில் ஆடுவது இலங்கை அணிக்கு மற்றொரு சாதகமான சூழலாகும்.

எனவே இலங்கை தனது திறமையுடன் அது ஆசியக் கிண்ணத்தில் காட்டிவரும் பிரத்தியேக திறமையும் கைகொடுத்தால் இன்று தனது நடப்புச் சம்பியன் பட்டத்தை தக்கவைத்துக்கொள்ள முடியுமாக இருக்கும்.





# ஏமாற்றம் தந்தார் யுபுன்

யுபுன் அபேகோன் தொடர்ந்து ஏமாற்றம் தந்து வருகிறார். ஆரம்பத்தில் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப், பின்னர் சர்வதேச மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டிகளில் பங்கேற்க தவறிய யுபுன் இப்போது பிராந்தியத்தில் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்ச்சியான ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கவில்லை என்று அறிவித்திருக்கிறார்.

இத்தனைக்கும் தெற்காசியாவின் அதிவேக ஓட்ட வீரர், இப்போதைக்கு ஆசியாவின் நான்காவது அதிவேக வீரர் யுபுன்தான். என்றாலும் அவர் கடந்த ஆறு மாதங்களாக உபாதையால் அவதிப்பட்டு வருகிறார்.

"இந்த ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க முடியாதது உண்மையிலேயே எனக்கு பெரும் ஏமாற்றமாக உள்ளது" என்று யுபுன் அபேகோன் கூறுகிறார்.

இவர் மாத்திரமல்ல ஒட்டுமொத்த இலங்கையும் அவரது அறிவிப்பால் ஏமாற்றம் அடைந்திருக்கிறது. தடகள போட்டிகளில் அவர் இலங்கைக்கு நிச்சயம் பதக்கம் வென்று தருவார் என்று பெரிதாக எதிர்பார்க்கப்பட்டது.

உண்மையில் ஆசிய விளையாட்டுப் போட்டியை எதிர்பார்த்தே கடந்த சில மாதங்களால் பல விளையாட்டு போட்டிகளை தவிர்த்து உடல் தகுதி பெற முயற்சித்தார். என்றாலும் அவருக்கு ஏற்பட்டிருக்கும் தொடை எலும்புக் காயம் இன்னும் முழுமையாக குணமடையவில்லை.

வேறு எந்த விளையாட்டை விடவும் குறுந்தூர ஓட்ட வீரர்களுக்கு இந்தக் காயம் பெரும் இடையூறானது. மிகக் குறுகிய காலத்திற்குள் ஓடி முடிக்க போட்டியிருப்பதால் சிறு வலி கூட சில நொடிகளை தாமதிக்கச் செய்து போட்டியில் பின்னடைவை ஏற்படுத்திவிடும்.

கடந்த மே மாதம் இத்தாலியில் நடைபெற்ற சவோன சர்வதேச போட்டியில் ஆரம்ப சுற்றில் சிறப்பாக செயற்பட்ட அபேகோன் 100 மீற்றரை 10.04 விநாடிகளில் பூர்த்தி செய்தார். என்றாலும் இறுதிப் போட்டியில் காயம் காரணமாக கடைசி சில மீற்றர்கள் தாமதித்தது அவருக்கு இரண்டாவது இடத்தையே பெற்றுத் தந்தது.

இதனை அடுத்தே அவர் ஆசிய கிண்ண போட்டியில் தயாராகும் இலக்குடன் கடந்த ஜுலையில் தாய்லாந்தில் நடந்த ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் மற்றும் கடந்த ஓகஸ்டில் ஹங்கேரியில் நடந்த சர்வதேச மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டிகளை தவிர்த்திருந்தார்.

19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி எதிர்வரும் செப்டெம்பர் 23 ஆம் திகதி ஆரம்பமாகி ஒக்டோபர் 8 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. சரியாக ஓர் ஆண்டுக்கு முன்னர் நடைபெற வேண்டிய இந்தப் போட்டி கொவிட் தொற்றுக்கு மத்தியில் தாமதித்தே நடைபெறுகிறது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வெல்வது என்பது இலகுவானதல்ல. அதிலும் தடகளப் போட்டியில் இலங்கை பதக்கம் வென்று இப்போது 17 ஆண்டுகள் கடந்துவிட்டது.

2006 ஆம் ஆண்டு டோஹாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் சுசந்திகா ஜயசிங்க 100 மீற்றரில் வெள்ளி மற்றும் 200 மீற்றரில் வெண்கலப் பதக்கங்களை வென்றதோடு ரொஹான் பிரதீப் குமார, ரோஹித புஷ்பகுமார, பிரசன்ன அமரசேக மற்றும் அசோக ஜயவர்தன ஆகியோரைக் கொண்ட 400 மீற்றர் ஆடவர் அஞ்சலோட்ட அணி வெண்கலப் பதக்கத்தை வென்றிருந்தது.

யுபுன் இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டப்போட்டிகளில் பங்கேற்க இருந்தார். குறிப்பாக 2022 ஜுலையில் யுபுன் 100 மீற்றர் தூரத்தை 9.96 விநாடிகளில் ஓடி முடித்தது அந்த ஆண்டில் ஆசியாவின் அதிவே ஓட்டமாக இருந்தது. அத்தோடு 100 மீற்றர் ஓட்டப்போட்டியை 10 விநாடிகளுக்கு குறைவான காலத்தில் முடித்த முதல் தெற்காசிய வீரராகவும் அவர் சாதனை படைத்திருந்தார்.



கடந்த ஆண்டு ஜுலையில் பெர்மிங்ஹாமில் நடந்த பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் யுபுன் வெண்கலப் பதக்கம் வென்றார். இது அந்த விளையாட்டு வரலாற்றில் 24 ஆண்டுகளில் இலங்கை தடகளப் போட்டியில் பெற்ற முதல் பதக்கமாக இருந்தது. அதேபோன்று அவர் டயமன்ட் லீக் இறுதிப் போட்டியில் பங்கேற்ற முதல் இலங்கை வீரராகவும் சாதனை படைத்திருந்தார்.

எனவே அவர் ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கம் வெல்வதென்பது ஓரளவுக்கு நிச்சயமான ஒன்றாகவே இருந்தது.

ஆசிய விளையாட்டுப் போட்டியை இழந்திருக்கும் யுபுன் தற்போது அடுத்த ஆண்டு பிரான்ஸில் நடைபெறப்போகும் ஒலிம்பிக் போட்டியை இலக்கு வைத்திருக்கிறார்.

"சர்வதேச மட்டத்தில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்த நான் எதிர்பார்த்திருந்தேன், ஆனால் காயம் நான் எதிர்பார்த்த வேகத்தில் குணமடையவில்லை. காயத்தில் இருந்து மீண்டு எதிர்காலத்தில் வலுவாக போட்டிகளுக்கு திரும்புவதிலேயே நான் அவதானம் செலுத்தி இருக்கிறேன்" என்கிறார் யுபுன்.

இலங்கையில் கிரிக்கெட் வீரர்களுக்குத்தான் மௌசு அதிகம் என்றபோதும் சிறு வயதில் இருந்தே யுபுன் தடகள போட்டிகளிலேயே அதிக அவதானம் செலுத்தினார். ஆரம்பத்தில் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் என முயற்சி செய்த யுபுன் பின்னர் குறுகிய தூர ஓட்டம் தானக்கு சரிப்பட்டு வரும் என்று புரிந்துகொண்டார்.

பாடசாலை மட்டத்தில் 10.78 விநாடிகளில் 100 மீற்றர் ஓட்டத்தை பூர்த்தி செய்த அவர் 2015 இராணுவ சம்பியன்சிப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.58 விநாடிகளில் பூர்த்தி செய்தார். அது வெண்கலப் பதக்கம் வெல்லவே போதுமாக இருந்தபோதும் அவரது திறமை நாளுக்கு நாள் அதிகரித்தது.

தனது தந்தை அமெரிக்காவில் வேலை பார்க்கும் நிலையில் அவரின் உதவியோடு 20 வயதில் இத்தாலி பறந்த யுபுன் அங்கு பயிற்சி பெற ஆரம்பித்தார். தற்போது 28 வயதாகும் யுபுன் இத்தாலியை தளமாகக் கொண்டே தனது தடகள வாழ்வை தொடர்கிறார்.

யுபுனின் தடகள வாழ்வு என்பது ஏற்ற இறக்கங்களை கொண்டது, என்றாலும் ஒருநாள் உச்சத்தை தொடுவேன் என்று அவர் உறுதியாக நம்புகிறார்.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
# செந்தூரம்
2023 செப்டெம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை





04
கண்டி மக்கள் கலை
இலக்கிய ஒன்றியத்தின் அமுத விழா



07
இலங்கை
பொன்மனச் செம்மல் கலைத்
தங்கம் தாஜ்மஹானுக்கு
ஆளுமை விருது



08
விஜய்சேதுபதியின்
50ஆவது படம்

# சிரிக்கும் தலை



மனார் மகெட் என்ற எகிப்து குழந்தை முழுமையாக வளர்ச்சி அடையாத உடலுடன் ஒட்டிய மற்றொரு குழந்தையுடனேயே பிறந்தது. தலையோடு ஒட்டிப் பிறந்த அந்த குழந்தையின் தலைப் பாகம் மாத்திரமே முழுமையாக இருந்ததோடு உடல் இருக்கவில்லை. ஆனால் அந்தத் தலைக்கு மனார் மகெட்டின் இரத்த ஓட்டம் சென்றது.

இதனால் அந்த தலை கண்களை இமைக்கவும் சிரிக்கவும் செய்தது. இவ்வாறு குழந்தை ஒன்று பிறப்பது அரிதிலும் அரிதாகும். வரலாற்றிலேயே இவ்வாறான சம்பவங்கள் ஒன்றிரண்டே பதிவாகி இருக்கின்றன.

அந்தத் தலையை அகற்றுவதற்கு மனாருக்கு 10 வயதாகும் வரை காத்திருந்த மருத்துவர்கள் 2005 ஆம் ஆண்டு 13 மணி நேர சத்திரசிகிச்சை மூலம் அந்தத் தலையை அகற்றினர்.

பூகோள சஞ்சாரம்

# ஜெர்மனி பொலிஸார் கொலையாளியை தேடிய இலட்சணம்

பிர்தௌஸ்

ஜெர்மனியில் பயங்கர தொடர் கொலையாளி ஒருவர் இருந்தார். ஆறு கொலைகள், இன்னும் தீர்க்கப்படாத மரணங்களுடன் அந்த கொலையாளிக்கு தொடர்பு இருந்தது. 15 ஆண்டுகளாக அவரை ஜெர்மனி பொலிஸார் சல்லடை போட்டுத் தேடினார்கள்.

ஆரம்பத்தில் அது ஒரு பெண் தொடர் கொலையாளி என்று பொலிஸார் குறிப்பிட்டனர். வயது முதிர்ந்த ஒருவரை கழுத்து நெரித்துக் கொன்றது, பெண் பொலிஸார் ஒருவரை கொன்றது என்று 40 குற்றச்செயல்களில் இந்த மர்மக் கொலையாளியின் தடயம் இருந்தது. அதாவது எல்லா இடத்திலும் அவரது டி.என்.ஏ தவறாமல் இருக்கும்.

ஆனால் அவர் யார் என்பதை பொலிஸாரால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அவரை ‘முகமில்லாத பெண்’ என்று பொலிஸார் அழைத்து வந்தனர். ஜெர்மனியின் ஆபத்தான பெண் என்றும் அவர் பெயர் பெற்றார்.



அந்தப் பெண்ணைப் பற்றி துப்புத் தருபவர்களுக்கு 300,000 யூரோ சன்மானம் தருவதாகவும் அறிவித்தார்கள். அந்த கொலையாளியின் வரை படம் ஒன்றையும் கோணல்மாணலாக வரைந்து வெளியிட்டார்கள். ஹ்ம்... எந்தத் துப்பும் கிடைக்கவில்லை. ஒரு துப்பறியும் நாவல் போன்று எந்த திருப்பமும் இன்றி கொலைக் கதை நீண்டது.



பொலிஸாரிடம் இருந்து ஒரே ஒரு ஆதாரம் அந்த டி.என்.ஏ தடயம் மாத்திரம் தான். ஒரு துப்பறியும் திரைப்படத்தின் ஹீரோ போல் யாராவது சிந்திக்க ஆரம்பித்திருப்பார். இந்த விசாரணை முழுவதிலும் ஏதோ கோளாறு இருக்கிறது என்று அந்த பொலிஸார் கூறியிருப்பார் போல்.

விசாரணையின் திருப்பம் என்ன தெரியுமா? உண்மையில் அப்படி ஒரு தொடர் கொலையாளியே இருக்கவில்லை.

விசாரணை எந்த திருப்பமும் இன்றி நீண்டு கொண்டிருப்பதைப் பார்த்த பொலிஸார் சோதனை செய்த இடத்திற்கு பதில் சோதனைக்குப் பயன்படுத்திய பொருட்கள் பற்றி ஆராய ஆராம்பித்தார்கள். அதாவது டி.என்.ஏ மாதிரியை எடுக்க பயன்படுத்தும் பஞ்சு இருக்கிறதே அதனை உற்பத்தி செய்யும் பவரியா நகரில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்க்கும் பெண் ஒருவரின் டி.என்.ஏ தான் தொடர் கொலையாளியின் டி.என்.ஏ என்று கண்டுபிக்கப்பட்டது.

அதாவது அந்தப் பஞ்சை கொண்டு தடயம் தேடிய இடங்களில் எல்லாம் அதில் ஏற்கனவே இருந்த அந்தப் பெண்ணின் டி.என்.ஏ மாதிரி கிடைத்திருக்கிறது. அதனை வைத்துக் கொண்டு ஜெர்மனி பொலிஸாரும் இல்லாத கொலையாளியை 15 ஆண்டுகளாக துரத்தி இருக்கிறார்கள்.

# ஒரு நிமிடம் சிறை அனுபவித்தவர்

உலகத்திலேயே மிக குறுகிய காலம் சிறை தண்டனை பெற்றவராக ஜோ முன்சினின் சாதனையை யாராலும் இலகுவில் முறியடிக்க முடியாது.

அவர் குடித்து விட்டு அட்டகாசம் செய்ததற்கு தண்டனை கொடுக்க முடியாது, ஆனால் அவருக்கு பாடம் கற்பிக்க வேண்டும் என்று நீதிபதி நினைத்தார்.

எனவே, ஒரு நிமிட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. 1906 ஆம் ஆண்டு இந்த தண்டனை வழங்கப்பட்டது. அப்போது இது பெரிய பிரச்சினையாக இருக்காது.

ஆனால் இன்று ஒரு நிமிடம் சிறை தண்டனை பெற்றாலும் அது சிறைதான்.

வேலை விண்ணப்பத்தில் சிறை இருந்திருக்கிறீரா என்ற கேள்விக்கு, 'ஆம்' என்றுதான் பதில் கூற வேண்டும்.

# நாயால் ஏற்பட்ட பயங்கர யுத்தம்

பல்கேரியா மற்றும் கிரேக்கத்திற்கு இடையே 1925 ஆம் ஆண்டு பயங்கர யுத்தம் ஒன்று வெடித்தது. கிட்டத்தட்ட ஒரு வாரம் நீடித்த அந்த யுத்தத்தில் 171 பேர் கொல்லப்பட்டார்கள். கடைசியில் அப்போது இருந்த தேசிய லீக் சர்வதேச அமைப்பு மத்தியஸ்தம் வகித்தே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனால் இந்த யுத்தத்திற்கான காரணத்தை கேட்டால் சிரிப்பீர்கள்.

எல்லையில் காவல் காத்துக்கொண்டிருந்த கிரேக்க படை வீரர் ஒருவரின் நாய்க்கு நாடுகளின் எல்லைகள் தெரியுமா என்ன! அது தன்னிஷ்டத்திற்கு எல்லை கடந்து பல்கேரியா பக்கம் போனது. அந்த நாயை பிடிப்பதற்கு கிரேக்க வீரரும் எல்லையை கடந்து வர பல்கேரிய வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். கடைசியில் யுத்தத்தில் வந்து முடிந்தது.



# நகைச்சுவை துணுக்குகள்



ராணி : டாக்டர்.. என் கணவருக்கு சில நேரம் என்னை அடையாளம் தெரிய மாட்டேங்குது..
டாக்டர் : எப்படி சொல்றீங்க?
ராணி : சில நேரம் என்னைப் பார்த்தா பயப்பட மாட்–டேங்கிறாரு டாக்டர்..



வேலு : அந்தத் தியேட்டர் முதலாளியை போலீஸ் பிடிச்சுக்கிட்டுப் போகுதே ஏன்..?
பாக்கி : டி.வி–ல போட வெச்சிருந்த படத்தைத் தியேட்டர்ல ரிலீஸ் பண்ணிட்டாராம்

நோயாளி: என்னால வாய திறக்க முடியல டாக்டர்
மாருத்துவர் : சரி! சரி! உங்க மனைவியை வெளியில வெயிட் பண்ண சொல்றேன்

டாக்டர் : உங்க மனைவி உடம்புக்கு என்ன வியாதி ?
கணவன் : அதுதான் தெரியல டாக்டர்! ரெண்டு நாளா என் அம்மாவைப் புகழ்ந்து ரொம்ப பெருமையாப் பேசுறா.. எனக்கு ரொம்ப பயமா இருக்கு டாக்டர்..!



ஒருவர்: சினிமா தியேட்டருக்கு எப்படி போகணுங்க?
மற்றவர்: கையில் காசோட போகணும் !



நண்பர் : திரும்ப வாங்க முடியாத கடன் கோடிக்–கணக்குல இருக்கறதால உங்க பாங்குக்கு எதிர்காலமே இருக்காதுன்னு சொல்லிக்கறாங்–களே?
அதிகாரி : நீங்க வேறே.. எதிர்காலத்துல எங்க பாங்கே இருக்காதுங்கறதுதான் உண்மை.



ஒருவர்: அந்த பஸ் ஓனர் மறைவுக்குப் பின்னால் அவரது சொத்திலே என்ன தகராறு ?
மற்றவர்: மினி பஸ்ஸெல்லாம் அவரது சின்ன வீட்டுக்கு எழுதி வைச்சுட்டாராம்.



தொண்டர்1 : எலெக்ஷன்ல ஜெயிக்கலைன்னா ஒரு பக்க மீசையை எடுத்துக்கறேன்னு தலைவர் சொல்றாரே.. ஜெயிச்சுட்டார்னா ?
தொண்டர்2 : ஜனங்களை மொட்டை அடிச்சு–டுவார்

மனைவி: டாக்டர்! என் கணவர் ஒரு பேனாவை விழுங்கி விட்டார்.
டாக்டர்: இன்னும் சில நிமிஷத்தில் வந்து விடுகிறேன்
மனைவி: அதுவரை நான் என்ன செய்வது?
டாக்டர்: பென்சிலை உபயோகியுங்கள்.



ரமனன் : டாக்டர்... நீங்க சொந்தமா வீடு கட்டிட்டு இருந்தீங்களே.. அந்த வேலை முடிஞ்சுதா?
டாக்டர் : இன்னும் இல்லை. நீங்க ஏன் தினம் அதைக் கேட்கறீங்க?
டாக்டர் : என்னை எப்போ டிஸ்சார்ஜ் பண்ணப் போறீங்கனு தெரிஞ்சுக்கத்தான்.



பாபு : நம்ம ஃபைனான்ஸ் கம்பெனி முதலா–ளிக்கு பத்மஸ்ரீ பட்டம் தரப்போறாங்களாமே..

வேலு : நிஜமாவா?

பாபு : ஆமாம்.. குல்லா போடாம எல்லோருடைய பணத்தையும் வட்–டியோட திருப்பித் தர்றாரே.. சும்மாவா



வேணி : குடும்பத்துக்கு விளக்கேற்றி வைக்கப் பொண்ணு வேணும்னு சொல்லி என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணினது தப்பா போச்சு..
ராணி : ஏன்?
வேணி : என் மருமகள் விளக்கேத்தறதைத் தவிர வேற எந்த வேலையும் செய்ய மாட்டேங்கிறா..



ஒருவர்: நீங்க யாரு என்ன சொன்னாலும் ஆமான்னு சொல்லுவீங்களா ?
மற்றவர்: ஆமா!

# கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் அமுத விழா



கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 80 வது அகவை அமுத விழா சிறப்பு நூல் வெளியீட்டு விழா கண்டி விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் பேராசிரியர் துரை மனோகரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தினகரன் நாளிதழ், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், ஐ. டி. எம். நேஷன்ஸ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறைத் தலைவர் அதி வணக்கத்துக்குரிய பிதா அருட் கலாநிதி எஸ். சந்துரு பெர்ணான்டோ ஆகியோர் கலந்து கொண்டனர். கௌரவ அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் துணைத் தலைவர் சதீஸ்குமார் சிவலிங்கமும் சிறப்பு விருந்தினராக இலங்கையின் பிரபல்யமான நகைச்சுவை நடிகர் வில்சன் குணரட்ன ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நூலின் முதல் பிரதியை தொழிலதிபர் எஸ். முத்தையா, தேசமானிய பெ. பழனியப்பன், தேச மானிய ஏ. சிவசுப்ரமணிய ம் உள்ளிட்ட பல வர்த்தகப் பிரமுகர்கள் பெற்றுக் கொண்டனர் இதன் போது நூல் பற்றிய உரையினை என். லோகநாதன், கவிஞர். பெ. சிவகுமார், முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்தன், எஸ். தமிழ்ச் செல்வன், எம். எம். பீர்முஹம்மது ஆகியோர் நிகழ்த்தினர். (படங்கள் – இக்பால் அலி, வசந்த குமார், ஜே. எம். ஹபீஸ்)


Nivethika
Nathiza
Thaksha


கல்முனை பற்றிமாவில்


Praveen, praneesha


Selan Kenkish


Dinoshan


Prithika


Adhvik varma


பாடகர் அமரதாஸ்


பேபி சகுந்தா

# ஈழத்து மூத்த நாடகக் கலைஞர் பாலேந்திராவின் அரங்கு குறித்த இரு நூல்கள்

ஈழத்து மூத்த நாடகக் கலைஞர் பாலேந்திராவின் அரங்கு குறித்த இரண்டு நூல்கள் அறிமுகமும் அவரது பல்வேறு நாடகத் துணுக்குகள் அடங்கிய ஆற்றுகையும் எதிர் வரும் செப்டம்பர் மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வு பாரிஸ் புறநகர் பகுதியில் பொன்டியில் (Bondy) பிரான்ஸ் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

ஈழத்து நாடகத் துறையில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இடைவிடாது தொடர்ந்து இயங்கி வரும் நாடக ஆளுமை பாலேந்திரா.

இவர் வருடம் தனது நீண்ட கலைப் பயணத்தை ஆவணப்படுத்தும் பணியில் இதுவரை நான்கு நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார். தொடர்ந்து ஆவணப் பதிவுகளாக இவரது நூல்கள் வெளிவருவது நாடக மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது.

இந்த வருடம் இலங்கையின் பல பாகங்களிலும் கனடா நாட்டிலும் தனது புதிய இரண்டு நூல்களை அறிமுகப் படுத்தும் நிகழ்வுகளை சிறப்பாக நடத்தியுள்ளார். அதன் தொடர்ச்சி



யாக ஐரோப்பிய நகரங்களில் இந்த நிகழ்வுகளை நடத்துகிறார்.

பாலேந்திராவின் நேர் காணல்கள், அரங்க கட்டுரைகள் ஆகிய புதிய தொகுப்பு நூல்கள் இந்த நிகழ்வில் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

இந்த நிகழ்வுக்காக லண்டனில் இருந்து பாலேந்திரா ஆனந்தராணி ஆகியோர் பாரிஸ் நகர் வந்து சிறப்பு நிகழ்வாக "அரங்க நினைவலைகள்" ஆற்றுகை நிகழ்வை வழங்கவுள்ளனர்.

பாரிஸ் நகரில் உள்ள இசைக் கலைஞர் தேவராஜாவும் மாணவர்களும் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் பாரிஸ் நகரில் உள்ள கலை இலக்கிய ஆளுமைகள், இளையவர்கள் , மற்றும் பாலேந்திராவின் நாடகங்களில் கடந்த காலங்களில் பங்கு கொண்ட ஆர்வலர்கள் கலந்து கொள்வர் . சலனம் முகுந்தன், கெங்கேஸ்வரன் நதி ராதாகிருஷ்ணன் ஆகியோர் நூல்கள் இந்த இரண்டு நூல்களை அறிமுகப் படுத்தி உரையாற்றுவர்.

இவற்றில் "பாலேந்திரா நேர் காணல்கள்" இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் எழுத்து ஊடகங்களுக்காக எடுக்கப்பட்ட நேர் காணல்கள் இடம் பெற்றுள்ளன. 1979 இல் இருந்து 2015 வரையில் பாலேந்திரா மேற்கொண்ட அரங்கப் பயணத்தில் அவர் எதிர்கொண்ட சவால்களையும் சாதனைகளையும் அடக்கிய ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு முக்கியமான ஆவணத் தொகுப்பு இந்த நூல்.

ஈழத்தில் நாடகத் துறையில் பயணிக்கும் இளையவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இந்த இரு நூல்கள் அமைந்துள்ளன.

# எதிர்மறை சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா









எழுத்தாளர் நீ.பி அருளானந்தத்தின் 'எதிர்மறை' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா வவுனியா பொது நூலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை அன்று கவிஞர் மேழிக்குமரன் தலைமையில் நடைபெற்றது. விழாவில் வரவேற்புரையை உபபீடாதிபதி ந.பார்த்திபன் நிகழ்த்துவதையும் விழாத்தலைவர் மேழிக்குமரனின் உரையை தொடர்ந்து அருட்சகோதரி எல்சி வாழ்த்துரை கூறுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட க.பேனாட்டும் ( முன்னாள் பீடாதிபதி தேசியகல்வியியல் கல்லூரி ), திருமதி கலையரசி திருமாவளவனும் (ஆசிரியர் ) உரையாற்றுவதை காணலாம்.

நூலின் முதற் பிரதியை முதன்மை விருந்தினராக வருகை தந்த சைவப்புரவலர் விநாயக மூர்த்தி றஞ்சிதமூர்த்தியிடமிருந்து எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணன் சார்பாக ஓய்வுபெற்ற பீடாதிபதி க.சுவர்ணராஜா பெறுவதையும் நடுவே நூலாசிரியர் காணப்படுவதையும் அதை தொடர்ந்து சிறப்புரையை உடுவை தில்லை நடராசா நிகழ்த்துவதையும் காணலாம். நூல் நயவுரையை செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணன் நிகழ்த்துவதையும் ஏற்புரைதனை எழுத்தாளர் நீ.பி.அருளானந்தம் கூறுவதையும் விழாவிற்கு வருகை தந்தவர்களையும் காணலாம்.

# கொட்டாஞ்சேனை ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி







கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு 07.09.2023 அன்று சிறப்பான பூஜைகளும் உற்சவ நிகழ்வுகளும் நடத்தப்பட்டன. அன்றைய தினத்தில் மாலை 7 மணியளவில் புதுச்செட்டித்தெரு ஸ்ரீராம் மண்டபத்தில் உலக புகழ் பெற்ற கதக் நடன கலைஞர்களான ஹரி சேத்தனா மற்றும் குழுவினரின் நடன நிகழ்வு அரங்கேறியது. அன்றைய நடன நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக ஜனாதிபதியினால் சமகால பொருளாதார நெருக்கடிகளுக்கு தொழிற்சங்க ரீதியாக தீர்வு காண நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட விசேட குழுவின் உறுப்பினரும் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வருகை தந்திருந்தார். சுப்பையா ஆனந்தகுமாருக்குஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணா ஆலய தலைவர் மஹாகர்த்ததாஸ் பொன்னாடை அணிவித்து கௌரவித்தார்.

அன்றைய நாளில் கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு கிருஷ்ணா ராதா வேடமணிந்து விழாவில் பங்கேற்ற சிறுவர்களை ஊக்குவிக்கும் முகமாக சான்றிதழ்களையும் பரிசில்களையும் அவர் வழங்கி சிறப்பித்தார்.

## கொழும்பில் 'தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்'

'தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்' எனும் இசை நிகழ்ச்சி இன்று ஞாயிற்றுக்கிழமை (17) மாலை 5.00 மணிக்கு கொழும்பு07 இலுள்ள பொது நுலக அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

Colombo Commodities PVT LTD இன் பிரதான அனுசரணையுடனும் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் நடைபெறவுள்ள இந்த இசை நிகழ்ச்சியில் கவி கமல், பஸில், ரஜினி, அக்ஷரா, வீனஸ் ஆகியோர் இசை வழங்கி பாடவுள்ளனர்.

## தப்புக்கணக்கு சரியாப்போச்சு.!

பஸ்ஸில் ஏறிய தாயிடம்
பிள்ளைக்கு எத்தின வயதென
கேட்டார் நடத்துனர்.
தாய் சொன்னாள் நான்கென்று
பிள்ளை சொன்னான் ஆறென்று
மெதுவாக குட்டினாள்
நாலென்று சொல்லு.
சினிமாவுக்கு கூட்டிச்சென்றார்
தந்தை..
எட்டு வயதுக்கு மேல் டிக்கட்
என்றார்கள்..
இவனுக்கு ஏழு வயதென்றார்
இல்லை ஒன்பதென்றான் பிள்ளை
நைசாக அதட்டி
காதை முறுக்கினார்.
இப்போது மதுபான கடையில்
நிற்கிறான் பிள்ளை இருபது
வயதுக்கு மேல்தான் வாங்கலாம்
என்றார் கடைக்காரர்
இருபத்தி இரண்டென்றான்.
பதினெட்டு வயதிலும்
நாலைக் கூட்டினேன்
அம்மா, அப்பா குறைத்த
வயதுகள் என்று சிரித்தான்
தாய், தந்தையோ அழுதனர்.



பசுவூர்க்கோபி.
ஐயாக்குட்டி கோவிந்தநாதன்.
நெதர்லாந்து.

# இலங்கை பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் தாஜ்மஹானுக்கு ஆளுமை விருது
















சொல் வளமும், குரல் வளமும் கொண்டவர் இலங்கை பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் தாஜ்மஹான். இவர், தினகரன், தினகரன் வார மஞ்சரி பத்திரிகைகளிலும், வகவம், பாரதி கலா மன்றம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், நேத்ரா, ஸடார் தொலைக் காட்சி ஆகியவற்றிலும், கொரோனா Lock down போது தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் வகவம் நடாத்திய ZOOM கவியரங்கில் முதலாவதாக கவிதை பாடி நிகழ்வினைச் சிறப்பித்தவருமாவார். இசை மேடைகளிலும் தன் கவி ஆற்றலை புடம் போட்டுக் காட்டியவர் தாஜ்மஹான். இவரது தலைமையிலே ஏராளமான கலை நிகழ்வுகளும், இசை நிகழ்வுகளும் வெற்றி பெறுவதற்கு காரண கர்த்தாவாக விளங்கியவர்.

கிருஸ்ண கலாலயம் தலைவர் கலைஞர் அமரர் மோகன் குமாரின் 34வது கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்விலே கலந்து கொண்டவர் இவர். அந்நிகழ்வில் உரையாற்றிய மோகன்குமார், இந் நிகழ்வின் வெற்றிக்கு அறுபத்தைந்து வீதம் தாஜ்மஹான்தான் காரணம் என அவரது உரையின் போது கூறினார். இது தாஜ்மஹானின் திறனுக்கு சான்று பகிர்கின்றது.

யாழ் மண்ணில் சர்வோதயம் அமைப்பினால் நடாத்தப்பட்ட எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவில் முதல் எம்.ஜி.ஆர். விருதினையும், கலை மாமணி பட்டத்துக்கான சான்றிதழையும் பெற்றுக் கொண்டவராவார்.

அதே போல் அமரர் Dr. ரத்னஜோதியின் ஏற்பாட்டில் தமிழகத்தில் இருந்து வரவழைக்கப்பட்ட நடிகர் வின்சன் அசோகன், இதயக்கனி இதழ் ஆசிரியர் விஜயன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்த வசந்த கானங்கள் இசை நிகழ்வில் மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரைப் பற்றிய சிறப்புக் கவிதை பாடி நடிகர் வின்சன் அசோகனின் பாராட்டையும் பெற்றவர் இவர். இவர் இதயக்கனி ஆசிரியரால் எம்.ஜி.ஆர் படம் பொதித்த பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.

மணிகுருக்கள் ஏற்பாட்டில் பிரபல பாடகரான அமரர் T.M.சௌந்தராஜனின் மகன் பால்ராஜ் கலந்து கொண்ட இசை நிகழ்வில் பால்ராஜ் பற்றிய சிறப்புக் கவிதை பாடி கௌரவித்தார்.

மற்றும் அமரர்களான எஸ்.பி.பாலசுப்ரமணியம்,கவிப் பேரரசு கண்ணதாசன், மகாகவி பாரதியாரைப் பற்றியும் கவிதைகள் பாடியவர்,

அதே போல நம் நாட்டு பிரபலங்களான அமரர்கள் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் கே. அரசரட்ணம், கொழும்பு நகர சபை உறுப்பினர் எஸ்.கே. கிருஸ்ணா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அறிவுக் களஞ்சியம் புகழ் ஏ.ஆர்.எம் ஜிப்ரி மற்றும் துபாய் பெஸ்ட் தொலைக்காட்சி பணிப்பாளர் கலையன்பன் ரபீக் ஆகியோருக்கும் அனுதாபக் கவிதைகள் பாடியவர். இவை தினகரன் பத்திரிகையிலும் பிரசுரிக்கப் பட்டிருந்ததைப் பார்த்து கண்ணீர் வடித்தவர்கள் ஏராளமானோர். அதேபோல் சமூக நலம் பற்றிய பல கவிதைகளைப் பாடிய இவர், கவிஞர் மட்டுமல்லாமல் சிறந்த சமூக சேவையாளரும்,கலைஞர்களுக்கு கை கொடுத்து ஊக்கப் படுத்தி வருபவருமாவார்.

அடுத்ததாக "தேன் கிண்ணம்" எனும் தலைப்பில் கவிதை நூல் வெளியீடு செய்ய செயல்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543





# திரிஷாவின் தி ரோட்

தென்னிந்திய பிரபலமான நடிகை திரிஷா, இயக்குனர் அருண் வசீகரன் இயக்கத்தில் 'தி ரோட்' திரைப் படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் சந்தோஷ் பிரதாப், டான்ஸிங் ரோஸாக கலக்கிய ஷபீர், மியா ஜார்ஜ், வேல ராமமூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், விவேக் பிரசன்னா உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். கடந்த 2000ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மதுரையில் நடைபெற்ற உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாகியுள்ள இந்த படத்திற்கு இசையமைப்பாளர் சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். இந் நிலையில், இப்படத்தின் ரிலீஸ் திகதி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'தி ரோட்' திரைப்படம் வருகிற அக்டோபர் 6ம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளதாக படக்குழு வீடியோ ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.



# அஜித் குமாரின் விடாமுயற்சி

விடாமுயற்சி படப்பிடிப்பு எப்போது தொடங்கும் என்பது குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அஜித்குமாரின் துணிவு படம் கடந்த ஜனவரி மாதம் திரைக்கு வந்த நிலையில் இன்னும் அவர் அடுத்து நடிக்க உள்ள படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்படாமல் உள்ளது. துணிவு படப்பிடிப்பின்போதே அடுத்து விக்னேஷ் சிவன் இயக்கத்தில் நடிப்பார் என்று அறிவித்த நிலையில் அவர் சொன்ன கதை பிடிக்காமல் மாற்றி விட்டு இயக்குனர் மகிழ் திருமேனியை தேர்வு செய்தனர். படத்துக்கு விடாமுயற்சி என்று பெயர் வைத்து இருப்பதாகவும் அறிவித்தனர். ஆனாலும் படப்பிடிப்பு தொடங்குவது தாமதமாகி வருகிறது. விடாமுயற்சி படப்பிடிப்பு எப்போது தொடங்கும் என்று ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இந்த நிலையில் அடுத்த மாதம் முதல் வாரத்தில் படபிடிப்பை தொடங்க திட்டமிட்டு இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.





# வெறித்தனமாக அடுத்த படத்திற்கு தயாராகும் கமல்

நடிகர் கமல்ஹாசன் 'இந்தியன்2' திரைப்படத்தில் நடித்து வருகிறார். கமலின் அடுத்த படத்தை எச். வினோத் இயக்குகிறார். நடிகர் கமல், தற்போது ஷங்கர் இயக்கத்தில் இந்தியன்2 படத்தில் நடித்து வருகிறார். இதில் கமலுடன் இணைந்து சமுத்திரக்கனி, பாபி சிம்கா, காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் பிரீத் சிங், பிரியா பவானி சங்கர் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதைத்தொடர்ந்து கமல்ஹாசனின் 233ஆவது படத்தை 'நேர்கொண்ட பார்வை', 'வலிமை', 'துணிவு' போன்ற படங்களை இயக்கிய எச். வினோத், இயக்கவுள்ளதாக படக்குழு அறிவித்தது. இப்படம் முழுக்க முழுக்க சமூக அக்கறைக் கொண்ட அரசியல் படமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி, எச்.வினோத் இயக்கும் படத்திற்காக நடிகர் கமல்ஹாசன் துப்பாக்கி பயிற்சியுடன் வெறித்தனமாக தயாராகுகிறார். இது தொடர்பான வீடியோவை படக்குழு சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளனர்.



# விஜய்சேதுபதியின் 50ஆவது படம்

நடிகர் விஜய் சேதுபதியின் 50வது படத்தை நித்திலன் சுவாமிநாதன் இயக்குகிறார். இப்படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகரான விஜய் சேதுபதியின் 50வது படமான 'மகாராஜா' திரைப்படத்தை 'குரங்கு பொம்மை' படத்தை இயக்கி பிரபலமடைந்த இயக்குனர் நித்திலன் சுவாமிநாதன் இயக்குகிறார். இப்படத்தில் நட்டி (எ) நட்ராஜ் சுப்ரமணியம், முனீஷ்காந்த், அருள்தாஸ், பாய்ஸ் மணிகண்டன் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். பேஷன் ஸ்டுடியோஸ் சுதன் சுந்தரம் மற்றும் தி ரூட் ஜெகதீஷ் பழனிசாமி இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு அஜனீஷ் லோக்நாத் இசையமைத்துள்ளார். தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி 'மகாராஜா' திரைப்படத்தின் முதல் தோற்ற போஸ்டர் வெளியாகிவுள்ளதாக நடிகர் விஜய் சேதுபதி தனது சமூக வலைதளத்தில் போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளார்.





# விஜய்யின் 'லியோ'

விஜய் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படம் அக்டோபர் மாதம் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'. இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டூடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மேத்யூ தாமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இங்கிலாந்தில் ஒரே நாளில் 10 ஆயிரத்திற்கும் மேல் 'லியோ' திரைப்படத்தின் டிக்கெட்டுகள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன. வெளியீட்டு திகதி நெருங்க.. நெருங்க இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் அதிகரித்து கொண்டே வருகிறது. இந்நிலையில், 'லியோ' திரைப் படம் குறித்த புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, தொழிற்சாலையில் உருவாகியிருக்கும் இப்படத்தின் சண்டைக் காட்சி ஒன்று சிங்கிள் ஷாட்டில் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.





# விஷால் படத்தில் சில்க் சுமிதா

நடிகர் விஷால் நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'மார்க் ஆண்டனி'. காந்த கண்கள், இளைஞர்கள் மட்டுமல்ல எல்லோரையும் மயக்கும் பார்வை, சொக்க வைக்கும் நளினமான நடனம், 90களில் திரை உலகை கலக்கிய பிரபலம், அவர் ஒரு பாட்டுக்கு ஆடினாலே அதுபாட்டுக்கு படம் ஓடும் என்றால் அவர்தான் சில்க் சுமிதா. இவர் மறைந்து பல ஆண்டுகள் ஆனாலும் திரை உலகில் தனக்கென தனி இடத்தை பிடித்து இன்றைய இளைஞர்கள் மனதிலும் இடம்பிடித்தவர். சில்க் சுமிதா இப்போது இல்லையே என்று எண்ணிய அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தும் விதமாக விஷால் நடித்துள்ள 'மார்க் ஆண்டனி' படத்தில் அவர் தோன்றிய காட்சி அதிர்ச்சியையும், வியப்பையும் ஏற்படுத்தி உள்ளது எனலாம். விஷால் நடிப்பில் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவான இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா வில்லனாகவும், ரிதுவர்மா நாயகியாகவும் நடித்துள்ளனர்.

முதலில் டிரைலரை பார்த்த பலரும் ஏதோ கிராபிக்சில் சில்க் சுமிதாவின் உருவத்தை கொண்டுவந்துள்ளனர் என்றுதான் எண்ணினர். ஆனால் அதன்பிறகு தான் தெரிந்தது அவர் அச்சு அசலாக சில்க்கின் தோற்றத்தில் உள்ள இன்ஸ்டாகிராம் மாடல் என்பது. இவர் இன்ஸ்டாகிராமில் போட்டுள்ள பதிவுகளுக்கு பலரும் "நீ சில்க் சுமிதா போலவே இருக்கிறாய்" என கருத்துக்களை கூறியிருந்தனர். இதை பார்த்தே திரைப்பட இவரை மார்க் ஆண்டனி படத்தில் நடிக்க வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவர்தான் விஷ்ணுபிரியா காந்தி. இன்ஸ்டாகிராமில் கலக்கிய அவர் முதன்முறையாக மார்க் ஆண்டனி படத்தில் நடித்துள்ளதோடு சில்க்கின் முக பாவனைகள் அனைத்தையும் கண்முன் கொண்டுவந்திருப்பது சற்று ஆச்சரியமானதுதான்.

நடிகர் தியாகராஜன் நடித்து 1984ல் வெளியான நீங்கள் கேட்டவை படத்தில் சில்க் சுமிதாவின் ஆட்டம் இன்றும் பலருக்கு நீங்கா நினைவாக உள்ளது. அதே பாடலின் ரீமிக்சில் 'மார்க் ஆண்டனி' படத்தில் சில்க் சுமிதா தோற்றத்தில் விஷ்ணுபிரியா காந்தி கலக்கியுள்ளார். அதே கண்கள், அதே பார்வை, அதே நளினம் என நிஜத்தில் சில்க் சுமிதாவாகவே மாறியுள்ளார். இதுகுறித்து, மார்க் ஆண்டனி படத்தின் மேக்கப் மேன் கிருஷ்ண வேணி பாபு தனது இன்ஸ்டாகிராம் பதிவில் குறிப்பிடும் போது, "சில்க் சுமிதாவை மீண்டும் திரையில், எனது கைவண்ணத்தில் காண ஆவலோடு உள்ளேன்" எனக்குறிப்பிட்டு இருந்தார்.

அந்த பதிவிற்கு விஷால், மற்றும் விஷ்ணுபிரியா காந்தி இருவரையும் டேக் செய்து, அவர்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி தெரிவித்திருந்தார். சில்க் வேடத்தில் நடித்தது விஷ்ணுபிரியா காந்தி என்பது மேக்கப் மேன் கிருஷ்ணவேணி பாபு பதிவிட்டபிறகே திரை உலகினருக்கே தெரிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.



# மஞ்சு வாரியரின் சொத்து மதிப்பு?

அசுரன் படத்திற்கு பிறகு மஞ்சு வாரியர் நடிகர் அஜித்குமாரின் துணிவு படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். மஞ்சு வாரியர் ஒரு சிறந்த நடிகை என்பதை தாண்டி, பெண்கள் எப்படி தைரியமாக இருக்க வேண்டும் என்பதற்கும் சிறந்த முன்னுதாரணமாக இருக்கிறார். இன்றைய கதாநாயகிகளுக்கு போட்டியாக இளமை மற்றும் அழகுடன் இருக்கும் இவர் இன்று தன்னுடைய 45 ஆவது பிறந்த நாளை கொண்டாடுகிறார். நடிகை மஞ்சு வாரியர் 1995 ஆம் ஆண்டு மலையாள படத்தின் மூலம் சினிமா உலகிற்கு அறிமுகமானார். அப்போதிலிருந்து 1999 வரைக்கும் சினிமாவில் ஆக்டிவாக இருந்த இவர், 1999இல் தன்னுடன் நடித்த மலையாள நடிகர் திலீப்பை காதலித்து திருமணம் செய்ததுடன் சினிமாவை விட்டு ஒதுங்கி விட்டார். ஆனால் சினிமா அவரை ஒதுக்கவில்லை என்பது 2014இல்தான் தெரிந்தது. தன்னுடைய காதல் கணவரான திலீப்பை விவாகரத்து செய்த பிறகு, மீண்டும் சினிமாவுக்கு மறுவாழ்வு கொடுத்த இவர், ஒட்டுமொத்த இந்திய சினிமா ரசிகர்களும் கொண்டாடும் அளவிற்கு தன்னுடைய நடிப்புத் திறமையாலும், ஆளுமையாலும் இன்றுவரை சிறந்து விளங்கி வருகிறார். தனுஷ் நடித்த அசுரன் படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு என்ட்ரி கொடுத்த இவர், அந்த படத்தில் அப்படியே தென் தமிழகத்தைச் சேர்ந்த சாமானிய வீட்டு பெண்ணாக வாழ்ந்திருப்பார். அசுரன் படத்திற்கு பிறகு இவர் நடிகர் அஜித்குமாரின் துணிவு படத்தில் கதாநாயகியாக நடித்திருந்தார். தற்போது ரஜினிகாந்தின் 170 ஆவது படத்தில் நடிப்பதற்காக இவரிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. 15 வருடமாக சினிமாவில் சிறந்த நடிகை ஆக சாதித்து வரும் மஞ்சு வாரியரின் ஒட்டுமொத்த சொத்து மதிப்பு 142 கோடியாகும். இவர் தற்போது, மனு ஆனந்த் இயக்கத்தில் மிஸ்டர் எக்ஸ் என்னும் படத்தில் நடித்து வருகிறார். இதில் இவருடன் நடிகர்கள் ஆர்யா மற்றும் கௌதம் கார்த்திக் நடிக்கிறார்கள். திருமணத்திற்குப் பிறகு நடிகை ஜோதிகா 36 வயதினிலே படத்தின் மூலம் கம்பேக் கொடுத்து இருப்பார். இந்த படம் நடிகை மஞ்சு வாரியர் கம்பேக் கொடுத்த ஹவ் ஓல்ட் ஆர் யூ படத்தின் ரீமேக்தான்.

# ஆடையும் அணிகலனும்தான் அழகுக்கு அழகு சேர்க்கும்



நம் ஆடையும், அணிகலனும் தான் அழகுக்கு அழகு சேர்க்கும் ஒன்றாகும். நாம் வெறும் புது ட்ரெஸ் போட்டால் மட்டும் அடுத்தவர்களின் கவனத்தை ஈர்க்காது. அதற்கேற்ப அணிகலன்கள் போட்டால் தான் மெருகேற்றும். அதிலும் குறிப்பாக பெண்களுக்கு சொல்லவே வேண்டாம். தினமும் எந்த ஆடைக்கு எந்த நகை எடுப்பாக இருக்கும் என்று யோசிப்பதே பெண்களின் பெரிய விஷயமாக உள்ளது. மாற்றி போட்டு என்ன இந்த ட்ரெஸுக்கு போய் இந்த செயினை போட்டு வந்திருக்க என யாராவது கேட்டால் நமக்கே கஷ்டமாகிவிடும்.

பொதுவாகவே பெண்கள் காது, கை, இடுப்பு, கால் என அனைத்து இடங்களிலும் அணிகலன்கள் போட்டு கொள்கின்றனர், அதிலும், பணம் இருப்போர் வைரம் தங்கம், நடுத்தர பெண்கள் கவரிங், வெள்ளி, ஏழையான மக்களும் கூட பாசி வாங்கி அணிகின்றனர். அப்படி அனைத்து பெண்களும் தங்களுக்கு அழகு சேர்க்க அணிகலன்களை அணிந்து வருகின்றனர். அப்படி எந்த மாதிரியான ட்ரெஸ்ஸிற்கு என்ன அணிகலன் போடலாம் என பார்க்கலாம் வாங்க.

## சதுர கழுத்து:

சதுர வடிவ கழுத்து டிசைன் கொண்ட ஆடைகளுக்கு, கனமான கழுத்தணிகள் அணிவது பொருத்தமாக இருக்கும்.

## ஹை ரவுண்டு கழுத்து:

கழுத்தை ஒட்டியதுபோல ஹை நெக் ரவிக்கை அணியும்போது, கழுத்தில் ஆபரணம் அணியாவிட்டாலும் அது அழகாகவே இருக்கும். அதனை ஈடுசெய்யும் விதமாக காதில் பெரிய அளவிலான காதணி அணிந்தால் பொருத்தமாக இருக்கும். டிசைன்கள் எதுவும் இல்லாத சாதாரண ரவிக்கை அணியும்போது, நீளமான செயின்கள் அணிவது ஏற்றதாக இருக்கும்.

## V மற்றும் U வடிவ கழுத்து:

கழுத்தை ஒட்டியவாறு அணியும் சோக்கர் மாடல் நெக்லஸ்கள் V மற்றும் U வடிவ கழுத்து கொண்ட ஆடைகளுக்கு பொருத்தமாக இருக்கும். 'லேயர்டு ஜுவல்லரி' எனும் அடுக்கடுக்கான நகைகளும் உங்கள் தோற்றத்துக்கு அழகு சேர்க்கும்.



## அகன்ற கழுத்து:

உங்கள் கழுத்துப்பகுதி முழுவதுமாக வெளியே தெரியும்படி இருக்கும் உடை அணியும்போது, பெரிய நெக்லஸ் வகை கழுத்தணி அணிந்தால் அழகுக்கு அழகு சேர்க்கும்.

## வட்டக் கழுத்து:

வட்டக் கழுத்து கொண்ட பிளவுஸ் டிசைன்களுக்கு 'சோக்கர்ஸ்' என்று அழைக்கப்படும் கழுத்தை ஒட்டிய நெக்லஸ்கள் பொருத்தமாக இருக்கும். அதற்கு மேட்சிங்காக காதுடன் ஒட்டியதுபோன்ற சிறிய அளவு காதணிகள் அணிவது அழகாக இருக்கும்.

# வாழ்க்கை வாழ்வதற்கே! மன அழுத்தங்களைக் கண்டு மனம் கலங்க வேண்டாம்!



(தொடர்ச்சி....)

பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர் அதிக அக்கறை செலுத்த வேண்டும். நினைத்தவுடன் எதையும் வாங்கி கொடுக்கும் போது ஒரு முறைக்கு பலமுறை பிள்ளைக்கு எது தற்போது முக்கியமா என்பதை யோசிக்க வேண்டும். நிச்சயமாக தேவையென்றால் வாங்கி கொடுக்கலாம். இதனால் பிள்ளைகளின் மனநிலையில் எதுவும் உடனடியாக கிடைக்காது என்கிற உறுதி ஏற்றப்படும். அத்துடன் எல்லா விடயங்களுக்கும் செல்லம் கொடுக்காமல், கொஞ்சாமல் கண்டிக்க வேண்டிய விடயங்களைக் கண்டித்து, தண்டிக்க வேண்டிய விடயங்களை தண்டித்து எல்லா சூழலுக்கும் முகம் கொடுக்கும் மனநிலையில் பிள்ளைகளை வளர்க்க வேண்டும்.

சவால் நிறைத்த விடயங்களைகளை பெற்றோரே சொல்லிக் கொடுத்து வளர்க்க வேண்டும். அந்த சூழலை எதிர்கொள்ளக்கூடிய தைரியத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும். திருமணம் என்றால் வாழ்க்கையில் ஏற்படுகின்ற சவால்களை இலகுவாக தாங்களே சந்திக்கத் தயாராகி விடுவார்கள். மனநிலை அழுத்தமும் குறையும்.

## உள்நிலை அழுத்தம்

சில பெண்கள் தாங்களாகவே அழுத்தத்தை உண்டாக்கி கொள்கிறார்கள். நமக்கு நடக்கும் விடயங்களை பிரச்சினைகளை நினைத்து தங்களுக்கு மட்டுமே நடப்பதா குழம்பி மனஅழுத்தத்தை வளர்த்துக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்கிற நிலையில் பலரிடம் சொல்லி அதன் மூலமாக மேலும் மேலும் மன அழுத்ததிற்குள் விழுகிறார்கள். சொன்னாலும் பிரச்சினை சொல்லாவிட்டாலும் பிரச்சினை என்ன செய்வது.! இதுவே பலரின் மனதிற்குள் கேள்வியாக இருக்கிறது.

நம்மால் கட்டுப்படுத்த முடியாத ஒன்றை பற்றி கவலைகளை வளர்த்துக் கொள்ளும் போது இது ஏற்படுகிறது. சிலர் இவ்வகை வாழ்நிலைக்கு பழகிவிடுகிறார்கள். அவர்கள் மேலும் அழுத்தமான சூழ்நிலைகளை விரும்பி ஏற்கிறார்கள்.

உண்மையில் பலரும் உள்மன அழுத்தத்திலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள என்ன வழி எதுவென தேடுவதில்லை.

மனதில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு என்பது மனம் விட்டு பேசுவதே. நாம் சுற்றியுள்ளவர்களிடம் பிரச்சினையைக் கூறி ஆறுதல் தேடுவதை விட சம்பந்தபட்டவர்களிடம் நேரடியாக அணுகுவதே சிறப்பு. சில பிரச்சினைகளுக்கு உடனடி பேச்சுவார்த்தை தீர்வு கொடுக்கும். சிலவற்றுக்கு கொஞ்சம் காலம் தாழ்த்திய பேச்சுவார்த்தைக் கைகொடுக்கும். அதே போல சிலரின் குணம் நேரடியான பேச்சுவார்த்தையை விட நம்பிக்கைக்குரிய நபர் மூலமாகவோ அல்லது சட்ட ரீதியாகவோ தீர்த்துக்கொள்ள உடன்படும். இவ்வாறாகவும் மனஅழுத்தத்திலிருந்து வெளி வரலாம்.

## சுற்றுச்சூழல் அழுத்தம்

தொழில் செய்யும் இடம் மற்றும் வீட்டுச் சூழல் அல்லது எமது காரியங்கள் தொடர்பாக நாம் பயணிக்கும் இடங்களில் ஏற்படுகின்ற இன்னல்களே சுற்றுச் சூழல் அழுத்தமாக கருதப்படுகிறது.

சத்தம், கூட்டம், வேலை அல்லது குடும்பப் பளு போன்ற காரணிகளால் ஏற்படும் அழுத்தங்களைத் தீர்க்க முடிந்தவரை நாம் அவற்றை தவிர்ப்பது அல்லது இலகுவாக நகர்த்துவதற்கான வழிமுறைகளை கையாள வைத்து அழுத்தம் ஏற்படுத்தும் சூழல் காரணிகளை அறிந்து அவற்றை தவிர்ப்பதன் மூலம் அழுத்த அளவை குறைக்கலாம்.

## களைப்பு மற்றும் அதிக வேலைப்பளு

ஓய்வில்லா உழைப்பு ,குடும்பத்தின் தேவைகளை ஓடி ஓடி கவனிக்கும் போது தங்களைப் பற்றி சிந்திக்காமை, உணவின் மீது அக்கறை செலுத்தாமை என்பன மன அழுத்தத்தை உருவாக்கும்.

இவ்வகை அழுத்தத்தால் அதிக உடல் பாதிப்புகள் ஏற்படும். ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நேரத்தை சரியாக திட்டமிட்டால் இவ்வாறான அழுத்தங்களிலிருந்து விடுபடலாம். இவ்வாறான அழுத்தங்கள் வரும்போது படபடப்பு, கைகளை முறுக்குதல், பற்களை கடித்தல்,வயிற்று உபாதைகள், அதிகரிக்கும். இதய துடிப்பு அதிகரிக்கும். மேலோட்டமான மூச்சு வாங்குதல், நடுக்கம், குளிர் அல்லது வேர்த்து வழிதல், ஈரமான புருவப்பகுதி, இறுக்கமான தசைகள், வயிற்றுப்பகுதி தசைகள் இறுகுதல், வயிற்று உபாதைகள், அடிக்கடி சிறுநீர் கழித்தல், முடி கொட்டுதல் என்பன போன்ற உடல் மாற்றங்கள் ஏற்றப்படும். இவ்வாறான நேரங்களில் மனஅழுத்தம் உள்ள நபர்களின் அருகில் இருக்கும் நபர்கள் அவரின் மனநிலை அறிந்து ஆறுதலாக இருக்க வேண்டும். அல்லது நாமே பாதிக்கப்பட்டுள்ளோம் என்பதை புரிந்து கொண்டால் நம்மை நாமே கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ள வேண்டும்.

மன அழுத்தத்திலிருந்து நம்மை விடுபட வைக்க தியானம் மிகச் சிறந்த வழியாக அமைகிறது. தினமும் அமைதியாக தியானம் செய்ய நேரம் ஒதுக்குங்கள். மனம் சங்கடம் தரும் செயல்களிலிருந்து சற்று ஒதுங்கியிருங்கள். பிரச்சினையை திரும்பத் திரும்ப யோசிக்காமல் வேறு விடயங்களில் கவனம் செலுத்துங்கள். காரணம் தனிமை பல பிரச்சினைக்குத் தீர்வு என்றாலும் மன அழுத்த நேரங்களில் தனிமை மனஅழுத்தத்தை அதிகமாக்க தூண்டுதலாக இருக்கும் . எனவே தனிமையைத் தவிருங்கள். புத்தகம் வாசியுங்கள், சோகமான திரைப்படம் பார்ப்பதையும் , சோகப் பாடல் கேட்பதையும் தவிருங்கள். நகைச்சுவையான காட்சிகளைப் பாருங்கள், பிடித்த விடயங்களை செய்யுங்கள். உறவினர் நபர்களை காணும் பொது உங்கள் மனக்கவலைகளை கொட்டாமல் கடந்த கால நினைவலைகள், சிறுவயது குறும்புகள் என மீட்டிப் பாருங்கள். முக்கியமாக ஒப்பீடு செய்ய வேண்டாம் .

இந்த உலகில் பிறந்த அனைவருக்கும் ஏதோ ஒருவகையில் பிரச்சினை இருந்து கொண்டேயிருக்கிறது. எனவே நாம் மட்டும் பிரச்சினையில் உழல்வதாக நினைத்து மனஅழுத்தத்தில் விழாமல் முடிந்தவரை மகிழ்வாக வாழுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே!



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# தவச்செல்வனின் நூல் வெளியீட்டு விழா








மலையக மகளிர் மன்ற அனுசரணையில் ஆசிரியர் சு.தவச்செல்வனின் ஆவேசம் , மலையக சமூகத்தின் இலக்கியம் என்ற நூல்களின் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் வினோதன் மண்டபத்தில் சிரேஷ்ட சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட சண்முகப்பிரியா கார்த்திக் (தலைவி எஸ்கேஎம் வணிக குழுமம்), இலட்சுமணன் வேலு (கணக்காளர், வரி ஆலோசகர் ) ஆகியோர் நூற்களின் முதற்பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். வரவேற்புரையை லுணுகலை ஸ்ரீ நிகழ்த்த, வாழ்த்துரைகளை ஞானம் தி. ஞானசேகரனும் கவிஞர் சுப்ரமணிய செல்வாவும் நிகழ்த்தினார்கள். நூல் அறிமுக உரையை திருமதி வசந்தி தயாபானைும் கவிஞர் மல்லிகைப்பூ சந்தி திலகர், பதுளை சேனாதிராஜா, கலாபூஷணம் கே. பொன்னுத்துரை ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

(அஷ்ரப் ஏ சமத்)

# மூங்கிலாற்றில் வியக்கவைக்கும் விதமாக நடைபெற்ற புத்தக விழா!









முல்லை மண்ணில் தமிழோடு மலர்ந்த கவிதாயினி அபிவர்ணாவின் " வில்லோடு வா வெண்ணிலா" என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா மிகவும் சிறப்பாக நடந்தேறியது. விருந்தினர்களுக்கு மாலை அணிவித்துக் கௌரவப்படுத்தி வரவேற்று, மங்கல விளகேற்றி, இறை வணக்கத்துடனும் நடன நிகழ்ச்சியுடனும் அலங்கார மேடையில் ஆரம்பித்த விழாவில் உள்ளூர், வெளியூரைச் சேர்ந்த பல பார்வையாளர்கள் கலந்து கொண்டு அரங்கை நிரப்பியிருந்தார்கள்.

பல ஊர்களில் இருந்தும் கவிஞர்கள் இங்கு வந்து கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார்கள்.

அபி வர்ணா, இன்றைய சமூகத்தின் பல்வேறு பரிணாம வளர்ச்சிகளினால் ஏற்பட்ட மாற்றங்களை உற்று நோக்கி, அறிந்து, புரிந்து, அவற்றில் காணப்படும் பலவிதமான நிலைப்பாடுகளைச் சுட்டிக் காட்டி கவிதைகளாக, நல்ல உவமைகளோடு வடித்து ஒரு அழகிய நூல் வடிவில் மிகச் சிறப்பாக வழங்கியிருக்கிறார் என்பதை இந்த விழாவில் கலந்து கொண்ட பல பேச்சாளர்கள் உறுதிப் படுத்திக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக அபி வர்ணா தனது பெற்றோர்களையும் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

தான் பிறந்த மண்ணைத் தனது கவிதை வரிகளால் முத்தமிட்ட கவிதாயினி,சமூகத்தில் காலம் காலமாக சேர்ந்த குப்பைகளையும் கவிதை என்ற வில்லெடுத்துச் சாடுகிறார், வேதனையில் வாடுகிறார். இந்தச் சமூகத்தை சீராக்க இளைஞர்களுக்கு வாருங்கள் என கவி பாடி அறைகூவல் விடுக்கிறார்.

இவ்விழாவின் ஞாபகார்த்தமாக சிறுவர்களுக்குப் பரிசுகளும் நூலாசிரியரால் வழங்கப்பட்டது.

விழாவிற்கு வந்தவர்கள் இப்படியான மிகவும் சிறப்பான ஒரு நூல் வெளியீட்டு விழா மூங்கிலாற்றில் மட்டுமல்ல எங்குமே நடைபெறவில்லை என்று வியந்து கொண்டும் செல்வி அபிவர்ணா

வினாயகமூர்த்தி இந்த இளம் வயதில் பெரும் சாதனையை நிகழ்த்திக் காட்டியுள்ளார் என்றும் பாராட்டிக் கொண்டு விடை பெற்றுச் சென்றார்கள்.

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## சரியான விடையை கண்டுபிடியுங்கள்

| 5 + 5 | 8 + 4 | 7 + 3 |
|---|---|---|
| 10 9 12 | 14 12 10 | 9 10 11 |

| 8 - 6 | 10 - 7 | 9 - 2 |
|---|---|---|
| 3 4 2 | 4 5 3 | 8 7 5 |

## தொடர்புபடுத்துங்கள்



## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





# ஊடகத்துறையிலும் இலக்கியத்துறையிலும் இடம் பிடித்த கல்வி ஆளுமை மருதமுனை ஜெஸ்மி எம் மூஸா

ஊடகத்துறையிலும், கலை, இலக்கியத்துறையிலும் கல்வித் துறையிலும் தடம் பதித்து வருபவர் தென்கிழக்கின் இளம் கல்வியலாளர் வளவாளர் மருதமுனை ஜெஸ்மி எம் மூஸா. இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் ஆர்வம் காட்டியவர். அந்த ஆர்வம் இன்று வரை தொடர்கின்றது. எல்லோருடனும் மிகவும் அன்பாக நட்பைப் பேணிவருகின்ற நல்லாசான் மாணவர்களுடன் சிறந்த நல்லுறவைக் கொண்டவர்.

தற்போது இவர் கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் தமிழ்ப் பாட ஆசிரிய வளவாளராக கடமையாற்றுகின்றார். ஊடகவியலாளரும், இலக்கிய விமர்சகரும், ஆய்வாளரும், கல்வியியலாளருமான ஜெஸ்மி எம்.மூஸா தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துறை கலைமாணி மற்றும் விசேட முதுகலைமாணி, முதுகலை தத்தவமாணி ஆகிய பட்டங்களையும், தமிழ்த்துறையில் பெற்றுள்ளார்.

பல்கலைக்கழகம் சாராத நிலையில் தமிழ்த்துறைக்கான மூன்று துறைசார் பட்டங்களைப் பெற்று ஊடகத் துறைசார்ந்த ஈழத்தின் முதல் ஆய்வாளராக இவர் இடம்பிடித்துள்ளார். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் 15வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகலை தத்துவ மாணி பட்டத்தை அண்மையில் பெற்றுக் கொண்டார். இலங்கையில் வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராகவும், ரூபவாஹினி தொலைக் காட்சி சேவையின் பிராந்திய செய்தியாளராகவும் பணிபுரிகின்றார்.



## குடும்பப்பின்னணி

மருதமுனையைச் சேர்ந்த பன்னூலாசிரியர் மர்ஹூம் எஸ்.எம்.எம்.மூஸா றாகிலா தம்பதியின் ஐந்தாவது புதல்வராவார். இவரது உடன் பிறப்புக்கள் அனைவரும் பட்டதாரிகளாகவும், அரச சேவை உத்தியோகத்தர்களாகவும் கடமை புரிகின்றமை சிறப்பம்சமாகும். இவரது தந்தை மர்ஹூம் எஸ்.எம்.எம். மூஸா சிறந்த நல்லாசானாக இருந்து பல மாணவர்களை பட்டதாரிகளாக உருவாக்கியவர். மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் அதிக பங்காற்றியவர்.

## பிறப்பும், கல்வியும்

மருதமுனையைச் சேர்ந்த பன்னூலாசிரியர் எஸ்.எம்.எம்.மூஸாறாகிலா தம்பதிக்கு 1979-01-31ஆம் திகதி மருதமுனையில் பிறந்தார். மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யில் ஆரம்பக் கல்வி முதல் உயர்தரம் வரை கற்று தென்கிழக்குப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகி 2004ஆம் ஆண்டு தமிழ்துறையில் தமிழ் விசேட பட்டதாரியாக வெளியேறினார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்கும் காலத்தில் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும், பல்கலைக்கழக மாணவர்பேரவையின் பத்திராதிபராகவும், கடமையாற்றியுள்ளார். சர்வதேச தமிழ் ஆய்வு மாநாடுகளில் பத்துக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ள இவர் இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்து வெளியாகும் பல்கலைக்கழக முதல்தர ஆய்விதழ்களில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களுடன் இணைந்து ஆய்வுக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளார்.

## ஊடகத்துறை

இளம் வயதிலேயே எழுத்துத் துறையில் ஆர்வம் காட்டிய இவர் 2000ஆம் ஆண்டில் நவமணி பத்திரிகையில் எழுத ஆரம்பித்து சுடர் ஒளி, ஞாயிறு சுடர் ஒளி,தினகரன்,தினகரன் வாரமஞ்சரி,வீரகேசரி,வீரகேசரி வார வெளியீடு, தினக்குரல், ஞாயிறு தினக்குரல், மெட்ரோ நியூஸ், விடிவெள்ளி, முஸ்லிம் குரல்,தினக்கதிர் உள்ளிட்ட பல பத்திரிகைகளில் பிராந்திய செய்தியாளராக கடமையாற்றியுள்ளார் இப்போதும் கடமையாற்றுகின்றார். அத்துடன் இலங்கை ரூபவாஹினி தொலைக் காட்சியிலும், யூ(ரீவி) தொலைக் காட்சியிலும் பிராந்திய செய்தியாளராக கடமை யாற்றுகின்றார்.

## உரை மற்றும் விமர்சனம்

இலங்கையில் வெளியிடப்படுகின்ற நூல்கள் பலவற்றிற்கு அணிந்துரை, சிறப்புரைகள் வழங்கியுள்ள இவர் நூற்றுக்கணக்கான இலக்கிய மேடைகளில் நூல்பற்றிய விமர்சன உரையையும் நிகழ்த்தியுள்ளார், நிகழ்த்தியும் வருகின்றார். பத்திரிகைகளிலும் நூல்கள் பற்றிய விமர்சனங்களையும் கட்டுரையாக எழுதி வருகின்றார். சிறந்த பேச்சாற்றல் கொண்ட இவர் கலை, இலக்கியம், கல்வி உள்ளிட்ட விடயங்களை கருத்தரங்குகளில் உரையாற்றி வருவதுடன் கலை, இலக்கியம், கல்வி போன்ற விடயங்களை ஆய்வும் செய்துவருகின்றார்.



## வெளியிட்ட நூல்கள்.

தேடலின் ஒரு பக்கம், முகநூல் முகவரிகள், நாகம்மாள் ஒரு பார்வை, திருக்குறள் பாடத்திட்டத் தெளிவுரை, தமிழ் மொழி இலக்கியப் பேழை, தனியாள் கல்வித்துறை கௌரவிப்புக்கள் அடங்கலாக எட்டு நூல்களை இதுவரை வெளியிட்டுள்ளார். தேசியப் பத்திரிகைகளில் நூற்றுக்கு மேற்பட்ட இலக்கிய மற்றும் பொதுத்துறை சார்ந்த கட்டுரைகளை வெளியிட்டுள்ள இவர் ஈழத்தின் தனித்துவமான இலக்கிய விமர்சன உரையாளர்களில் ஒருவராவார்.

## பல்கலைக்கழகம்

கலை கலாசாரப் பேரவைபத்திராதிபர்2001, பல்கலைக்கழக பேரவை பத்திராதிபர்2001, பல்கலைக்கழக ஏடுபத்திராதிபர்2002, விளையாட்டுப் பேரவை உறுப்பினர்2002, முஸ்லிம் மஜ்லிஸ் பத்திராதிபர் குழு2002, தமிழ்ச் சங்கம் தலைவர்2004, துயரி சஞ்சிகை பத்திராதிபர்2002-2004.

## தமிழ்த்துறைப் பட்டங்கள்

கலைமாணி(சிறப்பு)தமிழ், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்2004, முதுகலைமாணி (தமிழ்) சிறப்பு மதுரை காமராஜன் பல்கலைக்கழகம்2015,முதுகலை தத்து வமாணி (தமிழ்)தென்கிழக்குப் பல்கலைக்கழகம்2023. தற்போது கலாநிதி ஆய்வுத்துறை நிலையில்...

## ஊடகத்துறைக்கான விருதுகள்

உலமா கட்சியின் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது2009, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது2015, கல்முனை பிரதேச செயலக கலாசார விழா சாகித்திய விருது2016, மாண்புறும் மருதமுனை விருது2016, மருதமுனை ஹியுமன் லின்ங் விருது2017, அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது2019.

## இலக்கியமும்,விமர்சனமும்

மலேசியா எழுத்தாளர் விருது 2015, இளம் இலக்கிய விமரசகர் விருது2017, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலை, இலக்கிய ஆய்வுத் துறைக்கான இளங்கலைஞர் விருது2018, இந்தியாவின் இளம் இலக்கிய விமர்சகர் விருது2018, தடாகம் பன்னாட்டு விருது2018, மருதம் கலைக்கூடல் இளம் விமர்சகர் விருது2020, இந்தியாவின் தமிழ் ஆய்வாளர் விருது 2021, மற்றும் மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் அரபுக் கல்லூரி விருது 2023. மேலும் இலங்கை, இந்திய மற்றும் மலேசிய நாடுகளில் இலக்கியத்திற்கான இளம் ஆய்வாளர் விருதுகளையும் பெற்றுள்ளார்.

தமிழ் கற்பித்தல் துறையில் இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி வரும் இவர் தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் கலாநிதி ஆய்வு மாணவனாகவும் உள்வாங்கப் பட்டுள்ளார். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளணம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் உள்ளார் அத்துடன் மருதமுனையில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள "மருதமுனை ஊடக பேரவையின்" பொதுச் செயலாளராகவும் செயற்பட்டுவருகின்றார்.

மேலும் இவரது கலை,இலக்கிய, ஆய்வுத்துறை மற்றும் ஊடகத்துறையையும் சிறப்புற்று இன்னும் பல விருதுகளை பெற்று உயர வேண்டும் என செந்தூரம் வாழ்த்துகின்றது.

**–பி.எம்.எம்.ஏ.காதர்–**
(மருதமுனை தினகரன் நிருபர்)



தொடர்புகளுக்கு :
றொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181



# இலக்கியம்: நிகழ்த்து சாத்தியம்

இலக்கிய வடிவங்கள் படிக்கப்படும் வடிவ நிலையிலிருந்து அதன் மாற்று வடிவமான அல்லது உள்ளொளிரும் வடிவமான நிகழ்த்து வடிவத்துக்கு மாறுதல் இலக்கிய கட்டமைப்பின் இன்னொரு பாய்ச்சலேயாகும்.இது கருத்து நிலை காட்சிநிலையாக மாற்றமுறுமிடம் எனலாம்.

கவிதையில் முற்றுருவம் என்கிற உத்தி அல்லது பாணி நிகழ்த்து நிலையை அவாவிநிற்கும் ஒரு சாத்தியப்பாடேயாம்.

கவிதைகளை கருத்து நிலையில் வாசித்துப்புரிதல் என்பது ஓர் ஆன்மத்தேடல் தான்.அது உள்ளெழுப்பும் உணர்வுகளும் ரசனை இன்பமும் அலாதிதான்.

அதே கவிதைகளை அவை முற்றுருவமானாலும்.அல்லது கருத்து நிலைப்பட்ட நவீன சொல்லாடல் வெளிப்பாடுகளானாலும் சரிஅவற்றுக்கு மேலுமொரு வடிவமான நிகழ்த்துகலை வாய்க்கும்போது அதன் உயிர்ப்பு அல்லது இயங்குதளம் மேலும் உறுதியுறுகிறது.

நமது காப்பிய மரபிலும்,புராண,இதிகாச,சிற்றிலக்கிய வகைகளிலும் இதனைக்காணுகிறோம்.காப்பியங்கள் நாடகங்களாக நிகழ்த்தப்படும் காண்மியம்அழகானது.

பாநாடகங்களும் இதன் பாற்படுவன;கதைகளை நாடகமாக மாற்றுமிடங்களில் வாசிப்பு காட்சிப்புலமாக மாறிவிடுகிறது.

பொதுவாக. இலக்கியங்களின் உட்பொதிந்த வடிவமாக நிகழ்த்து கலை உள்ளது.அதனைச்சாத்தியப்படுத்துமிடத்தில் இலக்கியம் காண்மியக் கலையாகி வெற்றி பெறுகிறது.

நவீன நிகழ்த்து கவிதைகள் அல்லது கவிதை நிகழ்த்துகை இன்று பெரிதும் சாத்தியங்களை அவாவி நிற்கிறது.இது எழுத்து மொழிக்கு உயிர்ப்பூட்டும் உடல்மொழி வடிவமுமாகும்

# வியத்தகு மனிதனின் கதை

சமூகப் புவியியல் வரைபடத்தை முன்வைத்து தன் கருத்துக்களை செயற்பாட்டு வடிவமாக மாற்றிய வியத்தகு மனிதர் மர்கூம் கலாநிதி.எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் அவர்களது 'வாழ்வும் பணியும் 'கனதியான கதையை முன்னிறுத்தி இயங்குகிறது.

எளிமையான குணாம்சத்தினூடாக அவர் தன் கருத்தியல் செயற்பாட்டை முன்னெழுப்பியவர்.

வடக்கு முஸ்லிம் தேடலிலும், எழுத்திலும்,ஆய்விலும் இந்த செயற்பாட்டை அகலித்திருந்தார்.

தொண்ணூறுகளில் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம்' பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்கள்'என பனுவல்களாக வெளிவந்தமை முன்னிலை ஆவணமாக அமைந்தது. இதற்கென அவரது குழு இயக்கம் பத்தாயிரம் தகவல்களைத்திரட்டியிருந்தமை ஆவணவாக்கத்துக்கான முதல் படியெனலாம்.

கலாநிதி ஹஸ்புல்லாஹ்வின் வாழ்வும் பணியும் பனுவலை முன்னிறுத்தி தென்கிழக்குப் பல்கலையில் வெளியீடு நிகழ்ந்தது; அதன் பின் அன்னவரது சொந்த மண் எருக்கலம்பிட்டியில் நினைவு கூறப்பட்டது;தொடர்ந்து கடந்த வாரம் மருதானை தாருல் ஈமானில் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.வரலாற்றுப்

பேராசிரியர் ஏ.பி.ஹுஸைன்மியா,

ஆங்கிலத்துறைப் பேராசிரியரும் சமூகச் செயற்பாட்டாளருமான சுமதி,நூல் தொகுப்பாளர் கலாநிதி ஹலால்தீன் உள்ளிட்டோர் உரையாற்றினர்.

நிகழ்வின் சாராம்சமாக ஹஸ்புல்லாஹ் என்ற பண்பட்ட மனிதரின் பன்முக ஆளுமை முன்னெழுந்திருந்தது.



சமூக அரசியலுக்கான முன்னகர்த்தலைக் கருத்தியல் செயற்பாட்டுத்தளத்தில் இயங்கியலாக்கிய கலாநிதி ஹஸ்புல்லாஹ் அவர்கள் கலந்துரையாடல்கள், உரையாற்றுகைகள்,தகவலிடல்கள்,புவியியல் வரைநிலைகள்,பன்மைத்துவ தேசத்தின் அரசியல், எல்லை நிர்ணய சாத்தியங்கள் குறித்தெல்லாம் தன் கருத்தியலை ஆழப்படுத்தினார்.

அவர் நிலத்தை கருத்து நிலையில் Action ரீதியில் நோக்கி நகர்ந்தார்.

மர்கூம் கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் வாழ்வும் பணியும் நூல் காலத்தின் முன் உயர்ந்து நிற்கிறது. இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கு முஸ்லிம் இருப்பியலில் அவரது இயக்கப்பாடு பெறுமதியானது; அத்தகைய செயலூக்கத்தை மேலும் முன்நகர்த்துவது இனியுள்ள புத்திஜீவத்துவத்தின் பணியுமாகும்.



முல்லை முஸ்ரிபா

# நான் எனும் நீயும் நீயெனும் அவனும்

ஈழத்தில் முஸ்லிம் அரசியலுக்கு விதைதூவிய தனூடு மரமாக நிமிர்ந்தவர் மர்கூம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள். அன்னாரது 21வது நினைவு காலத்தில் அரசியல் தாண்டி இலக்கியத்தில் இன் குரலெழுப்பிய அஷ்ரப் 'நான் எனும் நீயாகி' நின்றவர். கவிதையின் அழகை தன் மொழிக்குள் சிறகெடுத்தவர்;சமூகம்,பண்பாடு,வாழ்வியல்,ஆன்மீகம்,இனவுறவு,சமூக அரசியல் எனப்பாடித் திரிந்தவர்.'என் பாதை இனிவேறு



புதிய பாதையொன்றில் புறப்பட்டுச் செல்கிறேன்

எங்களிடம் இருப்பதுவோ இறைசக்தி மாத்திரமே

அந்தப்பாதையிலே

அணி சேர்ந்து செல்கின்றேன்'என புதுப்பாதை கண்டவர்'ஆயிரம் விளக்குடன் ஆதவன் எழுந்து வந்தான்'கவிஞர் திலகம் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள். அன்னவரது இலக்கிய ஆளுமையை நான் எனும் நீ பெரும் பனுவலில் காணலாம்.

மரணம்

இருந்த இடமும் செல்லும் இடமும் புரியாத பயணமிது

பறந்து சென்று சுருக்கவோ
நடந்து சென்று சுணக்கவோ
முடியாத பயணமிது
பெட்டியும் இல்லா படுக்கையும் இல்லா
பெரிய பயணமிது
ஆடைகள் இல்லை
நிர்வாணமும் இல்லை
அழகான பயணமிது
அனுபவம் இல்லை அச்சமும் இல்லை
அழவான பயணமிது
(1990)

அஷ்ரப் எனும் இலக்கியம் அழகானது;நிமிர்ந்த மொழி;நேரியநடை;கூர்ந்த நோக்கு;வண்ணச்சிரிப்பு;மகிழ்ந்த முகம்.

அஷ்ரப் எனும் 'நான் எனும் நீ' விட்டுச் சென்ற சுவடுகள் அழியாதவை;வேராகி நிற்பவை.

# இயற்கை மொழியின் குறியீடு

இலக்கியத்தில் இடமமைவுக்கு தனித்த இடமுண்டு.

நிலவியல் பின்புலம் இலக்கியங்களின் வேரடியாகவுள்ளது.

தமிழில் தொடக்ககாலமெனப்படும் சங்ককாலத்திலேயே இடமமைவைக்காணுகிறோம்.அகப்பாடல் மரபில் இயற்கை மைய இடம் பெறுவதிலிருந்து இதன் தொடக்கத்தை உணரலாம்.

ஐநில இலக்கியத்தில் நிலவியலே' முதல் பொருளாக'முனைவுற்றது.நிலமும் பொழுதும் அகப்பாடல்களில் செறிவுற்றது.மனித சமூகத்தின் இயங்கிடமாக இது அமைந்தது.அந்தந்நச் சமூகத்தில் அல்லது அந்தந்த நிலத்தில் இடமமைவும் அதனடியான கலாசார பண்பாட்டு மரபுகளும் வெளிப்பட்டன.

இயற்கை காட்சி மட்டுமன்றி அது சார்ந்த பொருட்தொகுதியும் பாடல் மரபின் 'கருவாக'க் கொள்ளப்பட்டது.சங்க அகத்துறையில் கருச்செயல்வாதம் அல்லது காட்சிமுறையியல் மேலெழுப்பமாக இருந்தது

இயற்கை இலக்கியத்தில் வெளிப்படைக்காட்சியாக வெளிப்படினும் அது சுட்டும் குறியீட்டுத் தன்மை பன்முக அடையாளமாகவும்,மறைமுகமான உட்கிடக்கையாகவும் அமைவுற்றது.

அகக் கரு வாழும் சூழலின் இயற்கை உயிருடைஉயிரிலாப் பொருள்களாக இலக்கியத்தில் இயங்கின.கடவுள் முதல் கொண்டு இந்தக்கட்டமைவைக் காணலாம்.மக்கள்,பறவைகள்,விலங்குகள்,மரங்கள்,ஊர்கள்,

உணவுவகை,இசைவகையென்றெல்லாம் கரு இயக்கம் இன்றியமையாத கூறாக கவிதைக்குள் நிகழ்கிறது. இதன் ஒட்டு மொத்தம் இடமமைவு அல்லது நிலவியலாக நிற்கிறது.

காலாகாலமாக கவிதைக்குள் இந்த நிலவியல் இயக்கம் கொள்கிறது.

நவீன கவிதையிலும் இந்த உள்ளீர்ப்பை அல்லது பாய்ச்சலைத் தரிசிக்கிறோம். இந்தப் பண்புதான் கவிதையை அடையாளபப்படுத்தும் கூறாகவும் நிற்கிறது. போர்க்காலக்கவிதைகளில் வாழ்விடத்தின் எச்சங்கள், காட்சி அவலங்கள், இழத்தலின் வலி, உடைந்து சிதறும் இயற்கைப்பொருள்களைனக்குவியும் கரு கவிதையின் குறியீடாகி நின்று கனக்கிறது.

இப்படித்தான் இயற்கைச்சூழல் இலக்கியத்தின் மைய விசையாகி நிற்கிறது.



திருமதி அபிராமி புவனேந்திரன் கிறிஷானின் மகள் இஷானியின் பரதநாட்டிய அரங்கேற்றம் அண்மையில் லண்டன் Waters meet அரங்கில் நடைபெற்றது. 16 வயது இஷானி நாட்டிய உருப்படிகளை மிக அனுபவம் பெற்ற நடனக் கலைஞர் போல் மிக லாவகமாக அனுபவித்து ஆடினார். அவருடைய முகபாவம் மிகச் சிறப்பாக இருந்தது. தாயார் அபிராமியின் கற்பித்தல் திறமை நன்கு வெளிப்பட்டது. அரங்கேற்றத்திற்கு அணிசேர் கலைஞர்களாக உடுப்பி S. சிறீநாத் பாட்டு, M. பாலச்சந்தர் மிருதங்கம், S. ஜலதரன் வயலின், P. ஞானவரதன் புல்லாங்குழல், K. சிதம்பரநாதன் மோர்சிங் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த அரங்கேற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக நடனக்கலைஞர் ஆசிரியர் M.S. ஹரிஹரன், கௌரவ விருந்தினராக Oriental Fine Arts Academy of London தலைவர் S. சுரேஷ், சிறப்பு விருந்தினராக நடன ஆசிரியை திருமதி ஆன் பிரேமினி விமலதாசா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

படங்கள் : ஜெயகுமாரன் லண்டன்




மலேசியா அருட்பேரொளி சமூகநல சமரசப் பேரவையின் 200 வது ஆண்டு முதலாவது உலக அருட் பேரொளி அருட் பெருஞ் ஜோதி பக்தி நெறி மாநாடு (09/09/10) சனிக்கிழமை மற்றும் (10/09/2023) ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரண்டு நாட்கள் மலேசியா இந்து பாபாஜி தலைமையில் மலேசியாவில் கோலாலம்பூர் மலாயா பல்கலைக்கழக துங்கு வேந்தர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த வள்ளலார் உலக மாநாட்டில் அருட்பெருஞ்ஜோதி மகா மந்திரம் மற்றும் பிரார்த்தனையை மலேசியா டாக்டர் செல்வமாதரசி நடத்தினார்கள். அருட்பெருஞ்ஜோதி பக்தி நெறி மாநாட்டினை மலேசியா முன்னாள் துணை முதல்வர் 2பி டாக்டர். பி. ராமசாமி மற்றும் மலேசியா இந்து சங்கம் தலைவர் சிவநெறி செல்வர் ஸ்ரீ காசி சங்கப் பூஷன் தங்க கணேசன் ஆகியோர் குத்து விளக்கேற்றி மாநாட்டினை துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு வள்ளலார் பேரவை மாநில தலைவர் சுவாமி பத்மேந்திரா மற்றும் இமயஜோதி திருஞானானந்தா சுவாமிகள், சிங்கப்பூர் குருகடாக்சம் நடராஜா ஆனந்த பாபா ஆகியோர் கலந்து கொண்டு அருளாசியுரை வழங்கினார்கள்.

மாநாடு சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்த சிங்கப்பூர் சிங்கைராஜா பாபா, பெரம்பலூர் பிரம்மரிஷி மலை தர்மச்சாலை மகா சித்தர்கள் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் ரோகிணி மாத்தாஜி இராஜகுமார், தவயோகி. இரா.தவசிநாதன் சுவாமிகள் மற்றும் வடலூர் கருங்குழி வில்லிசை வேந்தர் மு.கிஷோர் குமார் ஆகியோர் மலேசியா பரதநாட்டிய கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி சான்றிதழ்கள் வழங்கி கௌரவித்தார்கள்.

திருவருட்பா இசைஞானி மழையூர் சதாசிவம், தமிழ்நாடு திரைப்படப் பாடகர் பிரபாகர் ஆகியோரின் திருவருட்பா இன்னிசை நடைபெற்றது.

# ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் பொன்விழா




ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன் கலைத்துறை, ஊடகத்துறை, எழுத்துத்துறை ஆகியவற்றிற்கு பிரவேசித்து 50 வருடங்களாகின்றது. இவரது இந்த பொன்விழாவையொட்டி கொழும்பு, மருதானை டவர் மண்டபத்தில் எதிர்வரும் 2023.10.22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.31 மணிக்கு விசேட நிகழ்வொன்றுநடைபெறவுள்ளது. இதனை முன்னாள் அமைச்சர் பிரபா கணேசன் ஏற்பாடு செய்துள்ளார். இதில் ஆடல் பாடல்களுடன் நகைச்சுவை நாடகங்களும் அரங்கேறவுள்ளன. இந்த பொன் மாலைப் பொழுதில் அரங்கேறவுள்ள கல கலா ஊர்வலத்தில் கலந்து கொண்டு உலா வர அனைவரையும் அழைக்கிறார்கள் ஏற்பாட்டாளர்கள்.

# லண்டன் விம்பம் நடத்தும் மலையகம் 200 சிறுகதை, ஓவிய, கட்டுரைப் போட்டிகள்

★விம்பம்★ கலை, இலக்கிய, திரைப்பட மற்றும் கலாசார அமைப்பு கடந்த 20 ஆண்டுகளாக லண்டனில் செயற்பட்டு வருகின்றது. இந்த அமைப்பு, மற்றுமொரு செயற் திட்டமாக , மலையகம் 200ஐ முன்வைத்து சிறுகதை, ஓவிய, கட்டுரைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

எழுத்து, ஓவியம், கட்டுரை முதலான கலை ஆக்கங்களில் ஆர்வமுள்ள எல்லா தலைமுறையினரின் ஆக்கத் திறனையும், கலை ஆற்றலையும் ஊக்குவிப்பதற்காக இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே
முதலாம் பரிசு ரூபாய் 50,000
இரண்டாம் பரிசு ரூபாய் 30,000
மூன்றாம் பரிசு ரூபாய் 20,000
10 ஆறுதல் பரிசு தலா ரூபாய் 10,000

லண்டனில்கடந்த பல ஆண்டுகளாக இயங்கிவரும் தொண்டு நிறுவனமான, ★இரட்ணம் பவுன்டேசன் UK★, ( இரட்ணம் பவுன்டேஷன்: நம் இளைஞர் சமூகத்தினுடைய எதிர்காலம், தொழில் வாய்ப்புகள், தொழில் சாா் தகைமைகள் என்பவற்றினைக் கருத்திற் கொண்டு கணனி வளநிலையங்களையும், கணனி கற்கை நெறியினையும், 200க்கும் மேற்பட்ட திறன் வகுப்பறைகளையும் நடத்தி வருகின்றது. அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டுவரும் ★மானுடம் பவுன்டேசன் UK★, ஆகிய தொண்டு நிறுவனங்களுடன், ★ஆதிரை வெளியீடு★, ★எழுநா★ ஆகிய பதிப்பு வெளியீட்டு நிறுவனங்களும் இதற்கு அனுசரணை வழங்கி வருகின்றன. சிறுகதைகளும் ஓவியங்களும் கட்டுரைகளும் “மலையகம் 200 கடந்து வந்த காலமும், காலூன்றி நிற்கும் நிலமும், நிலத்தில் ”வலியும் வாழ்வும்” என்னும் கருப்பொருளை அணுகியதாக அமைதல் வேண்டும். இலங்கை பிரஜைகளும் இந்தியாவில் வாழும் மலையகத் தமிழர்களும் இப்போட்டிகளில் கலந்துகொள்ளலாம் எனவும் வயதெல்லையில்லை. ஒருவர் எத்தனை ஆக்கங்களையும் அனுப்பலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆதிரை வெளியீடு

EMPLOYMENT ★ EMPOWERMENT ★ EDUCATION
RATNAM FOUNDATION

விண்ணப்ப முடிவு திகதி: 30. 09. 2023

சிறுகதைகள், கட்டுரைகள் போன்ற ஆக்கங்களை, யூனிகோட் அல்லது பாமினி எழுத்துருவில் தட்டச்சு செய்து malaiyagam200vimbam@gmail.com என்ற மின் அஞ்சலுக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள், போட்டியாளரின் புகைப்படம் தனியாக இணைக்கப்பட்டு அனுப்பப்படவேண்டும்.) ஓவியங்கள்: A3 (16.6 X 11.7) அங்குல தாளில் வரையப்பட்ட (வர்ண ஓவியங்கள் வரவேற்கத்தக்கது )ஓவியங்களின் ஒளிப்பட நகல்கள் (Photo), அல்லது ஒளிவருடி நகல்கள் (Scanned copy) அனுப்பப்பட வேண்டும். எண்ணிம (digital) ஓவியங்கள் பங்கேற்க முடியாது. உங்கள் படைப்புகளை கீழ்க்காணும் முகவரி ஒன்றிக்கு, காகித அட்டைக் குளாயினுள் வைத்து, இடது பக்க மூலையில் "VIMBAM Art competition" என்று குறிப்பிடவும். (முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள், போட்டியாளரின் புகைப்படம் தனியாக இணைக்கப்பட்டு அனுப்பப்படவேண்டும்.) தேர்வாகும் சிறுகதைகள், கட்டுரைகள் தனித்தனி நூலாக வெளியாகும். தேர்வாகும் ஓவியங்கள் இலங்கையின் 4 பிரதான நகரங்களில் கண்காட்சிக்கு வைக்கப்படும்.

# தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கலைவிழா




தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (NILET) அரச ஊழியர்களுக்காக நடத்திய இரண்டாம் மொழிப் பயிற்சிநெறியின் கலைவிழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் மஹரகம்புர தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிறுவனத்தின் தலைவர் ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் உதவிப் பணிப்பாளர் (பயிற்சி பதில்) திருமதி பஸ்மிலா ரவிராஜ், கல்வி மற்றும் ஆய்வு உத்தியோகத்தர்கள் திருமதி ரித்மா லன்சகார, திருமதி செவ்வந்தி அத்தநாயக்க, ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் அஸ்வின் பாலகிருஷ்ணன் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.